தற்கால மேலைநாட்டு அரசியல் சிந்தனை

"MODERN WESTERN POLITICAL THOUGHT"

சி. லலிதாலட்சுமி

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—735

தற்கால மேலைநாட்டு அரசியல் சிந்தனை

(பட்டப்படிப்பிற்குரியது)

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகின்றது)

ஆசிரியை

திருமதி சி. லலிதாலட்சுமி, எம்.ஏ.,
உதவிப் பேராசிரியை, அரசியல் துறை,
மாநிலக் கல்லூரி,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—December, 1976

T.N.T.B.S. (C.P.) No. 735

© Government of Tamilnadu

MODERN WESTERN POLITICAL THOUGHT

Tmt. S. LALITHALAKSHMI

Price Rs. 4-75

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed out of the Paper allotted by the Government of India.

Printed by

M/s. THOZHAN ACHAGAM,
28, Katchaleeswarar Garden Street,
Madras-600 001.

பதிப்புரை

தற்கால மேலைநாட்டு அரசியல் சிந்தனை என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 735 ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 770 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின்கீழ் வெளியிடப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

பொருளடக்கம்

			பக்கம்
1.	தோற்றுவாய்	...	1
2.	எட்மண்டு பர்க்	...	8
3.	ஜெரிமி பென்தம்	...	24
4.	ஜான் ஸ்டூவர்ட் மில்	...	37
5.	ஹெர்பர்ட் ஸ்பென்சர்	...	49
6.	இலட்சியக் கோட்பாடுகள் (ஹெகல், க்ரீன்)	...	54
7.	கார்ல் மார்க்ஸ்	...	90
8.	லெனின்	...	104
9.	ஸ்டாலின்	...	114
10.	அகஸ்டே காம்டே	...	123
11.	பீடர் க்ரொபாட்கின்	...	129
12.	நாஜிஸம்	...	141
13.	பாஸிஸம்	...	151
14.	லாஸ்கி	...	161
15.	ஜார்ஜ் சோரல்	...	170
16.	ஃபேபியன்ஸ் (சிட்னி வெப், பீட்ரைஸ் வெப்)	...	175
17.	ஜான் ட்யூயி	...	183
	மேற்கோள் நூற்பட்டியல்	...	199
	கலைச்சொற்கள்	...	200

1. தோற்றுவாய்

அரசியல் சிந்தனைகள் என்றால் அரசு (State) அதன் அமைப்பு, தன்மை, நோக்கம் இவைகளைப் பற்றிய பல்வேறான அரசியல் தத்துவ எழுத்தாளர்களின் சிந்தனைக் கோவைகளாகும். அரசு ஏன் இருக்க வேண்டும், அதற்கு மக்கள் ஏன் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும், அரசின் அதிகாரத்தின் எல்லை என்ன, அரசின் அதிகாரத்தையும் மக்களின் சுதந்திரத்தையும் எங்ஙனம் இணைக்கப் படுத்துவது போன்ற வினாக்களுக்கு அரசியல் தத்துவ எழுத்தாளர் களின் வாயிலாக அவர்களின் பதிலை அறிகிறோம். இவ்வரசியல் தத்துவ எழுத்தாளர்கள், புரட்சியாளர்கள், அரசியல் மேதைகள், அரசியல்வாதிகள், சீர்திருத்தவாதிகள், முற்போக்காளர்கள், பிற்போக்காளர்கள் என பலதரப்பட்டோர் தங்களுக்குத் தோன்றிய எண்ணக் கருத்துகளை அரசியல் தத்துவத்திற்கு வழங்கினர். இவர்களின் தத்துவங்கள் படிப்பதற்கு ஆர்வத்தைத் தூண்டினாலும் அநேகமாக ஒருதலைப்பட்சமாக இருந்தன என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மை. அவர்களது எண்ணங்கள் அவர்கள்தம் சூழ்நிலை, தேசிய மனப்பான்மை, தேசிய உணர்வு இவைகளின் அடிப்படையில் எழுந்த தூண்டுதல் உணர்ச்சிகளா கவே இருந்தன. எனவே, பாரபட்சமின்றி உண்மை ஒன்றினையே தேடித் தங்களது சூழ்நிலை, சமூக அனுபவங்கள் இவைகளால் பாதிக் கப்படாத அறிஞர்களின் எண்ணிக்கை மிகக் குறைவே. அரசின் தோற்றுவாய், அதன் தன்மை, அதிகாரங்கள், கடமை, நோக்கம், முடிவு ஆகிய இவைகளைப் பற்றிய கருத்துகள் அரசியல் சிந்தனையா ளர்களால் பல கோணங்களில் பார்க்கப்பட்டன. இவர்களின் தத்துவங்கள் பல சமயங்களில் நடைமுறைக்குச் சற்றும் ஏற்றுக் கொள்ளப்படாத கருத்துகளாக அமைந்தன. இருப்பினும், இவர் களின் அரசியல் தத்துவங்கள் இதனால் உபயோகமற்றவை என்ற அவசர முடிவிற்கு நாம் வந்துவிடக்கூடாது. தற்கால அரசுகள் எங்ஙனம் இவ்வளவு தூரத்திற்கு வளர்ந்தன என்பதற்கான விடையை இவ்வரசியல் தத்துவ எழுத்தாளர்களின் எழுத்து களிலேயே காணமுடியும். எனவே, அரசியல் மாணவர்கள் இத் தத்துவ அறிஞர்களின் எண்ணங்களைப் படித்தறிவது மிக முக்கிய மாகும். மேலும், தற்காலத்தில் அரசின் பொறுப்புகள் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே இருக்கின்றன. இதனால் அதன்

அதிகாரங்களும் பெருகிக்கொண்டே போகின்றன. எனவே, இந்த இருபதாவது நூற்றாண்டிலும் 'எல்லாக் கலைகளிலும் அரசியல்கலையே மிக முக்கியம் வாய்ந்தது' என கிரேக்க அறிஞரான அரிஸ்டாட்டில் கூறியது பொய்யாகாது.

அரசியல் தத்துவ வரலாற்றைக் கால வரிசைப்படி சரியான முறையில் பிரிப்பது முடியாத காரியம். இந் நூலில் தற்கால அரசியல் சிந்தனையாளர்களின் வரலாறு பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு எழுதப்பட்ட அரசியல் தத்துவங்களிலிருந்து ஆரம்பிக்கப்படுகிறது. அதாவது, 18ஆம் நூற்றாண்டின் இடையிலிருந்து இந்த நூற்றாண்டின் முக்கியத் தத்துவங்கள் வரை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இடைப்பட்ட நூற்றாண்டுகளில் பல முக்கியமான கோட்பாடுகள் தோன்றின. இக் காலவரையில்தான் தொழிற் புரட்சியும், அமெரிக்க பிரெஞ்சுப் புரட்சிகளும் ஏற்பட்டன. இப் புரட்சிகளினால் ஐரோப்பிய சமூகத்தில் பொருளாதார, அரசியல் துறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. இம் மாற்றங்கள் தத்துவச் சிந்தனையாளர்களின் கோட்பாடுகளிலும் பிரதிபலித்தன. 17ஆவது நூற்றாண்டில் சமூக ஒப்பந்தக் கோட்பாடு மக்களிடையே அதிக செல்வாக்கைப் பெற்றிருந்தது. ஆனால், போகப்போக குறிப்பாக 18ஆம் நூற்றாண்டின் முடிவிலும் 19ஆம் நூற்றாண்டு முழுவதிலும் அரசு செயற்கையானது என்னும் கோட்பாடு அரசியல் சிந்தனையாளர்களுக்கு அதிருப்தியை அளித்தது.

சமூக ஒப்பந்தக் கோட்பாட்டில் தன்னுடைய அதிருப்தியை முதலில் தெரிவித்த ஆங்கிலச் சிந்தனையாளர் எட்மண்ட் பர்க் ஆவார். அரசின் உதவியினாலேயே மனிதன் சிறப்புத் தன்மையை அடைய முடியும் என்றும், அரசு ஒரு புனிதமான அமைப்பு என்றும், காலந்தொட்டு தொடர்ந்துவரும் ஒரு தொடர்ச்சி என்றும், எனவே, மக்கள் தங்கள் விருப்பத்திற்கு ஒப்பந்தம் ஏற்படுத்தி அரசை அமைப்பதும், விருப்பமில்லாவிட்டால் கலைப்பதும் போன்ற தன்மை உடையது அல்ல என்றும், இவ்வாறாக, சமூக ஒப்பந்தக் கோட்பாட்டை முழுவதுமாக ஏற்க மறுக்கிறார். பழைமை வாதியான இவர் பழைமை வாதத்தை ஒரு தத்துவமாகத் தருகிறார்.

பயன் கருது கோட்பாடு (Utilitarian theory) மனிதனைப் புரியாத புதிராகக் கருதாமல் தனக்குப் பயனையும் அதன்மூலம் மகிழ்ச்சியும் தரும் காரியங்களைச் செய்யும் காரணகர்த்தாவாகக் காட்டுகிறது. இக் கோட்பாளரான ஜெரிமி பெந்தம் அரசின் கடமை பல்வேறான மனிதர்களின் விருப்பங்களையும் செயல்களை

யும் ஒழுங்குபடுத்திப் பெரும்பாலோரின் மட்டற்ற மகிழ்ச்சியைப் பெருக்குவதே என்னும் முடிவைத் தருகிருர். பயன் கருது கோட்பாட்டின் பெரும் குறை என்னவென்ருல், மனிதர்கள் செய்யும் எல்லாக் காரியங்களின் நோக்கங்களும் இன்பம், துன்பம் இவைகளின் அடிப்படையிலேயே எழுகின்றன என்று கூறி, மனிதர்களின் நோக்கங்களில் எந்தவிதச் சிக்கல்களும் இருப்பதாகக் கருதாமல் எளிமையாக்கிவிடுகிறது.

அடுத்து, ஹெர்பர்ட் ஸ்பென்சர் தன்னுடைய தனித்தன்மைக் கோட்பாட்டில் டார்வினின் பரிணுமக் கொள்கை (Theory of evolution) போன்ற உயிர் நூல் விதிகளை உடன் சேர்த்துவிடுகிருர். டார்வின் தன்னுடைய பரிணுமக் கொள்கையில் ஜீவராசிகளில் தகுதியுள்ளதே எஞ்சி நிற்கும் (Survival of the fittest) என்னும் விதியைத் தந்தார். அவ் விதியை ஸ்பென்சர் சமூக வாழ்க்கை முறையில் எடுத்துக்கொண்டு, சமூகமும் ஒரு ஜீவராசியைப் போன்றதே என்றும், இங்கும் தகுதியுள்ளோர்கள் வாழலாம், தகுதியற்றவர்களைக் கழித்துவிட வேண்டும், அரசு அவர்களது நலனைப்பற்றிக் கவலைப்பட வேண்டா என்றும் கூறுகிருர். மேலும், அவரவர்கள் நலனைப்பற்றி அவரவர்களுக்கே அக்கறை இருக்க வேண்டுமென்றும், எனவே, தனிமனிதர்களைச் சுதந்திரமாக, அரசு தலையிடாது விட்டுவிட வேண்டும் என்றும் கூறுகிருர். இத் தனித்தன்மைக் கோட்பாட்டில் சில பெருங் குறைகள் இருக்கின்றன. எல்லா மனிதர்களுக்கும் தங்கள் நலன்களைத் தேடுவதற்கான வசதிகளும் வாய்ப்புகளும் ஒரேமாதிரி இருப்பதில்லை. முன்னேற்றமடைந்த சமூகம் என்ருல் அதில் வாழும் மக்கள் சமுதாயம் அனைத்தும் துன்பமின்றி இருத்தல் வேண்டும். ஆனுல், தனித்தன்மைக் கோட்பாடு இவ்வுண்மைகளை உணராதது அதிலுள்ள பெருங்குறை. மேலும், தொழிற்புரட்சியின் விளைவால் இயந்திரங்களின் கண்டுபிடிப்பு, பெருமளவு உற்பத்தி முறை ஆகியவை பல சமூக, பொருளாதாரக் கொடுமைகளை ஏற்படுத்தியதால் மக்கள் தனித்தன்மைக் கோட்பாட்டின்மேல் நம்பிக்கையை இழக்க ஆரம்பித்தனர். சோஷியலிசக் கோட்பாடுகள் தலைதூக்க ஆரம்பித்தன.

19ஆம் நூற்ருண்டில் எழுந்த கோட்பாடுகளில் இலட்சியக் கோட்பாடுகளும் முக்கியம் வாய்ந்தவை. இக் கோட்பாடுகளை ஜெர்மானிய சிந்தனையாளரான ஹெகலின் வாயிலாகவும் ஆங்கிலச் சிந்தனையாளரான கிரீனின் மூலமாகவும் அறிகிருேம். ஹெகல் அரசை மிக உயர்ந்த இடத்தில்வைத்துப் போற்றுகிருர். அரசின் வளர்ச்சி ஒன்றே ஒரு முடிவு என்றும் ஏனைய அறநெறிக் கொள்கைகள் அதற்குக் கீழ்ப்பட்டதே என்றும் கூறினுர்.

இக் கருத்துகள் மக்களிடையே தேசிய உணர்வுகளை வளர்க்க உதவின. ஆனால், ஹெகலின் கோட்பாடு மிகத் தீவிரத் தன்மை வாய்ந்ததாக உள்ளது. ஹெகலின் தீவிரக் கொள்கையிலிருந்து இலட்சியக் கோட்பாட்டை மீட்டிய பங்கை ஆங்கிலத் தத்துவ எழுத்தாளரான டி. ஹெச். க்ரீன் ஏற்கிறார். அரசின் உதவியைக் கொண்டுதான் மக்கள் முழுச் சிறப்பையும் அடைய முடியும் என்பதை அவர் ஒப்புக் கொண்டாலும் அரசிற்காக மக்கள் வாழ்வதில்லை, மக்களுக்காகத்தான் அரசு இருக்கிறது என்றும் கூறினார். மேலும், அரசியலுக்கும் அறநெறிக்கும் உள்ள நெருங்கிய ஒற்றுமையை எடுத்துக் காட்டி இவ்வாறாகத் தனித் தன்மைக் கோட்பாட்டிற்கும் கூட்டுடமைக் கோட்பாட்டிற்கும் (Collectivism) ஒரு சமரசத்தை ஏற்படுத்தினார்.

19ஆம் நூற்றாண்டின் மற்றொரு முக்கியமான கோட்பாடு சோஷியலிசத் தத்துவமாகும். இக் கோட்பாட்டிற்கு பிரெஞ்சுப் புரட்சியும், தொழிற் புரட்சியும் பெருமளவு உதவின. பிரெஞ்சுப் புரட்சி; சமத்துவத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டியது. தொழிற் புரட்சி மக்களிடையே பல சமூக, பொருளாதாரக் கொடுமைகளை ஏற்படுத்தி முதலாளிகளுக்கும் தொழிலாளி களுக்கும் பெரிய இடைவெளியை ஏற்படுத்தியது. சோஷியலிசக் கோட்பாட்டை இங்கிலாந்தில் ராபர்ட் ஓவன் என்பவரும் பிரான்சில் செயின்ட் சைமன் போன்றோரும் விளக்கினர். ஆனால், இவர்களது சோஷியலிசம் மிதவாதமாக இருந்ததால் தொழிலாளர்வகுப் பிற்குத் திருப்தியை அளிக்கவில்லை. 1848ஆம் ஆண்டு கார்ல் மார்க்ஸும், எங்கல்ஸும் வெளியிட்ட கம்யூனிஸ்ட் மெனிபெஃஸ்டோ என்ற புத்தகத்திற்குப் பிறகு சோஷியலிசம் புரட்சிகர திருப்பத்தை அடைந்தது. இக் கோட்பாடு தனி மனிதர் களைவிட சமூகமே முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், சமூகத்தின் பொது நன்மைகளையே முதலில் கவனிக்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தது. மார்க்ஸின் சோஷியலிசக் கோட்பாட்டின் விளக்க உரைகள் என்ற பெயரில் ஒரு சில மாற்றங்களைப் புகுத்தி, தொழிலாளர் புரட்சி ஒன்றை நடைமுறையிலேயே ரஷ்யாவில் நடத்திக் காட்டிய சாதனை லெனினைச் சாரும். சக்தியுள்ள ஒரு கட்சியின் உதவியைக் கொண்டு லெனின் வெற்றிகரமான முறை யில் ரஷ்யாவைக் கம்யூனிஸ நாடாக ஆக்கினார். மார்க்ஸிஸக் கோட்பாட்டை வைத்துக்கொண்டு லெனின் ரஷ்யாவில் புரட்சியை ஏற்படுத்தினார் என்றால், அக் கோட்பாட்டின் உதவியைக்கொண்டு பிற்போக்கான நிலையிலிருந்த ரஷ்யாவைத் தொழில்நுணுக்க முறையிலும் வேறு வழிகளிலும் முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்ற சாதனை ஸ்டாலினைச் சாரும்.

19ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த அரசியல் அறிஞர்களுள் அகஸ்டே காம்டேயும் முக்கியமானவர். அறிவியலின் வளர்ச்சி யினுல் மக்களுடைய பொருளாதார வாழ்வு பலனடைவதைக் கண்ட காம்டே சமூக வாழ்வு முறையையும், அரசியல் கோட்பாடு களேயும் அறிவியலின் அடிப்படையில் அமைக்க வேண்டுமென எண்ணினுர். மனித விவகாரங்களே ஒரே மாதிரியாக விளக்கும் படியான விதிமுறைகளேக் கண்டுபிடிப்பதில் இவர் ஆர்வத்தைக் காண்பித்தார். அரசியலேப் பகுத்தறிவற்ற தத்துவங்களினின்றும் மீட்டு வரலாறு காணும் அனுபவங்கள் இவைகளின் அடிப் படையில் அமைக்கவேண்டுமென்றும், சமூகத்தைப்பற்றி, சமூக இயல்பியல் (Social Physics) என்னும் அறிவியல் வளரு வதற்கு அதிக நாள் செல்லாது என்றும் முன்னுரைத்தார்.

தனித்தன்மைக் கோட்பாட்டை இன்னும் சற்று அதிகமாக விவரித்தால் கிடைப்பது ஆட்சி குலேந்த நிலேக்கோட்பாடாகும் (Anarchism). இக் கோட்பாட்டைப் பீடர்க்ரோபாட்கினின் வாயிலாகக் காண்கிருேம். இக் கோட்பாடு அரசில்லாமல் மக்களால் வாழமுடியும் என்றும் அரசியல் அதிகாரமே நல்ல தன்மை உடையவர்களேயும் கெடுக்கிறது என்ற கருத்தையும் வழங்குகிறது. அதிகாரத்தின் தீமைகளே இக் கோட்பாடு சிறப்புற விளக்கினுலும் அதிகாரத்தின்கீழின்றி மக்கள் எவ்வாறு வாழமுடியும் என்ற கேள்விக்கு இக் கோட்பாளர் தரும் வழிமுறை நடைமுறைக்குச் சற்றும் உதவவில்லே.

1922ஆம் ஆண்டு முஸோலினியின் தலேமையில் இத்தாலிய அரசைக் கைப்பற்றி இருபது ஆண்டுகளுக்குமேல் ஆட்சி யிலிருந்தது 'பாஸிஸ' கட்சி. 1933ஆம் ஆண்டில் ஜெர்மானிய மக்களுடைய ஆதரவின் மூலம் எதேச்சதிகாரத்தை ஏற்படுத் தினுர், தேசிய சோஷியலிசம் அல்லது 'நாஜி' கட்சியின் தலேவரான ஹிட்லர், மார்க்ஸின் கோட்பாடுகளே அடிப்படையாகக் கொண்டு எழுந்த கட்சியே கம்யூனிஸக் கட்சி. ஆனுல், பாஸிஸ, நாஸிஸ,கட்சிகளுக்கென்று எந்தவிதக் கோவையான கருத்துகளேக் கொண்ட கோட்பாடுகளும் கிடையா. சில அரசியல் சிந்தனே யாளர்களின் கருத்துகளேச் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு மாற்றி அமைத்து எளிதில் புலனுகாதவண்ணம் அவர்கள் தந்தனர். மக்களின் தேசிய உணர்வைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்ட அழிவு சக்திகளான முஸோலினியின் பாஸி ஸமும், ஹிட்லரின் நாஸிஸமும் இரண்டாம் உலகப் போருடன் முடிவுற்றன.

இருபதாம் நூற்றுண்டின் அரசியல் கோட்பாடு வரலாற்றில் மற்ருெரு முக்கிய வளர்ச்சி 'பன்மை வாதமாகும்' (Pluralism).

அரசு ஒன்றிடமே இறைமை உள்ளது என்னும் கருத்தை மாற்றி, நாட்டிலுள்ள ஏனைய அமைப்புகளும், நிறுவனங்களும் மனிதர்களின் நல்வாழ்விற்கு அவசியம் என்றும், எனவே, இவைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் முறையில் இறைமை பன்மைத் தன்மை வாய்ந்தது என்றும், அரசிடமே அதிகாரங்கள் குவிக்கப் படக்கூடாது என்றும், ஏனைய அமைப்புகளிடத்திலும் பிரித்தளிக்கப்பட வேண்டுமென்றும், பன்மைவாதியான ஹெரால்டு லாஸ்கி வாதாடுகிறார்.

இருபதாம் நூற்றாண்டில் எழுந்த மற்றொரு கோட்பாடான 'சிண்டிகலிஸம்' (Syndicalism), 'ஸோரல்' என்னும் கோட்பாளரின் வாயிலாக அறிகிறோம். பத்தொன்பதாம் நூற்றாண்டு கோட்பாளர்களின் கருத்துகளிலிருந்து இவருடைய கருத்துகள் எல்லோரையும் திடுக்கிட வைக்கும் வகையில் மாறுபடுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டு சிந்தனையாளர்கள் பல வகையான அரசியல் பிரச்னைகளுக்கும், பகுத்தறிவின் உதவியினால் முடிவான பதிலைக் காணலாம் என்றும் மனித அறிவினால் உலகத்தின் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்றும் நம்பினர். ஆனால், ஸோரல், மனிதன் பகுத்தறிவற்றவன் என்றும், அவனுடைய அறிவினால் உலகத்திலுள்ள பல உண்மைகளை அறிய முடியாது என்றும், ஜனநாயக அரசு மக்களின் ஆட்சி என்பதெல்லாம் வெறும் மந்திர வார்த்தைகளே என்றும் இவ்வரசின் அரசியல்வாதிகளுடன் தொழிலாளிகள் ஒன்று சேர்ந்து எந்தவித அதிகாரத்தையும் பெற முடியாது என்றும், எனவே, தொழிலாளர்களுக்கும் ஜனநாயகத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை என்றும், எனவே, அவர்கள் நேரடித் தாக்குதல், வேலை நிறுத்தம் போன்றவைகள் மூலமே சோஷியலிசத்தை அடைய முடியுமென்றும் கூறுகிறார். இவ்வாறாக மனிதனின் பகுத்தறிவில் தன்னுடைய அவநம்பிக்கையைத் தெரிவித்தது பலருக்குத் திகைப்பாக இருந்தாலும், இத்தாலியிலும், ஜெர்மனியிலும் எழுந்த மனித பகுத்தறிவிற்குச் சற்றும் பொருந்தாத, நாஜிஸ, பாஸிஸ ஆட்சிகள் இவருடைய கருத்துகளை ஆமோதிப்பதைப்போல் அமைந்தன. 'ஸிட்னி வெப்' அவருடைய மனைவியாரான 'பீட்ரைஸ் வெப்' ஆகிய இவர்களின் கோட்பாடான 'பேபியனிஸம்' (Fabianism), சோஷியலிசக் கோட்பாட்டின் ஒரு வகையேயாகும். மார்க்ஸிற்குப் பிறகு ஐரோப்பாவில் மார்க்ஸீயக் கோட்பாட்டைப் பற்றி சோஷியலிசக் கட்சியினருள் கடுமையான வாக்குவாதம் எழுந்தது. அதாவது சோஷியலிசத்தைப் புரட்சியின் மூலம் அடைவதா, இல்லை படிப்படியான சீர்திருத்தங்கள் மூலம் அடைவதா என்பதைப் பற்றிய விவாதமே அது. விரைவில் பிரான்ஸ், இத்தாலி நாடுகளில் உள்ள

சோஷியலிசக் கட்சியினர் மார்க்ஸிசத்திலிருந்த புரட்சித் தத்துவத்தை அடியோடு விட்டுவிட்டனர். படிமுறைகளில் சோஷியலிசத்தை அடைவதில் நம்பிக்கை கொண்ட இந்த ஆங்கிலக் கோட்பாளர்களின் கொள்கையை பேபியனிஸம் என்று அழைக்கப்படுகிறது. இந்த பேபியனிஸக் கோட்பாளர்கள் முதலாளித்துவத்திலிருந்துதான் சோஷியலிசம் வளரவேண்டுமென்றாலும், இந்த வளர்ச்சி வன்முறையின்றி வேறு வழிகளில் கொண்டு வரவேண்டும் என்றும், இந்த வேறு வழிகளான தொழிலாளர் நிலையைச் சீர்திருத்துவதற்கான சட்டங்களைக் கொண்டுவருதல், நாட்டின் செல்வங்களை நியாயமான முறையில் பங்கிடுதல் போன்றவைகளாகும் எனக் கூறினர். இவ்வாறு சோஷியலிசத்தை நடைமுறைக்குத் தகுந்தாற் போலும், ஆங்கில மனப்பான்மைக்குத் தகுந்தாற்போலும் மாற்றி அளித்த சிறப்பு இவர்களைச் சாரும்.

இருபதாவது நூற்றாண்டின் மற்றொரு முக்கியக் கோட்பாளர் ஜான் ட்யூவி (John Dewey) ஆவார். அவர் தத்துவங்களைப் பற்றிய சிந்தனைகளைவிட நடைமுறைச்செயலே மனித வாழ்விற்குத் தேவை என்றும், மேலும் சமூகம் என்பது பல குழுக்களைக் கொண்ட ஓர் அமைப்பு என்றும், எங்ஙனம் ஓர் இசை அமைப்பாளர் பலவிதமான இசைக் கருவிகளை இசைப்பவர்களையும் தன்னுடைய இயக்குதலால் ஒன்றிணைக்கிறாரோ அங்ஙனமே அரசும் அதனுள் இருக்கும் பல குழுக்களின் பணிகளைத் தன் மேற்பார்வையில் ஒன்றிணைக்க வேண்டுமென்கிறார். மேலும், சர்வாதிகார முறைகளை விட ஜனநாயக அரசு முறையே மனிதர்களது தனிச் சிறப்பியல்புகளை வளர்க்க உதவும் என்றும் ஜனநாயக அரசில் சில சீர்திருத்தங்களையும் யோசனைகளையும் தருகிறார்.

இவ்வாறாக அரசு சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு, பல தரப்பட்ட விடைகளை அரசியல் அறிஞர்களின் கோட்பாடுகளின் வாயிலாகக் காண்கிறோம். இக் கோட்பாடுகளைப் படிப்பதை நாம் வெறும் ஓர் அனுபவம் என எண்ணிவிடாமல் அதை ஒரு தனிச் சலுகையென எண்ணி ஆர்வத்துடன் படித்தறிய வேண்டும்.

2. எட்மண்டு பர்க் (1729 - 97)

பதினெட்டாம் நூற்ருண்டின் முக்கியத்துவம் எதில் அடங்கி ளது என்ருல், அந் நூற்ருண்டில் நிகழ்ந்த இரு பெரும் புரட்சி ான அமெரிக்கப் புரட்சி (1776ஆம் ஆண்டு), பிரெஞ்சுப் ட்சி (1789) இவைகளிஞலேயே ஆகும். இப் புரட்சிகள் ண்டும் 1688ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நிகழ்ந்த மாண்புறு ட்சியிலிருந்து (Glorious Revolution) மாறுபட்ட தன்மையை டயவை. ஆங்கிலப் புரட்சி, அந் நாட்டில் உடனே முழு னநாயக அரசை ஏற்படுத்தவில்லை. அங்கு அப் புரட்சிக்குப் றகும் அரசரே, தொன்றுதொட்டு வரும் அதிகாரத்தின் ்னமாகத் திகழ்ந்தார். பாராளுமன்றத்தைக் கட்டுப்படுத்தும் திகாரம் நிலப் பிரபுக்களிடமே இருந்தது. இவ்வாருக ப் புரட்சியின் முக்கியத்துவம் உடன் வெளிப்படவில்லை. முழு னநாயக அரசு அங்கு ஏற்பட இன்னும் பல ஆண்டுகள் ஆயின. ுல், அமெரிக்கப் புரட்சி, அவ்வாறு அன்று. 1763ஆம் ஆண்டு ரை, அமெரிக்கக் குடியேற்ற நாட்டினர் இங்கிலாந்து ரசை எதிர்த்துப் போராடாமல் இருந்தனர். நாளடைவில் ங்களுக்கென ஒரு தனி அரசும், சுதந்திரமும் தேவை என்பதனை வர்கள் உணர்ந்தனர். குறிப்பாக இங்கிலாந்து நாட்டின் ரசியல் சிந்தனையாளரான, லாக்கின் கருத்துகள் அவர்களை வகுவாகக் கவர்ந்தன. அதாவது மக்களின் சம்மதத்தின் டிப்படையிலேயே அரசு இருக்கவேண்டும் என்றும், தனி னிதனின் சுதந்திரம் அரசிஞல் பறிக்கப்படாத ஒன்று என்றும், வ்வாறு ஒரு நாட்டு மக்களின் சுதந்திரம் பறிக்கப் டுமேயாஞல், அம் மக்கள் அதை எதிர்த்துப் புரட்சிசெய்ய உரிமை ண்டு என்னும் தத்துவங்கள் அவர்கள் மனதைக் கவர்ந்தன. ுல், 18ஆம் நூற்ருண்டைச் சேர்ந்த சில சிந்தனையாளர்கள், னநாயக அரசை நடைமுறையில் செலுத்துவது கடினம் என்றும், த்தகைய அரசில், கடைசியில் குழப்பமே மிஞ்சும் என்றும், றி ஜனநாயகத்தை எதிர்த்தனர். ஆஞல், அமெரிக்கர்கள், ரட்சியை வெற்றிகரமாக நடத்தி ஒரு புதிய அரசியல் அமைப்பை னநாயகத்தின் அடிப்படையில் ஏற்படுத்திஞர்கள். அதாவது, ரசர், மேன்மக்கள் என்ற வகுப்புப் பிரிவினையற்ற ஒரு புதிய மூகம் சமத்துவத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது.

இவ்வாறாக அமெரிக்கப் புரட்சித் தலைவர்கள் தங்களின் நுண்ணிய அறிவினாலும், அரசியல் ஞானத்தினாலும் ஒரு நிலையான ஜனநாயக ஆட்சியை நிலைநிறுத்தி அதில் வெற்றி கண்ட துடன் நில்லாமல், பிற நாடுகளையும் ஊக்குவிக்கும் தூண்டு கோலானார்கள். எனவே, ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக பிரான்ஸ் நாட்டில் புரட்சி ஏற்பட வழிகாட்டியாக அமெரிக்கா அமைந்தது எனலாம். 1789ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் மன்னரின் சர்வாதிகாரத்தையும், பிரபுக்களின் சலுகைகளையும் எதிர்த்து, மாபெரும் புரட்சி வெடித்தது.

தற்கால சரித்திரத்திலேயே பிரஞ்சுப் புரட்சியைப்போல் உலகத்தைத் திடுக்கிடச் செய்த நிகழ்ச்சி எதுவும் இல்லை யெனலாம். இப் புரட்சி சாதாரண மக்களுக்கும் மேன்மக்களுக்கும் உள்ள பிளவை உடனடியாக வெளிப்படுத்தியது. செல்வ நிலையில் மிதந்த பிரபுக்கள் குறைவாக அரசிற்கு வரி செலுத்த, ஏழைக் குடியானவர்களும் சாதாரணப் பொதுமக்களும் வரிச் சுமையைத் தாங்கமுடியாமல் அல்லலுற்றனர். இச் சூழ்நிலையில் தான் மாண்டஸ்க்யூ, வால்டேர், ரூஸோ போன்ற அரசியல் தத்துவவாதிகளின் கருத்துகள் மக்களிடையே பரவியது. மேலும், அமெரிக்கப் புரட்சியும் அதற்குப் பிறகு சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றினடிப்படையில் ஏற்பட்ட அரசியலமைப்பும் பிரெஞ்சு மக்களைக் கவர்ந்தன. எனவே, 1789ஆம் ஆண்டு வெடித்த புரட்சிப் படிப்படியாக சர்வாதிகார ஆதிக்கத்தை அழித்து, சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் என்னும் கொள்கை களின் அடிப்படையில் குடியரசாக மாறியது.

பிரெஞ்சுப் புரட்சி, இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இருந்த அரசியல் சிந்தனையாளர்களின் உள்ளங்களைத் தட்டி எழுப்பியது. அதன் விளைவாக, பல புத்தகங்கள் எழுந்தன. பிரெஞ்சுப் புரட்சியின் விளைவால், அந் நாட்டில் ஏற்பட்ட நாசங்களையும் அழிவுகளையும் கண்டு, பர்க், ஹாமில்டன் போன்ற மிதவாதிகள் திடுக்கிட்டனர். இவர்கள் அரசியல் சுதந்திரத் திற்காகப் பல சேவைகள் செய்திருந்தும், சுதந்திரத்தின் அடிப்படையில் எழுந்த பிரெஞ்சுப் புரட்சியை ஆதரிக்காமல் கண்டனம் செய்தனர். இதன் காரணம் அப் புரட்சி ஏற்படுத்திய அழிவே ஆகும். இவர்களுக்கு எதிர்மாறாக தாமஸ் பெயின், ஜெப்பர்ஸன் ஏனையோர் புரட்சியை ஆதரித்தனர். இவர்கள் மன்னரிடம் அல்ல, மக்களிடமே இறைமை உள்ளது என்னும் கோட்பாட்டை வெகுவாக ஆதரித்தனர்.

இவ்வாருக, பிரெஞ்சுப் புரட்சியின் விளைவால் ஆங்கில, அமெரிக்க மக்களிடையே, பிரெஞ்சுப் புரட்சியின் தன்மையைப் பற்றியும், அதன் நன்மை தீமைகளைப் பற்றியும் நீண்ட கடுமையான விவாதங்கள் ஏற்பட்டன. இவ்வறிவாளிகளுக் கிடையே ஏற்பட்ட வாதங்களின் விளைவால் சில குறிப்பிடத்தக்க அரசியல் இலக்கியங்கள் தோன்றின. பழமையாளர் சார்பில் எட்மண்ட் பர்க் தெளிவாகவும் அழுத்தமாகவும், பிரெஞ்சுப் புரட்சியின் விளைவுகளை ஆராய்ந்தார். முற்போக்காளர் சார்பில், தாமஸ் பெயினின் 'மனித உரிமை' என்னும் புத்தகத்தில் பிரெஞ்சுப் புரட்சியை ஆதரித்து எழுதினர். இங்கு பர்க்கின் அரசியல் சிந்தனைகளைப் பற்றி ஆராய்வோம்.

ஆங்கிலச் சரித்திரத்திலேயே மிக முக்கியமானவர் பர்க். 18ஆம் நூற்ருண்டின் ஆங்கில அரசியல்வாதிகளில் இன்னமும் மங்காத புகழுடன் திகழ்பவர் பர்க் ஆவார். அவர் தன்னைப் பெருமையுடன் நடைமுறைத் தத்துவஞானி (Philosopher in action) என்று கூறிக் கொண்டார். அவர் ஆங்கில விக் கட்சியின் உயிராகத் திகழ்ந்து, முப்பது வருடத்திற்கும் குறைவில்லாமல் ஆங்கில அரசின் விவகாரங்களில் முக்கியப் பங்கை மேற் கொண்டார். அவருடைய அரசியல் சிந்தனைகள் யாவும், அவர் காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள், எதிர்வாதங்கள், இவற்றுடன் தொடர்புடையவை என்பதோடல்லாமல், அவைகள் நடைமுறை தத்துவத்திற்கு ஒரு சிறந்த உதாரணம் என்றே கூறலாம். ஆனால், நடைமுறை அரசியலில் அவர் பெரும்பங்கு கொண்டதை ஹெர்ன்ஷா போன்ருேர் அவ்வளவாக விரும்ப வில்லை. பர்க்கிடமிருந்த தெளிவான, தத்துவ அறிவு நிரம்பிய மனப்போக்கை, விருப்பு, வெறுப்பற்ற அரசியல் கோட்பாடுகளை மட்டும் தேடுவதில் செலுத்திருந்தாரேயானல், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற அரசியல் தத்துவஞானிகளுக்கு ஈடான படைப்புகளை உலகிற்கு வழங்கியிருப்பார் என்று ஹெர்ன்ஷா கூறுகிருர். ஆனல், பர்க்கைப் பொறுத்தவரை, அப்படி எந்தவித வருத்தமும் அவருக்கில்லை. சிறந்த முறையில் கற்றறிந்த தத்துவ ஞானியாக இருந்தும்கூட, அவர் அரசியல் என்னும் போர்க்களத்தில் கலந்துகொள்வதையே முதன்மையாகவும், முக்கியமாகவும் கருதினர். அரசியலில் ஏட்டளவு படித்து ஏற்படும் புத்தக அறிவை அவர் வெறுத்தார்.

பர்க்கின் வாழ்க்கைக் குறிப்பு

பர்க், 1729ஆம் ஆண்டு ஐயர்லாந்து நாட்டின் தலைநகரான டீடப்ளினில் பிறந்தார். இவருடைய தந்தை ஐரிஷ், பிராட்

டஸ்டண்டு மதத்தைச் சார்ந்த ஒரு வழக்கறிஞர். தாய் கத்தோலிக்கர் ஆவார். பர்க், கத்தோலிக்க நம்பிக்கைப்படியே வளர்க்கப்பட்டார். அந்தக் காலத்தில் ஐயர்லாந்து கத்தோலிக்கர்கள், ஆங்கிலப் பிராட்டஸ்டண்டவர்களால் மிகவும் கொடுமைக்கு ஆளானுர்கள். பர்க் ஐயர்லாந்து நாட்டைச் சார்ந்தவராக இருந்தும், முடிவில் தன்னை இங்கிலாந்து நாட்டுடன் ஒன்றுப்படுத்திக் கொண்டார். இருந்தும், அவர் ஐயர்லாந்தில் வளர்ந்த சூழ்நிலையும் அனுபவமும் அவருடைய நோக்கில் என்றும் மறையாத ஒரு முத்திரையைத் தந்திருந்தது. 1750ஆம் ஆண்டு பர்க், சட்டப் படிப்பிற்காக லண்டன் நகருக்குச் சென்ருர். ஆனுல், அவருக்கு இலக்கியம், அரசியல் இவற்றில்தான் நாட்டம் ஏற்பட்டதே தவிர, சட்டப்படிப்பில் முழு ஆர்வம் ஏற்படவில்லை. குறிப்பாக அரசியலில் அவர் அளவற்ற ஆர்வம் கொண்டிருந்தார். தனது முப்பத்தேழாவது வயதில் பாராளுமன்ற அங்கத்தினரானுர். உள் அமைச்சவையில் நுழையும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்காதபோதும் சிறந்த அரசியல் பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் திகழ்ந்தார்.

இவருடைய முக்கிய படைப்புகள்: (1) 'பிரெஞ்சுப் புரட்சியைப் பற்றிய பிரதிபலிப்புகள்' (Reflectionson the Revolution in France), (2) 'புதுவிக் கட்சியினரிடமிருந்து, பழைய விக் கட்சியினருக்கு வேண்டுகோள்' (Appeal from the new whigs to the old whigs) ஆகியவை ஆகும். இவைகளைத் தவிர, ஆங்கிலப் பாராளுமன்றத்தில் இவர் ஆற்றிய பேச்சுகளும் எழுதிய கட்டுரைகளும் இலக்கியங்களாக விளங்குகின்றன. மேலும், பன்னிரண்டு ஆண்டுகளாக இடைவிடாது அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கு அதிக சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்று தன் நாட்டு அரசுடன் போராடி நடத்திய பேச்சுரைகளும், இந்திய நிர்வாகத்தில் பல பெரிய குற்றங்களைச் செய்ததற்காக, அப்பொழுது கவர்னர் ஜெனரலாகப் பணியாற்றிய வாரன்ஹேஸ்டிங்சைக் குற்ற விசாரணை செய்ததும், பிரெஞ்சுப் புரட்சியைத் தாக்கிக் கூறிய எதிர்ப்புகளும் மனதில் நிற்கக்கூடியவையாகும். இவருடைய சிறப்பு எதில் அடங்கியுள்ளது என்ருல், தனக்குப் பட்டதை ஒளிவின்றி உள்ளபடி, அழகான நடையில் அறிவு நிரம்பிய விவாதங்களாக, யாவர் மனதையும் கவரும்படி தருவதில்தான் என்று கூறலாம்.

இவர் அரசியல் தத்துவத்தின் தன்மை

அமெரிக்க மக்களுக்கு அதிக சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்று போராடிய பர்க், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையில்

பிரெஞ்சு மக்கள், மன்னரையும் பிரபுக்களையும் எதிர்த்துப் புரட்சி செய்தபோது, அதைப் பர்க் எதிர்த்தது, லிபரலிசக் கொள்கையின ருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. பர்க் தன்னுடைய லிபரலிசக் கொள்கையை மாற்றிக்கொண்டுவிட்டாரோ என எண்ணினர். ஆனால், உண்மையில் அவருடைய அரசியல் கருத்துகளை நன்கு புரிந்துகொண்டால், இக் கேள்வி எழாது என ஸபைன் கூறுகிறார். பர்க்கின் எழுத்துகள் அனைத்திலும் பழைமைவாதத் தத்துவத் தையே காணலாம். இப் பழமைவாதத்தில் அவர் கொண்டிருந்த பற்றே, அவரை பிரெஞ்சுப் புரட்சியை எதிர்க்கத் தூண்டியது; மேலும், பிரெஞ்சுப் புரட்சியின்போது, அந் நாட்டில் புரட்சி யாளர்கள் மேற்கொண்ட நாச காரியங்கள் அவரைத் திடுக்கிட வைத்தன. அதன்மூலம் அவரது நியாய சிந்தனை சற்றுத் தடுமாறி, வெறுப்பான, பொறுப்பற்ற வாதங்களை அவர் கூறும்படி செய்து விட்டது என்பது என்னவோ உண்மைதான். இருந்தும் இப் புரட்சி அவருடைய அரசியல் சிந்தனைகளின் தன்மையை மாற்றிவிட வில்லை. அவருடைய அரசியல் சிந்தனைகள், நம்பிக்கைகள் எப்போதும் ஒரே தன்மையை உடையனவாகவே இருந்தன. இவ்வுண்மையை நாம் அறிய வேண்டும் என்றால் அவருடைய அரசியல் தத்துவத்தின் தன்மையைப் புரிந்துகொள்ள வேண்டும் என ஸபைன் கூறுகிறார்.

லிபரலிசக் கொள்கையில் நம்பிக்கை வைத்திருந்தாலும் பர்க் ஒரு முற்போக்காளர் (Radicalist) அல்லர். அரசியல் சமூகத்தைப் புனிதமான ஓர் அமைப்பாக எண்ணினார். ஒவ்வொரு சமூக அமைப்பிலும் அதனுடைய பழக்கவழக்க அமைப்புகள், நுணுக்கங் கள், இவைகளுக்கு மதிப்புத் தரல் வேண்டும் என்றும், பல ஆண்டு களாகத் தொன்றுதொட்டு வழங்கிவரும் நிறுவனங்களுக்கு, குறிப்பாக, மதம், சொத்து முதலியவைகளுக்கு மதிப்பு அளித்தல் வேண்டும் எனவும் கருதினார். சமூக அமைப்புகளின் சரித்திர மாறுதல்களில் ஒரு தொடர்ச்சி இருப்பதாகவும், சமூக அமைப்பு களின் பாதையை, தனிமனிதனின் விருப்பமோ, காரண அறிவோ மாற்ற முடியாது எனவும் திடமாக நம்பினார். மேலும், வாழ்க்கை அந்தஸ்தின் பலரகப் படிகளில் இருக்கும் மக்கள், தங்கள் தகுதி, அந்தஸ்து இவற்றிற்கு மதிப்புக் கொடுத்து அந்தந்த அந்தஸ்துபடி வாழுதலையே இவர் விரும்பினார். நல்வாழ்வு வாழ, அரசு அவசியம் என்றும், அத்தகைய அரசை ஆளுவதற்கு, சாதாரண மக்கள் தகுதியற்றவர்கள் என்றும் மேன்மக்களே தகுதியுள்ளவர்கள் என்றும் நம்பினார். சுருங்கக் கூறின், பழமை வாதத் தத்துவத் தையே பர்க்கின் எழுத்துகளில் காண்கிறோம். இங்குக் குறிப் பாக என்ன கவனிக்கவேண்டும் என்றால், பர்க்கிற்கு முன்னால்

பழமைவாதக் கொள்கையே இல்லை. பர்க்தான் சிறப்பாக முதன் முதலாக விளக்கினார் என்பதன்று. ஆனால், அவருக்கு முன்னால் பழமைவாதம் இருந்தாலும் அது ஒரு தத்துவமாக இல்லை என்று ஸபைன் கூறுகிறார். [1]

இத்தகைய பழமைவாதங்கள் நிறைந்ததே அவருடைய அரசியல் தத்துவங்கள் ஆகும். இப்பொழுது அவ்வரசியல் தத்துவங்களை விளக்கமாக விவரிக்கலாம். தெளிவு காரணமாக, அரசைப் பற்றிய அவரது கோட்பாடுகளை முதன்மையிலும், பிறகு ஆங்கில நாட்டு அரசியல் சம்பந்தப்பட்ட சில கேள்விகளுக்கு அவர் கருத்துகளையும் விளக்கலாம்.

அரசைப் பற்றிய அவரது கோட்பாடு

பிரெஞ்சுப் புரட்சியும் அதன் தீவிரமும்தான் பர்க்கை அரசைப் பற்றிய சில பொதுவான அபிப்ராயங்களை வெளியிடத் தூண்டியது. இதற்கு முன் அவர் எழுதிய எழுத்துகள் எதிலும் அரசியல் தத்துவத்தைப் பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை. பொதுவாக அவர் அரசியல் கருத்துகளை வெளியிட மறுத்தார். அரசியல் முடிவுகள், சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி மாறுபடும். அறநெறியிலும் சரி, தவறு என்பது அந்தந்த சூழ்நிலைகளுடனும் அதை ஒட்டிய வேறு விஷயங்களோடும் தொடர்பு கொண்டது. அரசியல், அறநெறியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. எனவே, அந்தந்த நாட்டு அரசுகள், தங்களுக்கு எவை நல்லவை, எவை தீயவை என்று அவைகளுக்குத் தக்கவாறு, நல்லவைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். மக்களுக்கு என்னென்ன உரிமைகள் அளிக்கப்பட வேண்டும் என்ற கேள்விகளுக்குச் சரியான முறையில் கோட்பாடாகச் சொல்வது கடினம் என்று இவ்வாறாக பர்க் சொல்லி வந்தார். ஆனால், பிரஞ்சுப் புரட்சியின் தீவிரம், பர்க்கை அரசைப் பற்றிய பொதுவான சில அபிப்பிராயங்களைக் கூறத் தூண்டியது. அதாவது ஒரு நாட்டில் வாழும் மக்களின் உரிமைகள் என்ன, கடமைகள் என்ன என்பன போன்ற குறிப்பிட்ட கேள்விகளுக்குப் பர்க் பதிலளிக்காவிட்டாலும், உரிமைகளும், கடமைகளும் மனிதர்களிடையே எழக்கூடிய ஒரு சமூகத்தின் அமைப்பைப்பற்றிய சில பொதுவான கருத்துகளை வெளியிட உதவியது.

அரசின் தோற்றுவாயைப் பற்றிக் கூறுகையில் பர்க் அவரைப் போன்ற ஏனைய விக் கட்சியினர் மதிப்புக் கொடுத்திருந்ததும்,

[1] 'The point is not of course that before Burke, there was no conservatism; but it is almost true to say that before him, there was no conservative philosophy (Sabine).

லாக்கின் அடிப்படைக் கருத்தான சமூக ஒப்பந்தக் கோட்பாட்டை ஏற்க மறுத்தார். சமூக ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசு தோன்றவில்லை என்றும், அரசு என்பது, தெய்வாம்சம் பொருந்திய ஒன்று, அது வெறும் ஒரு மனித நிறுவனம் அன்று; சமூகமின்றி மனிதனால் தன் சுபாவத்திற்குத் தகுந்த முறையில் சிறப்புத் தன்மையை அடைய முடியாது என்கிறார். நம்மைப் படைத்த இறைவன், நற்பண்புகளின் உதவியைக்கொண்டு நாம் நம்மைச் செம்மைப்படுத்திக் கொள்ளும் தன்மையையே கொடுத்திருக்கிறார். இவ்வாறான வாழ்வு வாழ அரசு இன்றியமையாதது என்கிறார்.

லாக் தன்னுடைய சமூக ஒப்பந்தக் கொள்கையில் மக்கள் முதன்முதலில் செய்துகொண்ட ஒப்பந்தம் தான், வெளிப்படையானது என்றும், பிறகு வந்த அவர்களது சந்ததியார்கள் அவ்வொப்பந்தத்தை ஒப்புக்கொண்ட ஒரு முடிவாக ஏற்றுக்கொண்டார்களே தவிர, அவர்கள் மறுபடி வெளிப்படையாக வேறு ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்றார். இக் கோட்பாட்டை பர்க் ஏற்க மறுக்கிறார். சமூகத்தின் தொடர்ச்சி எதைப் பொறுத்தது என்றால், ஒரு நிலையான, ஒப்பந்தம் போன்ற தன்மையுடைய, ஆனால், ஒப்பந்தம் என்று கூற முடியாத ஒரு வகையைப் பொறுத்துள்ளது. அதாவது ஒவ்வொரு மனிதனும் தங்களது பெற்றோர்களுக்குப் பிள்ளைகளாகப் பிறப்பதன்மூலம் தான் கீழ்ப் படிந்து நடக்கிறானே தவிர, மற்றபடி அவன் எந்தவித ஒப்பந்தத்தையும் பெற்றோர்களுடன் ஏற்படுத்திக்கொண்டு, அதன் மூலம் கீழ்ப் படிவதில்லை. இதைப் போன்றே ஒவ்வொரு மனிதனும், ஒரு நாட்டில் பிறப்பதன்மூலம், அந் நாட்டின் அரசிற்குக் கீழ்ப் படிய வேண்டிய ஒரு பந்தத்தை ஏற்படுத்திக்கொள்கிறானே தவிர மற்றபடி, வெளிப்படை ஒப்பந்தமாக எதையும் ஏற்படுத்திக் கொள்வதில்லை என்கிறார். இவ்வாறாக பர்க், லாக்கின் ஒப்பந்தம் என்ற வார்த்தையை எடுத்துக்கொண்டாலும், அதற்கு வேறு விதமான பொருளைத் தருகிறார். மேலும், அவர் கூறுவதாவது 'சமூகம் ஒரு ஒப்பந்தத்தைப் போன்றதுதான். ஆனால், சில சமயங்களில் சிறு விருப்பங்களுக்காக ஏற்படுத்திக்கொள்ளும் இரண்டாம் தரமான ஒப்பந்தங்களைப் போன்றதன்று. அத்தகைய ஒப்பந்தங்களை விருப்பம் இல்லாவிட்டால் கலைத்துவிடலாம். ஆனால், அரசுடன் ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தம் அப்படிப்பட்டதன்று. அதனுடன் ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தம் வெறும், மிளகு, காப்பி, புகையிலை வியாபாரத்தில், தாற்காலிகமான லாபம் பெறுவதற்காகக் கூட்டு அமைத்துக்கொண்டு, விரும்பாவிட்டால் கூட்டாளிகள் கலைந்துவிடுவது போன்ற ஒரு முக்யத்வம் இல்லாத கூட்டாக அதை நினைக்கக் கூடாது. அரசை ஒருவித பக்தியுடன்

பார்க்க வேண்டும்; தாற்காலிகமானதும் அழியக்கூடியதுமான வெறும் மிருக வாழ்விற்காகக் கூடும் ஒரு கூட்டமைப்பு அன்று; மனிதர்கள், அதனுடன் ஏற்படுத்திக்கொண்ட கூட்டு, அறிவியலுடனும், கலைகளுடனும், பண்புகளுடனும், மற்றெல்லாச் சிறப்புகளுடனும் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தமாகும். இத்தகைய சிறப்புகளைக் கொண்ட கூட்டமைப்பின் நோக்கத்தையும், அவசியத்தையும், காரணத்தையும் பல சந்ததிகள் வந்தாலும் முழுமையாக அடைய முடியாது. எனவே, இந்தக் கூட்டமைப்பு அதில் வாழும் மக்களுக்காக மட்டும் ஏற்பட்டதன்று. இதில் வாழ்ந்து இறந்து போனவர்களையும் இனிப் பிறக்கப் போகிறவர்களையும் இணைக்கும் ஒரு கூட்டமைப்பாகும்'. —(பர்க்)[1]

இவருடைய இந்தப் பேருரையைக் குறித்து ஹென்ஷா, இறந்தவர்களும் இனிப் பிறக்கப் போகிறவர்களும் ஒப்பந்தமாகியுள்ள சமூகத்தில், இந்த வழக்கறிஞர் யாரிடத்தில் தன்னுடைய கட்டணத்தை வாங்கிக்கொள்வார்? அதாவது, இறந்தவர்களிடமா, அல்லது இனிப் பிறக்கப்போகிறவர்களிடமா எனக் கேலியாகக் கூறினாலும், அவரும் அவ் வாக்கியங்களில் உள்ள உள் அர்த்தத்தின் முக்கியத்துவத்தை உணராமல் இல்லை. பர்க் என்ன கூறுகிறார் என்றால், சமூகத்தில் வாழ்வது என்பது, ஒரு தலைமுறை வாழ்ந்து இறந்துவிட்டால், அத்துடன் அவர்களுக்கும் சமூகத்திற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்ற பொருள் அன்று. இருப்பவர்கள், ஏதோ இருக்கும் வரை இருந்துவிட்டுப் போவதும் அன்று. இனிப் பிறக்கப்போகிறவர்கள் அச் சமூகத்தில் சிறிது காலம் வாழ்பவர்கள் என்பதும் அன்று. சமூகம் என்பது தாற்காலிகமாக, ஒரு தலை முறை வாழ்ந்துவிட்டு, மறு தலைமுறைக்கு இடமளிக்கும் ஓர் அமைப்பு மட்டும் அன்று. ஒவ்வொரு சமூகத்திலும் அந்தந்தத் தலைமுறையினர், அறிவியல் கலாசார நாகரிக வளர்ச்சிக்குத் தங்களுடைய பங்கை அளிக்கின்

[1] 'Society is indeed a contract. Subordinate contracts for objects of mere occasional interests may be dissolved at pleasure—but the state ought not to be considered as nothing better than a partnership or agreement in a trade of pepper and coffee, calico or tobacco or some other such low concern, to be taken up for a little temporary interest and to be dissolved by the fancy of the parties. It is to be looked upon with reverence; because it is not a partnership in things subservient only to the gross animal existence of a temporary and perishable nature. It is a partnership in all science, a partnership in all Art, a partnership in every virtue, a partnership in all perfection. As the ends of such partnership cannot be obtained in many generations, it becomes a partnership not only between those who are living, but those who are dead, and who are yet to be born.

—*BURKE*

(Reflections on the Revolution in France)

றனர். அவர்களது உடல்கள்தாம் மறைகின்றனவே தவிர, அச் சமூகத்தின் நாகரிக வளர்ச்சிக்கு அவர்கள் அளித்த பங்கு மறைவதில்லை. இவ்வாறாக, ஒவ்வொரு சமூகமும் இதுவரை வளர்ந்து வந்த, சமூக நாகரிக பழமையான பழக்க வழக்கங்களைப் போற்றிப் பேணி வருகிறது. இதில் ஒருவன் அங்கத்தினன் என்றால், அச் சமூகத்தில் அதுவரை ஏற்பட்டு வளர்ந்திருக்கும் கலை, அறிவியல், கலாசாரம் இவைகள் அனைத்துடனும் அவன் தன்னை ஒப்பந்தப்படுத்திக்கொள்கிறான். அதனால் இச் சமூகத்தில் வாழ்வது அவனுக்கு ஒரு சுமையல்ல. சுதந்திர வாழ்விற்கே ஒரு திறவுகோலாகும். இதைத்தான் பர்க் உணர்த்துகிறார். இப்படிக் கூறுவதன் மூலமாக பிரெஞ்சுப் புரட்சிக்காரர்கள், முடியாட்சியை அழிப்பதன் மூலமாக, பிரெஞ்சு நாட்டுக் கலாசாரத்தையே அழித்துவிட்டு, அதன் மூலமாக அச் சமூகத்தின் விரோதிகளாகிவிட்டனர் என்று அவர்களைச் சாடுகிறார்.

ஆனால், அவர் கூற்றில் முழு உண்மை இருக்கிறது என்று சொல்ல முடியாது. மன்னரை நீக்கிவிட்டு பிரான்ஸ் நாடு குடியரசாக மாறியதன் மூலம், அச் சமூகமே அழிந்துவிட்டது என்று கூறமுடியாது. அரசு என்பது வேறு, சமூகம் என்பது வேறு; அரசை மாற்றியதன் மூலம், சமூகக் கலாசாரங்களும் நாகரீகங்களும் மாறிவிடுமா, என்றால், நாம் மாறிவிடாது என்று தான் கூறுகிறோம். எனவே, பர்க் ஹெகலைப் போல், அரசையும் சமூகத்தையும் ஒன்றுபடுத்திவிடுகிறார். இதிலிருந்து நாம் மேலும் அறிவது என்னவென்றால் சமூகம் என்பதற்கு, பர்க், லாக் கொண்டிருந்த பொருளிலிருந்து, முற்றிலும் மாறுபட்ட பொருளைக் கொண்டிருக்கிறார். லாக்கிற்கு சமூகம், மக்களால் தங்கள் நலனுக்காக ஏற்படுத்திக்கொண்ட ஒரு செயற்கையான நிறுவனம் ஆகும். ஆனால், பர்க்கிற்குச் சமூகம் ஒரு ஜீவராசியைப் போன்றது. இறைவனால் அளிக்கப்பட்ட மனிதனின் பண்பிற்கு மிக அவசியமான ஓர் அமைப்புதான் சமூகமேயன்றி, அது விருப்பத்தின்படி அமைத்து, கலைத்துக்கொள்ளும் ஓர் அமைப்பல்ல என்கிறார். எனவே, பிரெஞ்சுப் புரட்சிக்காரர்கள், நிறுவியிருந்த தீவிர ஜனநாயகவாதிகளின் குழுக்கள் (Jacolins), நோயாளி அரசுகளுக்கு, மருந்தாக மாட்டா. அவை நஞ்சு போன்றவை என்று கண்டனம் தெரிவிக்கிறார்.

மேலும், அவர் இங்கிலாந்து நாட்டில் 1688 ஆம் ஆண்டு நிகழ்ந்த மாண்புறு புரட்சியையும் பிரெஞ்சுப் புரட்சியையும் ஒப்பிட்டுக் காண்பிக்கிறார். எந்தவித நாச காரியமும், ஏற்படாத மாண்புறு புரட்சி, இருக்கும் நிறுவனங்களைக் காப்பதற்காக

எழுந்ததே தவிர, அறிப்பதற்காக அல்ல; முன்பு இருந்தபடியே மன்னர், மேன்மக்கள் போன்ற சமூக அமைப்புகள், தொடர்ந் தனவே தவிர, அழிக்கப்படவில்லை. பிரெஞ்சுப் புரட்சியில் நிகழ்ந்தபடி குழப்பம், பீதி, அழிவு போன்ற எந்தவித தீய சக்தி களும் இன்றி ஒரு மகிழ்ச்சிகரமான முடிவை ஏற்படுத்திக் கொடுத்தது என்கிறார். ஆனால், அதே சமயத்தில், எங்ஙனம் ஜீவராசிகள் தங்களது சுற்றுப்புற சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு தங்களை அனுசரித்து அமைத்துக் கொள்கின்றனவோ, அங்ஙனமே, அரசியல் நிறுவனங்களும், மாறும் சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு மாற்றி அமைக்கப்படவேண்டும் என்கிறார். இதனால்தான் இந்தியா, அயர்லாந்து, அமெரிக்கா போன்ற குடியேற்ற நாடுகளில் வளர்ந்து வரும் சூழ்நிலைகளுக்கேற்ப, சிறந்த சீர்திருத்தங்களை ஏற்படுத்த வேண்டும் என்கிறார். பர்க் அரசை ஓர் ஜீவராசி என்று கூறினா லும் ஹெகலைப் போல் தனிமனிதனை அரசுடன் ஒன்றிவிடச் செய்யவில்லை. ஹெகல், அரசு ஓர் ஜீவராசி; தனிமனிதன்; அந்த ஜீவராசியின் ஓர் அங்கமேயாவான்; எனவே, ஜீவராசியின் அங்கத்தைவிட அதாவது தனிமனிதனைவிட முழுமையான ஜீவ ராசியான, அரசே முக்யத்துவம் வாய்ந்தது என்றார். எனவே, தனிமனிதனின் உரிமைகள், சுதந்திரங்களைப்பற்றி ஹெகல் கவலைப் படவில்லை. ஆனால் பர்க், அரசு ஒரு வளர்ந்து வரும் ஜீவராசியைப் போன்றது என்று அதனுடைய வளர்ச்சியைக் குறிப் பிட்டுக் கூறினாலும், தனிமனிதர்களை அரசுடன் முழுமையாக ஒன்றிவிடச்செய்யவில்லை.

இயற்கை விதிகள், இயற்கை உரிமைகள் இவைகளைப் பற்றி பர்க்கின் கருத்து என்ன என்று பார்க்கலாம். லாக் போன்றோரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட, மனிதனின் இயற்கை உரிமைகள், இயற்கை விதிகள் பர்க்கால் மறுக்கப்படுகின்றன. அவர் ஏற்கும் விதிகளாவன, ஆங்கில அரசின் திருச்சபை (Anglican Church. மூலம் அறியப்படும் இறைவனின் விதிகளும், அரசுகள் ஏற்படுத் தும் சட்டங்களுமே ஆகும். மேலும் பிரெஞ்சுப் புரட்சியாளர்கள் ஏற்றுக்கொண்ட மனித உரிமைகள் (Human rights or rights of man) என்பவைகளையும், பர்க் ஏற்க மறுத்து, அத்தகைய உரிமை கள் குழப்பங்களுக்கு வழி என்று கூறுகிறார். இவர் ஏற்கும் உரிமைகளாவன: இறைவனின் விதிகளுக்கொப்ப, அரசு ஏற்படுத் தும் சட்டங்களின் வாயிலாக வழங்கப்படும் உரிமைகளே, உண்மை யான உரிமைகளாகும் என்கிறார். சமூகம் என்பது மக்களுக்கு நன்மைகளைச் செய்யும் ஒரு நிறுவனம். உரிமைகள் என்னும் பெயரில் மக்களுக்கு நன்மைகள் செய்வதற்காகவே சமூகம் இறைவனால் உண்டாக்கப்பட்டது. எனவே சமூகம், மக்கள்

வாழ்வதற்கான உரிமையைச் சட்டப்படி கொடுக்கிறது. எனவே, அச் சமூகத்தில் வாழும் மக்களுக்குச் சட்டப்படி வாழும் உரிமை உண்டு. இதைப் போலவே இதர மக்களிடமிருந்து நியாயத்தைப் பெறும் உரிமை, தொழில் துறையின் முன்னேற்றங்களின் பலன் களை ஏற்கும் உரிமை, தங்களது தொழிற்சாலைகள் வளம் பெற வேண்டிய வழிகளைத் தேடும் உரிமை, பெற்றோர்களைப் பேண உரிமை, பிள்ளைகளை நல்ல முறையில் வளர்த்து, கற்றவர்களாக்கும் உரிமை, ஆக இதுபோன்ற உரிமைகள் அவர்களுக்கு உண்டு என்கிறார்.

அரசிற்கும் மதத்திற்கும் உள்ள உறவு

லாக், அரசிற்கும் மதத்திற்கும் முழு பிரிவினை இருக்க வேண்டும் என்றும், நாட்டினுள், முழு சமய சகிப்புத்தன்மை இருக்க வேண்டும் என்றும் கூறினார். இதற்கு அவர் கூறும் காரணம் என்ன வென்றால் மக்களின் ஆத்ம நன்மையைப் பற்றி அரசு தலையிடக்கூடாது என்பதே. ஆனால், பர்க் தெய்வ நம்பிக்கை கொண்டவர். ஆதலால் அவர், அரசை, இறைவனின் கொள்கை கள், மதம் போன்ற இவைகளின் அடிப்படையில் எழுப்ப வேண்டும் என்கிறார்.

தன்னுடைய 'பிரெஞ்சுப் புரட்சியின் பிரதிபலிப்புகள்' என்னும் புத்தகத்தில் சமூகத்தின் அடிப்படை மதம் தான் என்றும், அது தான் சகல நன்மைகளுக்கும், மூலமாகும் என்கிறார். மேலும் அவர் கூறுவதாவது, நாம் பெருமையுடன் அறிந்து கொள்வது என்ன வென்றால், மனிதன் இயற்கை அமைப்பிலேயே மதத்தைத் தொழக்கூடிய சுபாவமுடையவன் என்றும், நாத்திகம் என்பது, அவனது மனசாட்சிக்கு மட்டுமன்று, அவனது உணர்வுக்கே எதிரானது என்கிறார் பர்க்.

மேலும், அரசும், சமயமும் நெருங்கிய தொடர்பு கொண்டது; புனிதமான அரசு, சமயத்தின் உதவியுடன் செயல்பட வேண்டும்; இவை இரண்டினையும் பிரித்தல் தவறு. எனவே, பிரெஞ்சுப் புரட்சியாளர்கள், நாட்டுப் பற்று என்னும் பெயரில் திருச்சபையை யும் அதன் சொத்துகளையும் அழித்தது, மிக வெறித்தனமானச் செயலாகும் என்கிறார் பர்க்.

பர்க் மக்களிடத்தில் இறைமை என்னும் கோட்பாட்டை (Doctrine of Popular Sovereigrity) ஏற்க மறுக்கிறார். லாக் தனது சமூக ஒப்பந்தக் கோட்பாட்டில், எல்லா மனிதர்களும், இயற்கையிலேயே சுதந்திரமானவர்களும் சமமானவர்களும்

ஆவர். எனவே, இத்தகைய தன்மை உடையவர்களை அவர்களது, சம்மதமில்லாமல் ஆள முடியாது என்றும், எல்லா மனிதர்களும், வெளிப்படையான (explicit) அல்லது உள்படையான (implicit) ஒப்பந்தத்தின் மூலம் தங்களை ஆளும் அதிகாரங்களை, ஒருவரிடமாவது, சிலரிடமாவது, பலரிடமாவது கொடுத்து வைக்கிறார்கள் என்றார். எனவே, அதிகாரத்தின் மூலம் கடைசியில் மக்களிடமே உள்ளது என்றார். புது விக் கட்சியினர் அதிகாரத்தின் மூலம் மக்களிடமே உள்ளது என்னும் லாக்கின் கருத்தை ஏற்றனர். பர்க், புது விக் கட்சியினரைக் கண்டிக்கிறார். மனிதர்களல்லர், இறைவனே, சமூகம், அரசு முதலியவைகளின் தலைவன் என்றும், அரசின் அதிகாரங்களைச் செலுத்துவோர் இறைவனுக்குச் சமமானவர்கள் என்றும் கூறுகிறார். மேலும் அவர் கூறுவதாவது, பெரும்பாலோரின் சம்மதித்தின் அடிப்படையிலேயே அரசையும் அதன் அதிகாரங்களையும் ஏற்படுத்திச் செலுத்த வேண்டும் என்னும் கருத்து உண்மையன்று. பெரும்பாலோரின் முடிவு என்பது இயற்கை விதி அன்று. பழக்கத்தின் காரணமாகப் பெரும்பாலோரால் அல்லது சிறுபான்மையோரால் மக்கள் ஆளப்படலாம். ஆனால், அறிவுள்ள மேன்மக்கள் ஒருவராயிருந்தாலும் சரி, சிலராக இருந்தாலும் சரி அவர்களுடைய முடிவே, பலரது முடிவைவிட, அதிக விருப்பத்துடன் மனித உள்ளம் ஏற்றுக்கொள்கிறது. இதற்குக் காரணம், பெரும்பாலோர், அவ்வப்பொழுது எழும் விருப்பங்களின் கட்டளைக்கு அடிபணிந்து காரணப் பகுத்தறிவைக் காற்றில் விட்டுவிடும் தன்மையை உடையவர்கள். மிக ஆபத்தான ஆட்சி என்பது எது என்றால், சாதாரண மக்களால் ஆளப்படும் ஆட்சியே. ஜனநாயக அரசு, ஆசை, அலட்சியம், அறிவின்மை இவைகளின் இருப்பிடம். இதற்குக் காரணம் பெரும்பாலோரிடம் இத்தீய குணங்களே காணப்படுகிறது. எனவே, ஜனநாயக அரசின் சாபங்களுக்கு நல்ல விதத்தில் தடை போடுவது என்பது மிகச் சிரமம். இவ்வாறாக ஜனநாயக அரசில் சற்றும் நம்பிக்கையற்றவராக இருக்கிறார் பர்க். இவ்வாறாகக் கூறுவதன் மூலம் இதே போன்ற கருத்துடைய ப்ளேட்டோவை நமக்கு நினைவுறுத்துகிறார். எனவே, பர்க் கூறுவதாவது, மக்கள் கூட்டம், சற்றும் ஆளத் தகுதியற்றதாதலால், இயற்கையான மேன்மக்களே அரசாள வேண்டும் என்றும், இவர்கள் சாதாரண மக்கள் கூட்டத்தைவிட, அறிவு நிரம்பியவர்கள், தைரியசாலிகள், திறமையாளர்கள் என்றும் எனவே இவர்களே, ஆத்ம தலைவர்களும், அரசின் தலைவர்களும் ஆவர் என்கிறார். எனவே, சாதாரண மக்களைவிடக் கற்றவரும், பண்பு மிக்கவர்களும், சிறந்தவர்களுமான இத்தகையோர் ஆண்டால், குடிமக்கள் இவர்களுக்கு மதிப்புக் கொடுத்து, பிரெஞ்சுப்

புரட்சியாளர்களைப்போல் மனிதத் தன்மையற்ற பாவச் செயல்களைச் செய்யக் கனவிலும் நினைக்கமாட்டார்கள் என்கிறார் பர்க்.

சில குறிப்பிட்ட ஆங்கில அரசு பற்றிய கேள்விகளுக்குப் பர்க்கின் பதில்

லாக் கூறியது போல் பிரிட்டிஷ் அரசு, மன்னர், மேன்மக்கள், சாதாரண மக்கள் ஆகிய இவர்களைக்கொண்ட சமநிலையான தன்மையுடையது தான், என்கிறார் பர்க். ஆனால், இவ்வரசு அமைப்பின் அடிப்படை லாக் கூறியதுபோல் யாராலும் மாற்ற முடியாத தனி மனிதர்களின் இயற்கை விதிகளைக் கொண்டதல்ல என்கிறார். மேலும் அவர் கூறுவதாவது, இங்கிலாந்து அரச அமைப்பின் அடிப்படை, தொன்று தொட்டு வரும் அதன் பழமைத் தன்மையிலேயே அடங்கியுள்ளது; நம் அரசியல் சட்டம் தொன்மை வாய்ந்தது; அதன் அதிகாரம் தொன்று தொட்டு அழிந்து விடாமல் தொடர்ந்து வருவதிலேயே அடங்கியுள்ளது ; ஒரு நாட்டிற்குத் தேர்ந்தெடுத்த அரசைவிட இவ்வகையாக பல ஆண்டுகளாக வழங்கி வந்து கொண்டிருக்கும் அரசே சிறந்தது. ஒரு நாடு என்பது வெறும் இடப்பரப்பும் தனிமனிதர்கள் குறுகிய காலத்திற்குக் கூடி வசிக்கக் கூடும் ஒரு கூட்டமும் அல்ல; அது காலம் தொட்டு தொடர்ந்து வரும் ஒரு தொடர்ச்சி; தனி மனிதன் அறிவற்றவன். ஒரு கூட்டம் கூட ஒரு நேரத்திற்கு யோசனையின்றி நடக்கும் போது அறிவற்றதுதான். ஆனால், காலம் தொட்டு இருந்துவரும் இனங்கள் அறிவுள்ளவை. பல ஆண்டுகளாக வாழ்ந்து அனுபவம் அடைந்து வேண்டியவற்றை ஏற்றுக்கொண்டு வேண்டாதவற்றைத் தள்ளிவிட்டு முறையான வழிப்படியே நடக்கின்றனர். இங்கிலாந்து அரசமைப்பும் அதனுடைய பழமைத் தன்மையிலேயே சிறப்பைப் பெறுகிறது என்கிறார்.

பிரெஞ்சு நாடு வழிமுறையாக வந்த நீண்டகால சரித்திரத்தின் மூலமாக சிறப்பான அரசியல் முறையையே கொண்டிருந்தது. ஆனால், உலகிலேயே வேறெங்கும் காணமுடியாத, அழிவின் அவதாரமாக வந்த பிரெஞ்சுப் புரட்சிக்காரர்கள் அழிவு உணர்வுகளால் உந்தப்பட்டு பழங்கால முறைகளை வேருடன் ஒரே அடியில் சாய்த்து வீழ்த்திவிட்டு புதிய விநோதமான அரசியல் முறையை ஏற்படுத்தியுள்ளார்கள். தேசீய அவை என்னும் ஓர் அவையை ஏற்படுத்தி கற்றறிந்தவர்களையும், செல்வந்தர்களையும் விட்டு விட்டு ஊர் பேர் அற்றவர்களைக் கொண்டு அமைத்துள்ளனர். இந்த அவைக்கு மேலுலகத்தாலும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இதற்கு எதிர்மாறானது இங்கிலாந்து நாட்டில் நடந்த மாண்புறு புரட்சி.

அப்புரட்சி ஆங்கில அரசு அமைப்பதற்கு மதிப்புக் கொடுத்தது. மன்னரையும் இரண்டு சட்டமன்றங்களையும் ஏற்றுக் கொண்டது. மொத்தத்தில் ஆங்கில அரசியல் அமைப்பை எல்லோருடைய விருப்பங்களையும் சரிசமமாகப் பூர்த்தி செய்யக்கூடிய தராசு போன்ற தன்மையுடையதாக்கித் தொடர்ந்து இருக்கச் செய்துவிட்டது. எனவே, ஆங்கில மக்களது அரசியல் உரிமைகளும் சலுகைகளும் 'மகா சாசனம்' (Magna Carta) வந்ததிலிருந்து வம்ச வம்சமாகத் தொடர்ந்து வருகிறது என்று கூறுகிருர் பர்க். இங்கிலாந்து நாட்டில் மேன்மக்களாட்சி எவ்வாறு செயல்பட வேண்டுமென்பதையும் ஓர் உதாரணமாகக் காட்டி விளக்குகிருர். பாராளுமன்றத்தைத் தலைமை தாங்கி நடத்தக் கூடியதும் நிர்வாகத்தில் மன்னர் தலையிடக் கூடாததுமான ஒரு பாராளுமன்ற அரசே இருக்க வேண்டுமென்றும், மக்கள் அவையை அதிக ஜனநாயகத் தன்மையுடையதாக்கக் கூடாது என்கிருர். ஆகவே, இவர் மூன்று மூன்ரும் ஜார்ஜ் ஆண்ட தன்னிச்சை ஆட்சியைக் கண்டிக்கிருர். அதேநேரம் மக்கள் அவையை அதிக ஜனநாயகமாகச் சீர்திருத்துவதற்காகச் சிபார்சு செய்யப்பட்ட பாராளுமன்றச் சீர்திருத்தங்களையும் வன்மையாக எதிர்க்கிருர். தொகுதிவாரியாகப் பெருவாரித் தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படும் பாராளுமன்றத்தையும் வன்மையாக எதிர்க்கிருர். ஏற்கனவே, அவர் காலத்தில் இருந்து வந்த 'பாழ்பட்ட மாவட்டங்கள்' (Rotter Boroughs) மட்டும் பாராளுமன்றத்திற்கு அங்கத்தினர்கள் அனுப்பும் முறையை (Election by boroughs) தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமென்று வேண்டுகிருர். பாராளுமன்றம் கற்ரேரும், மேன்மக்களும், சமயத் தலைவர்களும் அடங்கிய ஒரு சிறு குழுவாகவே இருக்க வேண்டுமென்றும், அப்பொழுதுதான் அந்த அவை எல்லோருடைய விருப்பங்களையும் அனுதாபத்துடன் கவனிக்கும் என்றும், அமைச்சர்களையும் சிறந்த முறையில் கண்காணிக்கும் என்கிருர். அதே சமயத்தில் சிறந்த முறையில் அரசு நிர்வகிக்கப்பட வேண்டுமென்ருல் பாராளுமன்றம் அமைச்சர்களின் தலைமையிலேயே நடத்தப்பட வேண்டுமென்றும், அவர்களுக்குச் சட்டம் செய்யுரிமை (Delegated legislation) வழங்கப்பட வேண்டுமென்றும் கூறுகிருர்.

பிரதிநிதிகளின் மூலம் செலுத்தப்படும் ஆட்சியான ஜனநாயக அரசில் குடிமக்களை வழிகாட்ட கட்சிகள் இருக்க வேண்டுமென்கிருர். பாராளுமன்றத்தில் கட்சித் தலைவர்களே தங்களது கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். எனவே, அரசியல் கட்சி என்பது தேசிய நன்மைக்காக ஏதாவது ஒரு

கொள்கையைத் தங்களுக்குள் ஏற்றுக்கொண்டு அதன் மூலமாகத் தேசீய நன்மையை வளப்படுத்த முயற்சிசெய்யும் ஓர் அமைப்பே என்கிறார். அதனால்தான் கட்சித் தலைவர்களான அமைச்சர்களே பாராளுமன்றத்தின் தலைவர்களாக இருத்தல் வேண்டுமென்கிறார்.

பர்க் தன்னுடைய பிரிஸ்டல் தொகுதியினருக்கு ஓர் அறிவுரை வழங்குகிறார். அதாவது பாராளுமன்றத்தின் ஓர் அங்கத்தினர் தன்னுடைய தொகுதியில் நின்று வெற்றி பெற்ற பிறகு அவர் அத்தொகுதி மக்களுக்கு மட்டும் பிரதிநிதியல்ல, நாட்டின் பிரதி நிதியேயாவார். எனவே, தன் அறிவு, மனசாட்சி இவற்றிற்கு ஏற்றாற்போல் எந்த மசோதாவைப் பற்றியும் விவாதிக்க வேண்டுமே தவிர தன்னுடைய தொகுதி மக்களின் விருப்பத் திற்காக மட்டும் பேசக்கூடாது என்கிறார்.

ஒரு பழமையாளர் என்கிற முறையில் 'ஜாகோபைட்' (Jacobits), ஜாகோபின் (Jacobin), கொள்கைகளை விஷமென வெறுத்தார். அதே நேரம் முன்னேற்றத்தில் நாட்டம் கொண்ட வர் ஆதலால் பழைய நிறுவனங்களை ஜாக்கிரதையான முறை யிலேயே சீர்திருத்தப்படவேண்டும் என்கிறார். ஒழுங்குமுறை எனும் பெயரில் காலந்தொட்டு வழங்கிவரும் நிறுவனங்களை உதறித்தள்ளிவிட்டுப் புதுப்புது ஒழுங்கற்ற புதுமைகளைக் கொண்டு வரக்கூடாது என்பதே இவருடைய வாதம்.

இவருடைய கோட்பாட்டிலுள்ள குறைபாடுகள்

இங்கிலாந்தின் குடியேற்ற நாடுகளாக இருந்த இந்தியா, அயர்லாந்து, அமெரிக்கா, போன்ற இந்நாடுகளின் முன்னேற்றத் திற்காக மிக அனுதாபமான முறையில் பேசிய பர்க், பிரெஞ்சுப் புரட்சியை அவ்வளவு தூரத்திற்குக் கண்டனம் தெரிவித்ததில் நியாயமில்லை யென்றே கூறலாம். அவர் கூறியபடி, பிரெஞ்சு நாடு புரட்சிக்குப் பிறகு எந்தவித குழப்ப நிலையையும் அடைந்து விடவில்லை. இன்னும் கூறப்போனால் புரட்சியின் விளைவினால் அதனுடைய ராணுவ பலம் மேலோங்கி வளர்ந்தது. சொத்துரிமை, பர்க் கூறியது போல் அங்கு அழிக்கப்படவுமில்லை. மாறாக புதிய தொரு அரசியல், சட்ட ஒழுங்கு முறை ஏற்படுத்தப்பட்டு, சொத்துரிமை பாதுகாக்கப்பட்டது.

பர்க் பிரெஞ்சுப் புரட்சியையும் இங்கிலாந்து நாட்டில் நிகழ்ந்த மாண்புறு புரட்சியையும் ஒப்பிட்டு, எங்ஙனம் பிந்தைய புரட்சி சமாதான முறையில் தன் குறிக்கோளை அடைந்தது என்றும் முந்தைய புரட்சி தீவிர வெறிச்செயல் மூலம் இருக்கும் ஒழுங்கு முறையை அழித்தது என்றும் கூறுகிறார். ஆனால் இங்கிலாந்தில்

அதற்கு முன்பு 1642இல் ஆரம்பித்து 1649ஆம் ஆண்டு முதலாம் சார்லஸ் மன்னருக்கு மரண தண்டனை விதித்த உள்நாட்டுப் போரைப்பற்றி அவர் ஒன்றும் கூருதது ஆச்சரியமாக இருக்கிறது. ஆலிவர் க்ராம்வெல் (Oliver Cromwell) தலைமையில் எழுந்த ஆங்கிலப் புரட்சியாளர்களே பிரெஞ்சுப் புரட்சியாளருக்கு வழி காட்டியாக இருந்தனர் என்று கூறலாம். முதலாம் சார்லஸ் உள் நாட்டுப்போரின் விளைவிஞலேயே தன் உயிரை இழந்தார். ஆனல், பிரெஞ்சு மன்னர், பிரெஞ்சுப் புரட்சியின் ஆரம்பக் கட்டத்தில் புரட்சியை ஒடுக்க அன்னிய நாட்டினரின் உதவியை நாடிய தாலேயே அவர் உயிரை இழக்க நேரிட்டது என்று கூறலாம். மேலும் புரட்சிகள் பழைய ஒழுங்கு முறைகளை நீக்கி, புதிய முறைகளைக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகவே எழுவதில்லை. தாளமுடியாத துன்பங்கள், அனுபவங்கள் இவை களின் விளைவாக எழலாம் என்பதைப் பர்க் காணத் தவறிவிட்டார். மேலும் பிரெஞ்சுப் புரட்சி முடிந்த பிறகு அதனுடைய விளைவுகள் என்ன என்று பார்த்து பிறகு எதையும் கூறும் அளவிற்கு அவருக்குப் பொறுமையில்லை எனலாம். எந்தவித சந்தேகமுமின்றி பிரெஞ்சுப் புரட்சியாளர்கள் கொலைகாரர்களும், கொள்ளைகாரர்களுமே ஆவர் என்ற மாற்ற முடியாத முடிவை எடுத்துக்கொண்டார். அதைப் போலவே பிரெஞ்சுப் புரட்சிக்கு முன் பிரெஞ்சு நாட்டில், மன்னர், மதம், மேன்மக்கள் போன்ற சிறந்த நிறுவனங்களைக்கொண்ட மிக லட்சிய நிலையில் இருந்தது என்று கூறுகிருர். அங்கிருந்த ஏழை மக்களின் கொடிய நிலையும் வறுமையும் அவர் கண்களுக்குத் தென்படவில்லை. அரசி மேரி அன்டாயினட் புரட்சியாளரிடம் பட்ட துன்பத்தைக்கண்டு திடுக்கிடுகிருர். சாதாரண மக்கள் பட்ட துன்பத்தைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. இதைத்தான் 'தாமஸ் பெயின்' தன் 'மனித உரிமைகள்' (Rights of Man) என்னும் புத்தகத்தில் 'இறக்கும் பறவையை மறந்துவிட்டு அதனுடைய வண்ண இறகிற்காக வருத்தப்படுகிருர் பர்க்' என்று ஏளனம் செய்கிருர்.

இக்குறைபாடுகள் அனைத்தும் ஒருபுறமிருக்க, அவரது தத்துவத்தின் செல்வாக்கை யாராலும் மறந்துவிட முடியாது. அவரது படைப்புகளில் குறிப்பாக பிரெஞ்சு நாட்டுப் புரட்சியின் பிரதிபலிப்புகள் என்னும் புத்தகத்தின் ஒவ்வொரு பக்கமும் அறிவுச்சுடராக திகழ்கிறது என்று கூறினல் அது மிகையான கருத்தன்று. இவருடைய பழமை வாதத்தின் விளைவிஞலேயே ஆங்கில தொழிற் கட்சி சோஷியலிசத்தைப் புரட்சியின்றிப் பாராளு மன்ற முறைப்படி அடைய வேண்டும் என்ற முடிவை எடுத்துக் கொண்டது.

3. ஜெரிமி பென்தம் 1748—1832

பத்தொன்பதாவது நூற்ருண்டின் அரசியல் சிந்தனையாளர்களில் மிக முக்கியமானவர்கள் பென்தமும், ஏனைய ஆங்கிலப் பயன் கருது கொள்கையினருமே ஆவர். இவர்களது பயன் கருதுத் தத்துவத்தை (Utilitarian Philosophy) பழங்காலத்து எபிகுரஸ் (Epicurus) போன்ருேர் கூறிய மகிழ்ச்சித் தத்துவத்தின் (hedonism) மறுமலர்ச்சி என்று கூறலாம்.

பர்க்கின் பழமை வாதத் தத்துவம் படிப்பதற்குச் சுவையாக இருந்தாலும் வருங்கால நிகழ்ச்சிகளைத் தடை விதிக்க உதவவில்லை. அவர் பிரெஞ்சுப் புரட்சியைச் சரியாகக் கணிக்கத் தவறிவிட்டார். அப்புரட்சி ஐரோப்பாவின் வகுப்பு அமைப்பின் மாற்றத்திற்கான அறிகுறியே என்பதைக் கவனிக்கத் தவறிவிட்டார். மேலும் தொழிற் புரட்சியினுல் ஏற்படப்போகும் விளைவையும் அவர் கவனியாது விட்டு விட்டார். பதினெட்டாம் நூற்ருண்டின் இடையிலிருந்தே, இங்கிலாந்து தேசத்தில், தொழில் நுணுக்க மாற்றங்கள், புரட்சிகரமான சமூக எண்ணங்களையும், பொருள் சார்பான சூழ்நிலையையும் ஏற்படுத்தியது. தொழிற் புரட்சியினுல், பொருளாதாரத் துறையில் நிலமே உணவு உற்பத்தியின் முக்கிய தேவை என்ற பழைய உணர்வு மறைந்து, அதன் இடத்தை இயந்திரத் தொழில் முறை பிடித்துக்கொண்டது. தொழிற் புரட்சியினுல் விளைந்த முக்கிய விளைவுகள் மூன்று. 1. நகரங்கள் வளர்ந்தன. 2. சுகாதாரத் துறையிலும் வாழ்வு நல முறையிலும் ஏற்பட்ட முன்னேற்றத்தினுல், ஜனப்பெருக்கம் ஏற்பட்டது. 3. சமூக அமைப்பின் வகுப்பு வரிசையில் முன்பு நிலப்பிரபுக்கள் முதல் இடம் பிடித்திருந்தனர். அம்முறை சிறிது சிறிதாக மாறி அந்த இடத்தில், உற்பத்தியாளர் (manufacturers), வியாபாரிகள் போன்ருேர் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டனர். எழுந்து வரும் மத்திய தர வகுப்பினர், தங்களுக்கேற்ற முறையில் ஒரு புதிய சமூக, அரசியல் தத்துவத்தை நாடினர். பர்க் போன்ருேரின் பழமை வாதமும், தாமஸ் பெய்ன் போன்ருேரின் தீவிர வாதமும் அவர்களுடைய கவனத்தைக் கவரவில்லை.

இவ்வாருக மேலெழுந்துவரும் மத்தியதர வகுப்பினர் விரும்பும்படியான தத்துவத்தை ஜெரிமி பென்தமும், அவரைப்

பின்பற்றியோரும் வழங்கினர். அவர்களுடைய பயன் கருது வாதம் செயலறிவிலும், அனுபவத்தின் அடிப்படையிலும் அமைந் திருந்தது. இவர்கள் கருத்தாவது, இயற்கை விதிகள் என்பதாவது சர்வ வல்லமை படைத்த யாராலும் எடுத்துக்கொள்ள முடியாத உரிமைகளும், அறவழி நீதிகளும் ஆகும் என தனித்தன்மை யாளர்கள் (Individualists) கூறுகின்றனர். இவர்களது கருத் துகள் நடைமுறைக்கு உதவாதவை. மனித விவகாரங்களுக்குப் பயனுள்ளவை என்னவென்ருல், சூழ்நிலைக்குப் பொருத்தமாக இருப்பவையே. எனவே, அரசியல் நிறுவனங்கள், கொள்கைகள், இவைகள் யாவையும் நல்லவையா, தீயவையா என்று எப்படி முடிவு செய்ய வேண்டும் என்ருல் கற்பனை அல்லது யூகத்திஞல் முடிவு செய்யப்பட்ட மனித உரிமை, கடமை போன்றவைகளைக் கொண்டல்ல. நன்மை, தீமைகள், அவைகள் தரும் முடிவைக் கொண்டுதான் தீர்மானம் செய்ய வேண்டும். வெறும் லட்சி யங்களைக் கொண்டு செய்யக்கூடாது. எனவே, இவ்வாதக் கொள்கையினரின் அடிப்படைப் பொதுக் கருத்து என்னவென்ருல், மனிதர்கள் மகிழ்ச்சியையே நாடுகின்றனர். சரியான காரியம் என்பது, மட்டற்ற மகிழ்ச்சியைத்தரும் செய்கைகளே ஆகும். பெரும்பாலான மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிப்பதற் காகவே அரசு இருக்கிறது. இதுவே அவர்களது தத்துவத்தின் சுருக்கமாகும். பயன் கருது வாதம் பென்தமால் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு தத்துவம் அன்று. அவருக்கு முன்பே டேவிட் ஹியூம், பரீஸ்ட்லி போன்ருேரால் கூறப்பட்டுள்ளது. ஆனுல், இத்தத்துவத்தை அனைவரும் அறியும்படிச் செய்த பெருமை பென்தமையே சாரும்.

பென்தம் 1748ஆம் ஆண்டு பிறந்தார். அவர் ஒரு செல்வம் மிக்க வழக்கறிஞர் குடும்பத்தைச் சார்ந்தவர். அவர் தந்தை, தன்னைப்போல் தன் மகனும் ஒரு வழக்கறிஞர் ஆவதையே விரும்பிஞர். இவர் 1755ஆம் ஆண்டு வெஸ்ட் மினிஸ்டர் பள்ளியில் சேர்க்கப்பட்டு, 1760ஆம் ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தைச் சார்ந்த க்வீன்ஸ் கல்லூரியில் சேர்க்கப் பட்டார். 1769ஆம் ஆண்டிற்குள் சட்டப்படிப்பை முடித்துவிட்டு, வழக்கறிஞரானுர். ஆனுல், இவரது முழு கவனமும் அத் தொழிலில் நாடவில்லை. சட்டங்களைப் படித்துத் தேர்ச்சி பெறு வதை விட, அச்சட்டங்களிலுள்ள குறைகளே அவருக்கு அதிக மாகத் தென்பட்டன. இவர் ஒரு பெரும் வழக்கறிஞராகத் திகழ வேண்டும் என்று ஆர்வத்துடன் இருந்த இவரது தந்தை, கூடிய சீக்கிரமே அவ்வெண்ணத்தைக் கைவிட்டார். ஆனுல், அதற் கென்று இவர் காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கவில்லை.

இவர் கூடிய சீக்கிரம், மனிதர்கள் அனைவரும் குறிப்பாக, தான் மனித இனத்தின் மகிழ்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்ற முடிவிற்கு வந்தார். 'ஒரு மனிதனுக்குத் திறமை இருக்கிறதா? அத்திறமை அனைத்தையும் ஒவ்வொரு முறையிலும் உபயோகப்படுத்தித் தன் நாட்டிற்குத் தொண்டு புரிய வேண்டும்' என அவர் கூறினார். பிறருக்கு உபதேசிப்பதுடன் நிறுத்திவிடாமல் தன் வாழ்நாள் முழுவதையும், ஒரு சீர்திருத்தவாதியாகவே கழித்தார். எனவே, இவரை மறைமுகத்தான் அரசியல் சிந்தனையாளர் என்று கூறலாமே தவிர, இவரை முதற்கண் ஒரு சீர்திருத்தவாதி என்றே சொல்லலாம்.

பென்தம் சட்ட சீர்திருத்தமே தனது முதல் பணியாக நினைத்தார். சட்டம் இயற்றுவதே மற்ற எல்லாப் பணிகளையும் விட, மிக முக்கியமான பணி. ஆதலால், சட்டங்களைச் சீர்திருத்துவதே தலையாய பணியாகும் எனக் கொண்டார். மேலும் இப்பணிக்கான ஆற்றல் தனக்கு இருப்பதாக அவர் முழுமையாக நம்பினார். இவரைப்பற்றி டைசி கூட, பென்தம் சட்ட நுணுக்கம், தத்துவம் இவைகளை நன்கு அறிந்தவர் என்பதில் ஐயமில்லை என்று கூறுகிறார். இவர் விஞ்ஞானத்தின் அடிப்படையில் சட்டங்களை எப்படி எல்லாம் இயற்ற முடியும் என சிந்தித்தார். அதன் மூலம் மனித குலத்தை மூட நம்பிக்கைகளின் தளையிலிருந்து விடுவிக்க முடியும் என எண்ணினார். சட்டத்தைச் சீர்திருத்தும் பணியே இவரை, பொருளாதார, அரசியல், மனோதத்துவம் போன்ற துறைகளில் ஈடுபாட்டை, ஏற்படுத்தியது.

பென்தமின் புத்தகங்களில் மிக முக்கியமானவை அரசின் பகுதி (Fragment on govt. 1776ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.) ஒழுக்கங்கள், சட்டங்கள், இவைகளின் கொள்கைகளுக்குத் தொடக்கவுரை (Introduction to the Principles of Morals and Legislation, 1784) ஆகியவை ஆகும். முதல் புத்தகம் ப்ளாக்ஸ்டோனின் விமர்சன உரைகளைப் (Commentaries) பற்றிய கண்டனமும், இரண்டாவது புத்தகம் தன்னுடைய சமூகக் கோட்பாட்டைப் பற்றிய விளக்கவுரைகளும் ஆகும். இவைகளைத் தவிர அவர் எழுதிய புத்தகங்கள் ஏராளம்.

அவருடைய எல்லாச் சீர்திருத்தங்களும், அரசியல் கோட்பாட்டுக்கு ஒரே கொள்கையைத்தான் கூறின. அது பெரும்பான்மையோரின் மட்டற்ற மகிழ்ச்சி என்னும் பயன் கருதுவாதம் (Greatest happiness of the greatest number) ஆகும். இக் கொள்கையை உரைக் கல்லாக வைத்தே அவர் ஆங்கிலச் சட்டங்களும்,

நிறுவனங்களும் சிறந்தவையா, அல்லாதவையா என்று சோதனை செய்தார். அச் சட்டங்களும் நிறுவனங்களும் இருக்கலாமா, கூடாதா என்பதை இக் கொள்கையைக் கொண்டே நிர்ணயிக்க வேண்டும் என்று கூறுகிறார். அவைகள் எல்லோருக்கும், குறிப்பாக, தொழிலாளர் வகுப்பிற்கும், கீழ் வகுப்பினருக்கும் பொது நன்மையைத் தருகிறதா இல்லையா என்று பார்க்க வேண்டும் என்கிறார். சிசரோ, க்ரோஷியஸ் ஆகியோர் விளக்கிய இயற்கை விதிகள்தாம், பல நூற்றாண்டுகளாக, மனிதர்கள், அரசு இவைகளின் ஒழுக்கத்தை நிர்ணயிக்கும் அளவுகோலாக, எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்தது. ஆனால், பென்தமிற்கு அவர்களது இயற்கை விதிகள் (Natural laws) வர்ணனை மிகுந்த அர்த்தமற்ற வார்த்தைகளேயாகும். லாக் முதலியோர் கூறிய இயற்கை விதிகளும் வெறும் கட்டுக்கதைகளே என்கிறார் பென்தம். எனவே, இவர் பயன்கருது வாதத்தை எடுத்துக்கொண்டு அதன்படி தனி மனிதனுக்கு, ஒழுக்கம் என்பது எது என்றால், எந்தக் காரியங்களைச் செய்தால் அவனுக்கு அதிக மகிழ்ச்சியைத் தருமோ அதுதான் என்கிறார். இதைப்போலவே, அரசிற்கு அறவழி என்பது எது என்றால் அதன் மக்கள் தொகையால் பெரும்பாலோருக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தரும் செயல்களைச் செய்வதில் அடங்கும் என்கிறார்.

இப்பொழுது நாம் (1) பயன் கருது கொள்கையைப் பற்றிய அவர் கருத்தினைப் பற்றியும், பிறகு (2) எங்ஙனம் இக் கொள்கை அவரது அரசியல் கருத்துகளின் அடிப்படையாகத் திகழ்ந்தது என்றும் பார்ப்போம்.

(1) பெரும்பாலோரின் மட்டற்ற மகிழ்ச்சி

அவர் கூறுவதாவது, இயற்கை, மனிதர்களை இரு தலைமையின் ஆளுகையில் ஒப்படைத்துள்ளது. அவ்விரு தலைமைகள் யாவை என்றால் இன்பமும், துன்பமும் ஆகும். நாம் பேசுவது, நினைப்பது போன்றவை எல்லாமே இவ்விரு தலைமைகளின் ஆளுகைக்கு உட்பட்டதுதான். மனிதனின் குணம் என்னவென்றால், துன்பத்தைத் தவிர்ப்பதும், இன்பத்தை நாடுவதுமே ஆகும். இவ்விரு தலைமைகளே, நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும், எதைச் செய்தால் நன்மை பயக்கும் என்பதையும் முடிவு செய்கின்றன. இன்பம் அல்லது மகிழ்ச்சி என்பது சுயநலத் தன்மையுடைய மகிழ்ச்சியோ, இன்பமோதான் ஆகும். ஏனென்றால் மனிதன் சுயநலத் தன்மை உடையவன். எல்லா இன்பங்களும் அதாவது உள்ளத்தால், உணர்வால் பெறும் இன்பங்கள், ஒரே

தன்மையுடையவை (seme quality). ஒரு குழந்தைக்கு விளையாட்டு எவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுக்கிறதோ, அதே தர, மகிழ்ச்சியைத்தான் ஒரு கவிஞனனும் தன் கவிதையில் காண்கிருன். இம் மகிழ்ச்சி அளவில் வேண்டுமானுல் வித்தியாசப்படலாம். அதாவது, சில காரியங்களைச் செய்வதால் நீண்ட நேரத்திற்குத் தொடர்ந்து இன்பத்தைப் பெறலாம்; சில காரியங்கள் குறுகிய காலத்திற்கு மட்டுமே இன்பத்தைத் தரலாம் அல்லது சில காரியங்களைச் செய்வதன் மூலம் எதிர்காலத்திலேயே இன்பத்தைப் பெறலாம் ; சில காரியங்களால் நிகழ்காலத்தில் மட்டும் இன்பத்தை அடையலாம்; சில காரியங்கள் மிக்க மகிழ்ச்சியைத் தரலாம்; சில காரியங்களைச் செய்வதால் குறைவான மகிழ்ச்சியைப் பெறலாம். இவ்வாருன தன்மை உடைய மகிழ்ச்சி என்னும் உணர்வை, பின்வரும் முறையில் அளக்கலாம் என்கிருர் பென்தம். அதாவது (1) மகிழ்ச்சியின் ஆழம், கால அளவு இவைகளைப் பொருத்தும் (Intensity and duration). (2) நிச்சயமான அல்லது நிச்சயமற்ற தன்மையைக் கொண்டும் ((Certainty or uncertainty) (அதாவது நிச்சயமான மகிழ்ச்சி, நிச்சயமற்ற மகிழ்ச்சியை விடச் சிறந்தது). (3) எளிதில் அடையக்கூடிய மகிழ்ச்சி, அடைய முடியாத மகிழ்ச்சி, இவற்றைக் கொண்டும் ((propinquity or remoteness). (4) பரிசுத்தமான தன்மையுடையதும், மேன் மேலும் மகிழ்ச்சியைப் பெருக்கும் முறையினைக் கொண்டும், (fecundity and purity). (அதாவது தூய தன்மையுடையதாயும், மேலும் மேலும் இன்பம் பெருகும் என்ற தன்மை உடையதாயும் இருந்தால், அதுவே இத் தன்மையற்ற இன்பத்தை விடச் சிறந்து). தூய தன்மை என்ருல், துன்பக் கலப்பற்றதாக இருத்தல் என்று பொருளாகும். இந்த நான்கு குறிப்புகளையும், அவர் நான்கு அளவுகள் என்று கூறுகிருர்.

இந்த நான்கு அளவுகளைக் கொண்டே, இன்பத்தைப் போலவே, துன்பத்தையும் அளக்கலாம். உதாரணமாக, எவ்வளவு குறைந்த துன்பத்தைத் தருகிறதோ, அக் காரியங்களே, அதிக துன்பத்தைத் தரும் காரியங்களை விடச் சிறந்தது. இவ்வாருக, இன்பமும், துன்பமும், ஆழம், கால அளவு நிச்சயம் இவைகளைக் கொண்டு மாறுபடுகிறது. எனவே, இன்பங்களும் துன்பங்களும் மிக அதிகமாக இருக்கலாம். சிறிது அதிகமாக இருக்கலாம் அல்லது கொஞ்சமாக மிகக் கொஞ்சமாக இருக்கலாம். ஆனுல், மேன்மைத் தன்மை வாய்ந்த இன்பம்; கீழான தன்மை வாய்ந்த இன்பம் என்ருே, மேன்மை வாய்ந்த துன்பம், கீழான தன்மை உடைய துன்பம் என்ருே, தரத்தில் மாறுவதில்லை என்கிருர் பென்தம்.

மேலும் அவர் கூறுவதாவது அளவுகள் என்று கொள்ளும் போது, அளக்கக்கூடிய தன்மை உடையவை என்பது பொருள் என்கிறார். அதாவது ஒன்றுக்கொன்று ஒப்பிட்டுப் பார்த்து அதன் மூலம், அதிக அளவு, குறைந்த அளவு என்று நாம் முடிவு செய்ய லாம் என்கிறார்.

எனவே, எங்ஙனம் எவ்வளவு எடைப் பொன்னானாலும், அதற்கு ஈடாக லேசான சிறகுகளைக்கூட சமமாக வைத்து அளக்கலாமோ அங்ஙனமே இன்பத்தையும், துன்பத்தையும் அவைகளின் அள வுக்கு எதிராக அளக்க முடியும் என்கிறார். அவைகளை அளப்பதன் மூலம் அவைகளின் கால வரையையும், தூய தன்மையையும், பெருக்குத் தன்மையையும், நிச்சயம், நிச்சயமற்றத் தன்மையை யும், எளிதில் அடைய முடியும், முடியாத தன்மையையும் நிர்ண யிக்கலாம் என்கிறார்.

எனவே, பெருகக்கூடிய தன்மையை உடையதாயும், தூய்மை யான தன்மையைக் கொண்டதாயும், அம் மகிழ்ச்சியின் விளைவாக செயல்படும் காரியங்கள், மிக விரைவான, நிச்சயமான நீண்டகால இன்பத்தை ஒரு மனிதனுக்கு அளிக்குமேயானால் அதுவே 'மட்டற்ற மகிழ்ச்சி' என்று கூறலாம். இதைப் போலவே 'மாளாத் துன்பம்' என்பது இதற்கு எதிர்மறையானது.

இவருடைய கோட்பாட்டில் ஒரு சந்தேகம் எழுகிறது. மகிழ்ச் சியைத் தரக்கூடிய செயல்களைச் செய்யவேண்டும் என்கிறார். அவ்வாறு மகிழ்ச்சியைத் தரக்கூடிய செயல்கள் அறநெறியில் நல்லவையா, தீயவையா என்ற சந்தேகம் நமக்கு ஏற்படுகிறது. அதற்கு அவருடைய பதிலாவது, தீயச் செயல்களைக் கடைப்பிடிப் பதன் மூலம் எழும் தீமைகள் பிறகு துன்பத்தையே கொடுக்கின் றன. எனவே, அவை தீயவைதான். நற்செயல்களைக் கடைப் பிடிப்பதன் மூலம் நன்மையே விளைவதால் அது இன்பத்தைக் கொடுக்கும் தன்மை உடையதே. எனவே, இன்பம் என்பது, தற்காலிக உணர்வாக மட்டும் இருந்தால் போதாது, நிலையான தாகவும் இருக்க வேண்டும். இன்பத்தைத் தேடும் மனிதர்கள் தற்காலிகமான இன்பத்தை, ஆனால் பிறகு நிரந்தர துன்பத்தைத் தரும், செயல்களைத் தவிர்க்க வேண்டும் என்கிறார்.

மேலும் இவர் கூறுவதாவது, மனிதர்கள் அனைவரும் சுயநல மானவர்களே. இவர்கள் அனைவரும் ஒன்று கூடிச் சேர்ந்து வாழும் போது இவர்களுக்குள் சண்டை, சச்சரவு எழும். இதைத் தவிர்த்து அமைதியை நிலைநாட்ட ஒரே வழி என்னவென்றால்,

பெரும்பாலோரான மக்களுக்கு மிக அதிக அளவான மகிழ்ச்சியையும், அதன்மூலம் குறைவான மக்களுக்கு மிகக் குறைவான துன்பத்தையும் தரும் செயல்களையே அரசு செய்ய வேண்டும் என்கிறார். இவ்வாறாக பென்தம் பெரும்பாலோரின் விருப்பத்திற்காக வாதாடுகிறார். சிறுபான்மையோர் பெரும்பாலோரின் விருப்பத்திற்குத் தலைவணங்க வேண்டும் என்பது இவருடைய வாதம்.

இதுவே பென்தமின் பயன் கருது தத்துவமாகும். இத் தத்துவத்தின் உதவியைக் கொண்டு, அரசின் தன்மை, அது உண்டாகிய விதம் போன்றவற்றை விளக்குகிறார்.

பென்தமின் அரசியல் கருத்துகள்

அரசு தோன்றிய விதம்

சமூக ஒப்பந்தக் கோட்பாட்டைப் பென்தம் எந்தவித ஆர்ப்பாட்டமும் இன்றி ஒதுக்கிவிடுகிறார். நம் முன்னோர்கள், ஒப்பந்தம் ஏற்படுத்தி அரசை ஏற்படுத்தினார்களா, இல்லையா என்பதைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? அவர்கள் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தின் விளைவினாலா நாம் அரசிற்குக் கட்டுப்பட்டு நடக்கிறோம்? இல்லை. அரசிற்கு நாம் கீழ்ப்படிவதனால் ஏற்படும் துன்பத்தை விட, கீழ்ப்படியாமல் இருக்கும்போது ஏற்படும் துன்பம் அதிகம். எனவே நாம் கீழ்ப்படிந்து நடக்கிறோம் என்கிறார். எனவே, அரசு எந்த முறையில் தோன்றியிருக்கும் என்பதைப்பற்றி அவர் எந்தவிதக் கோட்பாட்டையும் கூற முயற்சி செய்யவுமில்லை. அதை பற்றி எந்தவித உற்சாகத்தையும் அவர் காண்பிக்கவுமில்லை.

அரசின் அமைப்பு

அரசுகளை, சர்வ வல்லமை வாய்ந்த முடியாட்சி, வரையறுக்கப்பட்ட முடியாட்சி, ஜனநாயகக் குடியரசு என்னும் வகைகளாகப் பிரிக்கலாம் என்கிறார் பென்தம். ஆனால், ஜனநாயகக் குடியரசிலேயே பெரும்பாலோரின் மட்டற்ற மகிழ்ச்சியைப் பெற முடியும் என்கிறார்.

பிரிட்டன், ஜனநாயகக் குடியரசையே ஏற்க வேண்டும் என்பது பென்தமின் வாதம். ஜனநாயகக் குடியரசு என்றால் அதிக எண்ணிக்கையுள்ள பெரும்பாலோரால், ஒரே அவையைக் கொண்ட பாராளுமன்றத்தின் உதவியுடன் ஆளும் ஆட்சி என்று பொருள். படிக்கத் தெரிந்த எல்லா வயதுக்கு வந்த ஆண்களும் ஒரு வருடத்திற்கொரு முறை தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டதாக மக்கள் சபை இருக்க வேண்டும் என்கிறார்.

பென்தமின் இறைமையைப் பற்றிய கோட்பாடு

சட்டம் இயற்றும் அதிகாரத்திடமே இறைமை உள்ளது. இறைமையின் முக்கிய பண்பு, சட்டம் இயற்றுவது. எனவே,

இறைமை, சட்டங்கள் இயற்றும் ஒருவரிடமோ, அல்லது ஒரு சபையினிடமோ இருக்கலாம். மேலும் இறைமையான, சட்டம் இயற்றும் அதிகாரமே, ஆட்சித் துறை, நீதித் துறை அதிகாரங்களை ஏற்படுத்த வேண்டும் என்கிறார்.

இறைமையின் குறிக்கோள்

பெரும்பாலான மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருவதே இறைமையின் குறிக்கோள் ஆகும். இம் மட்டற்ற மகிழ்ச்சியை இறைமை தேடித் தரும் வழிகள் நான்கு. அவையாவன : (1) உணவு (2) செல்வம் (3) சம சொத்துரிமை (4) பாதுகாப்பு ஆகியவை ஆகும். பாதுகாப்பு என்றால் உடல் பாதுகாப்பு என்று பொருளாகும். அதாவது அரச அதிகாரங்கள் படைத்தோரின் நீதியற்ற செயல்களிலிருந்து தடுக்க, குடிமக்களுக்குப் பாதுகாப்பு வேண்டும். மேலும் குடிமக்களின் அறிவு, அறநெறி ஒழுக்கம், சமயம் இவைகளின் மேம்பாடு சம்பந்தப்பட்ட விஷயங்கள், இறைமையின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

இந்தக் குறிக்கோளை அரசு அடைய இறைமை மூன்று முக்கியமான காரியங்களைச் செய்யவேண்டும். மேற்கூறிய 4 உரிமைகளையும் (உணவு, செல்வம் (abundame), சமத்துவம், பாதுகாப்பு) இறைமை குடிமக்களுக்குத் தரவேண்டும். மனிதர்களுக்கு இயற்கை உரிமைகள் இருக்கின்றன என்று சில சிந்தனையாளர்கள் கூறுவதெல்லாம் கற்பனையே. எனவே உண்மையான உரிமைகள் சட்டங்கள் மூலமாகவே பிறக்கின்றன. இவைகளைச் சட்டபூர்வ உரிமைகள் (legal rights) என்று அழைக்கலாம். எனவே, மேற்கூறிய உரிமைகளைச் சட்டத்தின் மூலமாக அமுலுக்குக் கொண்டு வரவேண்டும்.

(2) உழைக்கும் தொழிலாளி வசதியுடன் வாழவும், அவர்களது உழைப்பின் பலனை முழுமையாக அனுபவிக்க வேண்டிய வசதி, செழுமை, இவைகளைச் சட்டங்களின் மூலமாக வளரச் செய்ய வேண்டும். இவைகளைத் தவிர இறைமை வேறு எந்தக் கட்டுப்பாடும் செய்யாது, தொழிலாளர்களைத் தனித்து விட்டுவிட வேண்டும். பென்தம் தன் நாடான இங்கிலாந்திற்குக் கூறும் அறிவுரையாவது, வெளிநாட்டு, உள்நாட்டு, வியாபாரத் தொழில் முறைகளில் இருந்துவரும், கட்டுப்பாடு, தடைமுறைகள் முதலியவற்றைக் களைந்தெறிய வேண்டும். உற்பத்தியை எந்தச் சட்டம் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருகிறதோ, அச் சட்டம்

உண்மையில் உற்பத்தியைக் குறைக்கிறது. உற்பத்தியாளரைத் தனித்து விட்டுவிட வேண்டும். அவர்களுக்குப் பிடித்த உற்பத்தி முறைகள் அவர்களுக்குத்தான் தெரியுமே தவிர, அரசிற்கு அல்ல. அவர்களைச் சுதந்திரமாக விட்டுவிடுவதன் மூலம் அவர்கள் தங்கள் விருப்பங்களைப் பூர்த்தி செய்து, அதன்மூலம் பொது நன்மையையும் பெருக்குகின்றனர்.

(3) சொத்துகளைச் சமமாகப் பிரிப்பதன் மூலமே, பெரும்பாலோருக்கு மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்த முடியும் என்கிறார் பென்தம். ஆனால், இக் காரியத்தை மிக மெதுவாகவும், ஜாக்கிரதையாகவும் மேற்கொள்ள வேண்டும். உதாரணமாக வாரிசு உரிமையைப் பற்றிய சட்டங்களை மாற்றலாம். ஆனால், பிரெஞ்சுப் புரட்சியின்போது நிகழ்ந்தது போன்று அவ்வளவு வேகத்தில் எதையும் செய்யக் கூடாது. ஏனென்றால், மனிதர்களுக்கு முதலில் தேவையானது பாதுகாப்பே. அப் பாதுகாப்புப் பாதிக்கும்படி எதையும் செய்யக்கூடாது.

(4) எல்லாவற்றுக்கும் மேலாக பாதுகாப்பை அடையும் வழிகளை இறைமை கவனிக்க வேண்டும். ஏனெனில், பாதுகாப்பே முதன்மையானது. நாகரிகத்தின் சின்னமே பாதுகாப்பான வாழ்க்கை முறைதான். சட்டங்களின் உதவியைக் கொண்டே இப் பாதுகாப்பைத் தேடவேண்டும். சட்டங்களின் உதவியின்றிப் பாதுகாப்பு மக்களுக்குக் கிடைக்காது. பாதுகாப்பின்றி வலிமை கிடையாது; வாழ்வு கிடையாது; பாதுகாப்பு அற்ற நாடுகளில் வாழ்வோருக்குத் துன்பம் ஒன்றினாலேயே சமத்துவம் இருக்கும் (equality of misery). எனவே, நாட்டிற்குப் பாதுகாப்பு மிகமிக அவசியமானது. இதைக் காவல் படை, ராணுவம் இவைகளின் உதவியைக் கொண்டு நிலைநிறுத்த வேண்டும்.

எனவே, அரசின் முக்கியமான பணிகள் இவைகள் என்று கூறி, வழக்கில் இருந்துவந்த சட்டங்கள், நிறுவனங்கள், சட்டங்களைச் செலுத்தும் வழிமுறைகள் ஆகியவை இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காததால் பென்தமின் இவைகளைக் கண்டிக்கிறார். மேலும் இவர் கூறுவதாவது சட்டங்கள் என்பவை, பிரஜைகள் சார்பாக இறைமையினால் செலுத்தப்படும் கட்டளைகளே. சட்டம் என்பதே ஒரு தீமைதான். ஏனென்றால், ஒவ்வொரு சட்டமும் சுதந்திரத்திற்கு விதிக்கப்படும் தடையே ஆகும். மக்கள் பெரும் தீமைகளைத் தடுப்பதற்காக, இச் சிறு தீமையைத் (சட்டத்தை) தேர்ந்தெடுக்கின்றனர். எனவே, சட்டமன்றம் எந்த நடவடிக்கைகளையும் தடுப்பதற்கான தடை விதிகளை விதிக்கு முன், அந் நடவடிக்கைகள் உண்மையிலேயே தீயவையா என்று பார்க்க வேண்டும் என்கிறார்.

மேலும் அவர் கூறுவதாவது: இறைமை சட்டபூர்வமான வல்லமை படைத்தது. பிரஜைகள் சட்டபூர்வமாகவும், எந்தவித நிபந்தனையுமின்றிக் கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டும். மேலும் பிரஜைகள் தங்களது விருப்பத்திற்கும், மகிழ்ச்சிக்கும் எதிராக நடக்கும் இறைமையை எதிர்க்கவும், தூக்கி எறியவும், உரிமை உண்டு என்கிறார். அரசிற்கும், இறைமைக்கும் நன்னெறி எது என்றால், பிரஜைகளின் மகிழ்ச்சியைப் பெறுவதிலேயே அடங்கியுள்ளது. எனவே, இந்த மேன்மையான நோக்கத்தைப் பலியிடும் எந்த இறைமையையும், ஒன்று தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும், அல்லது விலகிவிட வேண்டும். இறைமையைத் திருத்துவதும், எடுத்தெறிந்து விட்டு, மற்றோர் இறைமையைத் தேர்ந்தெடுப்பதும் பிரஜைகளின் கைகளில்தாம் உள்ளது என்கிறார் பென்தம்.

இறைமையின் பணிகளைப் பற்றிய அவரது கருத்துகளையும் அவர் கூறிய சீர்திருத்தங்களையும் பார்க்கும்போது, பென்தம் ஒரு தனிமைக் கோட்பாளர், அதாவது தலையிடாக் கொள்கையில் பற்று உள்ளவர் என்ற முடிவிற்கே நம்மை வரச் செய்கிறார்.

ஆனால் அதே சமயம், பென்தம் ஏனைய பயன் கருது கொள்கையினரைப் போல் சுதந்திரத்திற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. மகிழ்ச்சி ஒன்றினையே முடிவாகக் கொண்டது தான் அவர் அரசே தவிர, சுதந்திரத்தை அன்று என்பதை நாம் கவனிக்க வேண்டும். மேலும் அவர் கூறும் அரசு அரிஸ்டாட்டில் கூறியதைப் போல், தனிமனிதனுக்கும் மேலான முதன்மையான ஒன்றன்று. மாறாக, தனிமனிதனே அரசிற்கும் மேலானவன் ஆவான். எனவே, இவரை ஒரு தனிமை கோட்பாளர்தாம் எனச் சிறிதும் ஐயமின்றிக் கூறலாம். அரசு மக்களுக்கு நன்மையைச் செய்து, மகிழ்ச்சியைப் பெருக்க உதவினாலும் அது எதிர்மறைத் தன்மை வாய்ந்ததுதான். மக்களின் அறநெறி வாழ்விற்குத் தொடர்பில்லாதது. அவனுடைய பண்பு நலன்களை எந்த முறையிலும் வளர அரசு உதவாது. மனிதர்களை உருவாக்குவது நாடன்று. ஆனால் நாட்டை உருவாக்குவது மனிதர்களே ஆவார் என்கிறார் பென்தன்.

இவருடைய தத்துவத்தில் காணப்படும் குறைபாடுகள்

இவர் விளக்கிய கருத்துரைகள், இவரால் சுயமாக எடுத்துச் சொல்லப்பட்ட கருத்தல்ல. மேலும் பல இடங்களில் குழப்பத்தைத் தருவதாகவும் இருக்கிறது. ஒவ்வொரு மனிதனும்,

தனக்கு எது மகிழ்ச்சியைத் தருகிறதோ அக் காரியங்களையே செய்கிறான் என்கிறார். ஆனால், அதேசமயம், மனிதன் பொதுவாக, பிறரது மகிழ்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டு, செயல் புரிய வேண்டும் என்கிறார். அப்படி ஆனால் இவருடைய இன்ப துன்ப எண்ணக் கருத்து மனிதனை எத்தகைய இன்பத்தைத் தேடச் சொல்கிறது? சுயநல இன்பத்தையா? அல்லது தன்னலமற்ற பிறர்நல இன்பத்தையா? இரண்டிற்காகவும் செயல்படுவது இயலாத காரியம்.

மேலும், உள்ள உணர்ச்சிகளான இன்ப துன்பத்தை அளவிடுவது எப்படி? இன்ப துன்ப, உணர்வு மனிதருக்கு மனிதர் வேறுபடும் தன்மையுடையது. உதாரணமாக ஒருவன் வேட்டையாடுவதின் மூலம் இன்பத்தைப் பெறலாம். மற்றொருவனுக்கு அது துன்பமாக இருக்கலாம். மனிதருக்கு மனிதர் வேறுபடும் இவ்வுணர்ச்சிகளை, அளப்பது என்பது அதைவிடக் கடினம். எல்லா இன்பங்களும் ஒரே தன்மையை உடையவையே என்னும் அவர் கூற்றை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஜெ. எஸ். மில் கூறியதுபோல், பன்றியாக இருந்து திருப்தியாக இருப்பதைவிட, அதிருப்தியுடைய மனிதனாக இருக்கலாம்; திருப்தி நிறைந்த முட்டாளாக இருப்பதைவிட, அதிருப்தி நிறைந்த சாக்ரடீஸாக வாழலாம் என்ற கூற்று நம் நினைவிற்கு வருகிறது. மகிழ்ச்சி என்னும்போது எல்லாவித மகிழ்ச்சியினையும் அதாவது உடல், உள்ள ஒழுக்க விஷயங்களில் பூரண நிறைவைத் தரவேண்டும். எனவே, இன்பமும், துன்பமும் இவற்றைக் கொண்டு தன் தன்மையில் மாறுபடும். ஒரே தன்மையுடையவை என்று பென்தம் கூறுவது சரியன்று.

மேலும் வாழ்க்கையில் மகிழ்ச்சி ஒன்றினையே தேடும் தனி மனிதனைப் பற்றி விளக்கும் பொழுது, அவனுக்கு வாழ்வில் தன்நலம், கடமை இவற்றுக்கிடையே எழும் போராட்டத்தையும் அவனது மனசாட்சியின் உறுத்தல்களையும் பென்தம் காணத் தவறிவிட்டார். சரித்திரம், சமூகம், சூழ்நிலைகளும் மனிதனை உண்டுபண்ணுகின்றன. மேலும், மனிதனின் காரண அறிவிற்குத் தேவைக்கு மீறிய அழுத்தத்தைக் கொடுப்பதால், அவனது உணர்ச்சிகளுக்குச் சரிசம முக்கியத்துவம் கொடுக்காது விட்டுவிடுகிறார். அவர் கூறியபடி எந்த மனிதனும், மகிழ்ச்சி ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டு, எந்தக் காரியத்தையும் மேற்கொள்வதில்லை.

இக் குறைபாடுகள் அனைத்தும் ஒரு பக்கம் இருக்க, பென்தம் ஒரு தலைசிறந்த சிந்தனையாளராகத் திகழாவிட்டாலும், அரசியல்

தத்துவ சரித்திரத்தில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிருர் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளக் கூடிய உண்மை. அவருடைய சாதனைகளை நாம் ஒருகாலும் குறைவாக மதிப்பிட முடியாது. அக்கால ஆங்கில நாட்டுச் சூழ்நிலைக்கு இவரது தத்துவம் மிகப் பொருத்தமாக அமைந்தது. தொழிற் புரட்சியின் விளைவினுல் ஏற்பட்ட சமூக மாற்றங்களினுல், பழைய முறைகள் மாற்றப்பட வேண்டியது மிக அவசியமாக இருந்தது. பென்தமும் அவரைப் பின்பற்றியோரின் கருத்துகளும், இத் தேவைக்கான பதிலைத் தந்தன. தொழிலாளர் நலனை அரசு கவனிக்க வேண்டும் என்று பென்தம் அழுத்திக் கூறியது, அவர் காலத்தில் மிக அவசியமான தேவையாக இருந்தது. அரசு, தொழிலாளர் வகுப்பிற்கு உதவிகளைச் செய்ய வேண்டும். இவ்வாறு உதவிகளைச் செய்யுமாறு, தொழிலாளர்கள் எது அவசியம் என்று நினைக்கிருர்களோ அதையே அரசு செய்ய வேண்டுமே தவிர, ஆளுவோர் மனம் போன போக்கில் செய்யக் கூடாது என்று கூறுகிருர். பென்தமின் கொள்கைகளில் இருக்கும் குறைபாடுகள் அனைத்தையும் நீக்கி விட்டுப் பார்த்தால் அதில் காண்பது மனிதத் தன்மையே என் கிருர், டபிள்யு. சி. டேவிட்சன். இதுவே அவரது தத்துவத்தின் மாபெரும் மாண்பாகும்.

இவருடைய தத்துவத்தின் விளைவால், ஏழைகளுக்கும், எளிய மக்களுக்கும், பலவித நிலச் சட்டங்கள், சிறைச்சாலை சம்பந்தப் பட்ட நிர்வாகச் சட்டங்கள், கல்வி, தேர்தல் சீர்திருத்தச் சட்டங் கள் முதலியன தோன்றின. வயது வந்தோர் வாக்குரிமை மூலம் மத்தியதர வகுப்பினரின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினுர். இவரால்தான் பாராளுமன்றம் பல சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டுவந்து ஓர் உண்மையான சட்டமன்றம் என்று நிருபித் தது. இதற்கு முன்பு பாராளுமன்றத்தில் சட்டங்கள் உண்டாவது அரிதாக இருந்தது. அவரது தத்துவத்தின் விளைவால் ஏற்பட்ட சீர்திருத்தச் சட்டங்களின் எண்ணிக்கை கணக்கிலடங்கா; அவருடைய செல்வாக்கைப் பெருத சீர்திருத்தச் சட்டங்களே கிடையா என்று சர். ஹென்றிமெயின் கூறுகிருர். சமூக சீர்திருத்தங்களே மனிதர்களின் மகிழ்ச்சியைப் பெருக்குகிறது என்று மகிழ்ச்சிக்கு ஒரு புதிய அளவுகோலைத் தந்தார். ஏழை களுக்கான சட்டத்தைச் சீர்திருத்தியதிலும் பொதுசுகாதாரத்தைச் சீர்திருத்தியதிலும் இவருக்குப் பெரும் பங்கு உள்ளது. மேலும் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக, இவர் காட்டிய அக்கறை இவருக்கு ஒரு மேலான இடத்தைத் தருகிறது. முதியோர் கல்வியைத் தோற்றுவிக்க இவர் உதவினுர். பென்தம், சட்ட சீர்திருத்தத்திற்கு மட்டும் உதவவில்லை. மறைமுகமாக சோஷிய

லிசத்திற்குத் தேவையான கருத்துகளைத் தந்தார். அவரது பெரும்பாலோரின் மட்டற்ற மகிழ்ச்சி என்னும் கருத்து தனித் தன்மைக் கோட்பாட்டைவிட, பொதுவுடைமை தத்துவத்தையே அதிகமாக எடுத்துரைக்கிறது என்று சொல்லலாம்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, மனிதனுக்காகத்தான் அரசே தவிர, அரசிற்காக மனிதனல்லன் என்ற கோட்பாட்டின் மூலம் அரசியல் கோட்பாட்டை, இடைக்கால கோட்பாட்டுத் தளையிலிருந்து விடுவித்தார். மேலும், மகிழ்ச்சியான குடிமக்களைக் கொண்ட நாடே சிறந்த நாடாகும் என்னும் தமது சிறந்த கோட்பாட்டின் மூலம், அரசியல் தத்துவத்திற்கு மிக உயர்ந்த ஒரு கோட்பாட்டை வழங்கினர். ஒவ்வொரு பிரச்சினையையும், அது மக்களுக்குத் தரும் நன்மை, தீமை அல்லது இன்ப துன்பக் கண் கொண்டே அணுகவேண்டுமே தவிர, மற்ற கற்பனைக் கோட்பாடு களின் உதவியாலோ அல்லது அறிந்துகொள்ள முடியாத லட்சியக் கண் கொண்டோ அணுகக் கூடாது என்று கூறியது மிக சிறப்பான வாதமாகும்.

இறைமைக் கோட்பாடு, உரிமை, இயற்கை உரிமை, ஒப்பந்தக் கோட்பாடு போன்றவை அவரைப் பொறுத்த வரையில் அர்த்தமற்றவையாகும். யாருக்கும் மக்களை ஆளும் உரிமை என்று ஒன்றும் கிடையாது. மக்களுக்கும், சுதந்திரத்திற்கான உரிமை என்று ஒன்றும் கிடையாது. சூழ்நிலையே அதிகாரத்தை ஏற்படுத்துகிறது. அந்த அதிகாரமே மக்களை ஆளுவதற்கும், ஆளப்படுவதற்குமான காரணகர்த்தாவாகிறது. அதிகாரத்தின் தன்மையைப் புரிந்துகொண்டு அதைக் குடிமக்களின் நன்மை களுக்குப் பயன்படுத்துவதே சிறந்த ராஜதந்திரம் என்று நடை முறைக்கு உதவும் ஓர் அற்புத தத்துவத்தை அளிக்கிறுர் பென்தம்.

ஜேம்ஸ் மில், ஜான் ஸ்டூவர்ட்மில், டேவிட் ரிகார்டோ, ஜான் ஆஸ்டின் போன்ற பெரும் சிந்தனையாளர்களின் மனத்தைப் பென்தமிசம் வெகுவாகக் கவர்ந்தது.

4. ஜான் ஸ்டூவர்ட்மில் (1806—1873)

பென்தமிற்குப் பிறகு ஜான் ஸ்டூவர்ட்மில் இங்கிலாந்தின் அறிவுச் சுடராகத் திகழ்ந்தார். ஜெர்மனியில் ஹெகலுக்கு இருந்த மதிப்பு மில்லுக்கு ஆங்கிலப் பல்கலைக்கழகங்களில் இருந்தது என்று லார்டு பால்போர் (Lord Balfour) கருதுகிறார். மில்லும் பென்தமைப்போல் பலதரப்பட்ட விவரங்களைப்பற்றி எழுதினார்.

ஜெ. எஸ். மில் 1806ஆம் ஆண்டு பிறந்தார். இளவயதி லிருந்தே தம் தந்தையும், பென்தமின் நண்பருமான ஜேம்ஸ் மில்லின் கண்டிப்பான மேற்பார்வையில் வளர்ந்தார். தமது மூன்றுவது வயதிலேயே, கிரேக்க மொழியைக் கற்க ஆரம்பித் தார். அவருடைய தந்தையாரே அவருக்கு ஆசிரியராகவும், நண்பராகவும் திகழ்ந்தார். இளவயதிலேயே சிறந்த கல்வியை இவர் தந்தை இவருக்கு அளித்தார். தமது பதினுருவது வயதிலேயே, பயன் கருதிக் கொள்கைச் சங்கம் (Utilitarian Society) என்னும் சங்கத்தை ஏற்படுத்தினார். இச் சங்கத்தில் பல இளைஞர்கள் சேர்ந்து பென்தமின் கருத்துகளை விவாதித்தனர். ஆனல், போகப்போக இவர் பென்தமிசத்தில் பல குறைபாடுகள் இருப்பதை உணர்ந்தார். அக் குறைபாடுகளைப் போக்கு வதற்காகப் பல மாற்றங்களைப் புகுத்தினார்.

இவருடைய முக்கியப் படைப்புகள், (1) 'சுதந்திரத்தைப் பற்றி' (on Liberty) (2) 'பிரதிநிதித்துவ அரசைப் பற்றிய பரிசீலனை' (Consideration on Representative Government) (3) 'தர்க்க வாதமுறை' (System of Logic) (4) 'அரசியல் பொருளாதாரக் கொள்கைகள்' (Principles of political economy) ஆகியவை ஆகும்.

பயன் கருது தத்துவத்தில் மில் ஏற்படுத்திய மாற்றம்

பயன் கருது தத்துவத்தை எதிர்ப்போரின் பிடியிலிருந்து அத் தத்துவத்தைக் காப்பதற்கு விரும்பி மில் சில மாற்றங்களை ஏற்படுத்த முனைந்தார். ஆனல், இதனல் அக் கோட்பாட்டின்

அஸ்திவாரத்தையே மாற்றிவிட்டார் என்று சொல்லலாம். இன்ப துன்ப தத்துவம், உயர்ந்த தத்துவம்தான்; கீழ்த்தரமான ஒன்றன்று என்பதை நிரூபிக்க மில் நினைத்தார். இன்பம் என்பது, மேல் தரமான தன்மை உடையவை, கீழ்த்தரமான தன்மை உடையவை என இரு வகைப்படும் என்கிறார். அதாவது இன்ப உணர்வுகள் ஒன்றுக்கொன்று தன்மையிலும், தரத்திலும் மாறுபட்ட தன்மை உடையவை. சில மகிழ்ச்சி உணர்வுகள் மேன்மைத் தன்மை வாய்ந்ததும், சில கீழான தன்மையை உடையதாகவும் உள்ளன என்கிறார் மில். பென்தம் இன்பம் அளவில்தான் வேறுபடுமே தவிர, தரத்தில் அன்று என்று கூறியதை நாம் நினைவுகூர வேண்டும். மில், அக் கருத்தை நிராகரித்து அதற்கான நிரூபணத்தையும் தருகிறார். மேல்தரமான மகிழ்ச்சியையும், கீழ்த்தரமான மகிழ்ச்சியையும் உணர்ந்த மனிதர்கள் மேல் தர மகிழ்ச்சியையே தேர்ந்தெடுக்கிறார்கள். எனவே, இதுவே ஆதாரமாகும். ஒரு பன்றியாக இருந்து திருப்தியுடன் மகிழ்ச்சியாக இருப்பதைவிட. ஓர் அதிருப்தி நிறைந்த மனிதனாக இருப்பது மேல். முட்டாளாக இருந்து திருப்தியுடன் வாழ்வதைவிட, சாக்ரடீஸ் போன்ற அறிஞர் அதிருப்தியாக வாழ்வதே மேல் என்கிறார் மில். இவர் கூற்றில் உண்மை இருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது. மனித அனுபவத்தில் மகிழ்ச்சியின் தரம் வேறுபடுகிறது என்பதை அனைவரும் கண்டறிகிறோம். பென்தம் விளக்கிய கருத்துரையைவிட, மில் கூறுவதிலேயே உண்மை உள்ளது என்பதை நாம் மறுக்க முடியாது. ஆனால், மகிழ்ச்சி பல தரங்களைக் கொண்டது என்பதை நாம் ஒப்புக்கொண்டால் அது பயன் கருது தத்துவமாகாது. மகிழ்ச்சியின் தரம் மாறுபட்டால், சிறந்த தரமுடைய மகிழ்ச்சியையே தேடவேண்டுமே தவிர, பயன் கருது தத்துவத்தின் பொதுக் கொள்கைப்படி அதிகப்படியான மகிழ்ச்சியை அன்று. மில் தம் கருத்தை மேலும் நிரூபிப்பதற்காக என்ன கூறுகிறார் என்றால், மகிழ்ச்சி அளவில் மாறுபடலாம், ஆனால் அதை அளக்க முடியாது. ஏனெனில் அது ஓர் உணர்வு. பொருள்களை அளப்பது போல், உணர்ச்சிகளை அளக்க முடியாது. எனவே, இன்ப துன்ப உணர்வுகளை அளக்கலாம் என்று பென்தம் கூறுவதும், அதற்காக அவர் கூறும் கணக்கும் அர்த்தமற்றது என்கிறார் மில். மில்லின் இந்தக் கருத்தும், பென்தமிசத்திலிருந்து மாறுபடுகிறது.

மில் கூறுவதாவது: மகிழ்ச்சி அளவில் அன்று, தரத்தில் மாறுபட்டது. மனிதனின் குறிக்கோள் பண்பான வாழ்வைத் தேடி அதன் மூலம் சிறந்த மகிழ்ச்சியைத் தேடுவதே என்கிறார் மில். இவருடைய தந்தையான, ஜேம்ஸ், மில்லும், பென்தமும்,

மனிதனின் குறிக்கோள் இன்பத்தைத் தேடித் துன்பத்தைத் தவிர்ப்பதே ஆகும் என்றனர். ஆனால், மில் ஓர் இன்பம், அதைத் தேடும் மனிதனுக்கு, அதிக மதிப்பையும், மரியாதையையும் தேடித் தருமானால் மற்ற மகிழ்ச்சிகளைவிட அம் மகிழ்ச்சியே மேல் என்கிறார். எனவே, அறவாழ்வையே மகிழ்ச்சி உணர்விற்கும் மேலான இடத்தில் வைக்கிறார். உயர்ந்த மகிழ்ச்சி என்பது உடல், இயந்திரங்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டுவன அல்ல. மனிதர்களுக்கு மதிப்பு, நற்பண்பு, மேம்பட்ட உள்ளம் இவற்றை வளர்க்க உதவும் மகிழ்ச்சியே உண்மை மகிழ்ச்சி என்கிறார்.

அரசு, அதன் நோக்கம், பிரதிநிதித்துவ அரசு இவற்றைப் பற்றிய மில்லின் கருத்து

இவர் ஜனநாயக அரசைச் சந்தேகக் கண்கொண்டு நோக்கு கிறார். இருந்தும் அவ் அரசைப் பற்றிய, நன்மை தீமைகளைப் பற்றித் தெளிவாகவும், அழகாகவும் எடுத்துக் கூறிய பெருமை இவரைச் சாரும். எல்லா மக்களுக்கும் ஜனநாயக அரசே சிறந்த அரசு என்று மேலும் மேலும் சுட்டிக் காட்டுகிறார். குறிப்பாக, தகுதி வாய்ந்த நாட்டிற்கு இவ் வரசைப் போல் சிறந்த அரசு, வேறெதுவும் கிடையாது என வலியுறுத்துகிறார். மேலும் மில் தனி மனிதர்களின் உரிமைகளையும், விருப்பங்களையும், ஜனநாயக அரசின் மூலமே அடைய முடியும் என்றும், ஏனெனில் அவ் வுரி மைகளை மக்களே சிறந்த முறையில் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றும் கூறுகிறார். மேலும் சுதந்திரமே வலிமைக்கு மூல காரணம் என்றும், வளமை இன்றி நாட்டில் மகிழ்ச்சி இராது என்றும் கூறுகிறார். மேலும், மக்களை மகிழ்ச்சி ஊட்டுவதன் மூலம் மட்டும் ஜனநாயக அரசு, சிறந்த அரசாகி விடாது. அது மனிதர்களைச் சிறப்பான தன்மை உடையவர்களாக்குகிறது. எங்ஙனம் என்றால், மக்கள், பிரஜைகளாவதன் மூலம், அவர்களது அறிவுத் திறனை அதிகமாக்குகிறது. வாக்குரிமைகளைப் பயன் படுத்தும் சந்தர்ப்பங்களை அளிப்பதன் மூலமும், அரசியல் பொறுப்பு களை ஏற்பதன் மூலமும் அவர்களது அரசியல் அனுபவங்களை அதிகப்படுத்துகிறது. மேலும் அவர் கூறுவதாவது: வாக்குரி மையைப் பயன்படுத்துவது என்பது சுலபமான காரியமன்று என்றும், சுயநலமின்றிப் பொது நலனையே முக்கியமாகக் கருதி, அவ் வுரிமையை ஒரு முக்கியக் கடமை எனக் கருதவேண்டும் என்கிறார். தன் ஒருவனின் வாக்கே முடிவை நிச்சயப்படுத்தும் என்று நினைத்து, அங்ஙனமெனில் அது எவ்வாறு நாட்டின் நன் மையைப் பாதிக்கும் என்ற அச்சத்தை மனத்தில் இருத்தி, அவ் வுரிமையை உபயோகப்படுத்த வேண்டும் என்கிறார் மில். வாக் குரிமை என்பது ஓர் உரிமை மட்டுமன்று, அதனைச் சரியாக உபயோ

கப்படுத்துவது ஒரு கடமையாகும். பொது நலனை மனதில் இருத்தி அதனைப் பயன்படுத்த வேண்டும். இதற்கு மாறான கருத்துள்ளவர்கள் அவ் வுரிமையை உபயோகப்படுத்தத் தகுதியற்றவர்கள். தகுதியற்றவர்கள் இக் கடலில் குதிக்கக் கூடாது. ஏனெனில், அவர்கள் மூழ்கிவிடக் கூடும் என எச்சரிக்கிறார். குடிமக்களாக இருப்பதே அரசியலில் சிறந்த பயிற்சியாகும் என இவர் கூறினாலும், ஜனநாயக அரசு எல்லா மக்களுக்கும் ஏற்றதன்று என்பது இவர் கருத்து. ஆனால், அதற்கான பக்குவத்தை ஒரு சமூகம் அடைந்திருந்தால் தான் எல்லா வயதுவந்த ஆண்களும், பெண்களும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்கிறார். 'ஜனநாயக அரசு ஒரு பரிசன்று, மக்களுக்கு எடுத்து வழங்குவதற்கு, அதற்கான மனப் பக்குவத்தைப் பழக்கத்தின் மூலம் அடைய வேண்டும் என்றும், இவ்வரசு மேன்மக்கள் இனத்தை உண்டாக்காவிட்டால் அது வெற்றி அடையாது' என்றும் கூறுகிறார் ※

ஜனநாயக அரசு சிறந்த தலைவர்களின் தலைமையில் நடக்கப் பெற்றால் மிகச் சிறப்பாக இருக்கும் என்றும், வெறும் எண்ணிக்கையைக் கொண்டு நடத்தப்படும் ஜனநாயகம், போலியானது, மனிதர்கள் ஒருவருக்கொருவர் சமமானவர்கள்தாம். அதற்காக ஒவ்வொரு மனிதனையும் ஓர் எண்ணிக்கையாகக் கணக்கெடுத்துக்கொள்ளும் ஜனநாயகம் போலியானது. ஏனெனில், இந்த ஜனநாயகத்தில் மனிதர்களின் அறிவு, நற்பண்பு இவற்றின் வித்தியாசத்தைக் கணக்கெடுக்காமல் எல்லோரையும் ஒரே சமமாகப் பாவிக்கிறது. இது அறிவாற்றலுக்கும் அற வாழ்விற்கும் ஆபத்தானது என்கிறார்.

மேலும் மில் பிரதிநிதித்துவ அரசு என்பதன் உண்மையான பொருள் என்னவென்று விளக்குகிறார். எல்லா மக்களும் அல்லது அவர்களில் பெரும்பாலான பகுதியினர் தங்களுடைய பிரதிநிதிகளை அவ்வப்பொழுது தேர்ந்தெடுத்து, இவர்களிடம் அரசைக் கட்டுப்பாடு செய்யும் அதிகாரத்தைக் கொடுத்துவிடல் வேண்டும் என்கிறார். இறைமை என்றால் பென்தம் கூறியதுபோல் சட்டம் இயற்றும் அதிகாரம் அன்று, மக்கள் பிரதிநிதிகளின் சபை (Parliment), செயற்குழுவைக் (executive) கட்டுப்படுத்தும் அதிகாரமே ஆகும். இதுவே பிரதிநிதிச் சபையின் முக்கிய பணியாகும். சட்டம் இயற்றுவது கிடையாது. செயற்குழுவைக் கண்காணித்தல், கட்டுப்படுத்தல், தவறு செய்யும்போது கண்டித்தல் (to watch,

※ "Democracy is not a gift to be confered, but a habit to be acquired. It Cannot succeed unless it produces a race of aristocras"

—*MILL*

control and criticize) போன்ற இப் பணிகளும், முக்கியமான பொது விஷயங்களைப்பற்றி விவாதித்தல், பொதுமக்களின் தேவைகள் என்ன என்று செயற்குழுவிற்குக் குறிப்பிடுதல் போன்ற பணிகளுமே ஆகும். சட்டமன்றத்தால் தானுகச் சட்டத்தை இயற்ற முடியாது. சட்டமன்றத்தின் சம்மதம் இருந்தால்தான் சட்டம் நடைமுறைக்கு வந்தாலும், சட்டத்தை இயற்றுதல் என்பது செயற்குழு அல்லது உள் அமைச்சவை அங்கத்தினர்களைப் போல் சட்ட நுணுக்கங்கள் தெரிந்தவர்களே (experts) செய்ய வேண்டிய காரியம். சட்டத்தைப் பொறுத்தவரை, பாராளுமன்றத்தின் ஒரே வேலை, சிறந்த சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றனவா என ஆராய்ந்து, அவற்றுக்கு மட்டுமே சம்மதத்தைத் தரவேண்டும் என்கிருர் மில்.

மேலும், பிரதிநிதி முறை அரசு, மன வளர்ச்சி அடைந்த மக்களுக்கே சிறந்தது என்று கூறிய மில், மேலும் என்ன கூறுகிருர் என்ருல், அரசுகள், ஆளப்படுவோரின் பண்பு, அறிவு இவற்றை வளர்க்க உதவ வேண்டும். எனவே, பிரஜைகளின் மன வளர்ச்சிக்குத் தக்கவாறு, அரசுகள் முற்றிலும் மாறுபட்டு இருக்க வேண்டும். தாழ்ந்த இனத்தவருக்கு நன்மைகளைச் செய்யக்கூடிய எதேச்சாதிகாரம் (benevolent despotism) சிறந்தது. இதைப் போலவே, ஆங்கில மக்களைப்போல் முன்னேற்றமடைந்த மக்களுக்குப் பிரதிநிதி முறை ஜனநாயக அரசு சிறந்தது. கூறப் போனுல், குடிமக்களே அரசைக் கண்காணிக்கும் அரசு அல்லது நேரடி ஜனநாயகமே பொது நன்மையை வளர்ப்பதற்குச் சிறந்தது. அக்கால கிரேக்க நகர நாடுகளில் இவ்வகை அரசு எவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டது என்பதே இதற்குச் சாட்சி. ஆனுல், பெரிய நாடுகளுக்கு இவ்வகை அரசு பொருந்தாது. ஆதலால், மக்கள் தங்களுக்குப் பதிலாகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து ஆளும் ஆட்சி இந் நாடுகளுக்குப் பொருந்தும்.

ஆனுல், இத்தகைய பிரதிநிதி முறை அரசில் சில குறைகளும், ஆபத்துகளும் முன்பு கூறியதுபோல் இருப்பதால், இவற்றைத் தவிர்க்க வேண்டும். இவர் காலத்தில் தொழிலாளர் வகுப்பிற்கும் வாக்குரிமை வழங்கப்பட்டதால், பாராளுமன்றத்தில் இவர்களின் பெரும்பான்மை, ஏனைய சிறுபான்மையோரைத் துன்புறுத்தலாம் என மில் பயந்தார். எனவே, பெரும்பாலோரிடமிருந்து சிறுபான்மையோரைக் காப்பது எப்படி என்பதற்கு அவர் கூறும் யோசனைகளாவன :

(1) பாராளுமன்றம் இருவகைப்பட்ட சபைகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். ஒரு சபை மக்கள் சபையாக இருந்தால்,

மற்றொரு சபை அரசியல் அறிஞர்களும் அரச பதவிகளை வகித்திருந்த பொது மனிதர்களையும் கொண்டதாகத் திகழவேண்டும்.

(2) உண்மையான ஜனநாயக அரசில், சிறுபான்மையோருக்குத் தக்கபடி பிரதிநிதிகள் இருக்கின்றனரா என்றும், அவர்களுடைய எண்ணங்கள் மக்கள் சபையில் இடம் பெறுகின்றனவா என்றும் பார்க்க வேண்டும். பெரும்பாலோரால் அமைக்கப்பட்ட அரசை, கற்றறிந்த சிறுபான்மையோரே தக்க முறையில் அவசியம் ஏற்படும்பொழுது தடைமுறை விதிக்க வேண்டும். அதாவது, மில் கூற விரும்புவது என்னவென்றால், பெரும்பாலோர் ஆட்சி செலுத்த வேண்டும். ஆனால், சிறுபான்மையோரே, சிறந்த கருத்துகளை உடையவர்களாக இருப்பார்கள். அதிகாரம் பெரும்பாலோரிடம் இருந்தாலும், அறிவு, அனுபவம் முதலியவை சிறுபான்மையோரிடமே இருக்கும். எனவே, அவர்களது திறனை அரசு உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆதலால், மில் ஹேர் முறைப்படி விகித பிரதிநிதித்துவம் (proportional representation) என்னும் தேர்வு முறையைச் சிபாரிசு செய்கிறார். பென்தம் பெரும்பாலோருக்குக் கொடுத்த மதிப்பை, மில் ஏற்க மறுக்கிறார்.

(3) வயது வந்தோருக்கு வாக்குரிமை, ஆண்கள் பெண்கள் என்ற வேற்றுமையின்றி அளிக்கப்பட வேண்டும். ஆனால், ஒரு நிபந்தனையின் (condition) பேரில்தான். அதாவது, அவர்கள் வரி செலுத்துவோராகவும், எழுதப் படிக்கத் தெரிந்தோராகவும் இருத்தல் வேண்டும்.

(4) மில் ஏனைய வாக்கு முறைகளையும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம் கொடுப்பதையும் கண்டிக்கிறார். மேலும், பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளின் பிரதிநிதிகளாக மட்டும் அல்லாது, நாட்டின் பிரதிநிதிகளாகத் திகழ வேண்டும் என்கிறார். மில், ஏன் விகித பிரதிநிதித்துவத்தை ஆதரிக்கிறார் என்றால், உண்மையான ஜனநாயகம் என்பது சமூகத்தின் பல வகுப்பினருக்கும் அவரவர்களுக்கு ஏற்ற இடத்தைக் கொடுக்க வேண்டும். எந்த வகுப்பிற்கும் உண்டான இடத்தைத் தவிர மேலாகக் கொடுக்கக் கூடாது. விகித பிரதிநிதித்துவ ஜனநாயக முறையைக் கடைப்பிடித்து, அதில் மேல் சபையும் இருந்தால்தான் தேசீய வாழ்விற்குத் தேவையானவர்கள் கீழ் சபையில் இடம் பெறவில்லை என்றால் கூட, அவர்களுக்கு இடமளிக்க உதவும். மேலும், கீழ் சபையினர் செய்யும் தவறுகளையும், பலவீனங்களையும் எதிர்த்துக் குரல் கொடுக்க முடியும். இத்தகைய அரசாங்கம் தன் அதிகாரத்தின் எல்லை என்ன என அறிந்து அந்த எல்லைக்குள் செயல்

பட வேண்டும். தனி மனிதர்கள் தங்களது அலுவல்களைத் தாங்களே சிறப்பாகச் செய்யக்கூடும் என்றால், அவர்களைத் தனித்து அரசாங்கம் தலையிடாது விட்டுவிட வேண்டும். இவ்வாறாக, மில் தாம் ஒரு தனி உரிமைக் கோட்பாளர் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறார்.

சுதந்திரத்தைப் பற்றி மில்லின் கருத்து

சுதந்திரத்தைப் பற்றி மில்லின் கருத்து மிக முக்கியமானது. சுதந்திரமின்றித் தனி மனிதன் சுய வளர்ச்சி அடைய முடியாது. சுதந்திரம் என்பதைப் பயன் கருது தத்துவத்தின் வாயிலாக விளக்க முடியாது; பயன் கருது தத்துவத்தைவிட, சுதந்திரமே மனிதனுக்கு அடிப்படையானது என்கிறார்.

சுதந்திரம் என்பதற்கு அவர் தரும் முதல் உறுதிப் பொருளாவது : தனி மனிதன் தனக்குத் தானே இறைமையாக இருப்பதே சுதந்திரம் ஆகும். தனி மனிதன் பிறரைத் துன்புறுத்தாதவரை அவனது சுதந்திரத்தில் யாரும் தலையிடக் கூடாது. மனிதனின் செயல்களை இரு வகைகளாகப் பிரிக்கலாம். சில செயல்கள் அவன் ஒருவனையே பாதிக்கும். ஏனையவை பிறரைப் பாதிக்கும். அவனது சொந்த விஷயங்களில் தலையீடு இருக்கக்கூடாது. எந்தக் காரியங்கள் செய்வதை அனுமதித்தால் பிறருக்குத் தீங்கு நேரிடுமோ அவற்றில் மட்டும் தலையீடு இருத்தல் வேண்டும். இம் முறை அனுமதிக்கப்பட்டால்தான் மனிதனின் சுய வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்.

சுதந்திரத்தைப் பற்றிய அவரது இரண்டாவது உறுதிப் பொருளாவது : சுதந்திரம் என்பது எதை விரும்புகிறோமோ அதைச் செய்வது. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் தனது உடல், ஆத்மா இவற்றுக்கான இறைமை அவனிடத்திலேயே உள்ளது. தன்னுடைய லட்சியங்கள், சிறப்புப் பண்புகள் இவற்றைக் கொண்டு தன் வாழ்வை அமைத்துக் கொள்ளும் சுதந்திரம், பிறருடைய சுதந்திரத்தைப் பாதிக்காத வரை, அவனிடமே உள்ளது. மனிதன் தன்னைத்தானே முழுமையாக வளர்த்துக்கொள்ள இது ஓர் அவசியமானது. எனவே, அரசுகள் அவர்களின் சொந்த விவகாரங்களில் தலையிடக் கூடாது. இவ்வாறு சுதந்திரமாக அவர்களை விட்டுவிடுவதன் மூலம், அவர்களது அறிவு வளர நிறைய வாய்ப்பிருக்கிறது. தனித் தன்மையின் உதவியின்றி மனிதர்களிடமும் வளர்ச்சி இருக்காது; நாட்டிலும் வளர்ச்சி காணப்படாது. தனி மனிதர்களின் விவகாரங்களில் எப்பொழுது அரசு தன் அதிகாரத்தைச் செலுத்தலாம் என்றால், அவர்கள் ஒருவரையொருவர்

துன்புறுத்திக்கொள்வதைத் தடுக்கும்பொழுது மட்டும்தான். தனி மனிதர்களின் நன்மைக்காகத் தலையிடலாம் என்ற காரணம் அர்த்தமற்றது. எனவே, ஒவ்வொரு மனிதனும், பிறரைத் துன்புறுத்தாதவரை, அவனை அரசு ஒன்றும் செய்யக்கூடாது. தன்னுடைய உதவியிலேயே மனிதன் உயரவேண்டும். சரித்திரமே இதற்குச் சாட்சியாக உள்ளது. சரித்திரம், எங்ஙனம் சிலர் தங்களது உழைப்பால் மேன்மையை அடைந்தார்கள் என்றும், அவர்களே சரித்திரத்தை உண்டுபண்ணியவர்கள் என்றுமட்டும் காண்பிக்கவில்லை. அவர்கள் தனித்து விடப்பட்டதன் மூலம் தங்களது உழைப்பால் உயர்வு அடைந்தார்கள் என்று கூறுகிறது.

இக் காரணங்களாலேயே, அரசு கல்வியைத் தன் அதிகாரத்தினுள் கொண்டுவரக் கூடாது என்கிறார். கல்வியைப் பொறுத்தவரை, அரசு செய்ய வேண்டியது என்னவென்றால், பெற்றோர்கள் குழந்தைகளுக்கு நல்ல கல்வி முறையைக் கொடுக்க முடிகிறதா என்று பார்க்கவும், அப்படிக் கொடுப்பதற்குச் சில சமயங்களில் நிதி உதவியும் செய்ய வேண்டும். இதைத் தவிர, கல்வி புகட்டுவது என்பது கூடவே கூடாது. அப்படிச் செய்தால் அவர்களது தனித்தன்மையை அழித்து, ஒரே தன்மையை உடையவர்களாக ஆக்கிவிடும் என்கிறார் மில்.

அரசு, தனித் தன்மை இவற்றைப்பற்றி மில்லின் சில குறிப்பிட்ட கருத்துகள்

மில் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் எண்ணம், பேச்சு, செய்கை இவற்றுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்கிறார். (liberty of thought, speech and action).

எண்ணம், பேச்சு இவற்றின் சுதந்திரத்தின் முக்கியத்துவம்

உலகத்திலுள்ள எல்லோருடைய கருத்தும் ஒரே மாதிரியாக இருந்து, ஒரே ஒரு மனிதனுடைய கருத்து மட்டும் தனித்து, வேறுபட்டு இருந்தால்கூட, அவனை மௌனமாக்க மனித இனத்திற்கு எந்தவித உரிமையும் கிடையாது. அதுமட்டும் அன்று. அவனை மௌனமாக்குவதன்மூலம் அவர்கள் நஷ்டத்தையே அடைகிறார்கள். எங்ஙனமென்றால், ஒருசமயம் அவனுடைய கருத்தே சரியாக இருந்தால், தவறைக் கொடுத்துவிட்டு, உண்மையை மாற்றிக்கொள்ளும் வாய்ப்பை இழந்துவிடுகிறார்கள். அவனுடைய கருத்துத் தவறாகவே இருந்தால்கூட, உண்மையும் பொய்யும் மோதும் பொழுதுதான் எது சரி என்று ஆராயும் வாய்ப்பு ஏற்பட்டு நல்லதைத் தேர்ந்தெடுக்க முடிகிறது.

எனவே, இந்த வாய்ப்பையும் அவனை மௌனியாக்குவதன் மூலம் இழக்கிறார்கள். சரித்திரத்தில்கூட, எப்படி ஒருவர் அல்லது சிறு பான்மையோர் சிறந்த உண்மையான கருத்துகளைக் கொண்டிருந் தார்கள் என்பதைத்தான் பார்க்கிறோம். அப்படி இருக்க, பெரும் பாலோர் தங்களின் கருத்தே சரி என்று எப்படி உரிமை கொள்ள முடியும்? எடுத்துக்காட்டாக, சாக்ரடீஸ்தாம் உண்மைவாதியே தவிர, அவர் காலத்திய அரசன்று, ஜீஸஸ்தாம் உண்மைக்காகப் போராடி உயிர் விட்டாரே தவிர, அவருடைய எதிரிகளான யூதர்களல்லர். சுதந்திரத்தின்மீது அளவற்ற பற்றுக்கொண்ட இவ்வரசியல் சிந்தனையாளர், பேச்சு சுதந்திரத்தை அனைவருக்கும், ஏன் பலவீன மனநிலையை உடையவர்களுக்கும் (Cranks) அளிக்கப் படவேண்டும் என்கிறார். அவர்களில் பத்தில் ஒன்பது பேர் மூடர்களாக இருக்கலாம். அந்தப் பத்தாவது நபர், அவனது சுதந்திரத்தை அழிக்கப் பார்க்கும் சாதாரண மனநிலையை உடைய மக்களைவிட, அதிக சிறப்பைத் தேடித் தரலாம் என் கிறார் மில்.

இதைப் போலவே செயல் சுதந்திரமும் இருக்க வேண்டும் என்றும், மற்றவர்களது உரிமைகளைப் பாதிக்காத வரை, அரசு தனிமனிதனின் செயல்களுக்கு மறுப்பு அளித்தல் கூடாது என் கிறார். மில்லின் 'சுதந்திரத்தைப் பற்றி' என்னும் புத்தகம், தனி மனிதன் சுதந்திரத்தைப் பற்றி யாராலும், இவ்வளவு சிறப்பான முறையில் இதுவரை கூறியதில்லை என்று சொல்லலாம். ஜன நாயக அரசில், எல்லோருடைய சுதந்திரங்களும், காப்பாற்றப்பட வேண்டும் என்னும் கருத்தை மிக அழகாக அதில் மில் கூறுகிறார்.

பென்தமின் தனித்தன்மைக் கோட்பாட்டில் மில் ஏற்படுத்திய மாற்றங்கள்

(1) பென்தமிற்கு, எண்ணம், பேச்சு இவற்றில் சுதந்திரம் என்பது, பெரும்பாலோர் ஏற்படுத்தி இருக்கும் அரசு திறமையாக வேலை செய்வதற்கு உதவியாக இருக்கும் வழிவகைகளே தவிர, தனிமனிதர்களின் சொந்த உரிமைகளல்ல. ஆனால், மில் அவற்றைத் தனிமனிதனின் பகுத்தறிவிற்கும், கௌரவத்திற்கும் மிகத் தேவையான சொந்த உரிமைகளே ஆகும் என்கிறார்.

(2) மேலும், பெரும்பான்மையோருக்கு எதிராக, சிறுபான் மையோரின் உரிமைகளுக்காக மில் வாதாடுகிறார். இவ்வாறு இவர் செய்வது, பென்தம், பெரும்பான்மையோரே குற்றமற்ற காரண அறிவின் இருப்பிடம் என்னும் கூற்றை எதிர்ப்பதற்கு ஒப்பாகும்.

(3) மனிதர்களுக்கு என்று அரசு எடுத்துக்கொள்ள முடியாத இயற்கை உரிமைகள் என்று ஒன்றும் இல்லை என்பதைப் பென்தமுடன், மில் ஒப்புக்கொள்கிறார். சொந்த விஷயங்கள் என்ன என்பது அரசு முடிவுசெய்ய வேண்டியவைதாம் என்பதை ஒப்புக்கொள்கிறார். ஆனால் அதே சமயம், தனித் தன்மையின்மீது இருக்கும் அளவு கடந்த ஆர்வம் காரணமாக, வாழ்வில் ஒவ்வொரு மனிதனுக்கும் தனக்கென்ற சொந்தமான பகுதி இருக்கிறது என்றும், அதில் அரசோ, வேறு யாரோ தலையிடக் கூடாது என்கிறார். இவ்விரண்டு கருத்துகளையும் அவர் கூறுவதால் அவரது கோட்பாட்டுக் கொள்கைகள், சற்று முரண்பாடுடன் காணப்படுகிறது. எனவே, சுதந்திரத்தைப் பற்றி அவர் கூறும் கொள்கைகள் நடைமுறையில் செலுத்தமுடியாமல் முரண்பாடுடன் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, தொழிலுற்பத்தியை (Manufacture) பொது சுகாதாரத்திற்காக அரசு ஒழுங்குபடுத்தலாம் என்கிறார். ஆனால், அரசு மதுபானத் தொழிலைத் தடுத்தால், அது தனி உரிமைகளைப் பாதிக்கிறது என்றும், தவறு என்றும் கூறுகிறார்.

பெண்களின் சுதந்திரம்

தம்முடைய அனுதாபத்தை, சிறுபான்மையோருக்கு மட்டுமன்று, பெண்களுக்கும் வழங்குகிறார் மில். அரசியலில் ஆண், பெண் என்ற வித்தியாசம் இருக்கக் கூடாது என்றும், பெண்களை அரசாங்க வேலைகளில் நியமிக்கப்பட வேண்டும் என்றும், பெண்களின் மனிதாபிமான நோக்கங்கள், கொள்கைகள் நாட்டிற்கு அனேக, பொது நன்மையைத் தரலாம் என்றும் கூறுகிறார்.

மேலும், தொழிலாளர்களின் அரசியல் அறிவில் நம்பிக்கை அற்றவராக இருந்தபொழுதும், அவர்களது பொருளாதார நன்மையைப் பொறுத்தவரை, கருணை உள்ளவராகவே இருக்கிறார். முதலாளித்துவ ஆதிக்கத்தை எங்ஙனம் ஒழிக்கலாம் என்றால், உற்பத்தி வழிவகைகளை அரசாங்க உடைமையாக்குவதன் மூலமல்ல. தொழிலாளிகளே, தாங்களாகவே முன்வந்து, அரசாங்க உதவியுடன், கூட்டுறவு முறையில் சேர்ந்து, முதலாளிகளாகலாம். மேலும் அரசாங்க உதவியுடன், வியாபாரச் சங்கங்களைத் தொழிலாளர்கள் ஏற்படுத்தி நியாய முறைப்படி பங்கீடு செய்யும் முறையையும் ஏற்றுக்கொண்டால் முதலாளித்துவ ஆதிக்கம் ஒழியும் என்கிறார். இத்தகைய சமதர்மக் கொள்கையையே மில் ஆதரிக்கிறார்.

மில், பென்தமின் பயன் கருது தத்துவத்தை முன்பு கூறிய வகைகளில் பலவீனப்படுத்திவிட்டார் என்று கூறினாலும், அக் கொள்கையில் சில புதிய கருத்துகளை அறிமுகப்படுத்தி அக் கொள்கையைப் பலப்படுத்தவும் செய்கிறார் எனலாம். அதாவது, மில் அரசு தனிமனிதர்களின் சொந்த விஷயங்களில் தலையிடக் கூடாது என்று வலியுறுத்தினாலும் அரசை அவர் ஓர் எதிர்மறைத் தன்மையுடையதாகக் கருதவில்லை. அதாவது பென்தமைப் போல் அரசு ஓர் அவசியமான தீமையாகக் கருத வில்லை. பென்தம் ஒவ்வொரு மனிதனும் தான் மகிழ்ச்சியாக இருக்கும் வழிவகைகளைத் தேடினால் சமூகம் முழுமையும் இதனால் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்றார். இதற்கு மில் தம்மு டைய அரசியல் பொருளாதாரம் (Political economy) என்னும் புத்தகத்தில் தரும் பதிலாவது எல்லோராலும் மகிழ்ச்சியைத் தேடுவதில் சரிசமமாகப் போட்டி போட முடியாது. ஒவ்வொரு வரும் திறமை, வலிமை இவற்றினால் ஒருவருக்கொருவர் மாறுபடுகிறார்கள். மேலும் ஒரு சமூகத்தின் சரித்திர அமைப் பையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஒரு சமூகத்தில் அடிமை முறை இருந்தால், அவ் வடிமைகள் சுதந்திரமானவர்களுடன் சரிசமமாக எப்படிப் போட்டி போட முடியும்? எனவே, தனி மனிதனின் மகிழ்ச்சியை, சமூகத்தின் மகிழ்ச்சியுடன் இணைப்பது பொருந்தாது என்கிறார் மில். ஏனெனில், சமூகத்திலுள்ள அனைவரா லும் சரிசமமாகப் போட்டிபோட முடியாது. எனவே, பென்தமின் இந்தக் கருத்தை மில் ஏற்க மறுக்கிறார்.

சில சமயங்களில் அரசே, பொதுமக்களின் மகிழ்ச்சியைப் பெருக்க உதவ வேண்டும். எடுத்துக்காட்டாக, நிலம், தொழிற்சாலை போன்றவை சமூகத்தில், சிறுபான்மையோரிடம் உள்ளது. சட்ட அமைப்பு முறைகளும் சிறுபான்மையோராலேயே ஏற்படுத்தப் பட்டன. இவற்றினால் தனி மனிதனின் மன வளர்ச்சிக்கோ, அல்லது பொதுமக்களின் நல்வாழ்விற்கோ தடைகள் ஏற்பட்டால் அரசே அவற்றைக் களையவேண்டும் என்கிறார். இவ்வகையில் சமதர்மக் கொள்கையின்மீது அனுதாபமுள்ளவராக இருக்கிறார்: மேலும் பென்தம் சொத்து உரிமைக்குக் காட்டும் ஆர்வத்தை மில் காட்டவில்லை. சொத்துகள் அனைத்தையும், அவை மனிதர் களுக்குத் தரும் பயனின் அளவைக்கொண்டே மதிப்பிட வேண்டும் என்றும், அதன்படி பார்த்தால் அவை அவ்வளவு அவசியமானவை அல்ல என்றும், மேலும் தனி நில உரிமை நியாயமற்றது என்றும் கூறுகிறார். அரசு நேரடியாகக் கல்வி அமைப்பில் தலையிடாவிட்டாலும், அது கட்டாயக் கல்வி முறைத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்றும், அரசின் மேற்

பார்வையிலேயே கல்வி வளர வேண்டும் என்றும் கூறுகிறார். மேலும், ஒரு குறிப்பிட்ட அளவிற்குமேல் யாருமே சொத்து வைத்திருக்கக் கூடாதபடி வாரிசு உரிமையை ஏற்படுத்த வேண்டும் என்றும், அரசு பொருளாதார விவகாரங்களில் தலையிட்டு, தொழிலாளிகளின் வேலை நேரத்தைக் குறைக்கவும், வேறு அவசியமான தொழிற்சாலைச் சட்டங்களையும் (Factory legislation) உண்டாக்க வேண்டும் என்கிறார். சுருங்கக் கூறின் மக்களின் மகிழ்ச்சியைப் பெருக்க அரசு பல காரியங்களில் ஈடுபட வேண்டும் என்கிறார். எனவே, பென்தம் கூறியதைப்போல் அரசு தன் செயல்முறைகளைக் குறைப்பதன் மூலம் மட்டும்தான் மக்களது மகிழ்ச்சி பெருகும் என்பதை மில் ஏற்கவில்லை.

அரசியல் சிந்தனையாளர்களில் ஒரு புதிராக இருக்கிறார் மில். இவர் பயன் கருது தத்துவத்தை முழுமையாக ஏற்க மறுத்த பயன் கருது தத்துவ எழுத்தாளர் ஆவார். தனித் தன்மையாளராக இருந்தும், ஒருவகை சமதர்மக் கொள்கையை ஆதரிக்கிறார். ஜனநாயக வாதியாக இருந்தும், ஜனநாயகத்தில் முழு நம்பிக்கை அற்றவராக இருக்கிறார்.

5. ஹெர்பட் ஸ்பென்சர் (1820-1903)

ஹெர்பட் ஸ்பென்சர் பரிணமக் கொள்கைக் கோட்பாட்டுடன் எப்பொழுதும் இணைக்கப்படுகிருர் என்ருலும் அவர் பெயர் அரசியல் தத்துவத்தில் தனியாள் உரிமைக் கோட்பாளராகக் கருதப்படுகிறது. இவர் ஓர் ஆங்கிலத் தத்துவ எழுத்தாளர். அவருடைய முக்கிய படைப்புகள் (1) சமூக இயலின் முக்கிய கொள்கைகள்(Principles of Sociology), (2) மனிதனும் அவனுக்கு எதிரான அரசும் (Man Versus State) முதலியவை. உயிர் நூலியலின் பரிணமக் கொள்கை வாயிலாகத் தனியாள் உரிமைக் கோட்பாட்டைக் கூறிச் சிறப்பைப் பெற்ருர். எங்ஙனம் பயன் கருதுக் கோட்பாட்டில் மில் மகிழ்ச்சி என்னும் வார்த்தையின் அடிப்படையை மாற்ருமல் அக் கோட்பாட்டின் முடிவுகளை மட்டும் மாற்றினுரோ பென்சரும் உயிர் நூல் பரிணமக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு லிபரலிசக் கொள்கையைத் தமக்கென்ற தத்துவ முறைப்படி அதன் முடிவுகளை அப்படியே ஏற்றுக் கொண்டார். இவர் தம்முடைய கருத்துகள் மிக விஞ்ஞானத் தன்மை உடையது என்று கூறினுலும் உண்மையில் அப்படியில்லை. ஆனுல், 19ஆம் நூற்ருண்டின் கடைசியில் இவரது தத்துவங்கள் மிகப் பிரசித்தி பெற்று விளங்கின. இந்நூற்ருண்டில் இவரது அரசியல் தத்துவங்கள் ஒரேயடியாகப் புதைக்கப்படாவிட்டாலும் அவ்வளவு ஆர்வத்துடன் யாராலும் படிக்கப்படவில்லை என்பது உண்மை.

ஸ்பென்சரின் தந்தை ஒரு சாதாரண பள்ளி ஆசிரியர். ஆதலால் இவருக்குப் பல்கலைக்கழகக் கல்வி கொடுப்பதற்கான வசதி அவரிடம் இல்லை. தமது 17-வது வயதிலேயே ஸ்பென்சர் இரயில்வேப் பொறியாளராக வேலைக்குச் சென்ருர். இவர் வேலையில் இருந்துகொண்டே அவ்வப்பொழுது கட்டுரைகள் எழுத அவை வெளியிடப்பட்டன. 1848ஆம் ஆண்டு 'எகானுமிஸ்ட்' (Economist) என்னும் பத்திரிகையின் துணை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1853ஆம் ஆண்டு வரை அப் பதவியிலிருந்தார். அவர் தம் வாழ்நாளில் அநேக புத்தகங்கள் எழுதியும் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள், ஆய்வுரைகள் எழுதியும் அதன் மூலம் பாராட்டுதல்கள் பெற்ருர். இவருடைய சமூக சூழ்நிலையும்

உயர்கல்வி கற்க வாய்ப்பின்மையும், இவரைத் தலைசிறந்த கற்ற வராக உயர உதவி புரியாவிட்டாலும் தத்துவ சிக்கல்களை இவர் அணுகும் திறனை அவை தடுக்கவில்லை. வெறும் ஏட்டறிவில் அவர் எந்தவித நம்பிக்கையும் கொள்ளவில்லை.

இவர் விஞ்ஞான அறிவு முழுமையையும் ஒன்றுபடுத்த வேண்டியது தமது பணியென ஏற்றுக்கொண்டார். அறிவியல் ஞானம் இவ்வளவு தூரத்திற்கு வளர்ந்திருக்கும் இக் காலத்தில் இது நடக்கக்கூடிய காரியமன்று என நாம் நினைக்கலாம். விஞ் ஞானம் அதன் கண்டுபிடிப்புகளின் ஆரம்பக் கட்டத்திலேயே அவர் காலத்தில் இருந்தாலும் அவற்றை ஒன்றிணைப்பது என்பது அசாத்தியமே. ஆனால், ஸ்பென்சர் தமது திறனில் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார். எனவே, அவர் தத்துவம், நன்னெறி, உயிர் நூல், உள நூல், சமூகவியல் இவையனைத்தையும் படித்துப் பொதுவான முதன்மையான விதியைக் கண்டுபிடிக்க முனைந்தார். இம் முயற்சியில் அவர் தோல்வியுற்றார் என்றாலும் உண்மைக்கும் போலிக்கும் உள்ள வித்தியாசத்தைத் தாம் கண்டு பிடித்துவிட்டதாகத் திடமாக நம்பினார். இவரது தொகுப்புகள் பின் வருவோருக்கு உபயோகமானதாக இல்லாவிட்டாலும் பல்வேறு அறிவியல் கிளைகள் ஒன்றுக்கொன்று கொண்டிருந்த தொடர்பினை நன்கு புரிய உதவினார். இவர் மூன்று விதிகளைக் கொண்டு தம் தத்துவத்தை விளக்குகிறார். இவ் விதிமுறைகள் ஒன்றுக்கொன்று இணைவின்றிக் காணப்படுகின்றன.

முதல் விதி (First Principle): நாடு என்பது படிப்படியாக வளரும் ஒரு ஜீவராசியைப் போன்றது. அது பல உறுப்புகளைக் கொண்ட கூட்டுத் தொகுப்பாக வளர்ந்து ஒரு சம நிலையை அடை கிறது. இவரது தத்துவத்தின் அடிப்படை விதி நாடு ஒரு ஜீவராசி போன்றது என்பதே. இக் கருத்தை இவர் ஹெகலிடமிருந்து ஏற்றுக்கொண்டாலும், இவர் உயிர்நூலில் கற்றவையும் இந்த முடிவுக்கு மிக உதவியாக இருந்தன. உயிர் ராசிகள் 'அமீபா' போன்ற ஓரினத் தன்மையிலிருந்து பல்வேறு முரண்தன்மை உடையவையாக வளர்ந்து மாறுகின்றன என்று உயிர்நூலில் கற்றவற்றை நாட்டின் தோற்றுவாய்க்கும் வளர்ச்சிக்கும் பொருத்தினார்.

நாட்டின் தோற்றுவாய்: ஜீவராசிகள் எங்ஙனம் தாமாகத்தோன்று கின்றனவோ அதைப் போன்றதே நாடும் என்கிறார். ஜீவராசியும், நாடும் ஆரம்பத்தில் நுட்பமானதாகத் தோன்றுகின்றன. எங்ஙனம் ஆரம்பக் காலத்தில் ஜீவராசிகள் தனித்தனிக் கூறுகளைக் கொண்டில்லாமல் ஒரே கூறினைக் கொண்டிருந்ததோ, அதைப்

போலவே ஆரம்பக் கட்டத்தில் சமூகத்தில் மக்கள் வேட்டை யாடுதல் அல்லது குடிசை கட்டுதல் அல்லது சிறு கருவிகளைச் செய்தல் போன்ற ஒரே வகையான தொழிலைச் செய்து வந்தனர். ஆனால், சமூகம் வளர்ந்து அளவில் பெரியதானதும் பலவிதமான தொழில்கள் பரவி மனிதர்களுக்குள் வேலைப் பங்கீடு, பல்வேறான தொழில் முறைகள் ஆகியவை வளர்ந்து இவர்கள் அனைவரையும் இணைக்கக்கூடியதாகச் சமூகம் வளருகிறது. இவ்வாறாக ஆரம்பக் கட்டத்தில் வேற்றுமைகளின்றி ஒரே கூட்டாக இருந்த சமூகம் பல வேறுபாடுகளுடைய நாடாக வளருகிறது.

நாட்டின் ஆரம்ப வளர்ச்சி முறையை எடுத்துக்கொண்டால் அது இராணுவ முறையாக உள்ளது என்கிறார். பழங்கால நாடுகள் வளமையை அடிப்படையாகக் கொண்டுள்ளன என்றும் இத்தகைய நாடுகளில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதால் தனி மனிதர்கள் தங்களது சுதந்திரங்களை இழந்தனர் என்றும் கூறுகிறார். எனவே, எல்லா மனிதர்களின் தன்மைகளையும் ஒரே நிலையுடைய தாக்கி ஓர் ஒற்றுமையை இந் நாடுகள் உண்டாக்கின என்கிறார். இந்நாடுகள் வளர வளர இயந்திரத் தொழில் முறையை அடிப் படையாகக் கொண்ட நாடுகளாக மாறின. இந்நாடுகளில் தனி மனிதர்கள் அரசின் தலையீட்டிலிருந்து விடுதலை பெற்றுத் தங்களுக்கு எந்த வியாபாரம் அல்லது தொழில்கள் விருப்பமோ அவற்றை மேற்கொண்டு நாட்டின் செல்வநிலையைப் பெருக்கினர். இந்நாடுகளின் கடைசிநிலை என்ன என்பதையும் ஸ்பென்சர் விவரிக்கிறார். நாடுகளின் பரிணாம முறை வளர்ச்சியின் கடைசிப் படி என்னவென்றால் அந் நாடுகளிலுள்ள அரசுகள் மறைந்து விடும்; மனிதர்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடன் பிறரது விருப்பங்களுடன் தங்களுடைய விருப்பங்களை இணைவித்துத் தங்களைத் தாங்களே ஆட்சி செய்து கொள்வார்கள் என்றும் தன்னியவான (Voluntary) சமூக ஒழுக்க அமைப்புகள்மூலம் தங்கள் வாழ்வைச் சீரமைத்துக் கொள்வார்கள் என்கிறார்.

இரண்டாவது விதி (Second Principle): தனிமனிதர்களின் இயற்கை உரிமைகளைப் பற்றி இங்கு ஸ்பென்சர் விவாதிக்கிறார். இவர் இத் தத்துவத்தில் கூறுவதாவது: மனிதனுக்கு உயிர் வாழ்வதற்கான உரிமை இயற்கையிலேயே உண்டு என்றும் அவனுடைய இயற்கை உரிமைகள் என்னவென்றால் அவன் உயிர் வாழ்வதற்குத் தேவையான அவசியமான காரியங்களைச் செய்யும் உரிமைகளே என்கிறார். ஆனால், அவன் தான் உயிர் வாழ்வதற் காகச் செய்யும் காரியங்கள் மற்றவர்களின் இம் மாதிரியான உரிமைகளில் தலையிடக் கூடா என்கிறார். இவ்வாறாக இவரது வாதம் பொருள் கூறை (Materialistic) அடிப்படையாகக் கொண் டுள்ளது.

மூன்றாவது விதி (Third Principle): நாடு தலையிடாத் தத்துவத்தைப் பின்பற்ற வேண்டுமென்றும் அப்பொழுதுதான் தனி மனிதர்களின் சிறப்புத் தன்மை வளரும் என்றும் கூறுகிறார். இவர் தனியாள் உரிமைக் கோட்பாளர் ஆதலால் மற்ற எல்லாவற்றையும்விடத் தனிமனிதனின் சுதந்திரத்திற்கே அதிக முக்கியத்துவத்தை அளிக்கிறார். சுதந்திரம் என்பதன் பொருள் அவருக்கு என்னவென்றால் குறைந்த தடை முறைகளை நாடு மனிதர்களுக்கு விதிக்க வேண்டுமென்பதே. அரசின் கடமைகள் என்னவென்றால் மனிதர்களின் வாழ்வு, சொத்துகள் இவற்றை மோசடி, வன்முறை இவற்றிலிருந்து காப்பாற்றி வெளி ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டைக்காப்பாற்ற வேண்டுமென்கிறார். இவற்றைத் தவிர வேறு எந்தக் காரியங்களையும் அரசு மேற்கொள்ளக் கூடாது என்கிறார். மக்களைச் சுதந்திரமாக விட்டுவிட வேண்டுமென்றும் அப்பொழுதுதான் அவர்களது தனித்தன்மைகளும் சிறப்புகளும் வளரும் என்கிறார். எனவே, தொழில் முறைகளைச் சீர்படுத்துவதோ, மதங்களை ஏற்படுத்துவதோ, குடியேற்றங்கள் அமைப்பதோ கூடாது என்கிறார். கல்வி முறையை ஊக்குவிப்பதோ மக்களின் உடல் நிலையைப் பாதுகாக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதோ, ஏழைகளுக்கு உதவியளிக்க முன் வருவதோ ஆகிய இதுபோன்ற நற்காரியங்களைக்கூட நாடு மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்கிறார்.

அவரது தீவிரமான தலையிடாக் கோட்பாட்டின் காரணம் என்னவென்று பார்ப்போம்.

அவர் தனியாள் கோட்பாட்டு வாதத்திற்கும் நாடு ஒரு ஜீவராசி என்ற தத்துவத்திற்கும் ஒரு சமரசத்தைக் கொண்டு வரப்பார்க்கிறார். ஒரு ஜீவராசியின் அங்கங்கள் ஒன்றையொன்று பிரிக்க முடியாத ஒரு முழுமையாகும். ஆனால், சமூகத்தின் அங்கங்கள் பிரிக்கக்கூடிய ஒரு முழுமையாகும். ஓர் ஜீவராசியின் உணர்வுநிலை அதன் ஓர் அங்கத்திலேயே காணப்படும். ஆனால், சமூகத்தில் ஒவ்வொரு வகுப்பினருக்கும் தனித்தனியான உணர்வு நிலை காணப்படுகிறது. தனக்கு எது மகிழ்ச்சியைத் தரும், எது துன்பத்தைத் தரும் என்று ஒவ்வொரு வகுப்பினருக்கும் நன்கு உணரும் திறமையுள்ளது. எனவே, சமூகம் அதன் அங்கத்தினர்கள் நன்மைக்காக இருக்கிறதே தவிரச் சமூகத்தின் நன்மைக்காக அதன் அங்கத்தினர்கள் இல்லை என்கிறார்.

இவ்வாறாக, ஜீவராசிக்கும் நாட்டிற்கும் உள்ள வேற்றுமையை எடுத்துக் காட்டும் ஸ்பென்சர் அதே சமயத்தில் டார்வினின் 'தகுதியுள்ளோரே பிழைத்திருத்தல்' (Survival of the fittest)

என்னும் உயிர் நூல் தத்துவத்தை முழுவதாக ஏற்றுக்கொள்கிறார். நாடு எனும் ஜீவராசி திடகாத்திரமாக இருக்க மிக ஏழ்மையான வலிமையற்ற நோயுள்ள அங்கத்தினர்களை எடுத்துவிட வேண்டு மென்கிறார்.

குறைபாடுகள்: நாடு ஒரு ஜீவராசி என்னும் ஒப்பீடு தத்துவ எழுத்தாளர் இடையே மதிப்பிழந்து காணப்படுகிறது. அவரது ஒப்பீடு 19ஆம் நூற்றாண்டில் ஆர்வத்துடன் படிக்கப்பட்டாலும் இந்நூற்றாண்டில் சுவையற்றதாகக் கருதப்படுகிறது. மேலும், இவர் நாடுகளின் வளர்ச்சியின் கடைசி நிலையில் அரசுகள் காணப் படமாட்டா என்பது ஏற்றுக்கொள்கிறாற்போல் இல்லை. மனிதர் களின் தீய குணங்களைக் கட்டுப்படுத்த அரசு தேவையே. அவரது இரண்டாவது விதியில் மனிதனுக்கு உயிர் வாழ்வதற்கான உரிமைகள்தாம் தேவைப்படுகின்றன என்கிறார். மனிதன் சமூகத் தன்மையுடையவன், பகுத்தறிவு ஆனவன், அவன் சிறப்பான தன்மையை அடைவதற்காகச் சில இயற்கை உரிமைகள் தேவைப் படுகின்றன என்று ஸிஸரோ, க்ரோஷியஸ் கூறிய கருத்துரைகள் ஸ்பென்சரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மேலும், உயிர் நூல் கோட்பாடான தகுதியுடையோர் எஞ்சியுறல் தத்துவத்தை மனிதர் வாழ்க்கையுடன் ஒப்பிடுவது ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை. மனிதர்களுக்கு உடல் அன்றி உள்ளமும் அறிவும் இருப் பதால் வெறும் உடலால் பிழைத்து இருப்பதை மட்டுமின்றி உள்ள ஒழுக்கச் சிறப்புத் தன்மைகளை அடைவதில்தான் பெருமையடை கிறார்கள். மேலும், நாடு மக்களின் வாழ்வு நலனுக்கான நற்பணிகளைக்கூட மேற்கொள்ளக் கூடாது என்ற அவரது கருத்து சோஷலிசம் பரவும் தற்காலத்திற்கு எடுபடாத தத்துவமாகிறது.

6. இலட்சியக் கோட்பாடுகள் (ஹெகல், க்ரீன்)

18ஆம் நூற்ருண்டின் இலட்சியங்களான மனிதனின் இயற்கை சமத்துவம் (Natural Equality), இயற்கை விதிகள் (Natural Laws), தலையிடாத் தத்துவம் (Laissez Faire) ஆகிய இவற்றின் அடிப்படையில் அமெரிக்க, பிரெஞ்சுப் புரட்சிகள் விளைந்தன. ஆனுல், 19ஆம் நூற்ருண்டில் இத் தத்துவங்கள் முக்கியத்துவத்தை இழந்தன. இத்தகைய இலட்சியங்களால் எழுந்த புரட்சிகள் மனிதனின் உரிமைகளை நிலைநிறுத்தவில்லை. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற இலட்சியங்களையும் ஏற்படுத்தவில்லை. சிறந்த ஜனநாயக அரசையும், நிறைவான அரசையும் அமைக்கவில்லை. தலையிடாத் தத்துவம் எல்லோருக்கும் ஒரே சீரான சமத்துவ சந்தர்ப்பத்தை அளிக்கவில்லை. மனிதர்களுக்கு அவரவர்கள் உழைப்பிற்குத் தக்க பலனும் கிடைக்கவில்லை. எனவே, 19ஆம் நூற்ருண்டில் இப் புரட்சிகளின் விளைவு குழப்பமும், சீர்குலைவுமேயாகும். இலட்சிய அரசு என்று 18ஆம் நூற்ருண்டில் போற்றப்பட்ட ஜனநாயகமும் அதன் கொள்கைகளும் 19ஆம் நூற்ருண்டில் நலிவுற்றன. பொருளாதார சுதந்திரத்தின் விளைவு பொருள் படைத்த சிலரிடம்-குறிப்பாகத்-தொழிலதிபர்களிடம் அதிகாரம் ஆற்றல் இவை குவிந்தன. எனவே, 18ஆம் நூற்ருண்டுக் கோட்பாடுகளும் இலட்சியங்களும் 19ஆம் நூற்ருண்டில் அர்த்தமற்றவையாகிவிட்டன. சமூக வாழ்க்கையின் புதிர்களுக்குப் புதிய விடைகளைத் தேடுவதில் தத்துவ எழுத்தாளர்கள் முனைந்தனர். அவர்கள் மனிதர்களின் சம்மதத்திஞல் அவர்களின் நன்மைக்காக உண்டாக்கப்பட்ட ஒரு கருவியே அரசு எனும் கோட்பாட்டின்மேல் நம்பிக்கை இழக்கத் தொடங்கினர். மனிதர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகத்தங்களது சம்மதத்தைத் தெரியப்படுத்திஞலே சமூகம் எழும் என்ற சமூக ஒப்பந்தக் கோட்பாட்டைச் சிறந்தது அன்று என நினைத்தனர். இம் மாதிரியான கோட்பாடு மனிதர்களைத் தனித்தனி அணுக்களாகக் கருதுகிறது. அது தவறு என்றும், சமூகத்தை விட்டு மனிதர்களைப் பிரிக்கவே முடியாது என்றும் கருதினர். மேலும், அச் சிந்தனையாளர்கள் அரசிற்குச் சில முக்கிய அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டியது அவசியமென்றும், மனிதனுக்குச் சில சுதந்திரங்கள் மிகஅவசியம் என்றும், இவ்வாருக மனிதனுக்கு என்ற சில அவசியங்கள், அரசுக்

கென்று சில தேவைகள் எனப் பிரித்தனர். அது தவறு எனப் பின் வந்த சிந்தனையாளர்கள் நினைத்தனர். அரசையும் தனி மனிதனை யும் ஒன்றுக்கொன்று எதிரான தன்மையுடையதாக அச் சிந்தனை யாளர்கள் கருதினர். அதன்மூலம் மனிதர்கள் ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் உறவு மனிதர்களுக்கும் அரசிற்கும் உள்ள உறவு இவற்றை அவர்களால் சரியாக ஆராய முடியவில்லை. சுதந்திரம் என்பதற்குக் கட்டுப்பாடற்ற தன்மை (Absence of restraint) என்ற எதிர்மறைப் பொருள் மட்டும் கொள்ளக்கூடாது. சுதந்திரத்தை நம்முடைய உண்மையான விருப்பங்கள், நாம் உண்மையில் எப்படி இருக்கவேண்டும் என்பன போன்ற லட்சியங்களுடன் ஒன்றுபடுத்த வேண்டும். இத்தகைய இலட்சியங்களை நாம் சட்டங்கள் என்றும் கூறிக்கொள்ளலாம். அல்லது ஸ்டாயிக்ஸ் (Stoices) கூறியதுபோல் இயற்கை விதிகள் என்றும் கூறலாம். அல்லது ரூஸோ கூறியது போல், பொதுச் சம்மதம் என்றும் அழைக்கலாம். உண்மைச் சுதந் திரத்தை அடைய உதவுவதே அரசுதான். எனவே, அரசு சுதந் திரத்தின் எதிரியன்று. மேலும், அரசை ஒரு கருவி என அரசியல் சிந்தனையாளர்கள், அதில் வாழும் மனிதன் இன்பத்தை மட்டும் நாடுகின்றனவாய், துன்பத்தைத் தவிர்க்கின்றனவாய்க் கூறுகின்ற னர். மனிதன் அப்படிப்பட்ட கேவலமான பிறவியல்லன், மிக மேன்மை பொருந்தியவனாக வேண்டும் என மனிதர்கள் நினைக்கும் மனப்பான்மையை இச் சிந்தனையாளர்கள் ஆசட்டை செய் கின்றனர் இவ்வாறாக, 18ஆம் நூற்றாண்டின் அரசியல் தத்துவங்கள் 19ஆம் நூற்றாண்டு அரசியல் சிந்தனையாளர்களுக்குத் திருப்தியை அளிக்கவில்லை. அச் சிந்தனையாளர்கள் சமூகத்தின் அல்லது வர லாற்றின் வளர்ச்சி, அதன் அழிவு இவற்றுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்று எண்ணினர். மனிதன், வரலாறு இவற்றுக்குள் ஒரு பிணைப்பு இருக்க வேண்டுமென இச் சிந்தனை யாளர்கள் வரலாற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தலைப்பட் டனர். மேலும் இந் நூற்றாண்டில் தேசீய உணர்வு மக்களிடையே வளரத் தொடங்கியது. இவ்வுணர்வின் காரணமாக அரசு மனித னால் உண்டாக்கப்பட்ட ஒரு வெறும் கருவி என்னும் கோட்பாட்டை விட அரசு மேன்மை வாய்ந்தது எனக் கருதும் கோட்பாடே அம் மக்களின் தேசீய உணர்விற்குப் பொருத்தமாக இருந்தது. அரசு தோன்றிய விதம் என்ற கேள்விக்கு அரசின் ஒற்றுமையையும் தேசீய உணர்வையும் பிணைத்துக் கூறக்கூடிய கோட்பாடு தேவைப்பட்டது.

அரசைப் பற்றிய பல கோட்பாடுகளில் அரசு ஒரு ஜீவராசி (Organism) என்ற கோட்பாடே அதிக திருப்தியை அளித்தது. இக் கோட்பாட்டின் அடிப்படைகளை ஏற்கெனவே ப்ளேடோ, அரிஸ்டாடில் போன்ற கிரேக்கத் தத்துவ ஞானிகளின் வாயிலாக

நாம் அறியலாம். ஆனால், அவர்களைப் போல் 19ஆம்நூற்றுண்டுக் கோட்பாடுகள் அரசை ஒரு ஜீவராசியுடன் ஒப்பிட்டோ அல்லது ஜீவராசிக்கும் அரசுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்வதிலோ அவர்கள் ஈடுபடவில்லை. மாருக அரசே ஒரு ஜீவராசிதான்; ஜீவராசி போன்ற ஒன்று அன்று எனக்கூறத் தலைப்பட்டனர். இத்தகைய கருத்தை உயிர் நூல் (Biology) கல்வியில் ஆர்வமாயிருந்த அரசியல் கோட்பாட்டினர் முன்வந்து கூறினர். ஜீவராசிகளும் அரசுகளும் எவ்வளவு ஒத்த தன்மையை உடையன என்பதற்கு மூன்று விளக்கங்களைக் குறிப் பிட்டுக் காட்டினர்.

1. ஜீவராசிகள் வளர வளர அதன் உறுப்புகளும் உடன் வளர்ந்தாலும் அவ்வுறுப்புகள் தனிப்பட்ட வகையில் செயல்படுவ தில்லை. அவையனைத்தும் நுணுக்கமான முறையில் கட்டுப் படுத்தப்படுகின்றன. உதாரணமாக நன்கு வளர்ச்சியடைந்த ஒரு மனிதனின் உறுப்புகளை நுணுக்கமாகக் கட்டுப்படுத்துவது அவனது அறிவே. அவனுக்குத் தன்னுணர்வு என்று ஒன்று வளர் கிறது. இதைப் போலவே நன்கு வளர்ச்சியடைந்த சமூகத்தில் பல வகுப்புப் பிரிவினைகள் காணப்படுகின்றன. அச் சமூகத்தின் நாகரிக வளர்ச்சிக்கு ஏற்பச் சமூக அரசியல் நடவடிக்கைகள் பெருகி அதன் அமைப்பு முறை அதிக அதிகாரங்களைக் கொண்ட சிக்கலான ஒன்ருகிறது. இதனுல் அரசு அதிகாரத்தைத் தன் நன்மைக்காகச் செலுத்துகிறதே தவிரத் தனிப்பட்ட மனிதர் களது அக்கறைக்காகச் செலுத்துவது இல்லை. இவ்வாருக ஒரு ஜீவராசியை உறுப்புகள் ஒன்றுக்கொன்று பிரிக்கவொட்டாத முறையில் இணைக்கப்பட்டு ஒரு முழுமையாகச் செயல்படுகின்றன. பகுதிகள் ஓரளவு சுதந்திரமாக இருந்தாலும் முழுமையிலிருந்து அவற்றைப் பிரித்துவிட்டால் அவற்றின் தன்மை போய்விடும். ஒரு ஜீவராசியின் உறுப்பான—உதாரணமாக—அதன் கையைப் பிரித்துவிட்டால் அது மறுபடியும் பழைய கை ஆகாது. இதற்கு மாருக இயந்திரங்களிலுள்ள கருவிகளைப் பிரிக்கலாம். வேறு இயந்திரத்துடன் பொருத்தலாம். அதன் தனிப்பட்ட தன்மை இதனுல் மாறுவதில்லை. வண்டியிலிருந்து சக்கரத்தைத் தனியாகக் கழற்றினுலும் அது சக்கரந்தான். உடலை விட்டுக் கையை இவ்வாறு தனியாகப் பிரிப்பதோ மற்ருேர் உடலுடன் சேர்ப் பதோ இயலாது.

2. ஜீவராசியில் வளர்ச்சி என்பது வெளியிலிருந்து வரக் கூடிய ஒன்றன்று. பழைய பகுதிகளை நீக்கிவிட்டுப் புதியவற்றைச் சேர்க்கலாம் என்பது சாத்தியமன்று. என்ன வளர்ச்சி வேண்டு

மானாலும் அது தானாகவே தனக்குள்ளிலிருந்தே வளரவேண்டும். ஆனால், இயந்திரங்களின் பகுதியை மாற்றிப் புதியவற்றைச் சேர்க்கலாம். பழையவற்றை வேறு எதனுடனாவது சேர்க்கலாம். ஜீவராசியைப் போன்றதே சமூகமும். சமூகத்தை விட்டு மனிதர்களைப் பிரிக்க முடியாது. ஒரு மனிதன் என்பவன் அவனது சமூகச் சூழ்நிலை, மரபு இவற்றால் உண்டாக்கப்பட்டவன். அவனுக்கும் சமூகம் தேவை. சமூகத்திற்கும் அவன் தேவை. ஜீவராசிகளில் காணப்படுவது போலவே சமூகத்திலும் ஓர் உள்வளர்ச்சி உள்ளது. சமூகத்தின் வார்ப்படமாக மனிதன் திகழ்ந்தாலும் மனிதர்களின் வளர்ச்சியினாலும் சமூகம் வளருகிறது. சமூகத்தின் வளர்ச்சி மனிதர்களின் வளர்ச்சி. இவை இரண்டும் பிரிக்க முடியாத ஒன்று.

3. ஜீவராசி அதன் வாழ்விற்காகவே வாழ்கிறது. ஆனால், இயந்திரம் வேறு செயல்களுக்காகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒன்று. அவற்றுக்கென்று எந்தத் தனிப்பட்ட வாழ்க்கையும் இல்லை. மனிதனின் வசதிகளுக்காக மனிதர்களால் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களால் இயக்கப்படுகிறது. இத் தன்மையில் சமூகம் இயந்திரத்தைப்போல் அல்லாமல் ஜீவராசியையே ஒத்துள்ளது. சமூகத்தின் நோக்கம் அதன் நன்மைக்காகவே ஒழிய, வேறு காரியங்களின் பயனுக்காக உபயோகப்படுத்த உதவும் ஒரு கருவியன்று. இவ்வாறாக அக் கோட்பாட்டினர் ஜீவராசிகளுக்கும் நாட்டிற்கும் உள்ள தொடர்பை விளக்கிவிட்டு நாடு அல்லது சமூகம் ஒரு ஜீவராசிதான் என்ற முடிவிற்கு வந்தனர்.

இவ்வாறான கருத்துக் கொண்ட தத்துவ ஞானிகள் சில பல வகைகளில் தங்களுக்குள் இந்த ஒப்பீட்டில் வேறுபட்டாலும் அவர்களுக்குள் ஒரு முடிவான பொதுக் கருத்தைக் கொண்டிருந்தனர். அது என்னவென்றால் சமூகம் தன் வளர்ச்சிக்காக, நன்மைக்காக இருக்கும் ஒன்று. தன் நன்மை தவிர வேறு எந்த நன்மைக்காகவும் அது இருக்கவில்லை. அது கூறுகளால் இணைக்கப்பட்ட, ஆனால் கூறுகளுக்கும் மேலான ஒரு முழுமை. மக்களின் நலனே சமூகத்தின் நலனாக இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. முழுமையும் நலனுக்காக எங்ஙனம் பகுதிகள் இயங்க வேண்டுமோ அங்ஙனமே சமூகத்தின் அல்லது நாட்டின் நலனுக்காக மக்கள் பாடுபட வேண்டும். நாட்டின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு மக்கள் நடக்க வேண்டும். எங்ஙனம் ஒரு ஜீவராசியின் உறுப்புகளான கை, கால், போன்றவற்றுக்கு எந்தவித தனிப்பட்ட விருப்பமும் கிடையாதோ, எங்ஙனம் அவை ஓரளவிற்குச் சுதந்திரமாக இயங்கினாலும், ஆனால் முழுமையின் கட்டுப்பாட்டிற்கு

உட்பட்டுத்தான் இயங்குகின்றனவோ அங்ஙனமே நாட்டிலும் ஓரளவிற்கு மக்களுக்குச் சுதந்திரங்கள், சில உரிமைகள் இருந் தாலும் ஆனால் நாட்டின் விருப்பத்திற்கு எதிராக அவை இருக்க முடியா. நாட்டின் இறைமை, மக்களின் சுதந்திரம் இவை இரண்டும் எதிரிகளாக இருக்க முடியா. உண்மையான சுதந் திரம் என்பது அரசின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே. ஜீவராசிகளின் கூறுகளை எங்ஙனம் தனித்தனியாகப் பிரிக்க முடியாதோ அதைப் போலவே தனி மனிதர்களுக்கென்று ஒரு வளர்ச்சி, நாட்டுக்கு என்று ஒரு வளர்ச்சி இருக்க முடியாது.

மனிதர்கள் அனைவரது கூட்டு வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி யாகும். இத்தகைய இவர்களது கோட்பாடு இலட்சியக் கோட்பாடு கள் என்று அழைக்கப்படுகின்றன. இவர்களில் மிக முக்கியமான வர்கள் ஹெகல், க்ரீன் ஆகியவர்களாவர். இவர்களது சிந்தனைகள் அவர்கள் காலத்தும்சரி, இப்பொழுதும் சரி அநேகருக்குச் சரிவரப் புரியாவிட்டாலும்கூட அவர்களது எழுத்துகளின் செல்வாக்கு தற்கால அரசியல் சிந்தனைகளில் எவ்வளவு தூரத்திற்கு இருந்தன என்பதை மறுக்க முடியாது.

ஜார்ஜ் வில்லியம் ப்ரெடரிக் ஹெகல் (1770—1831)

ஹெகல் 1770ஆம் ஆண்டு ஜெர்மனியில் 'வர்டம்பர்க்' என்னும் ஊரில் பிறந்தார். 1801ஆம் ஆண்டு ஜீனு பல்கலைக் கழகப் பேராசிரியர் ஆனார். இவர் இப் பல்கலைக்கழகத்தில் பணி யாற்றிக் கொண்டிருந்தபோது 1806ஆம் ஆண்டு நெப்போலியன் தம் படைகளுடன் ஜெர்மனியின்மீது படையெடுத்து அதைத் தோற் கடித்தார். நெப்போலியன்மீது ஹெகல் பெருமதிப்புக் கொண்டி ருந்து அவரை மேதையாகக் கருதினாலும் பின்னர் நாட்டுப்பற்றின் காரணமாகத் தம் கருத்தை மாற்றிக் கொண்டார். 1818ஆம் ஆண்டு பெர்லின் பல்கலைக்கழகத் தத்துவப் பேராசிரியராக நீண்ட காலம் பணியாற்றி இறக்கும்வரை அங்கேயே இருந்தார். அவருடைய முக்கிய படைப்புகள் (1) சட்டத்தின் தத்துவம் (Philosophy of Law), (2) வரலாற்றின் தத்துவம் (Philosophy of History) ஆகியவையாகும்.

இவரது அறிவுத் திறனை வியந்தோரும் உண்டு. ஏளனம் செய்தோரும் உண்டு. மனத்திற்குத் தோன்றியவாறு பைத்தியக் காரத்தனமாகக் கிறுக்கிய தற்குறி என்று இகழ்ந்தவரும் உண்டு. உலகிலுள்ள எல்லா அறிவுகளையும் ஒன்றிணைத்து விட்டார் என்றும், உண்மையை ஆளும் அடிப்படை விதிகளைக் கண்டு

பிடித்து விட்டார் என்றும், உலகிலுள்ள எல்லாப் புதிர்களுக்கும் விடை கண்டுபிடித்து விட்டார் என்றும் போற்றியவரும் உண்டு. அவர் இறந்தபின் எங்ஙனம் அலெக்ஸாண்டர், உலகம் வெற்றி கொள்வதற்கு இவ்வளவு குறுகியதாக இருக்கிறதே என்று வருத்தப்பட்டது போல், ஹெகலின் மாணவர்கள் தத்துவ ஞானத்தில் ஒன்றுமே எஞ்சியில்லையே எனக் கருதினர்.

ஹெகல் காலத்தில் ஜெர்மனி சிறுசிறு சுயேச்சையான நாடுகளின் கூட்டமைப்பாக இருந்தது. இந் நாடுகளில் குழப்பமும் சீர்குலைவான நிலையும் காணப்பட்டன. அக் காலத்தில் பிரிட்டன், பிரான்சு, ஸ்பெயின் ஆகிய நாடுகள் பலமான மன்னர்களின் ஆட்சியினுல் ஒழுங்குமுறையும் அமைதியும் கொண்டு திகழ்ந்தன. ஆனுல், ஜெர்மனி பல சிற்றரசுகளின் பிடியில் இருந்தது. அச் சிற்றரசர்கள் தங்களது சுயநலத்திற்காக ஜெர்மன் நாட்டின் நன்மையைக் காற்றில் பறக்கவிட்டனர். நாட்டுப்பற்று மிக்க ஹெகலுக்கு இது ஒரு பெரும் குற்றமாகப் பட்டது. எனவே, ஜெர்மானிய நாட்டின் பெருமையை உயர்த்த வேண்டுமென எண்ணி அதையே தம் குறிக்கோளாகக் கொண்டார். அவர் மாக்கியவெல்லியைப் போல் ஓர் அரசியல் மேதையுமல்லர்; அன்றுட அரசியலுடன் திறமையுடன் பங்குகொண்ட ஆற்றல் மிகு பர்க்கும் (Burke) அல்லர் என்று 'டன்னிங்' (Dunning) கூறுகிறுர். மாருக, உலகம், அரசு இவற்றைப் பற்றி எளிதில் புலனுகாத கற்பனை மிக்க இலட்சியத் தத்துவங்களைக் கூறுவதில் வல்லுநராக இருந்தார். ஜெர்மன் நாட்டை ஒரு தலைசிறந்த நாடாக்க வேண்டும் என்னும் விருப்பத்தில் புலனுகாத இலட்சியத் தத்துவத்தைத் தந்தார். இவர் தத்துவத்தைப் படிப்பதில் சில சங்கடங்கள் உள்ளன. இவரது எழுத்துகளின் செல்வாக்கு, விளைவு, முக்கியத்துவம் ஆகியவை அதிகமாக இருந்தாலும் அதைப் புரிந்து கொள்வது மிகக் கடினமானதாகும். இவரது தத்துவத்தில் முரண்பாட்டு விளக்க வாதம் (dialectic) என்னும் தர்க்கமுறையைப் புரிந்து கொள்ள வேண்டும். அவ் விளக்க வாதத்தைச் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டுமென்ருல், உலக வரலாற்றைப் பற்றிய அவரது கருத்து, வரலாற்றுக்குப் புதிய முறையில் அவர் பொருள் கூறு, முறை ஆகிய இவற்றை அறிந்துகொள்ள வேண்டும். இவரது அரசியல் தத்துதத்தை நாம் இரு பிரிவுகளாகப் பிரித்து அறியலாம். (1) முரண்பாட்டு விளக்க முறை இலட்சிய வாதம் (dialectical idealism), (2) இலட்சிய நாடு (Ideal state) எனப்பிரிக்கலாம்.

(1) முரண்பாட்டு விளக்க முறை இலட்சிய வாதம்

ஹெகல் பிரபஞ்சத்தைக் (Universe) கூட்டிணைப்பான ஒரு முழுமை என்கிறுர். அதாவது ஓர் உயிரினம் எங்ஙனம் வெவ்வேறு

அங்கங்களைக் கொண்ட ஒரு முழுமையோ, அதைப் போன்றே பிரபஞ்சமும் ஒரு கூட்டிணைப்பு என்கிறார். இக் கூட்டிணைப்பில் உண்மை என்பது மெய்க் கருத்து (spirit) ஒன்றே ஆகும். இதைப் பல்வேறு பெயர்களில்—அதாவது, உட் கருத்து (idea), காரண அறிவு (reason) அல்லது தெய்வீக மனம் (divine mind) எனப் பல பெயர்களில் அழைத்தாலும் பொருள் ஒன்றே. சடப் பொருள் (matter) உலகம் எல்லாமே இம் மெய்க் கருத்தினால் உண்டாக்கப் பட்டவையே. எனவே, மெய்க் கருத்து ஒன்றே உலகத்தில் இறைமைத் தன்மை வாய்ந்தது என்று கூறின் அது மிகையாகாது. இம் மெய்க் கருத்தின் தன்மையை விளக்குகையில் ஹெகல் இதன் தன்மை எல்லாப் பொருள்களையும் அறிந்துகொள்வதேயாகும் என்கிறார். இங்ஙனம் ஹெகல் கூறுவதன் பொருள் என்னவென்று விளக்கமாகப் பார்ப்போம். ஓர் உயிரினத்தின் தன்மை என்ன வென்றால், வளர்ந்து முழுமை அடைவதுதான். எடுத்துக்காட்டாக, ஓர் உயிரினத்தின் பெயரைக் கூறும்பொழுது, அது சரிவர வளர்ச்சியடைந்தாலே அதன் முழுத் தன்மையும் அல்லது அதன் இயற்கை வெளிப்படும். எடுத்துக்காட்டாக, மனிதன் என்று கூறும்பொழுது ஒரு குழந்தையையோ சிறுவனையோ நாம் குறிப்பிடுவதில்லை. மனிதன் முழுமையாக வளர்ந்த பிறகுதான் மனிதன் என்னும் தன்மையை அடைகிறான். இதற்கிடையில் அவனது பல வளர்ச்சி நிலைகள் அவன் முழு வளர்ச்சி அடைவதற்கு உதவினாலும் அதுவே முழுமையாகாது. இதைப்போலவே ஹெகல் மெய்க் கருத்து அல்லது காரண அறிவு என்பதன் தன்மை என்ன வென்றால், தன்னுடைய தன்மையையே முழு வளர்ச்சியின் மூலமாக அடைகிறது என்கிறார். எனவே, உலக வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில் இந்த மெய்க்கருத்து ஒன்றையுமே அறியாது; எங்ஙனம் மனிதன் பிறந்த உடன் ஒன்றையும் அறியமாட்டானோ அதைப் போலவே மெய்க் கருத்தும் ஆரம்பத்தில் ஒன்றையுமே அறியாது. ஆனால், உலக வரலாறு வளர வளர மெய்க் கருத்தும் அதன் வாயிலாக வளர்ந்து அதிகப்படியான அறிவை அறிந்து கொண்டு முடிவில் தன்னுடைய குறிக்கோளான முழு அறிவை அடைகிறது. சுருங்கக் கூறின், மெய்க் கருத்துச் சிறிது சிறிதாக வளர்ந்து, முடிவில் தன்னைத்தானே உணருகிறது.※ மெய்க்கருத்து இக் குறிக்கோளை அடைவது தவிர்க்க முடியாத ஒன்று. எங்ஙனம் ஓர் உயிரினத்தின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்த முடியாதோ அங்ஙனமே மெய்க் கருத்து தன் குறிக்கோளை அடைவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது.

※ 'The truth is the whole; the whole however is merely the essential nature reaching its Completeness throgh the process of its our devclopment' —Hegel.

வரலாற்றைப் பின்னோக்கி ஆராய்ந்தால் மெய்க் கருத்து அறியாமை என்னும் ஆரம்பத்திலிருந்து படிப்படியாக வளர்ந்து முழு அறிவை அடைகிறது. வரலாற்றின் வளர்ச்சி தற்செயலானதோ ஒழுங்கற்ற ஒன்றோ அன்று. மாறாக, பகுத்தறிவுத் தன்மையின் குறிக்கோள்களை வெளிப்படுத்துபவையே ஆகும். உலக வரலாறே ஒரு பகுத்தறிவான உருவாக்கம்தான். மெய்க் கருத்து தனது குறிக்கோளை நோக்கி உலக வரலாற்றின் வாயிலாக வளரும்போது அவ் வளர்ச்சியில் பல சோதனைகளில் ஈடுபடுகிறது. எல்லாவற்றையுமே படிப்படியாக அது சோதனையாகப் பயன்படுத்தி அத் தருணத்திற்கு உபயோகமாகப் பயன்படுத்திக்கொண்டாலும் உண்மையை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றவற்றை விட்டுவிடுகிறது. இதில் பகுத்தறிவே உண்மையானது. உண்மையே பகுத்தறிவானது. (The rational is the real and the real is the rational) அதாவது, ஹெகல் இப்படிக் கூறுவதன் பொருள் என்னவென்றால், மெய்க் கருத்து வரலாற்றின் வாயிலாகத் தன்னை முழுமையாக உணர்ந்துகொள்வதற்காகத் தன்னையே ஒவ்வொரு வடிவாக சோதனைக்குள்ளாக்கி, இச் சோதனையில் உண்மை எதுவோ அதைமட்டும் எடுத்துக்கொள்கிறது என்பதாகும்.

உண்மை என்று அவர் கூறுவதன் பொருள் என்னவென்றால், அடிப்படையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததும் என்பதேயாகும். மேலும் அவர் கூறுவதாவது: சாதாரண வாழ்க்கையில் சில சமயங்களில் உண்மையல்லாத பொய்மைகள், தவறுகள், கீழானவை கூட உண்மையென்னும் பெயரைத் தற்செயலாகப் பெறும். ஆனால், அவை மெய்க் கருத்தாகாது. மேலும் அவர், சிறந்த அல்லது பகுத்தறிவுடைய அரசுகள் என்பவை எவை என்றால், இருக்கும் அரசுகளே என்கிறார். எனவே, அவற்றுக்குப் பயபக்தியுடன் மரியாதை செலுத்த வேண்டும். எனவே, பிகெட் (Fichte)கூறியதுபோல்,இலட்சிய அரசுகளைப் பகுத்தறிவுடையவை என்று கூறாமல், வழக்கில் இருந்துவரும் அரசுகளே பகுத்தறிவு பெற்றவை என்கிறார். ஹெகல் இவ்வாறாக இருப்பதையே இலட்சியமாகக் கருதுவதற்கு அவர் கூறும் காரணம் என்னவென்றால், எல்லாமே ஏன் நடக்கின்றன என்றால் மெய்க்கருத்தின் வளர்ச்சிக்கு அவை தேவை. மெய்க் கருத்தின் வளர்ச்சிக்கு எது தேவையாயிருந்தாலும் அது சரியானதே. எனவே இருக்கும் அரசுகள் மெய்க்கருத்தின் வளர்ச்சிக்குத் தேவைப்படுவதால் அவற்றை இலட்சிய அரசுகள் என்றே அழைக்கலாம்.

இவ்வாறாக இவர் இருப்பதையே இலட்சியமாகக்கருதுவதால், முன்னேற்றத்தில் நம்பிக்கையற்ற பழைமை வாதியோ என்று எண்ணத் தோன்றலாம். ஆனால், பழைமை வாதம் அதில் இருந்

தாலும் அதுவே தலைமையானது அன்று. ஏனெனில் எல்லாமே மெய்க்கருத்து தன் வளர்ச்சிக்காக ஈடுபடும் சோதனைகளே என்றும், எனவே அது இன்னும் மேலும் மேலும் வளர்ந்து கடந்த நிலையை அடைய வேண்டுமென்கிறுர். மெய்க்கருத்து தன்னை முழுமையும் அறிந்து கொள்வதற்கான சோதனையில் ஒவ்வொரு முறையும் அப் பாதையில் முன்னேறிச் செல்ல உதவுகிறது. இன்னும் அநேக அநேக முறைகள் முன்னுல் இருக்கின்றன என்கிறுர். வரலாறு முழுவதிலுமே மெய்க்கருத்துத் தோன்றி, வளர்ந்து, பாதிக்கப்பட்டு, அழிந்து மறுபடியும் பெருமையுடன் எழுகிறது. எனவே, ஹெகலின் தத்துவத்தை ஆராயும் பொழுது அது ஒரு பழைமை வாதமன்று; மாற்றத்தில் நம்பிக்கை கொண்ட ஒன்றே என அறிகிறேம். மாற்றம் என்ருல் மேலான நிலையிலிருந்து கீழான நிலைக்கு மாற்றமன்று. எப்பொழுதுமே மேலான நிலைக்கே மாற்றம். எனவே, இவர் தத்துவத்தில் திண்ணமான முன்னேற்றத்தின் நம்பிக்கைச் சுடர் எரிகிறது.

ஹெகல் வரலாறு என்பது உலகத்தில் மெய்க்கருத்தின் வளர்ச்சியைப் பற்றிய பதிவு என்று மட்டும் கூறவில்லை. மெய்க்கருத்து எங்ஙனம் ஒன்றிலிருந்து இன்னென்ருக மாறி வளருகிறது என்பதைப் பற்றியும் விளக்கமாகக் கூறுகிறுர். இதைப் பற்றி விளக்கிக் கூறும் பொழுதுதான் அவர் முரண்பாட்டு விளக்க முறையை அறிமுகப்படுத்துகிறுர். (Dialectic method).

இவ் வாத முறை அக்காலத்தில் கிரேக்கர்களிடத்தில் பிரசித்தி பெற்றிருந்தது. பிளேட்டோவின் ‘குடியரசு’ புத்தகத்தில் சாக்ரடீஸ் முரண்பாடுகளைக் கேள்விகள் மூலமாக வெளியிட்டு அதன் மூலம் உண்மையை அறிந்துகொள்ள இவ் வாத முறையை உபயோகித்தார். கிரேக்கர்கள் எதையும் அதன் உச்ச எல்லை வரை எடுத்துக் கொண்டே போனுல் அதன் விளைவு நேர் எதிர் மறையாக முடியும் என நம்பினர். உதாரணமாக வரம்பற்ற முடியாட்சி அரசு மிகமிக வரம்பின்மையாகப் போய்க் கொண்டே இருந்தால் ஒரு நாள் மக்கள் இதை எதிர்த்து ஜனநாயகத்தை அமைக்கும்படி முடியும். இதைப் போலவே ஜனநாயக அரசும் ஆகும். ஜனங்களின் ஆட்சி வரம்பை மீறி உச்சநிலையை அடைந்து விட்டால் குழப்பங்கள் மிகுந்து இக் குழப்பநிலையை அடக்கி அமைதியை நிலைநாட்ட சர்வாதிகார ஆட்சியாய் முடியும். எனவே, எதையும் அதன் உச்சநிலைக்கு உந்தப்பட்டால் அதன் எதிர் மறையில் முடியும் என நம்பினர். பிறகு மாற்றத்தின் தன்மை இரண்டல்ல. மூன்று என நம்பினர். அதாவது முடியாட்சி சீர்கேடான நிலைக்கு வந்தால் மேன்மக்களாட்சியாக மாறிப் பிறகு மக்களாட்சியாக மாறுகிறது. மக்களாட்சி சீர்குலைந்து கொண்டே

வந்தால் சர்வாதிகார ஆட்சியாக மாறிப் பிறகு முடியாட்சியாக மாறுகிறது என்று எண்ணினர்.

கடைசியாகக் கூறிய கருத்தையே ஹெகலும் தமது முரண் பாட்டு விளக்க வாதத்தில் அடிப்படையாக ஏற்றுக் கொள்ளுகிருர்.

ஹெகலின் முரண்பாட்டு விளக்கவாதம்

எல்லாவற்றிலுமே அதாவது மெய்க்கருத்து உண்மையைத் தவிர மற்ற எல்லாமே தனது உச்சவரம்பை அடைந்து விட்டால் அப்பொழுது அதில் அதன் தன்மை மட்டுமன்று அதன் எதிர் மறைத் தன்மையும் வெளிப்படும். மாற்றம் இரண்டு தன்மை வாய்ந்ததல்ல. மூன்று தன்மை வாய்ந்தது. இம் மாற்றம் வெறும் மாற்றம் மட்டுமன்று. அதில் வளர்ச்சியும் அடங்கி யுள்ளது. மெய்மை ஒவ்வோர்படியாக வளர்ந்து ஓர் எல்லையில் முழு நிறைவை அடைகிறது. அதுவரை ஒவ்வோர் நிலையும் முழு நிறைவை அடையாத குறைகள்தாம். மெய்மை முழு நிறையை அடையும் வரை அதில் குறைகள் காணப்படுகின்றன. தன்னிட முள்ள குறைகளை நீக்குவதற்காக மெய்மை ஒரு நிலையை அடைந் ததும் அதில் அதனுடைய இயல்பு (Thesis) மட்டுமன்று அதன் எதிர்மறை இயல்பும் (Anti thesis) வெளிப்படுகிறது. இங்கு ஒரு போராட்டம் நிகழ்ந்து முடிவில் ஒரு கூட்டிணைப்பு (Synthesis) கிடைக்கிறது. இக் கூட்டிணைப்பு, இயல்பு, எதிர்மறை இயல்பு இவைகளிலிருக்கும் அடிப்படை அல்லது உண்மையைக் காக் கின்றது. இக் கூட்டிணைப்பில் மெய்க்கருத்து இருந்தாலும் இம்மெய்க்கருத்துமுழு வளர்ச்சியை அடையவில்லை. எனவே, இது ஒரு முழுமை ஆகாது. இதில் குறைபாடுகள் இருக்கின்றன. அதாவது இக் கூட்டிணைப்பில் இயல்பு, எதிர்மறை இயல்பு இரண்டும் அடங்கியுள்ளன. ஒரு நிலையில் இக் கூட்டிணைப்பு வளர்ந்ததும் இயல்பு, எதிர்மறை இயல்பு நன்கு புலனுகின்றன. பிறகு இயல்பிற்கும்,எதிர்மறை இயல்பிற்கும் போராட்டம் நிகழ்ந்து பிறகு கூட்டிணைப்பு ஏற்படுகிறது. இக் கூட்டிணைப்பிலும் குறை பாடுகள் இருக்கின்றன. இருந்தும் இக் கூட்டிணைப்பு இதற்கு முந்தைய கூட்டிணைப்பைவிட மேலானது. ஏனெனில், மெய்க் கருத்து இதில் முந்தையதைவிடச் சற்று வளர்ந்துள்ளது. உதாரண மாக சர்வாதிகார ஆட்சி இயல்பெனக் கொண்டால் அதன் எதிர் மறை இயல்பு மக்களாட்சி. சர்வாதிகார ஆட்சி ஒரு நிலையை அடைந்ததும் அதன் எதிர்மறையான மக்களாட்சி தோன்றவிருக் கும் இவை இரண்டிற்கும் நடக்கும் போராட்டத்தில் ஒரு சட்ட பூர்வமான முடியரசு (Constitutional monarchy) ஏற்படும். மற்றோர் உதாரணம் இந்தச் சட்டபூர்வமான முடியரசில் சர்வாதிகார ஆட்சியில் உள்ள சிறப்புகளும், மக்களாட்சியில்

உள்ள சிறப்புகளும் அடங்கியிருக்கும். மற்றோர் உதாரணம் ஒரு குடும்பத்தை இயல்பென்றால், அதன் எதிர்மறை பல குடும்பங்களைக் கொண்ட சமூகமாகும். குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் நடக்கும் போராட்டத்தில் அரசு உருவாகிறது.

இக் கூட்டிணைப்புகள் இயல்பிற்கும், எதிர்மறை இயல்பிற்கும் நடக்கும் சமரசம் அல்ல. அல்லது இயல்பு, எதிர்மறை இயல்பையோ, அல்லது எதிர்மறை இயல்பு, இயல்பையோ வெற்றி கொள்வதும் இல்லை. கூட்டிணைப்பில், இயல்பின் தன்மைகளையும் காணலாம். எதிர்மறை இயல்பின் தன்மைகளையும் காணலாம். எப்படிக்காணலாம் என்றால் அவைகளுக்குள் இருந்த தற்காலிகமான எதிர்மறைத் தன்மை மறைந்து இரண்டின் சிறந்த பண்புகளும் இணைகின்றன. எனவே, ஹெகலின் முரண்பாட்டு வாதத்தில் மெய்மை அழியவே அழியாது. மேலும், இதில் தீர்க்க முடியாத முரண்பாடுகள் என்று எதுவுமே இல்லை. சாக்ரடீஸ் எதிலும் உண்மையை மறைக்கும் முரண்பாடுகளை அகற்றிவிட்டு உண்மையை அறிய வேண்டுமென்றார். ஹெகல் அவ் வாதத்தை ஒப்புக்கொள்ளவில்லை. முரண்பாடுகள் உண்மையை அறிந்து கொள்வதைத் தடுக்கவில்லை. மாறாக, உண்மையை அறிந்து கொள்வதற்கு முரண்பாடுகள் மிகத் தேவையானவை. முரண்பாடுகளின்றி முன்னேற்றம் கிடையாது என்கிறார். இவ்வாறாக ஹெகல் ஒரு புதுமையான கூட்டுவாத முறையை (Synthetic logic) கண்டுபிடித்தார். மேலும் முரண்பாடுகள் பற்றிக் கூறுகையில் இம் முரண்பாடுகளுக்குத் தீர்வு கண்டு மெய்க்கருத்தைக் கண்டு பிடிப்பது மனிதனல்லன். இயல்பு, எதிர்மறை இயல்பு இவைகளிலிருக்கும் பகுத்தறிவு சக்தியே இம்முரண்பாடுகளை நீக்கி வளர்ச்சிக்கு உதவுகிறது. எனவே, முரண்பாடுகள் தாமே வளரும் ஒரு வழிமுறையாகும் என்கிறார். மெய்க்கருத்து உலக வரலாற்றின் வாயிலாகப் படிப்படியாகத் தொடரும் வளர்ச்சி முறை. இந்த வளர்ச்சி முறையை விளக்குவதே முரண்பாட்டு விளக்க வாத முறைக் கோட்பாடாகும். எண்ணங்கள், நிறுவனங்கள் சிறிது சிறிதாக வளர்ந்து ஓர் எல்லையை அடைந்ததும் அவைகளுடைய இயல்பே திடீரென மாறி விடுகின்றன. எங்ஙனம் தண்ணீர் கொதி நிலையை அடைந்து கொதித்துக் கொண்டே வந்து திடீரென நீராவியாக மாறி விடுகிறதோ அங்ஙனமே இவைகளும் மாறி விடுகின்றன. இம்மாதிரியான மாற்றங்கள் திடீரென ஏற்படுவதால் பழைய முறைகள் மாறிப் புதியவைகளாகும்போது குழப்பங்கள் ஏற்படலாம். இவற்றைப் பார்க்கும்போது மாற்றங்கள் உயர்நிலைக்குத்தான் என்னும் விதியைச் சந்தேகிக்கத் தோன்றும்.

அதற்கு ஹெகல் கூறும் விடை வெளித்தோற்றத்திற்குக் குழப்பங்களும், அழிவுகளும் காணப்பட்டாலும் பழையவற்றில் இருந்த அடிப்படைகள் அழியா. குழப்பங்கள் ஏற்பட்டாலும் மெய்மை உயர்வான பாதை நோக்கியே செல்லுகிறது. மக்களின் மகிழ்ச்சி இதனல் பாதிக்குமே என்ற கேள்விக்கு ஹெகல் கூறும் விடை, வரலாறு என்பது மகிழ்ச்சியின் அரங்கம் அன்று. அதில் மகிழ்ச்சியுடைய காலம் என்பவை வெற்றுத் தாள்களாக அதாவது சாதனைகளற்றவையாக இருக்கும் என்கிறர். ※

சுருங்கக்கூறின் அவரது முரண்பாட்டு விளக்கவாத முறை என்னவென்றல் மெய்க்கருத்தின் பகுத்தறிவான முன்னேற்றமே. இம் முன்னேற்றத்தில் மெய்க்கருத்து, முரண்பாடுகளின் ஊடே முடிவான எல்லையான தன்னைத்தானே முழுமையாக உணரத் தானகவே இயங்கிச் செல்கிறது. இதனல் வெளிப்படையில் பழைய முறைகள் மாறிக் குழப்பங்கள் மலிந்தாலும் இவை உயர்வுக்கான அறிகுறிகளே. அவரது கோட்பாடு பழைமை வாதத்திற்கு முக்கியத்துவத்தைக் கொடுத்தாலும் அடிப்படையாகப் புரட்சிகர மானதேயாகும்.

2. இலட்சிய நாடு அல்லது அரசைப் பற்றிய அவரது எண்ணங்கள்

அரசு என்பது என்ன? மக்கள் அதற்கு ஏன் கீழ்ப்படிய வேண்டும்? என்ற கேள்விகளுக்கு ஹெகல் விடையளிக்கையில் தன் குறிக்கோளை நோக்கி வளரும் மெய்க்கருத்தின் வளர்ச்சியே அரசின் வளர்ச்சியாகும் என்கிறர். அங்ஙனமாயின் மக்களின் விருப்பங்கள் அரசின் வளர்ச்சிக்கு எந்தவிதப் பங்கையும் அளிக்க வில்லையா என வினவினல் மக்களின் உணர்ச்சிகள், விருப்பங்கள் இவையன்றி உலகத்தில் எதையுமே சாதிக்க முடியாது என ஒப்புக்கொண்டு அவைகளும் முக்கியமானவைகளே என்று கூறுகிறர். எனவே, அரசு என்பதில் மெய்க்கருத்தின் வளர்ச்சி மட்டுமன்று; மக்களின் உணர்ச்சிகளும் பிரதிபலிக்கின்றன என்கிறர். ※

மெய்க்கருத்து பல வகைகளில் தன்னைத்தானே முழுவதும் உணர்வதற்காக முன்னேறுகிறது. அம் முன்னேற்றத்தில் பல

※ The history of the world is not the theatre of happiness. Periods fo hapiness are blank pages in it, for they are periods of harmony—deriods wher the antitheris is in abeyance — philosobhy of History — Hegel.

※ ......The First the Idea, the second the Complex of human possion; the one the warp, the other the woof of the vast arras—web of UNIVERSAL HISTORY—Hegel.

தோற்றங்களாக உருவெடுத்து ஜடப் பொருளாக இருந்த உலகத்திலிருந்து ஜீவராசிகள் நிரம்பிய உலகமாக முன்னேறுகிறது. செடி கொடிகள், மிருகங்கள் எனப் பலவகை உருவங்களை ஏற்படுத்திக் கடைசியில் மனித உருவத்தில் முடிகிறது. ஜீவராசிகளைப் பொறுத்தவரையில் படிப்படியாக வளர்ந்த மெய்க்கருத்தின் வளர்ச்சி முறை மனிதனுடன் முடிகிறது. மனிதன்தான் மெய்க் கருத்தினால் உண்டாக்கப்பட்ட உயர்ந்த ஜீவராசி. படிமுறை (Evolution) வளர்ச்சியாக ஜீவராசிகள் தோன்றியதில் மனிதனே கடைசி அத்தியாயம்.

இருந்தும் மனிதனால் தனியாக வாழ முடியாது. அவன் பிறரைச் சார்ந்தே வாழுகிறான். பிறரும் அவனைச் சார்ந்தே வாழ்கின்றனர். எனவே, மனிதனை, அவனைச் சார்ந்த மனிதர்களிடமிருந்தும் அவன் சார்ந்திருக்கும் அமைப்புகளிடமிருந்தும் பிரிக்க முடியாது. ஏனென்றால், இவைகள் அவனது தேவைகளைப் பூர்த்தி செய்வதால் மட்டுமல்ல அவைகள் அனைத்தும் மெய்க் கருத்தினால் முன்னேற்றத்தை நோக்கிச் செல்வதற்கு உண்டாக்கப்பட்டவையே. இவை அனைத்திலும் முதலில் தோன்றிய அமைப்பு குடும்பமே. குடும்பமே நாகரிகமற்றிருந்த மனிதனின் எளிய தேவைகளைப் பூர்த்தி செய்தது. தனி மனிதனைவிட அவனது குடும்பமே அவனுக்குத் தன்னிறைவைத் தந்ததால் அவனைவிட அவன் குடும்பமே முழுமையானது. இதை இயல்பு என அழைக்கலாம். இதிலிருந்து ஹெகல் அரசின் வளர்ச்சியைப் பற்றி ஆராய முனைகிறார். குடும்பம் தனிமனிதனைவிட அதிகமாக அவனது தேவைகளைப் பூர்த்தி செய்தாலும் அவனது தேவைகளைக் குடும்பம் மட்டுமே சரிவரப் பூர்த்தி செய்வதில்லை. மேலும் குடும்பத்தில் குழந்தைகள் பெரியவர்கள் ஆனதும் வெளி உலகிற்குச் செல்கிறார்கள். இவ்வாறாகக் குடும்பங்கள் பெருகிச் சமூகமாகிறது. (Bourgeois Society). இதை எதிர்மறை இயல்பு என அழைக்கிறார். குடும்பத்தின் அங்கத்தினர்கள் ஒருவரை ஒருவர் தம்மிலிருந்து மாறுபட்டவராக நினைக்காமல் தம்மைப்போல் மற்றவரையும் எண்ணுகின்றனர். இயல்பான குடும்பத்தின் வளர்ச்சியினால் உண்டாக்கப்பட்ட எதிர்மறை இயல்பான சமூகம் பலதரப்பட்ட சுயேச்சையான குடும்பங்களைக் கொண்டது. இக் குடும்பங்களுக்குள் இருக்கும் உறவு சுயநலம் வாய்ந்ததே. குடும்பத்தினுள் அதன் அங்கத்தினர்கள் அன்பு, பாசம் இவைகளால் பிணைக்கப்படுகின்றனர். ஆனால், குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் உள்ள பிணைப்பு சுயநலத்தை அடிப்படையாகக் கொண்ட ஒப்பந்தம் போன்ற தன்மையுடையதே. இங்குப் போட்டி மனப்பான்மையே தோன்றும். ஒரு குடும்பத்தைப் போன்று பல குடும்பங்களைக் கொண்ட சமூகம் சிறப்பான அமைப்பாக இல்லாவிட்டாலும்

குடும்பத்தைப் போலவே சமூகமும் காரணத்தோடு தோன்றிய ஓர் அமைப்பே. மனிதர்களின் ஏனைய தேவைகளான வாணிபம், மற்றும் ஏனைய தொழில்கள் சமூகத்தினுல் வளர்க்கப்பட்டு ஒரு புதிய அமைப்பாகிறது. எனவே, ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய குடும்பத்திற்காக மட்டும் உற்பத்தித் தொழிலேயோ,அல்லது வேறு தொழிலேயோ செய்வதில்லே. சமூகத்திற்கும் சேவை செய்கிருன். இவ்வாருக சமூகம் காரணத்தோடு கூடிய உலகளாவிய முக்கியத் துவத்தை அடைகிறது. இச் சமூகம் வளர வளரச் சட்டங்கள், காவல்படை போன்றவை தோன்றி அரசாக மாறுகிறது. சமூகத்தின் அங்கத்தினர்கள் முதலில் தன்னல மனப்பான்மை யுடையவர்களாக இருந்தாலும் சமூகம் ஒரு நிலேயில் அரசாக வளர்ந்ததும் இவர்களின் போட்டி மனப்பான்மை மாறி, ஒத்துழைக்கும், கூட்டுறவு மனப்பான்மை வளர்கிறது. ஒற்றுமை யோடு கூடிய இயல்பான குடும்பம் வளர்ந்து ஒற்றுமையற்ற எதிர்மறை இயல்பான சமூகம் தோன்றிப் பிறகு அரசான கூட்டிணைப்புத் தோன்றுகிறது.

இக் கூட்டிணைப்பில் இயல்பில் இருந்த நல்லவைகளும் போற்றப்படுகின்றன. எதிர்மறை இயல்பிலிருக்கும் நல்லவை களும் காப்பாற்றப்படுகின்றன. இந்த இரண்டில் எதுவுமே ஒன்றை ஒன்று வெற்றி கொள்ளவில்லே. மாருக, ஒற்றுமையும், ஒருங்கிசைவும் கொண்ட அரசாகிறது. இவ்வரசு, குடும்பத்தையும் சமூகத்தையும்விட உயர்வானது; முழுமையானது. இதில் தனி மனிதன் தன்னுடைய விருப்பத்தை எல்லோருடைய விருப்பங் களுடனும் எல்லோருடைய விருப்பங்களேத் தன்னுடைய விருப்ப மாகவும் ஐக்கியப்படுத்தி முழுமையான அரசுடன் ஒன்றிணைத்து விடுகிருன்.

அரசின் பண்பாடுகள்:

அரசு தெய்வீகத் தன்மை உடையது என்று கூறினுல் அது மிகையாது. பல வருடங்களாகத் தொடர்ந்து முன்னேறும் மெய்க் கருத்தின் மிக உயர்வான உருவாக்கமே அது. அதைப் பற்றிக் கூறும் பொழுது ஹெகல் தெய்வீக மெய்க்கருத்து உலகில் இருப்பது மண்ணுலகில் கடவுள் செல்லும் வழியாகிறது என் கிருர். ※

மேலும் மெய்க்கருத்தின் மிக மேன்மையான உருவாக்கமட்டு மன்று அரசு; உலகில் அதுவே முடிவான உருவாக்கமாகும்.

※ '......the Divine Idea as it exists on earth.........the march of GOD on earth'—Hegel.

எங்ஙனம் ஜீவராசிகளின் படி முறை வளர்ச்சியில் (Evolution) மனிதனே கடைசிப்படியாக இருத்தல்போல் ஆன்மீக இயலின் கடைசிப் படி அரசே. அரசு பல அங்கங்களால் அல்லது பகுதிகளால் உண்டாக்கப்பட்டாலும் அப் பகுதிகளைவிட அரசே முக்கியத்துவமானது; முழுமையானது. அரசை விட்டு அதன் அங்கங்களைப் பிரித்தால் அங்கங்களுக்கு மதிப்பில்லை. எங்ஙனம் ஒரு ஜீவராசியிலிருந்து அதன் அங்கங்களைப் பிரித்தால் அங்கங்கள் முக்கியத்துவத்தை இழக்கின்றனவோ அங்ஙனமே அரசின் அங்கங்களான மனிதர்களைத் தனித்தனியாகப் பிரிக்க முடியாது. அவர்கள் முழுமையான அரசிற்குக் கீழ்ப்பட்டவர்களே. அரசிற்கே தனி மனிதர்களின் உரிமை அனைத்தும் சாரும். அரசின் அங்கத்தினர்களாக இருப்பது அவர்களது முக்கிய கடமை. அரசை விட்டுப் பிரிந்து செல்லுதல் கிடையாது. அப்படிப் பிரிந்தால் அவர்கள் எல்லா முக்கியத்துவத்தையும் இழந்து விடுகின்றனர்.

இவ்வரசை எவ்வித அறநெறி முறைச் சட்டங்களும் கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில், அச் சட்டங்களை ஏற்படுத்துவதே அரசுதான். எங்ஙனம் என்றால் அதன் உள்நாட்டு விவகாரங்களையும் வெளிநாட்டு உறவு முறைகளையும் ஆராய்ந்தால் இது புலனாகும். முதலாவதாக உள்நாட்டு விவகாரங்களில் குடிமக்களின் ஒழுக்க முறைகள் என்ன என்பதைத் தெளிவுபடுத்துவது அரசே. அரசு கட்டளையிடும் நெறிமுறைகள் மனச்சாட்சிக்கு விரோதமாக இருந்தால் அந்நெறி முறைகளைக் கடைபிடிக்கலாமா என்ற கேள்விக்கு ஹெகல் தரும் பதில், எது சரியோ அதை மட்டும் செய்யச் சொல்லி மனச்சாட்சி தூண்டலாம். ஆனால், எது சரி எது தவறு என்று கண்டு பிடித்துச் சொல்லுவது மனச்சாட்சி அன்று. வழிவழியாக வரும் சமுதாயத்தின் மரபுகளே இவைகளை உணர்த்த வேண்டும். இவைகளே கடந்த காலத்தின் அறிவுக் களஞ்சியங்கள் என்கிறார். இம் மரபுகளைத் தெளிவுடன் விளக்குவது அரசே; எனவே, அரசே நல்லவை எவை தீயவை எவை என விளக்கும். அரசு என்ன செய்தாலும் அரசு சரியே. சில சமயங்களில் அரசு செய்யும் காரியங்களில் குற்றமற்றவர்கள் துன்புற நேர்ந்தால் அதைத் தடுக்க முடியாது. ஏனெனில், அவ்வளவு பெரிய வடிவம் தன் முன்னேற்றப் பாதையில் செல்லும் பொழுது ஒன்றுமறியாத மலர்களையும் பொருட்களையும் மிதித்து விடுவதைத் தடுக்க முடியாது என்கிறார். ※

அரசு ஏனைய அரசுகளுடன் கொள்ளும் உறவு முறையை

※ 'So mighty a form must tvample down many an innocent flower it must cruch to piecers many an obyect in its path.'

விளக்குகையில் ஹெகல் என்ன கூறுகிறார் என்றால் அரசு தன்னுடைய பாதுகாப்பைக் காப்பதே அதன் முதல் கடமையே தவிர, இதைத் தவிர வேறு கடமை எதுவும் கிடையாது. எனவே, தன்னுடைய நல்வாழ்வைக் காப்பதிலேயே அது முக்கிய கவனம் செலுத்த வேண்டும். எனவே, வெளிநாட்டு உறவு முறைகள் என்பவை தங்களுடைய நல்வாழ்க்கையையே முக்கியமாகக் கருதும்சுயேச்சை நாடுகள் கொள்ளும் உறவே. எனவே, ஒவ்வோர் அரசும் தன்னலத்தையே முதன்மையாகக் கருதவேண்டும். ஓர் அரசு பிற நாடுகளின் நன்மைக்காகத் தன்னலத்தை விட்டுக் கொடுப்பதை மிகப் பாவமாகக் கருதுகிறார். ஓர் அரசு தன்னலத்தையே முக்கியமாகக் கருதி விஷயங்களில் பிற அரசுடன் ஒரு முடிவைக் காணமுடியாமல் போனால் போர் மூலமாகத்தான் இச் சிக்கலைத் தீர்க்க முடியும் என்கிறார்.

போரைப் பற்றிக் கூறும் பொழுது அதை ஒரு கொடுமை என்று கருதக்கூடாது என்கிறார். மனித இனம் முழுவதும் அன்பினால் பிணைக்கப்பட வேண்டும் என்ற கூற்று சுவையற்ற கற்பனை என்கிறார். அவரைப் பொறுத்தவரை போர் புரிதல் ஒரு சிறப்பான காரியமேயாகும். நிலையான அல்லது நீண்டகால அமைதியுடைய நாடுகளில் முன்னேற்றம் இல்லை. மாறாக, சீரழிந்து போகின்றன. வெற்றிகரமான போர்கள் மூலமே அரசின் வலிமை அதிகரிக்கிறது. இவ்வாறு ஓர் அழிக்கும் தன்மையுடைய போரை உயர்வுபடுத்துவது விரும்பத்தக்கதாக இல்லா விட்டாலும் அவருடைய பொதுவான தத்துவவாத முறையின் அனுமானமே (Deduction) யாகும். உலகிலுள்ள பல நாடுகளில் ஒவ்வொரு நாடும் ஓர் உட்கருத்தைக் கொண்டதாக உள்ளது. வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு நாடுகள் முதன்மை நிலையை அடைந்து மெய்க்கருத்தின் வளர்ச்சிக்கு உதவுகிறது. உலகில் பல நாடுகள் இருத்தல் அவசியம். ஒரே நாடாக இருந்தால் இதைச் செய்ய முடியாது. நாடுகள் ஒன்றுக்கொன்று மோதி அதில் வெற்றிக் கொள்ளும் முதன்மையான நாடுகள் எவையோ அவையே மெய்க்கருத்தின் முழுமை நிலையை நிறைவேற்ற உதவுகிறது. எனவே, உலக வரலாற்றில் போர்கள் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஹெகலுக்குப் பூசல்கள் கொண்ட நாடுகள் சமாதான முறையில் அவைகளைத் தீர்த்துக் கொள்ளலாமா என்ற பிரச்னைக்கு இடமேயில்லை.

இவ்வாறாக அரசு தெய்வீகத் தன்மை வாய்ந்தது. அதுவே ஒரு முடிவாகும். அதன் கூறுகளைவிட அதுவே முக்கியத்துவம் வாய்ந்தது. ஒழுக்கமுறை என்ன என்பதை நிர்ணயிக்கிறது.

ஆனால், அது எந்தக் கட்டுப்பாட்டிற்குள்ளும் அடங்காது. அரசிற் குள்ளேயே மனிதன் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக் கிறான். அரசில்லாவிட்டால் அவன் கீழான நிலையை அடை கிறான். ஆனால், அதே சமயம் அரசின் சிறப்பு எதில் அடங்கி யுள்ளது என்றால் மனிதர்களுக்கு அதிக சுதந்திரத்தைத் தருவதில் தான் உள்ளது. எனவே, அக்கால கிரேக்கர்கள் அடிமைத் தனத்தை ஆதரித்ததை ஹெகல் குறை கூறுகிறார். சுதந்திரம் என்று ஹெகல் கூறுவது எத்தகைய சுதந்திரம் என்றால் அரசின் சட்டங்களுக்கு முழுமையான சம்மதத்துடன் கீழ்ப்படிதலையே உண்மையான சுதந்திரம் என்கிறார். அச் சட்டங்களை மனிதன் மேல் திணித்தால் அது அவனது சுதந்திரத்தைப் பாதிக்காதா என வினவினால் இல்லை என்கிறார். அவனது உண்மையான சம்மதம் எது என்றால் காரண அறிவுடன் கூடிய மெய்க்கருத்து எதைக் காட்டுகிறதோ அதுதான் என்கிறார். இதை அரசினுள்தான் காண முடியும். எனவே, அரசின் கட்டளைகளே அவனது உண்மையான சம்மதமாகும். இக் கட்டளைகளே தன்னுடைய உண்மையான சம்மதம் என்று புரிந்துகொண்டு கீழ்ப்படிந்து நடந்தால் அவன் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கிறான். அப்படியின்றி அரசின் வலிமைக்குப் பயந்துகொண்டு சட்டங்களை மீறினாலோ தண்டனை கிடைக்குமே என்று பயந்து கொண்டு கீழ்ப்படிந்தாலோ அவன் அடிமைக்கு ஒப்பாவான்; சுதந்திரமானவன் அல்லன். சுருங்கக் கூறின் சுதந்திரம் என்பது ஹெகலுக்கு என்னவென்றால் நாட்டின் சட்டதிட்டங்களுக்குத் தானாக விரும்பிக் கீழ்ப் படிதலே. இவருடைய கருத்துகள் ரூஸோவின் பொதுச் சம்மதத் தையே நமக்கு நினைவூட்டுகின்றன.

இவர் விவரிக்கும் இலட்சிய அரசு இருந்து வரும் அரசுகளே யாகும். அவை மெய்க்கருத்தின் வடிவங்களே யாதலால் அவையே தனிமனிதர்களைவிட உண்மையானவை. எனவே, நியாயமற்றது என்ற காரணத்தைக் கொண்டு தனிமனிதர்கள் அரசை எதிர்க்கக் கூடாது.

சுருங்கச் சொல்லின், அரசை ஹெகல் இவ்வாறாக ஒரு ஜீவராசியுடன் ஒப்பிடுகிறார். அது இயற்கையாக வளருகிறது. அதன் கூறுகளாகிய மனிதர்கள் பிரிக்க முடியாதபடி அத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். எனவே, இது ஒரு முழுமையாகும். இம் முழுமையிலிருந்து கூறுகளைப் பிரித்தால் அவை அர்த்த மற்றவைகளாகிவிடும். இதுவே ஒரு முடிவாகும். வேறு எதனுடைய நன்மைக்காகவும் அரசு இருக்கவில்லை. அது வளர்வது அதன் நன்மைக்காகத்தான். இதற்கு ஏன் கீழ்ப்படிய வேண்டு

மெனக் கேட்டால் அது அர்த்தமற்ற கேள்வி. நம் கை ஏன் நம் சொற்படி நடக்க வேண்டும் என்ற கேள்வி எவ்வளவு அர்த்தமற்றதோ அவ்வளவு அர்த்தமற்றதாகும். எங்ஙனம் நம்முடைய கை நம் விருப்பப்படி நடக்காவிட்டால் அது உண்மை யான கையாகாதோ அப்படியே தன் அரசிற்குக் கீழ்ப்படிந்து நடக்காவிட்டால் அதனுள் வாழும் மனிதர்கள் உண்மையான மனிதர்கள் ஆகமாட்டார்கள்.

ஹெகலின் செல்வாக்கு

ஹெகலின் தத்துவம் அரசியல் வாழ்க்கையில் ஏற்படுத்திய செல்வாக்கைப்போல் வேறு எந்த தத்துவமும் ஏற்படுத்தவில்லை என்று சொல்லலாம். அவருக்கு முன்பிருந்த தத்துவ எழுத் தாளர்கள் தங்களது கோட்பாடுகளினுல் அரசியல் சிந்தனைகளின் போக்கைத்தான் முடிவு செய்தார்களே தவிர அரசியல் வாழ்வில் எத்தகைய பெரும் திருப்பத்தையும் ஏற்படுத்தவில்லை. நடைமுறை அரசியல் வாழ்வில் இவருடைய எழுத்துகள் பெரும் விளைவுகளை ஏற்படுத்தின என்று கூறினுல் அது மிகையாகாது. ஒவ்வொரு மக்களுக்கும் ஒரு தனிச் சிறப்பு இருக்கும். ஒவ்வொரு மக்களுக் கும் ஒருவித நிறுவனங்கள், அமைப்புகள், பொருத்தமாக இருக்கும். ஒரு மக்களின் அமைப்புகள், நிறுவனங்கள் இவைகளை மற்ருெரு வகையினருக்குத் திணிக்கக் கூடாது. சில அரசுகள் வீரியமிக்கவையாயும், சில அரசுகள் குறைவான வீரியம் உள்ள வையாயும் இருக்கும் போன்ற பாடங்கள் 19ஆம் நூற்ருண்டு தேசீய உணர்வை வளர்த்தன. மேலும் அரசுகள் வலிமைமிக்க தாக வேண்டும். தன் நலனையே வெளிநாட்டு விவகாரங்களில் முதன்மையாக அரசு கருத வேண்டும் போன்ற கருத்துகள் பாஸிஸ நாஸிஸ, கோட்பாளர்களுக்கு மிக்க வளர்ச்சிகரமாக இருந்தது. அவர்களது தீவிர தேசீய உணர்வு வெளிநாட்டு உறவு களில் எவ்வித கொள்கையோ பண்பாடோ பின்பற்ருமை, போர் புரிவதை உயர்த்துவது, அரசின் ஆதிக்கத்தில் நம்பிக்கை ஆகிய இக் கொள்கைகள் அனைத்தும் ஹெகலின் மூலமாக நேரடியாகக் கிடைத்தவையே. எனவே, ஹெகலின் செல்வாக்கு நாஜிஸ, பாஸிஸமாக முடிந்தது எனக்கூறலாம். மேலும் மார்க்ஸ் ஏங்கல்ஸ் மூலமாகவும் மறைமுகமாக லெனின் ஸ்டாலின் வழியாகவும் ரஷ்யாவைப் பாதித்தது. மார்க்ஸ், ஹெகலின் கருத்துகளில் குறைகள் இருப்பதாக அபிப்பிராயப்பட்டாலும் ஹெகல் தம் தத்துவத்தில் பெரும் கருத்துகளைச் சிறந்த வாதமுறையில்தருகிருர் என்று ஹெகலை மார்க்ஸ் பாராட்டுகிருர். ஹெகலின் தத்துவத் தின் அடிப்படையில் எழுந்த நாஜிஸ ஜெர்மனி, பாஸிஸ இத்தாலி ஆகியவை வீழ்ந்தாலும், கம்யூனிஸ ரஷ்யா இன்னும் முதன் மையான உதாரணமாகத் திகழ்கிறது எனலாம்.

அவர் தத்துவத்தில் உள்ள சிறப்புகளும் குறைபாடுகளும்

இவரது தத்துவம் நிலையான வளர்ச்சியில் நம்பிக்கையற்ற தன்மையுடையது அன்று. ஒவ்வொரு படியாக மெய்க்கருத்து பகுத்தறிவை நோக்கி முன்னேறுகிறது என்று கூறுகிறார். எனவே, வளர்ச்சியில் நம்பிக்கை கொண்ட புரட்சிகர தத்துவம் இது என்று கூறலாம். மேலும், மனிதன் அரசைச் சார்ந்து வாழ்கின்றான் என்று கூறுகிறார். அவன் எப்படி அரசைச் சார்ந்து வாழ்கின்றான் என்பதைச் சரியாகச் சுட்டிக்காண்பிக்கிறார். மேலும் மனிதனின் சுதந்திரங்களைப் பற்றிக் கூறும்பொழுது அவன் வளர்த்திருக்கும் நிறுவனங்கள், அமைப்புகள் இவற்றைப் பொறுத்தும், அவ்வமைப்புகள் இவனுக்குக் கற்றுத்தரும் கல்வியைப் பொறுத்தும் சுதந்திரம் இருக்கிறது என்கின்றார். இது ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்தாக உள்ளது.

இத்தகைய சிறப்புகள் இருந்தும் இவருடைய தத்துவத்தினுடைய குறைபாடுகள் ஏராளம். அவருடைய முரண்பாட்டு விளக்கவாத முறை அவர் கூறிக் கொள்வதைப்போல் விஞ்ஞானத் தன்மையை உடையதாக உள்ளதா என்பது சந்தேகம் தான். எந்த நிகழ்ச்சியிலும் அல்லது எந்த வரலாற்று நிகழ்ச்சியிலும் இம்மாதிரி இயல்பு, எதிர்மறை இயல்பு இவை இருப்பது சாதாரணமே. மேலும் எதிலுமே சுலபமாக முரண்பாடுகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டிவிட முடியும். இவற்றை வைத்துக் கொண்டு இவைதாம் உலக இயற்கையில் காணப்படும் முரண்பாட்டு முறைகள் எனக்கூறிவிட்டு அதற்கு அவர் கூறும் விளக்க முறைகள் விஞ்ஞான ரீதியாகவும் இல்லை. வியக்கத்தக்க அளவாகவும் இல்லை. மேலும் விஞ்ஞானத்தின் குறிக்கோள் புறப்பொருள் உண்மைகளைக் கண்டறிவதே என்கிறார். அரசு இவ் வுண்மைகளைக் காக்கவேண்டுமென்கிறார். பிறகு எது புறப்பொருள் உண்மை என்பதை அரசுதான் முடிவு செய்ய வேண்டும் என முடிக்கிறார். எனவே, இருந்த சிறிதளவு லிபரலிச கொள்கையும் இருந்த இடம் தெரியாமல் மறைகிறது. சுதந்திரத்தின் அவசியத்தை உயர்வாகக் கூறிவிட்டு, சுதந்திரம் என்பது அரசிற்குக் கீழ்ப்படிவதே என்றும், சமத்துவத்தைப் பற்றி மதிப்புடன் கூறிப் பிறகு கட்டுப்பாட்டிற்கு இணங்குவதே சமத்துவம் என்றும் கூறுகிறார். மனிதர்களின் தனித் தன்மையின் உயர்வைக் கூறிவிட்டு மனிதர்களை அரசு என்னும் ஆதிக்கத்தின் கீழ்ப் பிரிக்கவொட்டாத உறவாகச் சேர்த்து அவர்களை வெறும் கும்பல்களாக்கி விடுகிறார். எனவே, அவரது சுதந்திரம், சமத்துவம், தனித் தன்மை போன்ற மந்திர வார்த்தைகள் கடைசியில் எதிர்மாறான பொருளைத் தந்து சோர்வை உண்டுபண்ணுகின்றன.

அரசு எவ்வளவுதான் அறிவு வளர்ச்சிக்கு அத்தியாவசியமான தாகவும் அமைதியை நிலைநாட்டக் கூடியதாகவும் இருந்தாலும் மனித வாழ்விற்கு அவசியமான ஓர் அமைப்பாக இருந்தாலும் அதற்காக அதைக் கடவுளுக்குச் சமமாக நினைக்கக் கடினமாக இருக்கிறது. மேலும் மதங்களையும் நாட்டில் அவற்றின் பங்கை யும் அவர் ஒரேயடியாக ஒதுக்குவது சரியில்லை. காரண அறிவு ஒன்றுதான் அரசை வளர்க்கிறது என்பதும் சரியில்லை. காலம் காலமாகச் சிறப்பும் நாகரிகமும் பெற்று வளர்ந்த சமூகங்கள் சிலர் ஆட்சியின் கீழ் வரும்போது எங்ஙனம் அச் சிறப்புகள் அனைத்தும் சிதறடிக்கப்படுகின்றன என்பதற்கு வரலாறே சாட்சி யாக உள்ளது. தற்கால அரசியல் முறைகளின்படி அரசின் அதிகா ரங்களைக் குவிப்பதைவிடக் குறைப்பதே மேல் என்னும் எண்ணங் களுக்கு முன் ஹெகலின் தத்துவம் எடுக்காது. மேலும் அரசுகள் ஒன்றுக்கொன்று கடும் போர்கள் புரிந்து அதன் மூலமாக உலகம் முன்னேறும் என்னும் கருத்து இவ்வணு உலகத்தில் உலகத்தையே அழிக்கும் ஒரே வழியாகும். தனிமனிதனை ஹாப்ஸின், லெவியா தன் போன்ற அரசிற்கு ஹெகல் அர்ப்பணிக்கிறார்.

தாமஸ் ஹில் க்ரீன் (1836-1882)

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த தாமஸ் ஹில் க்ரீன் என்னும் அரசியல் சிந்தனையாளரும் ஹெகலைப் போலவே பல்கலைக் கழகப் பேராசிரியராகத் திகழ்ந்து தம் வாழ்நாள் முழுவதையும் கற்றறிந் தோரிடம் செலவழித்தார். ஹெகலின் சீடர் என இவர் சிலரால் அழைக்கப்படுகிறார். தம்மைப் பொறுத்தவரையில் அவர் அப்படிக் கருதாவிட்டாலும், அவரது சில கருத்துகள் ஹெகலின் கருத்து களுடன் மிக ஒத்துக் காணப்படுகின்றன. இவர் ஹெகலைப் பின் பற்றினார் என்று கூறுவதைவிட 'காந்தி' (Kant)ன் கருத்து களையே பின்பற்றினார் என்று கூறுவது முற்றிலும் பொருந்தும் என மேக்ஸி (Maxey) கூறுகிறார். இவர் 1836ஆம் ஆண்டு யார்க் ஷையரில் உள்ள 'பர்கின்' என்னும் ஊரில் பிறந்தார். இவருடைய தந்தை திருச்சபைப் பாதிரியாக இருந்துவந்தார். இவர் ஆக்ஸ் போர்டு பல்கலைக்கழகத்தில் படித்தவர். இவரது முக்கிய படைப்பு கள் (1) அறநெறிகளுக்கு முன்னுரைகள் (Prolegomena to ethics), (2) அரசியல் கடமைகளின் கொள்கைகளைப் பற்றிய விரிவுரைகள் (Lectures on the principles of political obligation) ஆகியவையா கும். இவர் 1882ஆம் ஆண்டு தம்முடைய 46-வது வயதிலேயே காலமானார். இவரது புத்தகங்கள் இவர் இறந்த பிறகே வெளி வந்தன. இருந்தும் இவர் தம் வாழ்நாளில் தமது விரிவுரைகளா லும், சொற்பொழிவுகளாலும் எல்லோரையும் கவர்ந்து பெரும்

புகழை எய்தியிருந்தார். அப் புகழுடன் அவரது இறப்பிற்குப் பின் வெளிவந்த அவரது புத்தகங்கள் அவரது புகழை மேலும் அதிகரிக்கச் செய்தன.

க்ரீனின் சிந்தனைகளைத் தெளிவாக அறிவதற்கு முன்பு அவர் காலத்தில் இங்கிலாந்தில் எத்தகைய அரசியல் கோட்பாடுகள் மக்களிடையே மதிப்புப் பெற்றிருந்தது. பென்தமின் பயன்கருது கோட்பாடு 19ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் மக்களை மிகக் கவர்ந்தது. பென்தமின் கோட்பாட்டின் அடிப்படைக் கொள்கையான, மக்களது விவகாரங்களில் அரசு தலையிடக் கூடாது, அரசு எவ்வளவுக்கெவ்வளவு குறைவாக மக்களது வாழ்வில் தலையிடுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு மக்களின் சுதந்திரங்கள் பெருகி மகிழ்ச்சியும் பெருகும் போன்ற தனித் தன்மைக் கொள்கைகள் மக்களிடையே பெரும் மதிப்பைப் பெற்றிருந்தது. 1830ஆம் ஆண்டிலிருந்து இங்கிலாந்தில் தனியார் உரிமைக் கொள்கை எல்லா அரசியல் சட்டங்களிலும் முதன்மை இடத்தை வகித்தது. ஆனால், 1870ஆம் ஆண்டிலிருந்து ஆங்கிலச் சட்ட அமைப்பில் ஒரு பெரும் திருப்பம் ஏற்பட்டது. அதாவது மக்கள் கூட்டம் முழுமைக்கும் நன்மைகளை அரசு தரவேண்டுமென்றால் ஒருசிலரது உரிமைகள் பாதித்துத்தான் ஆகும். இச் சமயங்களில் சிலரது உரிமைகள் பாதிக்கப்பட்டாலும் மக்கள் கூட்டம் முழுமைக்கும் தரக்கூடிய நன்மைகளை யோசித்து அவற்றைப் பாதுகாக்க வேண்டும். மேலும் ஆர்னல்டு (Arnold) போன்றோர், சமூகத் தீமைகளை அரசுதான் தலையிட்டுத் தடுக்கமுடியும். மக்களின் விவகாரங்களில் அரசு தலையிடக்கூடாது; அவரவர்கள் தங்கள் தங்களது நலன்களைப் பிறரைப் பாதிக்காதவகையில் தங்களைப் பார்த்துக்கொள்ளவேண்டும் என்பன போன்ற கருத்துகள் அரசியல் ஞானம் என்னும் போர்வையில் ஒளிந்திருக்கும், மக்களது சுயநலத்தை வளர்க்கும் ஒரு பொய்மைக் கோட்பாடு என எண்ணத்தலைப்பட்டனர். கார்லைல் (Carlyl) போன்றோரும், மக்கள் சாதாரண சுயநலங்களைத் தேடுவதை விட்டுச் சிறந்த பொதுநலன்களைத் தேடவேண்டுமென்றும், உண்மையான சுதந்திரம் என்பது சரியான பாதையை மக்கள் தேடுவதேயாகும். அப்படி அவர்கள் தேடாவிட்டால் அவர்களை அரசு தேட வைக்க வேண்டும் என எண்ணினர். இத்தகைய கருத்துகள் இங்கிலாந்தில் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் எல்லோரையும் திடுக்கிட வைக்கக்கூடியதாகவும், வெறுக்கக்கூடியதாகவும், இருந்தாலும் 1870ஆம் ஆண்டிற்கு மேல் இத்தகைய கருத்துகள் எவ்வித எதிர்ப்புமின்றிச் சாதாரணமாகவே மக்களால் ஏற்கப்பட்டன. இதிலிருந்து அப்பொழுதிலிருந்த மக்களின் மனநிலை பிரதிபலிக்கிறது என்லாம். மேலும் தலையிடாத் தத்துவத்தில் நம்பிக்கையிழந்த

மக்களை ஹெகலின் தத்துவம் கவர்வதற்கான சந்தர்ப்பத்தை அளித்தது. ஆனால், ஹெகலின் தத்துவத்தின் முழுக் கருத்தும் ஆங்கிலேய மனப்பான்மைக்கு ஏற்றுக்கொள்ள ஒவ்வாதிருந்தது. எனவே, ஆங்கிலேய மனப்பான்மைக்கு ஏற்ற வகையில் ஹெகலின் தத்துவத்தை மாற்றி அமைத்துக்கொடுக்கும் பொறுப்பைக் க்ரீன் மேற்கொண்டார். அவருடைய கொள்கைகளை விரிவாகப் படிக்குமுன், அவர் தத்துவத்தில் ஹெகலின் கருத்துகள் என்னென்ன காணப்படுகின்றன என்றும், பிறகு அவர் ஹெகலின் கருத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகிறார் என்றும் பார்ப்போம்.

க்ரீனின் கருத்துகளில் ஹெகலினிஸம்

ஹெகலைப் போலவே க்ரீனும் காரண அறிவு (Reason) அல்லது தெய்வீக உணர்வு (divine spirit) என்று ஒன்று இருப்பதாக முழு மனதாக நம்பினார். இவ்வுண்மையை ஹெகல்தான் நமக்குக் கற்றுத் தருகிறார் என்கிறார் க்ரீன். இத்தகைய தெய்வீக உணர்வு அல்லது காரண அறிவு தன் குறிக்கோளான முழு மெய் உணர்வை நோக்கி வளருகிறது. எனவே, வரலாற்றின் வளர்ச்சி க்ரீனுக்கும் ஹெகலைப் போலவே தன்னுணர்வுடன் சீராக வளர்ந்துவரும் தெய்வீக உணர்வின் வளர்ச்சியாகும். இது முழு வளர்ச்சி அடைந்ததும்தான் மெய்யுணர்வு (reality) என்று அழைக்கப்படுகிறது. இதுவே மிகச் சிறந்ததும், இலட்சியமும் ஆகும். ஹெகலைப் போலவே க்ரீனும் எல்லா அமைப்புகளும் — அதாவது கூட்டமைப்புகள் அனைத்தும் தெய்வீக உணர்வின் வடிவங்களே என்கிறார். மேலும் தெய்வீக உணர்வினால் ஏற்கப்படும் புதுப்புது வடிவங்கள் அனைத்தும் அதன் முந்தையப் படியை விட ஒருபடி மேலான முன்னேற்றம் என்கிறார். எனவே, தெய்வீக உணர்வு வரலாற்றின் வழியாகப் படிப்படியாக முன்னேறி வருவது அதன் பிந்தைய படிகளை விடச் சிறப்பானது என்கிறார். எடுத்துக்காட்டாக, குடும்பத்தை விடச் சமூகம் சிறந்தது. சமூகத்தை விட அரசு சிறப்பானது. இவர் ஹெகலைப் போலவே தெய்வீக உணர்விற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. மனித உணர்ச்சிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார். தெய்வீக உணர்வின் வடிவங்களில் மனிதர்களும் ஒரு பகுதியே என்றும், ஆனால், சில சமயங்களில் சில பெரிய மனிதர்கள் வரலாற்றின் இயக்கிகளாக (Agents) இருக்கின்றனர் என எண்ணினார். எடுத்துக்காட்டாக, ரோம் நாட்டுப் பேரரசை உருவாக்கிய 'சீசர்' அதிகாரத்திற்கும் புகழுக்கும் ஆசைப்பட்டு, இப் பேரரசை உருவாக்கினாலும், அதன் விளைவாக அப் பேரரசு ரோம் நாட்டுச் சட்டங்களைத் (Roman law) தந்தது. எனவே, மனிதனின் உண்மை நிலை என்ன என்பதை அவரிடமிருந்த தெய்வீக உணர்வு வெளிப்படுத்தியது. மேலும், ஹெகலைப்

போலவே க்ரீனும் தெய்வீக உணர்வின் முழு வடிவமே அரசு என்கிருர். தெய்வீக உணர்வின் முழு வடிவான அரசே மனிதனுள் இருக்கும் காரண அறிவின் முழுச் சிறப்பையும் உணர உதவுகிறது. எனவே, அரசின் உதவியின்றி மனிதன் தன் உண்மை நிலையை அடைய முடியாது. எனவே, அரசை மனிதனின் நேர்மையற்ற தன்மையின் விளைவினுல் உண்டாக்கப்பட்ட ஓர் அவசியமான தீவினை என எண்ணக் கூடாது. மாருக, அவனிடமுள்ள சிறப்பை மேலும் வளர்ப்பதற்கான ஓர் அமைப்பு என எண்ண வேண்டும். எனவே, அரசு எதற்கு என்ருல், மனிதனிடமுள்ள பேய்க் குணத்தைக் கட்டிப்போடுவதற்காக அன்று; அவனிடமுள்ள காரண அறிவை நன்கு வெளிக்கொண்டு வரவே உள்ளது.

இதிலிருந்து நாம் அறிவது என்னவென்ருல், ஹெகலைப் போலவே க்ரீனும் அரசு உயர்வும் வலிமையும் கொண்டது என்ற கருத்தில் நம்பிக்கை கொண்டவர். இவ்வரசே உண்மையில் உரிமைகளை வழங்குகிறது. அரசினுல் வழங்கப்ப்டும்போது தான் இச் சுதந்திரங்கள் உரிமை என்னும் பெயரை அடைகின்றன. சமுகத்தில் வழங்கும் மற்ற எல்லாக் குழுக்களைவிட அரசே தலைமை வாய்ந்தது. ※ மேலும் ஹெகலைப் போலவே க்ரீனுக்கும் மற்ற எல்லா அமைப்புகளையும் குழுக்களையும்விட அரசு மாறுபட்டது. எப்படி என்ருல் அரசிற்குள்ளேயே ரூஸோ கூறியது போன்ற உண்மையான பொதுச் சம்மதத்தை (Genral will) முழுமையுடன் உணர முடிகிறது.

க்ரீனுக்கும் ஹெகலைப் போன்றே சுதந்திரங்களைப் பற்றிப் பேசும்போது சில பிரச்சினைகள் எழுகின்றன. மனிதன் உண்மையில் எப்பொழுது முழு சுதந்திரத்தையும் அனுபவிக்கிருன் என்ருல் தன்னை முழுமையுடன் தெய்வீக உணர்வுடன் ஒன்று படுத்திக் கொள்ளும்போதுதான் என்கிருர். எனவே, அவன் உண்மைச் சுதந்திர நிலையை எப்பொழுது அடைகிருன் என்ருல் தன் விருப்பப்படி நடக்கும்பொழுது அன்று; மாருக, உண்மையான நலன் அல்லது சமூக நலன் எதுவோ அதை உணர்ந்து நடக்கும் பொழுதுதான். இத்தகைய நலனை எங்ஙனம் அடையலாமென்ருல் மற்றவர்களது நலன்களையும் உணரும்போதுதான் என்கிருர். ※ இத்தகைய சமூக நலனைத்தேட உதவுவது மனிதனுள் இருக்கும் காரண அறிவே. எனவே, சுருக்கமாகச் சுதந்திரத்தைக் காரண

※ 'The member of the state derive the rights which they have as Members of other Associations form the state and have no rights against it'—Green.

※ 'Freedom ……..is a positive power or Capastiy of doing or enjoYing Something worth duing or enjoying and that too something we do or enjoy in Common with others……'—Green.

அறிவுடன் சேர்த்து விடலாம். இச் சுதந்திரத்தை அரசினுள்தான் காணமுடியும். இவரது இதுபோன்ற கருத்துகளை நோக்கும் போது எவ்வளவு தூரம் இவர் ஹெகலின் கருத்துகளைப் பின்பற்று கின்றார் என்பது புரிகிறது.

மேலும் க்ரீன் சமூகத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கூறும் பொழுது அக் கருத்துகளும் அநேகமாக ஹெகலின் கருத்து களையே ஒட்டியுள்ளது. ஒரு சமூக ஒழுக்கத்தின் மதிப்பு மற்ற சமூக ஒழுக்க மதிப்பிலிருந்து (Standard of morality) மாறுகிறது. உதாரணமாக ஒரு காரியம் சீன நாட்டின் ஒழுக்கமுடையதாக இருக்கலாம். அக் காரியமே இங்கிலாந்து நாட்டில் ஒழுக்கக் குறைவாக இருக்கலாம். எனவே, குடிமக்களின் ஒழுக்க உணர் விற்கு ஒரு வடிவு கொடுப்பது அவர்கள் வாழும் சமூகமேயாகும். எனவே, எந்தச் சமூகத்தில் வாழ்கிறானோ அச் சமூக ஒழுக்க முறை களினாலேயே அவன் பாதிக்கப்பட வேண்டும். புலனாகாத தத்து வங்களினால் அவன் பாதிக்கப்பட வேண்டியதில்லை. சமூகமே மனிதனை எந்தக் காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கூற வேண்டுமே தவிர அவனது மனச்சாட்சியன்று. சமூகத்தின் ஒழுக்க நெறிகளை மீறி நடக்காதவரை மனிதன் வீடுகள் கட்டிக் கொள்ளலாம்; சுகாதார முறைகளைக் கடைப் பிடிக்கலாம். இது போல் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அதன் நெறி முறைகளை மீறினால் இத்தகைய உரிமைகளை இழக்க நேரிடுகிறது. சமூகத்தின் முக்கியத்துவத்தைக் க்ரீனும் ஹெகலைப் போலவே வலியுறுத்துகிறார். மேலும் எந்தச் சீர்திருத்தமாக இருந்தாலும் தேசீய உணர்வுகள், அமைப்புகள், பண்புகள் இவற்றை எப்பொழுதும் ஒதுக்கி விட்டுவிடக்கூடாது என்கின்றார்.

இவ்வாறாக வரலாறு, சமூகம், மனிதர்கள் இவர்களுடைய தன்மையைப் பற்றிய அபிப்பிராயங்களைக் க்ரீன் கூறும்பொழுது ஹெகலின் செல்வாக்கை அதிகமாகவும் அரிஸ்டாடிலின் செல் வாக்கை ஓரளவும் காண்கின்றோம். மேலும் க்ரீன் ஹெகலின் கருத்துகளை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் ஆங்கில மக்களது பொது அறிவிற்கு ஏற்றுக்கொள்ளும் வகையில் மாற்றினாலும் அம் மாற்றம் மிதமான மாற்றமேயன்றி அது தீவிரமானதன்று.

க்ரீனின் தனி உடைமைக் கோட்பாடுகள்

இவருடைய கருத்துரைகளை ஆங்கில மக்கள் ஏற்றுக் கொள்ளும்படி இருந்தது என்றால் அதற்கு முக்கிய காரணம் ஹெகலின் செல்வாக்கும் அவருடைய எழுத்துகளில் காணப்பட்ட தனி உடைமைக் கோட்பாடும் ஆகும்.

தெய்வீக உணர்வுதான் அரசு என அவர் நம்பிய போதும் அரசே ஒரு முடிவாகாது, மனிதர்களின் முழு அறநெறி வாழ்வின் வளர்ச்சிக்கு உதவுவதே அரசாகும். அவ்வளர்ச்சியே முக்கியமானதும் முடிவானதுமாகும். இவர் கான்த்தைப் போல் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுக்கென்ற மதிப்பும் மரியாதையும் உண்டு, அதை வேறு எந்தக் காரணத்திற்காகவும் பயன்படுத்தக் கூடாது. எனவே, அரசின் கடமைகள் எதிர்மறையான தன்மை உடையவை அல்ல. அதாவது மக்கள் பிறரது சொத்துகளைப் பறித்துச் செல்லாமல் பார்த்துக் கொள்ளுதல், பிற நாடுகள் படையெடுக்கா வண்ணம் பாதுகாத்தல் போன்ற எதிர்மறையான கடமைகளை மட்டுமல்ல; மாறாக மக்கள் நல்வாழ்வு வாழ உதவும் நேரடிப் பணிகளையும் அது செய்ய வேண்டும். மேலும் மனிதர்கள் அற வாழ்வு நடத்த என்னென்ன தடைகள் உள்ளனவோ அவற்றை அரசு தடுத்தல் வேண்டும்.

இம் மாதிரியாகத் தடை முறைகளை நீக்குவதும் அரசின் எதிர்மறையான கடமைகள் ஆகும். இதை நேரடிக் கடமைகள் என்று எவ்வாறு அழைக்கலாம் என்றால் இது வெளிக்கு எதிரிடைக் கடமைகள் போல் தோன்றினாலும் அவை உண்மையில் நேரடிக் கடமைகளேயாகும். எடுத்துக்காட்டாகத் தன்னுடைய எஜமானனது விருப்பங்களையும் தீர்ப்பதற்காக ஓர் அடிமையின் சக்திகள் செலவழிந்தால் அத்தகைய நாடு அதிக சுதந்திரமுள்ள நாடு என்று பெருமையைக் கொண்ட ஏதன்ஸ் நாடாக இருந்தாலும் அங்கு உண்மையில் சுதந்திரம் என்பதே இல்லை. அரசு மக்களின் உடல், உள்ளம் இவை இரண்டிற்கும் ஊட்டம் கொடுப்பதாக இருத்தல் வேண்டும். மக்கள் ஒருவருக்கொருவர் ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக்கொண்டால் அவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியது அரசின் கடமையாகும். ஆனால், அதே சமயம் வலிமையற்றவர்கள் அல்லது ஆற்றலற்றவர்கள் வேறுவழியின்றிச் சில ஒப்பந்தங்களில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவதும் அரசின் தலையாய கடமையாகும். இங்ஙனம் நல்ல சூழ்நிலைகளை அரசு ஏற்படுத்தித் தராவிட்டால் அநீதிகளுக்கு மறைமுகமான ஆதரவையே தருகிறதே தவிர உண்மையான சுதந்திரத்தைத் தரவில்லை. இம்மாதிரி ஈடுபாடுகளுக்கு அரசிற்குத் தேவைக்கதிகமான அதிகாரங்களைக் கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. இக் கடமைகளில் அரசு ஈடுபடும்போது இக் கடமைகளை நேரிடைக் கடமைகள் என்றே அழைக்கலாம். ஏனென்றால், அரசு எல்லோரது நலனையும் பாதுகாக்க வேண்டிய நற்பணியே செய்கிறது.

இவ்வாறான தடைகளை நீக்குவதில் அரசு தலையிடுவது சரியென்று க்ரீன் ஒப்புக்கொண்டாலும் அதே சமயத்தில் தம்முடைய

ஒழுக்க வளர்ச்சியைப் பொறுத்தவரையில் மக்களுக்குப் பூரண சுதந்திரம் உண்டு என்கிருர். சுருங்கக்கூறின் அவர்களது ஒழுக்க வளர்ச்சிக்கு உதவ வேண்டுமே தவிர அதைத் தடுக்கும் படியான காரியங்கள் எதுவுமே செய்யக் கூடாது. அரசு என்பது மனிதனின் வளர்ச்சிக்கு உதவும் ஒரு வழிவகையே தவிர அதுவே ஒரு முடிவாகாது; எந்த அமைப்பாகிலும் சரி, அது அரசாகவே இருந்தாலும் அவை அனைத்தும் மனிதன் நலனுக்காகவே இருக் கின்றனவே தவிர அவைகளுக்காக மனிதன் இல்லை. அவை மனிதனுக்குச் செய்யும் நன்மைகள் காரணமாகவே முக்கியத் துவம் வாய்ந்தவை.

க்ரீன் ஆஸ்டினைப் போல் அரசின் சட்டபூர்வமான இறைமை என்பது அதன் மேலான அதிகாரத்தையே சொல்ல வேண்டு மென்கிருர். அதாவது அதற்கு மேல் எந்த அதிகாரமும் இருக்கக் கூடாது. ஆனுல், இதற்குப் பின்னுல் அரசின் உண்மையான அடிப்படை எது என்ருல் பொதுச் சம்மதமே (General will) ஆகும். இப் பொதுச் சம்மதம் வலிமையினுலோ அன்றி பயத் தினுலோ மக்களைக் கீழ்ப்படிய வைக்கும் சக்தியன்று. இப் பொதுச் சம்மதத்திற்கு மக்கள் தங்களது கீழ்ப்படிதலைப் பழக்கமாகக் கொள்கிருர்கள். மக்கள் எத்தகைய அமைப்புகளுக்குக் கீழ்ப் படிதலைத் தங்களை அறியாமலேயே பழக்கப்படுத்திக் கொள் கிருர்கள் என்ருல் அது பொதுச் சம்மதத்தின் அடிப்படையில் உள்ளது என்ற காரணத்திலேயேயாகும். எனவே, அரசு எவ்வகை யைச் சார்ந்ததாக இருந்தாலும் அதன் வரம்பின்மையற்ற மன்னராட்சியாக இருந்தாலும் குடிமக்கள் அவர்களாக விரும்பிக் கீழ்ப்படிந்தால்தான் அதுவும் நிலைக்கும். இதையே பொதுச் சம்மதம் அதாவது சமூகத்தின் உண்மையான இறைமை என அழைக்கிருேம் என்கிருர்.

க்ரீன் பொதுச் சம்மதத்தைப் பற்றி வெகு உயர்வாகக் கூறினு லும் இதில் சரியாகப் புரியாத தத்துவங்கள் எதுவும் புதைந்திருக்க வில்லை. பொதுச் சம்மதம் என்பது அரசிற்காக மக்கள் எடுக்கும் சம்மதம்தானும்.※

இவ்வாருக, அரசின் அடிப்படை மக்களின் பொதுச் சம்மதம் தானே தவிர, வலிமை கிடையாது என வலியுறுத்துகிருர். ஆனுல், உலகத்திலுள்ள சில அரசுகள் வலிமையையே அடிப்படையாகக்

※ 'The common consciousness of a common good' '—A sense of possessing common interest, a desire for common inlerest on the part fo the people".

கொண்டு இருக்கின்றன. மக்களின் பொதுச் சம்மதத்தின் அடிப் படையில் இல்லை என நன்கு உணருகிறார். தெய்வீக உணர்வின் முழு வடிவமே அரசு என்று கூறியிருந்த போதிலும், இருக்கும் அரசுகள் தங்களது முழுக் கடமையைச் செய்வது கிடையாது என்றும் அரைகுறையாகவே நிறைவேற்றுகின்றன என்கிறார். எனவே, நடைமுறையில் இருக்கும் அரசுகள் இலட்சிய அரசுகள் அல்ல. இருக்கும் அரசுகள் இலட்சிய அரசுகள் என வேறு படுத்துகிறார். ஆனால், ஹெகலுக்கு இருக்கும் அரசுகளே இலட்சிய அரசுகள். இவ்வாறாக க்ரீன் ஹெகலிலிருந்து மாறுபடுகிறார். வழங்கி வரும் அரசுகள் தெய்வீக உணர்வின் முழு வடிவம் என்று கூற முடியாது என்றும் இலட்சிய அரசுகளிலேயே தெய்வீக உணர் வின் முழு வடிவத்தையும் காண முடியும் என்றும், எனவே, இலட் சிய அரசுகளுக்கும் வழக்கிலிருந்து வரும் அரசுகளுக்கும் வித்தி யாசமிருக்க முடியும் என்றும் க்ரீன் கூறுகிறார். மேலும் சுதந்திரம் என்னும் வார்த்தைக்குக் க்ரீன் தரும் பொருளும் ஹெகல் தரும் பொருளும் வேறு வேறாய் இருக்கின்றன. ஹெகலுக்குச் சுதந்திரம் என்பது அரசின் சட்டங்களுடன் தானாகவே கீழ்ப்படிந்து நடந்து அவைகளுடன் ஒன்றிவிடுவதாகும். ஆனால், க்ரீனுக்கு மனிதன் தன்னைச் சிறந்தவனாக்கிக் கொள்வதற்காக உபயோகப்படுத்திக் கொள்ளும் உரிமைகளே சுதந்திரம் ஆகும். மனிதன் அரசின் சட்டங்களுடன் ஒன்றிவிடலாம். ஆனால், அப்படி ஒன்றுவதற்கு முன் அரசு தன்னுடைய கடமைகளைச் சரிவரச் செய்கிறதா என்று பார்க்க வேண்டும். அப்படிச் செய்யாத அரசாக இருந்தால் அதற்கு எதிரான முறையில் அவன் நடக்க வேண்டியிருக்கும். இப்படி நடக்க அவன் பயந்தாலும் எதிர்த்து நடப்பதைத் தவிர வேறு வழியில்லை. இது ஹெகல் நினைக்கமுடியாத ஆனால் க்ரீனால் ஒப்புக்கொள்ளக்கூடிய கருத்தாகும். தனி மனிதன் அரசை மீறி நடக்கலாம் என்று க்ரீன் கூறும்பொழுதுதான் அவருக்கும் ஹெகலுக்குமுள்ள வித்தியாசம் நன்கு புலப்படுகிறது. மேலும், க்ரீன் கூறுவதாவது : அரசை எதிர்ப்பது என்பது சுலபமான காரிய மன்று என்பது உண்மை என ஒப்புக்கொள்கிறார். எதிர்ப்பது என்றால் எந்த முறைகளில் எந்தச் சந்தர்ப்பங்களில் எங்ஙனம் எதிர்ப்பது என்பதைப் பற்றி அவர் விரிவாக ஒன்றும் கூறவில்லை. அரசை எதிர்ப்பதற்கான உரிமை என்று கொண்டாட மனிதர் களுக்கு எவ்விதச் சுதந்திரமும் இல்லை. ஏனெனில், அதுதான் உரிமைகளையே மக்களுக்கு வழங்குகிறது. எனவே, அனாவசியமாகச் சிறு காரணங்களுக்கெல்லாம் அரசை எதிர்ப்பது என்பது தவறு. எடுத்துக்காட்டாக, தன் சொந்த விருப்பத்திற்கு எதிராகச் சட்டம் இருக்கிறது, தன் விருப்பப்படி நடக்கவொட்டாதபடி அரசு தடுக்கிறது போன்ற அர்த்தமற்ற காரணங்களுக்காக எந்த

மனிதனும் அரசை எதிர்க்க முடியாது.மேலும், சமூக நலனை ஒட்டி ஏற்கனவே அனுபவித்து வந்த மக்களின் உரிமைகளைச் சீர்படுத்தின என்பதற்காகவோ அரசை எதிர்க்க உரிமை வேண்டக் கூடாது. ஏனெனில், மனிதனின் ஒவ்வொரு உரிமையும் பொது நன்மையுடன் ஒத்து, அதற்கு ஈடு கொடுத்துத் தாழ்ந்தே போக வேண்டும். சில சமயங்களில் அரசை ஏதாவது ஒரு காரணத்திற்காக எதிர்க்க நேரிட்டால் அந்த எதிர்ப்பு முடிவில் தவறாகக்கூட இருக்கலாம். அரசு என்பது காலங்கள் தொட்டு வளர்ந்துவரும் ஒரு அமைப்பு. அதனுடைய விவேகம், அறிவு நுட்பம் போன்றவை தனி மனிதனின் அறிவை விடப் பன்மடங்கு அதிகமாகத்தான் இருக்கும். எனவே, அதனை மிக எச்சரிக்கையுடன் எதிர்க்க வேண்டும். அவர் மக்களுக்கு விடும் மற்றொரு எச்சரிக்கை என்ன வென்றால், மக்கள் எதிர்ப்பின் முடிவு கடைசியில் குழப்பமான நிலையில் அதாவது இதற்கு முன்பிருந்த நிலையைவிட மோசமான நிலையில் கொண்டுவிடும்படியான நிலையில் இருக்கக்கூடாது. மேலும் அவர் கூறுவதாவது, சட்டபூர்வமான அரசு மக்களால் ஏற்க முடியாத சட்டங்கள் ஏதாவது கொண்டுவந்தால் மக்கள் உடனே எதிர்த்துப் போராடாமல் சட்ட முறைப்படியே அவைகளை மாற்ற முயலுதல் வேண்டும். அதுவரை பொறுத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால் பொறுத்துப் போவதுதான் சிறந்தது. அப்படிப் பொறுக்காதிருப்பின் பொது நன்மையே அதிகமாகப் பாதிக்கப்படும். சட்டபூர்வமான அரசில்லாத நாடுகளில் கடின நிலைகள் ஏற்பட்டால் அரசை எதிர்க்கத்தான் வேண்டும். எடுத்துக் காட்டாக, அரசு சில தனியார்களின் சொந்த விருப்பத்திற்காகவே செலுத்தப்பட்டு, அவ்வரசை எதிர்ப்பதால் ஏற்படும் தற்காலிகக் குழப்பமே அவ்வரசை விடச் சிறந்தது என்ற நிலைமை ஏற்பட்டால் அல்லது இவ்வரசை எதிர்த்தால் குழப்பம் ஒன்றும் ஏற்படாது. சீரான நிலையே ஏற்படும் என்றால் அச் சந்தர்ப்பங்களில் எதிர்ப்பது நியாயமே. அவ்வளவு எச்சரிக்கைகளையும் விடுத்து விட்டு அரசை எதிர்க்கத்தான் வேண்டும், வேறு வழியில்லை என மனிதர்கள் முடிவாக ஒப்புக்கொள்ளும்படியான சில சந்தர்ப்பங்கள் சில சமயங்களில் இருக்கத்தான் செய்கின்றன. அச்சமயங்களில் மனிதர்கள் அரசிற்குக் கீழ்ப்படியவே கூடாது என்கிறார். அப்படி எதிர்க்க முடிவு செய்தால் அத்தகைய முடிவு தானாக எடுத்துக்கொண்ட முடிவாக இருக்கவேண்டுமே ஒழிய மற்றவர்களுக்காகத் தாம் எடுத்துக்கொண்ட முடிவாக இருக்கக்கூடாது.அரசை எதிர்க்க மனிதர்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றாலும் அவசியமான சந்தர்ப்பங்களில் எதிர்ப்பது நன்மைக்காகவே இருக்க வேண்டும். அந்த எதிர்ப்புகள் சமூக நலன்களையும்

பொது நன்மைகளையும் பயக்கக்கூடியதாகவே இருக்க வேண்டும். இம்மாதிரி நன்மைகளைப் பயக்கும் என்று நன்ருகத் தெரிந்து கொண்டால்தான் மனிதர்கள் எதிர்ப்பைத் தொடங்கலாம். சாதாரணமாக இம்மாதிரி எதிர்ப்புகள் பொதுவான பரவலான அதிருப்தியின் அடிப்படையில்தான் எழ வேண்டும். சிற்சில சமயங்களில் பொதுமக்கள் எவ்வித ஆர்வமுமின்றி அலட்சியமாக இருந்தால் தனி மனிதனுக இருந்தாலும் பொது நன்மையைக் குறித்து எதிர்ப்பதே அவனது கடமை. தனிமையாக இருக்கிருேமே என்ருே, யாருடைய உதவியும் இல்லையே என்ருே வாளாவிருப்பது நன்றன்று.

இயற்கை உரிமைகளைப் பற்றி க்ரீனின் கருத்துகள் என்னவென்று பார்ப்போம். அதாவது மனிதர்களுக்கென இயற்கையிலேயே சில அடிப்படை உரிமைகள் இருக்கின்றன என்கிருரா, இல்லை என்கிருரா என்று பார்ப்போம். பயன்கருதுக் கொள்கையினரும், இலட்சியக் கோட்பாட்டு வாதிகளும், இயற்கை உரிமைகள் என மனிதர்களுக்கு எந்தவித உரிமைகளும் கிடையாது. அது யாராலும் ஒப்புக்கொள்ள முடியாத முட்டாள் தனமான போலியே என எண்ணினர். ஆனல், நாம் 'லாக்கின்' தத்துவங்களைப் பார்க்கும் பொழுது மனிதன் அரசு அமைப்பதற்கு முன்பு இயற்கை நிலையில் அனுபவித்து வந்த உரிமைகளே இயற்கை உரிமைகள் எனக்கூறியதை நினைவு கூறலாம். க்ரீன் இயற்கை உரிமைகளைப் பற்றி விரிவாகக் கூருவிட்டாலும் மனிதர்களுக்கு என்று சில கோரிக்கைகள் (claims) இருக்கின்றன. இக் கோரிக்கைகள் மனிதர்களின் அறநெறி வாழ்வின் நிறைவிற்குத் தேவைப்படுவதால் அவைகள் மனிதர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்கிருர். இக் கோரிக்கைகளே க்ரீனுக்கு இயற்கை உரிமைகள் ஆகும். இவ் வியற்கை உரிமைகளைப் பற்றி அவர் மேலும் கூறுவதாவது, மனிதன் நல்வாழ்வின் படிகளில் முன்னேறி வரும்பொழுது இவ் வுரிமைகள் தேவைப்படுகின்றன. எனவே, சமூகம் கீழான வளர்ச்சி நிலையிலிருந்து முழுமையான வளர்ச்சியை நோக்கி வளரும் போதே மக்களுக்கு இவை தேவைப்படுகின்றன. வளர்ச்சி அடையாத இயற்கை நிலையில் (State of Nature) மனிதர்கள் இவ்வுரிமைகளை அனுபவித்து வந்தனர் என்றும் பிறகு அரசு போன்ற நன்கு வளர்ச்சியடைந்த அமைப்புகள் ஏற்பட்டதும் இவை மறைந்து விடுகின்றன என்றும் பிறகு அரசாகப் பார்த்து என்ன உரிமைகள் கொடுக்கின்றனவோ அவைகளே மக்களால் ஏற்கப்பட்டு அனுபவிக்கப்படுகின்றன என்று கூறுவது சரியில்லை என்கிருர். ※ அங்ஙனம் என்ருல்

※ '.........they are......ahead of, not behind political developnent.,

இவ் வியற்கை உரிமைகள் என்பவை யாவை என்ற கேள்விக்கு விளக்கம் கூறுகையில் சிந்தனையாளர்களின் கருத்தில் மட்டும் சிந்திக்கக்கூடிய உட்கருத்துகள் அல்ல அவை. சமூகம் ஒப்புக் கொள்ளப்பட்ட சில பொது நன்மைகள் இவ் வுரிமைகளில் அடங்கியிருக்க வேண்டும். ஏனெனில், நல்வாழ்விற்கு உபயோகப் படுவதற்கான எண்ணங்களின் அடிப்படையிலேயே இவ் வுரிமைகள் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட எண்ணங்கள் சில மனிதர் களோ அல்லது சிந்தனையாளர்களோ சிறந்தவை என நினைப்ப வற்றைமட்டும் அடிப்படையாகக்கொண்டு எழுந்த உரிமைகளாக இருக்கக் கூடாது. மாறாக, இவ் வுரிமைகள் சமூகத்தில் உடன் வாழும் ஏனைய குடிமக்களும் அங்கீகரிக்கக்கூடியதாகவே இருத்தல் வேண்டும். இயற்கை உரிமைகளைப் பற்றி க்ரீன் இவ்வளவு விளக்க உரைகள் தந்தபோதிலும் இதில் குழப்பங்கள் மலிந்திருப்பது வருந்தற்குரியது. மனிதர்களுக்குப் பிறக்கும் பொழுதே சில உரிமைகள் இருப்பதை அதாவது இயற்கை உரிமைகளை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. சமூகம் ஒப்புக்கொண்ட சில கோரிக்கைகளே உரிமைகள் என்கிறார். ஆனால், சில உரிமை களைச் சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்கிறார். அதாவது சமூகம் அங்கீகரிக்கப்பட்டவை மட்டுமல்ல. அங்கீகரிக்கப்படாத உரிமை களும் உள்ளன என்று ஒப்புக்கொள்ளுகிறார். இங்குக் குழப்பமே ஏற்படுகிறது. மேலும் இயற்கை உரிமைகளைப் பற்றிக் கூறும் பொழுது தத்துவ சிந்தனையாளர்களின் கருத்துகளில் உள்ள தெளி வின்மையைச் சுட்டிக்காண்பிக்கிறார். ஆனால், இயற்கை உரிமை களுக்காக இவர் தரும் விளக்கங்களில் தெளிவு இல்லை. க்ரீன் இறைமை என்பதை நிகழ்முறை இறைமை (Defacto Sovereignty), சட்டமுறை இறைமை (De Jure Sovereignty) எனப் பிரிக்கிறார். அவரது இலட்சிய நாட்டில் சட்டமுறை இறைமை என்பதை ரூஸோ கூறிய பொதுச் சம்மதத்தில் காணலாம். ஆனால், வழங்கி வரும் அரசுகள் அனைத்திலும் இப்போது சம்மதத்தைக் காண முடியாது. ஓரளவுக்குத்தான் காணமுடியும். இருக்கும் அரசுகளை ஆளுவோர் தங்களது வலிமையினாலும் மக்களைப் பயமுறுத்தியும் தங்களது சம்மதம் ஒன்றையே அடிப்படையாகக்கொண்டு ஆண்டு வந்தால் அங்கு இருப்பது நிகழ்முறை இறைமையாகும் என்கிறார். இவ்வாறாக அவர் இறைமையை இரண்டு வகை களாகப் பிரிப்பதால் ஹெகலின் கருத்திலிருந்து பெரிதும் மாறுபடு கிறார் என்று கூறலாம். ஹெகலுக்கு எத்தகைய பொதுச் சம்மத மாக இருந்தாலும் அரசு அதை ஒப்புக்கொண்டால்தான் அதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்கிறார். ஆனால், க்ரீனுக்கு அரசின் அதிகாரத்தால் மட்டும் மக்களின் ஒழுக்க நெறியை நிர்ணயிக்க முடியாது; மக்களின் பகுத்தறிவான நீதியை ஒட்டிய

ஒழுக்க நெறிகளே அவைகளை நிர்ணயப்படுத்தும் என்கிறார். இவரது கருத்து 'லாக்' போன்ற இயற்கை விதிகளில் நம்பிக்கைக் கொண்ட தத்துவ எழுத்தாளர்களின் கருத்தைப்போல் உள்ளது. எனவே, இவரது தத்துவங்களில் ஹெகலியனிசத்தைவிடத் தனி மனிதர்களின் ஒழுக்க உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்கும் ஆங்கில மரபான தனித்தன்மையே ஓங்கியுள்ளது. அரசின் அதிகாரத்திற்குத் தேவைக்கு மீறிய மதிப்புக் கொடுக்கப்பட வில்லை. மொத்தத்தில் க்ரீனுக்குச் சமூகத்திற்குள் தனியான அற நெறி முறை என்று ஒன்று இருக்கிறது. இது அரசின் அதிகாரத்தி லிருந்து வேறுபடுகிறது. இதன் அடிப்படையில் தரமுள்ள மனிதர்களுக்கு அரசைக் குறைகூறும் அதிகாரம் உண்டு. க்ரீனின் வெளிநாட்டு உறவு நாட்டினுள் காணப்படும் வேறு அமைப்புகள், இவைகளைப் பற்றிய பொது அபிப்பிராயங்களையும் அவை ஹெகலிருந்து எவ்வாறு மாறுபடுகிறது என்பதையும் பார்ப்போம். ஹெகலைப் போலவே க்ரீனுக்கும் நாட்டினுள் காணப்படும் மற்ற அமைப்புகளைவிட அரசே முதன்மை வாய்ந்தது. ஆனால், அதற்காக இருவர் தரும் காரணங்களும் ஒன்றுக்கொன்று மாறு பட்டவை. நாட்டிலுள்ள வேறு அமைப்புகள் ஹெகலுக்கு ஏன் முக்கியத்துவம் வாய்ந்தவை என்றால் அவை கூட்டுறவு மனப் பாங்கை வளர்க்கின்றன. அவை மனிதர்கள் நாட்டிற்குள் வாழ உதவுகின்றன. இதனால் விளையும் நன்மை என்னவெனில் மனிதர்கள் நாட்டைத் துறந்து போய் வாழ இயலாத வகையில் நாட்டினுள்தான் வாழ முடியும் என்ற உணர்வை வளர்க்கின்றன. இதனால் அரசை எதிர்த்து அவர்கள் தங்களை வலியுறுத்திக் கொள்வதில்லை. ஆனால், க்ரீனுக்கு நாட்டினுள் காணப்படும் ஏனைய அமைப்புகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஏனெனில், அவை களும் மனிதர்களை நிறைவுள்ளவனாக ஆக்குகின்றன. மேலும் அவை அரசினால் உண்டாக்கப்பட்டவையல்ல. மாறாக, அரசு தோன்றுவதற்கு முன்பாகவே எழுந்தவை. அவைகளுக்கென்று அவைகளின் தன்மைக்குத்தக்க சில உரிமைகளைப் பெறுகின்றனர். இத்தகைய அமைப்புகள் அனைத்திலும் அரசு முதன்மையாக மேலோங்கி இருக்கிறது என்றால் அதற்கான காரணம் இவைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, ஒத்திசைத்து இயக்க வேண்டிய கடமை அரசின்பாலுள்ளது. அது மட்டுமல்ல. இவைகளைக் காக்க வேண்டிய கடனும் அரசினுடையதுதான் என்கிறார்.

மொத்தத்தில், ஹெகலுக்குக் குடும்பம் தோன்றி பிறகு பல அமைப்புகள் கொண்ட சமூகமாகி, கடைசியில் அரசியல் அமைப்பைக் கொண்ட நாடாக முடிகிறது. எனவே, அவ்வமைப்புகள் அரசு உண்டாவதற்கு ஊன்றுகோலாக இருக்க வேண்டும். அப்படியல்லாத அமைப்புகள் உண்மையான அமைப்

புகள் ஆகா. ஆனால், க்ரீனுக்கு அரசு ஏனைய அமைப்புகளைக் காக்காவிட்டால் அது உண்மையான அரசாகாது. இரண்டு பேர் கருத்துகளிலும் அரசு முதன்மைத் தன்மை வாய்ந்ததுதான். ஆனால், ஹெகலுக்கு அரசின் வரம்பற்ற தன்மையினாலும், ஏனைய அமைப்புகள் அதன் கீழ் வருவதானாலும், உயர்நிலைத் தன்மை வாய்ந்தது. ஆனால், க்ரீனுக்கு அரசின் உயர்நிலை ஏனைய அமைப்பு களின் தனித் தன்மையினால் வரம்புக்கு உட்பட்ட ஒன்று.

அரசு அயல்நாடுகளுடன் எத்தகைய உறவுகளைக் கொள்ள வேண்டும். அத்தகைய உறவுகளை எந்த நெறியை அடிப்படை யாகக் கொண்டதாக இருக்க வேண்டும் என்ற கேள்விகளுக்குக் க்ரீன் அளிக்கும் பதிலைக் காண்போம். அரசு அதனுள் இருக்கும் வேறு அமைப்புகளையும், குழுக்களையும் எங்ஙனம் பேணிப்போற்ற வேண்டுமோ, அங்ஙனமே அதற்கு வெளியிலிருக்கும் அமைப்பு கள், சமூகங்கள் இவைகளின் உரிமைகளுக்கு மதிப்பளித்தல் வேண்டும். அரசுதான் ஒழுக்க நெறியை நிர்ணயிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. காலங்கள்தோறும் வளர்ந்து வரும் மக்கள் வாழும் சமூகத்தில் அவர்களாக வளர்த்துக் கொள்ளும் சுதந்திர மான நெறிமுறை இருக்கிறது என்று எங்ஙனம் இதற்கு முன் கூறினாரோ, அங்ஙனமே அரசுகள் தோன்றாவிட்டால்கூட மனித சமுதாயத்தின் பொதுச் சம்மதம் என்று ஒன்று இருக்கிறது என்றும் இதனை மனித இனப் பொது மனச்சாட்சி (The Common Consciousness of Mankind) என்கிறார். இதன் அடிப்படையிலேயே அயல்நாடுகளுடன் எத்தகைய உறவு முறைகளைக் கொள்ள வேண்டும் என்பதைத் தீர்மானம் செய்ய வேண்டுமென்கிறார். இவ்வாறு கூறினாலும் இதுபோன்ற விதிமுறைகளை அரசுகள் ஒழுங்காகப் பின்பற்றுமா என்பது இவருக்கே சந்தேகமாகயிருக் கிறது. இருந்தும் இம்மாதிரி மனித சமுதாய நலனுக்கென்று பொதுவான விதிகள் என்று ஒன்று இருக்கத்தான் செய்கின்றன என்றும் அவைகளைச் சீரிய முறையில் வளர்ப்பது நல்லது என்கிறார். இவைகளினால் உண்டாகும் பெரும் நன்மை என்னவெனில் மனித இனத்தின் ஒழுக்க வளர்ச்சியை முழுமைப்படுத்துகிறது என்கிறார்.

க்ரீனின் இத்தகைய கருத்துகளை ஆராயுங்கால் அவை ஹெகலிலிருந்து எவ்வளவு தூரம் வேறுபடுகிறது என்பது தெளி வாகிறது. ஹெகலுக்கு அனைத்து நாடுகளுக்கும் பொதுவான நெறிமுறைகள் என்பது முடியாத ஒன்று. ஏனெனில், நெறிமுறை களின் பிறப்பிடமே அரசு அல்லது நாடுதான். ஆதலால், அது தன் நலன்களுக்காக என்னென்ன செய்கிறதோ அதுவே முழுமையான நெறிமுறைகளாகும். எனவே, அனைத்து நாடுகளுக்கும் பொது வான நெறிமுறைகள் என்பன கிடையா.

அரசுகள் ஒன்றுக்கொன்று போர்கள் புரிந்துகொள்வதைப் பற்றிக் க்ரீனின் கருத்துகளை நோக்குவோம். மனிதனின் உயிர் வாழும் உரிமையைப் பறிப்பது போர். சில சமயங்களில் போரிடாமல் இருப்பதால் அதிக தீமையே ஏற்படும். போரிடுவதே அறம் எனப்படும் சந்தர்ப்பங்கள் எழலாம். ஆனால், அத்தகைய சந்தர்ப்பங்கள் மிக அபூர்வமானவையே. பொதுவாக, போர்கள் நியாயமான காரணத்திற்காக நடைபெறுவதில்லை. சில சமயங்களில் வெளி நாடுகளின் ஆக்கிரமிப்புகளைத் தடுக்க அல்லது சில தீமைகளைத் தடுப்பதற்காக நடைபெற்றாலும் அவைகளை அவசியமான கொடுமை என்றே அழைக்கலாம். அரசின் தன்மையே போர் புரிவதுதான் என்பது கிடையாது.குறைகள் மலிந்துள்ள அரசுகளே போர்கள் புரிவதையே இயல்பு குணங்களாகக் கொண்டுள்ளன. குறைகள் அற்ற அரசுகளில் குறைவான சண்டைகளே எழும். சீரிய முறையில் இயங்கும் அமைப்பு முறைகளைக் கொண்ட அரசுகளில் சுதந்திரமான உறவு முறைகளே வளரும். மேலும் சில அரசுகள் பின்தங்கியும், சில அரசுகள் முன்னேறி வருவதும் சகஜமே. அவ்வரசுகள் அவ்வாறு முன்னேறி வருவது அவைகளின் உயர்வு அமைப்பு முறையையே காட்டுகிறது என்கிறார். மேலும், இருந்து வரும் ஐரோப்பிய நாடுகள் ஒன்றுக்கொன்று பொறாமை, பூசல்கள் போன்றவைகளைக் கொண்டுள்ளன. இவைகளை விட்டுவிட்டால் மேலான முறைமை அடையலாம் என்கிறார். மேலும் வெவ்வேறு நாடுகளில் வாழும் மனித சமுதாயம் முழுமையும் அந்தந்த அரசுகளின் சம்மதத்துடன் அனைத்து நாடுகளுக்கும் பொதுவான நீதிமன்றங்கள் ஏற்படுத்தும் காலம் வரவேண்டுமென்றும், அது அவ்வளவு சுலபமல்ல என்றாலும், அக் கனவு நாடுகளின் நன்மைகளுக்கு ஒவ்வாத ஒன்றல்ல என்கிறார்.

அரசுகளில் பொது மக்களின் கட்டுப்பாடு, பங்கீடு, இருப்பது நல்லது என்பது இவர் அபிப்பிராயம். அதே சமயத்தில் பொதுச் சம்மதத்தின் அடிப்படையில் சர்வாதிகார ஆட்சி செலுத்தப் படலாமென்று கூறுகிறார். வல்லரசு நாடாக இருந்தாலும் சரி, சட்டபூர்வமான அரசாக இருந்தாலும் சரி, பொது நன்மை என்ற அடிப்படையே இவருக்குக் கட்டளை விதியாகும்.

க்ரீன் அரசையே ஒரு முடிவாக நினைக்க மறுப்பதாலும் அதில் வாழும் குடிமக்களுக்கே மேலான முக்கியத்துவத்தைக் கொடுப்பதாலும் சில சமயங்களில் அரசை எதிர்க்க வேண்டியது மனிதர்களுடைய கடமை என்று அழுத்திக்கூறுவதாலும் அரசு நாட்டினுள் காணப்படும் வேறு குழுக்கள், அமைப்புகள் இவைகளின் உரிமை

களைப் போற்றிப்பேண வேண்டும் என்று கூறுவதாலும் மட்டும் ஹெகலின் கருத்துகளிலிருந்து மாறுபட்டிருக்கவில்லை. சக்தி வாய்ந்த அரசுடன் தனிமனிதன் தானாக எவ்வித மறுப்பும் இல்லாமல் ஒன்றிவிட வேண்டும் என்ற ஹெகல் கருத்தைத் தள்ளிவிட்டு அந்த இடத்தில் ஜனநாயக அரசில் தனிமனிதர்கள் ஒவ்வொருவரும் சுறுசுறுப்பாகப் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும் என்னும் தனித்தன்மை கோட்பாட்டைச் (Individualism) சேர்க்கிறார். அவர் அரசு, சமூகம், பொதுச் சம்மதம் இவைகளின் மதிப்பை எதைக் கொண்டு நிர்ணயிக்கிறார் என்றால், தனிமனிதர் களின் பண்புகள், ஒழுக்க நெறிகள் முதலியவைகளை அவைகள் வளப்படுத்தும் அளவைக் கொண்டுதான் எனலாம்.

க்ரீனுடைய சாதனைகள்

க்ரீனின் கோட்பாடுகளில் தனித் தன்மை மேலோங்கி இருந்தாலும் அவர் இலட்சியக் கோட்பாடு தத்துவ எழுத்தாளரிடையே சேர்க்கப்படுகிறார். அரசு மனிதர்களின் நன்மைக்காகச் செயற்கையாக உண்டாக்கப்பட்ட கருவி என்பதை ஏற்க மறுக்கிறார். நாட்டின் வரலாறு, சமூக வளர்ச்சி இவைகளுக்கு எத்தவித முக்கியத்துவமும் கொடுக்கவில்லை. வலிமைக் கோட்பாட்டையும் (Force theory) ஏற்க மறுக்கிறார். வலிமையல்ல, சம்மதமே மக்களை அரசுடன் பிணைக்கும் என்கிறார். ஜீவராசிக் கோட்பாட்டையே சில வரையறையுடன் ஏற்கிறார். மனிதன் இயற்கையில் ஒரு சமூகப் பிராணி. ஆதலால், அரசு இயற்கையாக எழுந்த ஒரு அமைப்பு என்கிறார். மேலும் சுதந்திரம், உரிமை இவைகளுக்கு அவர்கூறும் பொருள் கட்டுப்பாடற்ற தன்மை என்பதல்ல; மாறாகச் சமூகத்தினுள் இருக்கும் நீதி நெறி திட்டத்தின் வடிவான சட்டங்கள், வழக்கங்கள் இவைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்து அதன் மூலம் மனிதர்கள் நல் வளர்ச்சியை அடைவதே உண்மையான சுதந்திரம் என்கிறார். மேலும் அரசு என்பதற்கு வெறும் எதிர்மறைப் பொருளைத் தராமல் மனிதர்களுக்கு நன்மைகளைத் தரும் ஓர் அமைப்பே என்றும் மக்கள் தங்களது ஒழுக்க முறை கடமைகளைப் புரிந்துகொண்டு செயலாற்றுவதற்கு இன்றியமையாத ஒரு வழிகாட்டி என்கிறார்.

இவருடைய கோட்பாடுகளில் நிறைய குறைபாடுகள் இருக்கின்றன. இறைமை என்பதற்கு அவர் கூறும் பொருள் முதன்மையான அதிகாரம் என்பதே. ஆனால், இத்தகைய அதிகாரம் பொதுச் சம்மதத்தின் துணை கொண்டதாக இருத்தல் வேண்டுமென்கிறார். இந்த விளக்க உரை திருப்திகரமானதாக இல்லை. மேலும் இவருடைய நோக்கு செயல்முறைக்கு ஒவ்வாத உச்சநிலைப்

பகுத்தறிவு வாதமாக (Extreme Rationalism) உள்ளது. மனிதனின் பலவகை உணர்வுகளுக்கும் இடமளிக்காமல் நேர்மை உணர்வு ஒன்றே அவனது செய்கைகளை நிர்ணயப்படுத்துவது போல் படம் பிடித்துக் காட்டுகிறார். இம்முறை எப்படி இருக்கிறது என்றால் பயன் கருது கோட்பாட்டினர் மனிதன் மகிழ்ச்சியை நாடுவது ஒன்றையே குறிக்கோளாகக் கொள்கிறான். இக் குறிக்கோளே அவனது செய்கைகளை முடிவு செய்கின்றன எனப் படம் பிடித்துக் காட்டுவது போல் மிகவும் செயற்கையாக உள்ளது.

இவருடைய கோட்பாட்டில் இத்தகைய குறைபாடுகள் காணப்பட்டாலும் இவருடைய அநேக முடிவுகள் திருப்திகரமாகவும் நம்பக்கூடியதாகவும் உள்ளன. பென்தமிஸம் மனிதனின் சுயநலத்தன்மையின் அடிப்படையில் எழுந்த கோட்பாடு. ஆனால், 'க்ரீன்' மனிதனின் சிறப்பியல்புகளை வெளிப்படுத்துகிறார். மனிதன் தன் சிறப்புத் தன்மையை வெளிப்படுத்தினால் அவனது உண்மையான நலனுக்கும் அரசின் நலனுக்கும் எவ்விதப் போராட்டமும் இல்லை என்கிறார். அவர்களது மற்ற விருப்பங்களைவிட தன் ஒழுக்க நல வளர்ச்சிக்கும், உடன் வாழும் மக்களின் நன்மைகளுக்குந்தான் முதலிடம் கொடுக்க வேண்டுமென மக்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார்.

இலட்சியக் கோட்பாடு குறிப்பாக ஹெகலின் இலட்சியக் கோட்பாடு அரசே ஒரு முடிவு, அரசே ஒழுக்க நெறிகளின் பிறப்பிடம், ஓர் அரசுதான் முக்கியமே தவிர, அதன் அண்டை நாடுகளல்ல என்றும் போர்கள் புரிவது அரசிற்குச் சிறப்பு போன்ற கருத்துகளைக் கற்றுத்தந்தன. தனி மனிதனை அரசிற்கே தியாகம் செய்து விட்டன. ஆனால், க்ரீன் அரசே ஒரு முடிவாகாது. ஒழுக்க நெறிகளின் பிறப்பிடமும் அரசல்ல. தனிமனிதனை அரசிற்காக அர்ப்பணிக்கவும் வேண்டாம் எனவும் கற்றுத் தருகிறார். மேலும் அனைத்து நாடுகளுக்கும் பொதுவான சட்டங்கள் என்பதை ஒழுங்கு, கட்டுப்பாடு இவைகளைப் புறக்கணிக்கும் முழு உரிமையைப் பெற்றவை அல்ல. போர் தீய தன்மை வாய்ந்ததே. ஒழுக்கக்கேடான முறைகெட்ட செயலை அரசே செய்தாலும் அது முறைகெட்ட செயல்தான். இவ்வாறாகப் பயன்கருது கோட்பாட்டையும், இலட்சியக் கோட்பாட்டையும் திருத்திக் குறை நிறைவுகள் செய்து பொது அறிவை அடிப்படையாகக் கொண்ட அரசுகள் ஏற்றுப் பயன்படும்படியான விதியைத் தருகிறார். ஒவ்வோர் அரசும் பண்பில் சிறந்த மகிழ்ச்சிகரமான குடிமக்களைக் கொண்டதாக இருந்தால் அதுவே அதன் சிறப்புத் தன்மை என முடிக்கிறார்.

இவர் எல்லோருக்கும் பொதுவாகப் பயன்படுத்தக்கூடிய கோட்பாட்டைத் தந்தாலும் இவருடைய கோட்பாடு ஆங்கில மக்களுக்கு முற்றிலும் ஏற்றுக் கொள்ளும் வகையில் இருந்தது. ஏனெனில், கூடுமானவரை முற்றிலும் செயல்முறைக்கு உகந்ததாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் நியாய உணர்வினை அடிப்படையாகக் கொண்டு இருந்ததால் ஆங்கில மக்களுடைய மனநிலைக்கு ஏற்றாற்போல் அமைந்தது. எனவே, சுருக்கமாக இவருடைய சாதனை என்னவென்றால், பென்தமிஸத்தைவிட அதிக திருப்தி தரக்கூடிய சமூகத்தன்மையும் ஒழுக்க நெறியும் வாய்ந்த தனிமைத்தன்மைக் கோட்பாட்டைச் சற்று மாற்றி எல்லோருக்கும் பாதுகாப்பைத் தருகின்ற இலட்சியக் கோட்பாட்டுடன் சேர்த்து விடுகிறார். இதை ஒரு பெரும் சாதனை என்றே சொல்லலாம்.

7. கார்ல் மார்க்ஸ் (1818—1883)

19ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில், தொழிற் புரட்சியினுல் ஏற்பட்ட பொருளாதார சமூக தீமைகளினுல் சோஷியலிசக் கருத்துகள் மக்களிடையே பரவ ஆரம்பித்தன. இங்கிலாந்தில் இராபர்ட் ஓவன், தாம்சன் போன்ருேரும் பிரான்சு நாட்டில் சார்லஸ்ஃபோரியர், செயின்ட் சைமன் போன்ருேரும் தொழிற் புரட்சியினுல் ஏற்பட்ட தீமைகளைத் தத்துவரீதியாக ஆராய்ந்து தொழிலாளர்களின் துன்பத்தைப் போக்கும் வழிகளைத் தேடினர். ஆனுல், இவர்களின் தத்துவங்கள் எந்தவிதச் சிறந்த பயனையும் அளிக்கவில்லை. ஏனெனில், அவர்கள் கூறிய வழிமுறைகள் முதலாளிகளையே நம்பி இருந்தன. முதலாளிகள் அவ்வழி முறைகளைக் கடைப்பிடித்தால்தான் தொழிலாளர்களின் துன்பங்கள் குறைய வாய்ப்பிருந்தது. ஆனுல், கார்ல் மார்க்ஸின் புரட்சிகர சோஷியலிசம், சோஷியசத் தத்துவத்தில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தித் தந்தது. அவரது தத்துவங்களை விரிவாகப்படிப்ப தற்கு முன் 19ஆம் நூற்றுண்டின் சூழ்நிலை எவ்வாறு இருந்தது எனப் பார்ப்போம்.

இந் நூற்றுண்டில் தொழில் நுட்பத்துறை வளர்ச்சிக்குப் பெரு மதிப்பிருந்தது. ஆயினும் இவ் வளர்ச்சியின் பலன்கள் ஒரே சீராக இல்லை. சிலர் பெரும் செல்வ நிலையையும், பலர் பெரும் துன்ப நிலையையும் அடைந்தனர். மேலும் மதத்திற்கும் அதன் கருத்து கட்கும் முன்பு இருந்த கவர்ச்சி அப்பொழுது இல்லை. இதன் விளைவாக முன்பு கிரேக்க நாட்டில் பிறப்பு முதலே சிலர் அடிமை களாக இருந்ததுபோல் அப்பொழுது அடிமைத் தொழிலாளர்கள் பெருகினர். மனிதர்களின் உயர்வான உணர்வுகளுக்கு இட மில்லாமல் எல்லாமே பணம், விலை இவைகளைக் கொண்டே மதிப்பிடப்பட்டு வந்தது. இதை மார்க்ஸ், மனிதர்களுக்கிடையே அப்பட்டமான சுயநலமும், இரக்கமற்ற பணக் குறிக்கோளு மல்லாது வேறு எந்தவித உறவுமில்லை என்று கூறுகிருர். (......No other bond between man and man but naked self interest, but Callous 'Cash-Payment'.. (Marx). முதலாளித்து வத்தின் வளர்ச்சியைக் கண்டு மார்க்ஸ் திடுக்கிட்டார். அது பொருட்களையும் அதன் உற்பத்தி முறைகளையும் மட்டும் மாற்று

வதோடு நிற்காமல் மனிதர்களையே எங்ஙனம் மாற்றி விட்டது என்பதைத் தெளிவுற உணர்ந்தார். சுருங்கக்கூறின் அவர் வாழ்ந்த காலம் சாதனைகளும் வேதனைகளும் நிறைந்தனவாக இருந்தது. ஒருபுறம் அறிவியல் துறைகளில் முன்னேற்றமும், மறுபுறம் மதப் பற்று மங்கியும் காணப்பட்டது. ஒருபுறம் ஒளியுடனும் மறுபுறம் சூன்யமாகவும் காணப்பட்டது. இவைகளுக்கெல்லாம் தீர்வு காண மார்க்ஸ் நினைத்தார். இராபர்ட் ஓவன், செயின்ட் சைமன் இவர்களது தத்துவங்கள் அவருக்குக் கசப்பையே தந்தன. வெறும் கற்பனைவாதிகளான இவர்களது தத்துவங்கள் முதலாளித் துவத்தை எதிர்த்தாலும் அதன் தீமைகளைப் போக்க நடைமுறை யில் எவ்விதத் தீர்வையும் தராது என நினைத்தார். எனவே, அத் தத்துவங்களை அவர் வெறுத்தார். மார்க்ஸ் அத் தத்துவங்களை வெறுத்தாலும் அத்தத்துவ எழுத்தாளர்களின் சோஷியலிச எண்ணங்கள் அவருக்குத் தேவையான கருத்துகளைக் கொடுத்து உதவியது என்பது உண்மை. அவர்களது கோட்பாடு மார்க்ஸிற்குத் தொழில் முறை மதிப்பின் கோட்பாட்டு முறைப்படி (Labour theory of Value) எங்ஙனம் பொருட்களின் மதிப்பைக் கண்டு பிடிப்பது என்பதையும் சோஷியலிச சமூகம் என்றால் என்ன என்ப தையும் நன்கு அறிய உதவியது. அவர்களது கருத்துகளை மக்கள் அதிக ஆழத்துடன் புரிந்து கொள்ள மார்க்ஸ் உதவியதால், அவர்கள் தோல்வி கண்ட இடத்தில் மார்க்ஸ் வெற்றி பெற்றார். அவர் வெற்றியின் மற்றொரு காரணம் தொழிலாளர் வர்க்கத்தின்மேல் அவர் கொண்டிருந்த உண்மையான பரிவும், அக்கிரமங்களைக் கண்டு அவர் கொண்ட நேர்மையான சீற்றமுமேயாகும். முதலாளிகளை அவர் தவறு செய்தவர்களாகக் கருதவில்லை. பெரும் பாவிகள் என்றே நினைத்தார். அவரைப் பின்பற்றியோருக்கு வாழ்வின் தரத்தையும் பொருளையும் விளக்கும் தீர்க்கதரிசியாகத் திகழ்ந்தார்.

மார்க்ஸ் வெறும் தத்துவத்தையே நம்பி இருந்தாரேயானால் இவ்வளவு தூரத்திற்கு வெற்றி பெற்றிருக்க மாட்டார் என்பது திண்ணம். சமூகச் சரித்திர வளர்ச்சியைத் தத்துவ முறையுடன், அறிவியல் முறைப்படி ஆராய்ந்ததாக அவர் கூறியது அறிவிய லுக்குப் பெரும் மதிப்பு இருந்த அக் காலத்தில் எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தது. வெறும் தத்துவப் போதனையாக இருந் திருந்தால் ஒரு சிலரது கவனத்தையே கவர்ந்திருக்கும். எனவே, அவரது வெற்றிக்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும்.

மார்க்ஸின் தத்துவங்கள்

மார்க்ஸின் முக்கிய படைப்புகள் கம்யூனிஸ்ட் மெனிஃபெஸ்டோ (Communist manifesto 1848), தாஸ் கேபிடல்

முதல் பாகம் (Das Capital Vol.I), தத்துவத்தின் வறுமை (The Poverty of Philosophy), பிரான்சின் உள்நாட்டுப் போர் (The Civil war in France) என்பவை. இப் புத்தகங்களின் மூலமாக மார்க்ஸ் தொழிலாளிகளுக்குச் சில உண்மைகளையும் தகவல்களையும் தந்தார் தொழிலாளி வர்க்கம் ஒன்றுகூட வேண்டும் எனக் கூக்குரலிட்டார். புரட்சியன்றி வேறு எந்தவிதச் சீர்திருத்தத்திலும் இவர் நம்பிக்கை கொள்ளவில்லை. நல்ல தருணம் வரும்பொழுது தொழிலாளர் புரட்சி மூலம் முதலாளித்துவத்தை அழிக்க வேண்டும் என்று கூறினார். மார்க்ஸியக் கோட்பாட்டில் தொழிலாளர் வர்க்கம் விழித்து எழுவதற்கான கூப்பாடு மட்டும் இல்லை. இருக்கும் சமூகங்களின் நெருக்கடியான நிலை என்ன, புரட்சி ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் என்ன, என்பதையும் விளக்குகிறது. தனது தத்துவங்களின் மூலம் முதலாளித்துவத்தை அழித்துத் தொழிலாளர் புரட்சியை எங்ஙனம் ஏற்படுத்துவது என்னும் விளக்கம் கூறும் முயற்சியில் இதுவரை தத்துவரீதியாக இருந்த சோஷியலிசத்தை விஞ்ஞான ரீதியான சோஷியலிசமாக மார்க்ஸ் மாற்றி விடுகிறார். ஆனால், அவரது சோஷியலிசம் அவர் கூறுவதுபோல் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டது தானா என்று பிறகு பார்ப்போம்.

மார்க்ஸிசம், முரண்பாட்டுச் சடவாதம் (Dialectical Materilsm சடவாத வரலாறு (Historical materialsm), பொருளாதாரப் பகுப்பாய்வு (An economic analysis) ஆகிய கோட்பாடுகளைக் கொண்டது.

கம்யூனிஸ்ட் நோக்க விளக்கம் (Communist manifesto) என்னும் புத்தகத்தின் கருத்து முழுவதும் முரண்பாட்டுச் சடவாத தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. இந்த முரண்பாட்டுச் சடவாதக் கோட்பாட்டில் மார்க்ஸ், ஹெகலின் கருத்துகளை நெருக்கமாகப் பின்பற்றுகிறார்.

முரண்பாட்டுச் சடவாதம் என்றால் என்ன என்று பார்ப்போம். இத் தத்துவப்படி கருப்பொருளின் (Matter) வளர்ச்சி முறை தானாக எழும் ஒன்று. சூழ்நிலைகள் இவ் வளர்ச்சிக்கு உதவியும் செய்யலாம். தடுக்கவும் செய்யலாம். ஆனால், இவ் வளர்ச்சியினை ஆரம்பிப்பதும் இல்லை.அது குறிக்கோள் அடைவதைச் சூழ்நிலைகள் தடுப்பதும் இல்லை என்கிறார். கருப்பொருள் என்பதற்கு மார்க்ஸ் தரும் விளக்கம் என்னவென்றால் உலகத்தில் இருக்கும் அனைத்துமேயாகும். அது பொருள் உருவில் இருந்தாலும் இருக்கலாம். மனித மனமாக இருந்தாலும் இருக்கலாம். பார்க்கும் அல்லது உணரும் எதையுமே கருப்பொருள் எனலாம். இறைவனைக்

கருப்பொருள் என்று கூறமுடியாது. ஏனெனில், இறைவனை யாரும் பார்ப்பதோ உணர்வதோ கிடையாது. கருப்பொருள் வளரும் தன்மையை உடையதே தவிர நிலையான தன்மை உடையதன்று. இதன் குறிக்கோள் என்னவென்றால், குறைகளற்ற நிறைவான சமூகத்தை ஏற்படுத்துவதே ஆகும். இக் குறிக்கோளினை அடைய அது முரண்பாட்டு முறைப்படி வளருகிறது. இங்கு முறைகளின் கருத்துகளை மிக நெருக்கமாக மார்க்ஸ் பின்பற்றுகிறார். சரித்திரத்தின் ஒவ்வொரு கட்டமும் இக் குறிக்கோளுக்குக் கீழான நிலைகள். ஒவ்வொரு கட்டமும் வகுப்பு வித்தியாசமற்ற சமூகம் என்னும் குறிக்கோளை நோக்கிச் செல்லும்போது அவைகளில் உள்ள இயல்பு (Thesis), எதிர்மறை இயல்பு (Antithesis) இவைகளுக்குள் ஏற்படும் மோதலில் கூட்டிணைப்பு (Synthesis) தோன்றி, இயல்பு, எதிர்மறை இயல்பு இவைகளில் உள்ள உண்மை அழியாது நிலை நிற்கிறது. இக் கூட்டிணைப்பில் மறுபடியும் இயல்பு, எதிர்மறை இயல்பு ஆகிய இவைகள் தோன்றி ஓர் எல்லை வரை வளர்ந்து, பிறகு அழிந்து முடிவில் வகுப்புவாதமற்ற சமூகம் ஏற்படுகிறது.

இங்கு ஹெகலின் கருத்துகளையும் மார்க்ஸின் கருத்துகளையும் ஒப்பிட்டுப் பார்ப்போம். ஹெகலுக்கு, ஆன்மாவே அனைத்துப் பொருண்மமாகும். (Universal Substance is Spirit). ஆனால், மார்க்ஸிற்குப் பொருள் பொருண்மம் ஆகும். ஹெகலுக்கு முழுமை என்பது தன்னை முழுதும் உணர்ந்த உட்கருத்தேயாகும். (Idea fully Conscious of itself). மார்க்ஸிற்கு முழுமை என்பது வகுப்பு வாதமற்ற சமூகமேயாகும். ஹெகலுக்கும் 'ஆன்மா' முரண்பாட்டு வாதமுறைப்படி வளருகிறது. மார்க்ஸிற்குப் பொருளாகிய பொருண்மம் முரண்பாட்டுவாத முறைப்படி வளர்கிறது. ஹெகல், ஆன்மாவின் வளர்ச்சி யாராலும் தடுத்து நிறுத்த முடியாத ஒன்று என்கிறார். இவ்வாறாக அவர்கள் இருவரும் கூறினாலும் அதற்கான நிரூபணம் எதுவும் அவர்கள் தரவில்லை.

மார்க்ஸின் சடவாத வரலாறு: மார்க்ஸ் தன்னுடைய முரண்பாட்டுச் சடவாதக் கொள்கையினை அடிப்படையாக வைத்துச் சமூகத்தின் வளர்ச்சியை விளக்குகிறார். இதுவே அவரது சடவாத வரலாறாகும். இக் கொள்கை சரித்திரத்தைப் பொருளாதார ரீதியில் பொருள் கூறி விளக்குகிறது. சரித்திரம் பொருளாதார நிலையை வைத்து நிர்ணயிக்கப்படுகிறது. இத் தத்துவத்தை விரிவாகப் பார்க்கலாம். மனிதன் உயிர்வாழ உணவு தேவை. எனவே, அவனுடைய எல்லாக் காரியங்களையும்விட உற்பத்தித் தொழிலே மிக முக்கியமானது.

சமூகம் மனிதர்கள் உயிர்வாழத் தேவையான பொருட்களைத் தேடித்தர உதவுகிறது. ஒரு சமூகத்தின் உற்பத்தி முறை

னவோ அதைக்கொண்டு அது எத்தகைய சமூகம் என நிர்ண லாம். சரித்திரம் கீழ்க்கண்ட நான்கு நிகழ்ச்சிகளைக் ண்டது. அதாவது உற்பத்தி முறையினை அடிப்படையாகக் ண்டு எழும் சமூகம் மார்ஸிற்கு முரண்பாட்டுவாத முறைப்படி lectical) கீழ்க்கண்டவாறு வளருகிறது.

தல் முறை பண்டைக்காலப் பொதுவுடைமை முறை (Asiatic rimitre Communism) இங்கு உற்பத்தி முறைகள் வளர்ச்சி நிலையிலும், பொதுவுடமையாகும் நிலையிலும் உள்ளது. மற்ற றுமுறைகள் அடிமை உடைமை முறை,(Slave holding form), பண்ணை உடைமை முறை (Feudal systeim) முதலாளித்துவ ற(Copitalism) ஆகியவையாகும்.இம் முறைகள் அனைத்திலும் பொதுவான விதியைக் காணலாம்.அதாவது இம் மூன்று முறை லும், உற்பத்தி வழிவகை, சக்திகளைக் கட்டுப்படுத்தும் வகுப்பு, டுப்படுத்தாத வகுப்பின் மேல் ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. னுல் இவ்விரு வகுப்பிற்கிடையே விரோதமும், போராட்டமும் பொழுதும் காணப்படுகிறது. ஒவ்வொரு சமூகத்தின் மப்பும் அதன் உற்பத்தி முறையினைப் பொறுத்தே நிர்ணயிக் படுகிறது. உற்பத்தி முறைகள் மாறினுல், அதற்குத் தகுந்தாற் ல் சமூகமும் மாறுகிறது. உதாரணமாக, உற்பத்தி முறை ஆலை (Hand mill) முறையாக இருந்த பொழுது, சமூகம் ப்பண்ணை முறையாக இருந்தது. உற்பத்தி முறை நீராவி ல முறையாக மாறும் பொழுது, சமூகமும் மாறி முதலாளித் சமூகமாக மாறுகிறது. சமூகம் உற்பத்தி முறைக்குத் தக்க று மாறும் பொழுது அதன் நாகரிகம், நடவடிக்கைகள், மனப் பகு அவைகளும் மாறுகின்றன. இவைகளுக்குத் தகுந்தாற் ல் சமூக, அரசியல், மத, சட்ட முறைகளும் ஏற்படுத்தப்படு றன.

எனவே, ஒரு சமூகத்தின் அடிமட்டம் உற்பத்திக்கான சக்தி ாகும். இதன் மேல் கட்டப்படும் மேல் மட்டம் (Super icture) அரசியல், மதம், அறநெறிகள் ஆகியவையாகும். பத்திச் சக்திகளுக்கு இவ்வளவு முக்கியத்துவம் ஏன் அளிக்கப் வேண்டும் என்ற கேள்விக்கு மார்க்ஸ் கூறும் பதில், அவை தர்களின் வாழ்வில் ஏற்றுக் கொண்டுள்ள முக்கிய பங்கே தம் என்கிருர். மனிதர்கள் எப்பொழுதும் பொருளாதார க்குடனேயே எல்லாக் காரியங்களிலும் செயல்படுவதில்லை பது உண்மைதான். மற்ற நோக்கங்கள், காரணங்கள் யவை இருந்தாலும் அவை அனைத்தும் பொருளாதார நோக் திற்கு அடுத்தபடியே இருக்கின்றன என்கிருர் மார்க்ஸ். தன் மற்றவைகளைப் பற்றிச் சிந்திப்பதற்கு முன் உயிர் வாழ்

தாக வேண்டும். வாழ்வதற்கு உணவே முதல் தேவை என்கிறார். மேலும் மதம், தத்துவம், கலை, அறநெறிகள், இலக்கியங்கள் இவை அனைத்தும் பொருளாதார நோக்குடனேயே பார்க்கப்பட வேண்டும் என்று பொருளல்ல. ஆனால், பொருளாதார நிலைகள் இவைகளுக்கு உருக்கொடுக்கின்றன; இவைகளின் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் பொருளாதார நிலை பெரும் பங்கு கொண்டுள்ளது என்பது மாற்ற முடியாத உண்மை என்கிறார் மார்க்ஸ். சுருங்கக் கூறின் நமது அன்றாடத் தொழிலே நமது மனப்பாங்கை முடிவு செய்கிறது. நமது அபிப்பிராயம், நோக்கு அனைத்தும் உற்பத்தித் துறையில் நம் நிலை என்னவோ அதை ஒட்டியே முடிவாகிறது. உற்பத்தித் தொழிலில் சாதாரண தொழிலாளியாக இருப்பவன் தொழிலாளி என்னும் முறையிலேயே எதையும் நினைக்கிறான், நோக்குகிறான்.

முன்பு குறிப்பிட்டதுபோல், சமூகங்கள் பண்டைக்கால பொதுவுடைமை முறையில் தொடங்கி வளர ஆரம்பித்ததிலிருந்து மற்றபடிகள் அனைத்திலும் ஒரு பொது உண்மையைக் காணலாம். அதாவது ஒரு குறிப்பிட்ட வகுப்பு ஏனையோரைச் சுரண்டி வாழ் கிறது. அதாவது—உற்பத்தி வழிவகைகளைக் கட்டுப்படுத்தும் வகுப்பு ஏனையோரின் மேல் ஆதிக்கம் செலுத்துகிறது. இது தற்செயலாக நிகழும் நிகழ்ச்சியன்று. சரித்திரத்தின் மாற்ற முடியாத விதியே ஆகும் என்கிறார் மார்க்ஸ். உதாரணமாக நிலமே அடிப்படையான உற்பத்தி முறையாக இருக்கும் பொழுது, நிலக்கிழார்களே ஆளுவோராக இருக்கின்றனர். இவர்களே எல்லாச் சுதந்திரங்களையும் அனுபவிக்கின்றனர். தங்களது சுதந் திரங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் வழிவகைகளைச் செய்து கொள்கின்றனர். தங்கள் நிலையைக் காப்பாற்றிக் கொள் வதற்காக அரசை அமைத்துக் கொள்கிறார்கள். உற்பத்தி நிலை மாறும்பொழுது புதிய வகுப்புகள் தோன்றி, முன்னெழுந்து, மற்றவர்களின் மேல் ஆதிக்கம் செலுத்துகின்றனர். நிலப்பண்ணை முறைச் சமூகத்தில் நில உரிமையாளர்கள் ஆதிக்கம் செலுத்து கின்றனர். தொழிற்சாலைகள் வளர்ந்து, உற்பத்தி முறைகள் புதிய முதலாளிகளின் கையில் சென்றதும், புதிய வகுப்பினரான இம் முதலாளிகள் ஏனையோரின் மேல் ஆதிக்கம் செலுத்தத் தொடங்குகின்றனர். நிலப்பண்ணை முறைச் சமூகத்தில் இருந்து வந்த அரசு புதிய வகுப்பினருக்கு ஒவ்வாத முறையில் இருப்பதால் பழைய முறைகள் மாற்றப்பட்டு புதிய வகுப்பினருக்கு ஒத்தாற் போல் அமைக்கப்படுகின்றன. இவ்வாறாக உற்பத்தி முறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டால் இருந்து வரும் சமூக அமைப்புகளில் மாற்றங்கள் ஏற்பட்டுப் புரட்சிகர சூழ்நிலை ஏற்படுகிறது. இச்சூழ்

நிலையில் பழைய சமூக அமைப்பில் ஆதிக்கம் செலுத்தியவர்களுக்கும் புதிய அமைப்பில் மேல் எழுந்தவர்களுக்கும் போராட்டம் ஏற்படுகிறது. இப் போராட்டத்தில் புதிய வகுப்பினர் தங்கள் செல்வநிலையினால் வெற்றி பெற்று ஏனையோரை ஆதிக்கம் செலுத்தும் உரிமையைப் பெறுகின்றனர். எனவே, சமூகத்தின் வரலாறு இத்தகைய வகுப்புவாதச் சண்டையின் வரலாறே ஆகும். ஒவ்வொரு படியிலும் ஒவ்வொரு வகுப்பு மேலெழுந்து காணப்படுகிறது. இவ்வாறு மார்க்ஸ் கூறினாலும், அது அவரது சொந்தக் கருத்தாகாது. செயின்ட் சைமனும் இதைப் பற்றிக் கூறியிருக்கிறார். இக் கருத்தை ஹெகலின் முரண்பாட்டு வாதமுறைப் படி மார்க்ஸ் விளக்குவது அவரது தனிச் சிறப்பாகும். மார்க்ஸ் முரண்பாட்டு வாதமுறைப்படி எவ்வாறு விளக்குகிறார் என்றால் வரலாற்றின் ஒவ்வொரு படியிலும் ஒவ்வொரு கதைபோல் வரலாற்றின் ஒவ்வொரு படியிலும் ஒரு வகுப்பு மேல் எழுந்து அதற்கு எதிர் வகுப்பையும் உண்டாக்குகிறது. இவைகளுக்குள் ஏற்படும் மோதலில் புதிய வகுப்பு மேல் எழுகிறது. வகுப்புச் சண்டை முதலாளி வகுப்பு, தொழிலாளி வகுப்பு எனும் இரு வகுப்புகளும் நேருக்கு நேர் மோதும் நிலையான கடைசிப் படியை அடைகிறது. முதலாளித்துவம் எனும் இயல்பு (thesis) அதற்கு எதிரான ஒன்று சேர்ந்த தொழிலாளர் வர்க்கம் என்னும் எதிர் மறை இயல்பை (Antithesis) வளர்த்து இவர்களுக்குள் ஏற்படும் மோதலில் முடிவான கூட்டிணைப்பான (Synthesis) வகுப்புவாத மற்ற சமூகத்தை ஏற்படுத்துகிறது.

இத்தகைய சிறப்பான சமூகத்தை அடைவதற்குமுன் தற்காலிகமான தொழிலாளர்களின் சர்வாதிகாரத்தின்கீழ் சோஷியலிசம் ஏற்படுகிறது. தற்காலிகமான இக் காலத்தில் இயற்கைவள முறைகள் பொது உடைமை ஆக்கப்பட்டு முதலாளித்துவம் இருந்த சுவடே இல்லாத வகையில் அழிக்கப்படுகிறது. தொழிலாளர்களின் சர்வாதிகாரமும் இதற்கு முன்பு இருந்த மேல் வகுப்பினருடையதைப்போல் கடுமையாகத்தான் இருக்கும். முதலாளித்துவத்தை அழிப்பதற்காகத் தொழிலாளர்களால் நாடு ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படும். ஆனால், முன்பு இருந்த நிலைக்கும் இப்பொழுது இருக்கும் நிலைக்கும் ஒரு மாற்றம் உள்ளது. முன்பு சிறுபான்மையோர் பெரும்பான்மையோரை அடக்கி ஒடுக்கினார்கள். இப்பொழுது பெரும்பான்மையோர் சிறுபான்மையோரை அடக்கி ஒடுக்குவார்கள். எனவே, முன்பு ஜனநாயக அரசுகள் என்று கூறப்பட்ட நாடுகளைவிட இப்பொழுதே ஜனநாயகம் இருக்கிறது.

தொழிலாளர்களின் சர்வாதிகாரத்தின் மேல்பார்வையில் சோஷியலிசம் கம்யூனிசமாகமலர்கிறது. இக் கம்யூனிஸத்தைப் பற்றி மார்க்ஸ் அதிகமாக ஒன்றும் கூறவில்லை. இரு விளக்கங்கள் மட்டும் தருகிறார். இக் கம்யூனிஸ சமூகத்தில் அவரவர்களது உழைப்பிற்கும் திறமைக்கும் தகுந்தாற் போன்றும் உற்பத்தி யாகும் பொருள்களை அவரவர்கள் தேவைகளுக்குத் தகுந்தாற் போன்றும் பிரித்துக் கொடுக்கப்படும். (From each according to his ability to each according to his need) என்கிறார். பிறகு அரசு என்னும் அமைப்பு மடிந்துவிடும் என்கிறார். எவ்வாறெனின் கம்யூனிஸ சமூகத்தில் ஆளுவோர் ஆளப்படுவோர் போன்ற பிரிவினையோ அல்லது வேறு எந்தவித வகுப்புப் பிரிவினைகளோ இதில் காணப்படமாட்டா. வகுப்புப் போராட்டம் ஒரு முடிவு நிலைக்கு வருகிறது. இங்கு அரசு அல்லது நாடு மடிந்துவிடும் என்பதற்குத் தெளிவான பொருளை 'மார்க்ஸ்', 'ஏங்கல்ஸ்' இருவருமே தராதது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறாக மார்க்ஸ் சடவாத வரலாறு என்னும் தம் கோட்பாட்டில் எங்ஙனம் வரலாற்றின் ஒவ்வோர் உற்பத்தி முறை வளர்ச்சிப் படியிலும் வகுப்புகள் அமைகின்றன என்பதையும், வகுப்புப் போராட்டங்கள் எவ்வாறு தொழிலாளர் ஆதிக்கத்தில் கொண்டுவிடுகிறது என்பதையும், தொழிலாள சர்வாதிகாரம் தற்காலிகமானது ஒன்றே என்பதையும், இத் தொழிலாளர் சர்வாதிகாரம் கடைசியில் வகுப்புப் பிரிவினை இல்லாத கம்யூனிஸ சமூகத்தை ஏற்படுத்துகிறது என்பதையும் விளக்குகிறார். இத் தத்துவக் கோட்பாடு இறந்தகால வரலாற்றுக்கு மட்டும் ஒரு விளக்கத்தைத் தரவில்லை. எதிர்காலத்தின் வரலாற்றில் பாதை என்ன என்பதை விளக்குகின்றது. இத் தத்துவத்தைத் தம்முடைய மற்றொரு பொருளாதாரப் பகுப்பாய்வின் துணை கொண்டு வலியுறுத்துகிறார். இந்த மற்றொரு பொருளாதாரப் பகுப்பாய்வின் பெயர் 'மிகை மதிப்பீட்டுக் கொள்கை (Doctrine of Surplus Value) யாகும்.

மிகை மதிப்பீட்டுக் கொள்கை

மார்க்ஸின் மிகை மதிப்பீட்டின் கொள்கை ஒரு பொருளின் மதிப்பு அதில் கொண்டுள்ள உழைப்பின் அளவைப் பொறுத்து மதிப்பிடப்படுகிறது. அதாவது அப் பொருளை உற்பத்தி செய்யச் செலவிடும் தொழில் நேரத்தைக் கொண்டு மதிப்பிடவேண்டும். ஆனால், தொழிலாளர்கள் தங்கள் உழைப்பிற்கு உயிர் வாழ மட்டும் தேவையான கூலியைப் பெறுகிறார்கள். அதாவது முதலாளிகள் தொழிலாளர்கள் உயிர்வாழ எவ்வளவு கூலி தேவையோ அதை

மட்டும் கொடுத்து மீதியை இலாபமாகத் தாங்களே எடுத்துக் கொள்கின்றனர். இதுவே மிகை மதிப்பீட்டுக் கொள்கையின் சுருக்க மாகும். இதில் அதிகக் குறைபாடுகள் உள்ளன. தொழிலாளிகள் உழைப்பு ஒன்றினால்தான் பொருள்களுக்கு மதிப்பு, விலை ஏற்படு கிறது என்றால், இயந்திரங்களுக்கு ஒரு பங்குமில்லை என்று சொல்லலாம். எனவே, இயந்திரங்களின் உதவியைக் கொண்டு உண்டாக்கப்படும் பொருள்களுக்கு மதிப்பே இல்லை என்று அர்த்தமாகும். மேலும் பொருளின் மதிப்பு அதற்குச் செல விடப்படும் உழைப்பைக் கொண்டு மட்டும் நிர்ணயிக்கப்படுவ தில்லை. அதன் தேவை அதிகமாக இருந்தாலும் மதிப்பு விலை உயருகிறது. இவ்வாறாக அவருடைய மிகைமதிப்பீட்டுக் கொள்கையில் குறைபாடுகள் மிகையாக உள்ளன. இருந்தும் இக் கோட்பாட்டின் உதவியைக் கொண்டு எங்ஙனம் தொழிலாளர் களின் திறமை, அறிவுத்திறன், உடலுழைப்பு இவை அவர் களுக்குப் பலனை ஒன்றும் தரவில்லையென்றும், மாறாக இவை அனைத்தின் பலனையும் தங்களது திறமை, நிர்வாகம் இவற் றால் உண்டான பலன்களே என்றும் முதலாளிகள் கூறிக் கொள் கின்றனர். எனவே, தொழிலாளர்களின் திறமை அனைத்தும் முதலாளிகள் தங்கள் நன்மைக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என எடுத்துக் காட்டுகிறார். இக் கோட்பாட்டைப் பற்றி மாக்ஸ் பீர் (**Max Beer**) இதில் பொருளாதார உண்மை (Economic truth) யைவிடச் சமூக, அரசியல் கோஷமே அடங்கியுள்ளது என்று கூறியது பொருத்தமே. இக் கோட்பாட்டின் உதவியைக்கொண்டு முதலாளித்துவம் எவ்வாறு வளர்ந்து முடியும் என்று ஆராய்கிறார். முதலாளித்துவத்தின் தன்மை என்னவென்று ஆராய்ந்து அதன் தன்மை தன்னழிவே என்று முடிக்கிறார். முதலாளிகள் தொழிலாளி களின் உழைப்பைத் தங்கள் நலத்திற்காகப்பயன்படுத்திக்கொண்டு மிகைலாபத்தை அடையத் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் போட்டி போடுகின்றனர். இப் போட்டியில் சிறு சிறு முதலாளிகள் தோல்வி அடைந்து தொழிலாளர் வகுப்பில் சேர்ந்துவிடுகின்றனர். இவ்வாறாக முதலாளிகளின் எண்ணிக்கை குறைந்துகொண்டே போகத் தொழிலாளர்களின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே போகிறது. முதலாளித்துவத்தின் விதியே மேலும் மேலும் மூலதனம் சேர்க்க வேண்டும் என்னும் போட்டி மனப்பான்மையின் அடிப்படையில்தான் இருக்கிறது. இவ்வாறு போட்டி போட்டுக் கொண்டு பொருள் சேர்க்காவிட்டால் அவர்கள் கூடிய சீக்கிரம் தொழிலாளர் வகுப்பைச் சேரவேண்டி வரும். எனவே, போட்டி யிடுதல் முதலாளித்துவத்தின் அவசியமான தேவை. இவ்வாறாகச் சில பெரும் முதலாளிகள் இப் போட்டியில் வெற்றியுடன் செல்வத் தைப் பெருக்கிக் கொண்டே போகப்போக, மறுபுறம் ஏழ்மையும்

பெருகிக் கொண்டே போகிறது. எவ்வளவு குறைவான கூலி கொடுத்தாலும் உழைக்கத் தயாராக இருக்கும் தொழிலாளிகளை முதலாளிகள் சுரண்டுகிறார்கள். உழைக்கும் தொழிலாளிகளின் துன்பம் பெருகிக் கொண்டே வந்து தொழிலாளர் புரட்சி என்னும் கட்டத்தை அடைகிறது. இது முதலாளித்துவத்தின் சாவு மணியே என்கிறார் மார்க்ஸ்.

முரண்பாட்டுச் சடவாதம், சடவாத வரலாற்றுக் கோட்பாடு, மிகை மதிப்பீட்டுக் கொள்கை ஆகிய இத் தத்துவங்களின் உதவியைக் கொண்டு அரசைப் பற்றிய கோட்பாடு என்னவென்று விளக்குகிறார் மார்க்ஸ்.

மார்க்சைப் பொறுத்த வரை அரசு செயற்கையான ஓர் அமைப்பு. வகுப்புப் போராட்டங்களின் விளைவால் எழுந்த ஒன்று. இவ்வரசு நாகரிகம் வளர்ச்சியடையாத வகுப்புப் பிரிவினையே இல்லாத பண்டைக் காலங்களிலும் இல்லை; வரப் போகும் கம்யூனிஸ சமூகத்திலும் இருக்காது. ஏனெனில் கம்யூனிஸ சமூகத்தில் வகுப்புப் பிரிவினை இருக்காது. மனிதனின் சமூகத் தன்மையினால் அரசு ஏற்பட்டது என்னும் கோட்பாட்டினை மார்க்ஸ் ஏற்க அறவே மறுக்கிறார். அரசின் நோக்கம் என்ன? அதன் கடமைகள் என்ன? என்ற கேள்விகளுக்கு மார்க்ஸ் அளிக்கும் பதில் ஒரு வகுப்பு மற்ற வகுப்பினைத் துன்புறுத்துவதற்காக உபயோகப்படுத்தப்படும் கருவியே அரசு. பொருளாதார உயர்வுக்கான வழிவகைகளை அரசு செய்து தருகிறது என்று சிலர் கூறலாம். இது உண்மையாகவும் இருக்கலாம். ஆனால், யாருடைய பொருளாதார உயர்வு என்று பார்த்தால் எல்லோருடைய பொருளாதார உயர்விற்காக அல்ல. பொருளாதாரத் துறையில் மேம்பட்டு இருக்கும் வகுப்பிற்கே, அரசு அவ்வழி வகைகளைச் செய்து தருகிறது.ஏனென்றால்,அவ் வகுப்பே அரசினைக் கைப்பற்றி அதன் உதவியைக் கொண்டு மேன்மேலும் தங்கள் செல்வ நிலையைப் பெருக்கிக் கொண்டே போகிறார்கள். எனவே, அவர்களுடைய பொருளாதார நலனையே அரசு கண்காணித்து வளர்க்க உதவுகிறது. ஏனையோர் அரசினால் ஒரு பலனையும் அடைவதில்லை. அதற்கும் பலியேயாகிறார்கள். எனவே, அரசு மக்களுக்கு அடிப்படை உரிமைகள் வழங்க வேண்டும். தன்னுடைய செயல்களைக் குறைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் அதிக சுதந்திரத்தை அனுபவிக்க முடியும் போன்ற கருத்துகள் அவரைப் பொறுத்தவரை அர்த்தமற்றவையாகும். இயற்கை குழந்தைகளுக்குத் தந்தையை அளித்ததுபோல்

மக்களுக்கு அரசு அளிக்கப்படவில்லை. நியாயம், சட்டம் முதலியவற்றை நிலைநிறுத்தும் அமைப்பும் அல்ல. மாறாக அதன் எதிர்ப்பதமே. எனவே, தொழிலாளர் புரட்சி ஏற்பட்டு இவ்வரசிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்கிறார் மார்க்ஸ். ஆனால், முதலாளித்துவம் தன் முழு வளர்ச்சியில் முற்றுப் பெற்றவுடன்தான் தொழிலாளர் புரட்சி ஏற்பட வேண்டும். மேலும் ஒரு நாட்டில் புரட்சி ஏற்பட்டு சோஷலிசத்தைக் கொண்டு வந்தால் மட்டும் போதாது. உலகமெங்கும் புரட்சி ஏற்பட்டு, முதலாளித்துவத்தை உலகத்தை விட்டு ஒழிக்கவேண்டுமென்கிறார். இவ்வாறாகக் கூறும் மார்க்ஸ் தம்முடைய மூலக்கோட்பாட்டு முடிவுகள் சீர்திருத்தவாதி என்னும் முறையில் தம்மால் கண்டு பிடிக்கப்பட்டவையல்ல என்றும், தம்முடைய கண்கள் முன்னால் இருக்கும் வகுப்புச் சண்டைகளையும் அவற்றின் விளைவால் எழும் மக்களது உறவு முறைகளையும், நடக்கும் வரலாற்றின் இயக்கத்தைப் பற்றியும் விளக்கங்கள் கூறும் பொழுது விதிகளின் சொல் வடிவே இது என்கிறார்.

மார்க்ஸிஸம் பற்றிய திறனாய்வு

திறனாய்வாளர்களில் சிலர் எவ்வளவுதான் இரக்கமற்ற வகையில் மார்க்ஸின் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தாலும், அவருடைய சாதனையின் பெருமையை மறுக்க முடியாது. சில முக்கிய உண்மைகளை வெளிக்கொணர்ந்த பெருமை அவரையே சாரும். அவர் காலத்தில் இருந்த தத்துவ அறிஞர்கள் கண்களுக்குப் புலப்படாத சில முக்கிய வளர்ச்சிகளைப் பற்றி அவர் முன்னறிந்தார். முதலாளித்துவத்தின் உச்சக் கட்டத்தில் தேவைக்கு மீறிய உற்பத்தியும் வேலை இல்லாத் திண்டாட்டமுமே விளையுமெனத் தெளிவுற உணர்ந்தார். மேலும் இயந்திரத் தொழில்துறை வளர்ந்தால் முதலாளித்துவம் உள்நாட்டிற்குள் அடங்காமல் வெளிநாடுகளுக்கும் பரவுமென உணர்ந்தார். மேலும் ஒரு நாட்டின் வாணிப, தொழில் வளர்ச்சி தேசீய வளர்ச்சியாகி விடாது என உணர்ந்தார். முதலாளித்துவம் மனிதாபிமானத்திற்கு இடமில்லாத வகையில் எங்ஙனம் மனிதர்களை இயந்திரங்களாக மாற்றிவிடுகிறது என்பதையும், பெரிய தொழிற்சாலைகளிலும் சுரங்கங்களிலும் வேலை செய்வதற்குத் தொழிலாளிகள் அதிக எண்ணிக்கையில் ஒன்று சேர்வதால் அவர்களிடையே ஒற்றுமை உணர்வு வளர்கிறது என்னும் உண்மையை அறிந்தார். மேலும் தொழில் புரட்சி பொருளாதாரத் துறையில் மட்டுமன்று, சமூக உறவுகளிலும் மாறுதல்கள் ஏற்படச் செய்கிறது என்று உணர்ந்தார். வரலாற்று எழுத்தாளர்கள்

வரலாறு எழுதும் பொழுது பொருளாதாரக் காரணக் கூறுகளைப் புறக்கணித்ததைச் சுட்டிக்காட்டி, வரலாறு எழுதுவதில் அவர்களுக்குப் புது சாத்தியங்களைக் காண்பித்தார். ஒரு நாட்டின் அரசியல் சட்ட நிறுவனங்கள் அந் நாட்டின் பொருளாதார முறையைச் சார்ந்திருக்கிறது என்பதை உணர்வித்தார். இது போன்ற பல உண்மைகளை இவர் மக்களுக்குத் தெளிவாகவும், செறிவுடனும் எடுத்துக் காட்டியதால் இவரை 19ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த சமூக தத்துவ எழுத்தாளர் என்றே அழைக்கலாம். இவை ஒருபுறம் இருக்க, இவர் கோட்பாடுகளில் உள்ள குறைபாடுகளைக் கவனிப்போம்.

பொருளாதார சக்திகள் வரலாற்றை இயக்குகின்றன என்று திட்டவட்டமாக மார்க்ஸ் கூறுகிறார். பொருளாதார சக்திகள் தாம் வரலாற்றை இயக்குகின்றன என்றால், மனிதனின் போக்கு விருப்பங்கள் இவற்றுக்கு எந்தவித முக்கியத்துவமும் அளிக்கப்படவில்லை. மேலும், ஒரு மனிதனின் செல்வ நிலையே அவனுக்குச் சமூகத்தில் உயர்நிலையை அளிக்கிறது என்று கூறுவது முற்றிலும் உண்மையாகாது. எடுத்துக்காட்டாக, கல்வியிலோ அல்லது சமூக சேவைகளினாலோ உயர்ந்திருக்கும் ஒருவருக்குக் கிடைக்கும் மதிப்பும், மரியாதையும் வெறும் செல்வத்தில் மட்டும் உயர்ந்திருக்கும் ஒருவருக்குக் கிடைப்பதில்லை. மேலும், வகுப்புகளை இரு பிரிவுகளாகப் பிரித்து அப் பிரிவுகளை இரண்டு தனித் தனிப் பிரிவுகளாக எப்பொழுதும் நினைப்பது சரியல்ல. அவ் வகுப்புகள் அவ்வளவு நிலையானதுமாயும் வளையாத் தன்மையுடையதுமாகக் காட்டுவதும் சரியில்லை. தொழிலாளர் சில சமயம் முதலாளி ஆவதும், முதலாளி தொழிலாளி ஆவதும் சகஜமே. தொழிலாளர்கள் எப்போழும் தொழிலாளர்களாகவே இருப்பார்கள் என்று கூறுவது நம்பும்படி இல்லை. மேலும், முதலாளித்துவம் வளர்ந்து ஒரு நிலையில் தொழிலாளர் வகுப்புடன் எதிர்த்து நிற்கும் என்று மார்க்ஸ் கூறினார். ஆனால், அப்படி ஒன்றும் நிகழ்ந்துவிடவில்லை. எனவே, அவர் தம் கணிப்பில் தவறிவிட்டார் என்பதற்கு இன்றைய வரலாறே சாட்சியாக இருக்கிறது. இவர் தமது மிகை மதிப்பீட்டின் கோட்பாட்டின்படி தொழிலாளர்நிலை சீரழிந்துபோய்க்கொண்டே வந்து புரட்சி செய்யும் நிலையை அடையும் என்றார். ஆனால், தொழிலாளர்களின் நிலை சீர்கெட்டு விடவில்லை. சொல்லப்போனால் அவர்களின் நிலை அன்றைய நிலையைவிட மேலான நிலையில்தான் இருக்கிறது. சென்ற நூற்றாண்டில் அவர்கள் பெற்ற கூலியைவிட இந்த நூற்றாண்டில் பன்மடங்கு அதிமாகத்தான் பெறுகிறார்களே தவிரக் குறைவாக இல்லை. மேலும், மூலதனம் சிலரின் கைகளி

லேயே ஒருமுகப்படுத்தப்படும் என்கிறார். ஆனால், அவருடைய அந்தக் கணிப்பும் தவறிவிட்டது. சிறிய அளவில் மூலதனம் வைத்துச் சிறு சிறு வியாபாரம் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டுதான் இருக்கிறது. தொழிலாளர்கள் புரட்சி ஒன்றினால்தான் தங்கள் இன்னல்களுக்குத் தீர்வு காண வேண்டுமென்பது இல்லை. தற்காலத்தில் காணப்படும் தொழிற் சங்கம் போன்ற அமைப்புகளை அமைத்து, அவற்றின் மூலமாகத் தீர்வு காணலாம் என்பதை மார்க்ஸ் முன் உணரத் தவறி விட்டார். அவர் கூறினாற்போல் வகுப்புப் பிரிவினையற்ற சமூகம் வருங்காலத்தில் அமைக்கப்படுவது என்பது கைக்கெட்டா தொடுவானத்தில் உள்ளது.

இவரது வரலாற்றுப் பிரிவினையிலும் குறைபாடுகள் மலிந்து காணப்படுகின்றன. இவர் வரலாற்று வளர்ச்சியை நான்கு பிரிவுகளாகப் பிரித்தது பொருளற்றதாகும். முரண்பாட்டு வாத முறைக்குப் பொருந்துகிற முறையில் இருக்கிறதே தவிர, அப் பிரிவினையில்பொருந்தாத பல நூற்றாண்டுகளின் வரவாற்றை மார்க்ஸ் மிகச் சுலபமாக மறந்துவிடுகிறார். இவர் மதத்தைப் பற்றிக் கூறும்பொழுது துன்புறும் தொழிலாளிகள் தங்கள் ஏமாற்றங்கள்,' நம்பிக்கைகள் இவற்றைத் திருப்தி செய்ய வேறு வழிகளே இல்லாததால் மதத்திடம் தஞ்சம் பெறுகிறார்கள் என்கிறார். அது ஏற்றுக் கொள்ளும்படியாகஇல்லை.மேலும் முதலாளித்துவம் மேற்குஐரோப்பிய நாடுகளில் மட்டும் காணப்பட்டதே தவிர ஏன் பிறநாடுகளில் காணப்படவில்லை என்னும் கேள்விகளுக்குப் பதில் தரவில்லை. பொருள் ஆக்கம் ஒன்றே வரலாற்றை நிர்ணயிக்கிறது என்றார். முதலாளித்துவத்தின் வளர்ச்சி உலகம் முழுமையிலும் எல்லா நாடுகளிலும் தோன்றியிருக்க வேண்டும். இதிலிருந்து மனிதரின் வளர்ச்சிக்குப் பொருளாக்கம் மட்டுமன்று; வேறு சக்திகளின் செல்வாக்கும் உள்ளது என்பது தெரிகிறது. ஆனால், மார்க்ஸ் அவற்றை ஒதுக்கி விடுகிறார். மேலும், மனிதர்களின் உள நிலை, இயல்பு இவற்றுக்கு மார்க்ஸ் எந்தவித முக்கியத்துவமும் கொடுக்கவில்லை. மனிதர்கள் பெருமைக்காகவும், புகழுக்காகவும் அதிகாரத்தை விரும்புகிறார்கள் என்றும் சிலர் அதிகாரத்தைக் கைப்பற்றுவதையே தங்களது நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள் என்றும் மனித இயல்பின் குறைபாடுகளைப் பற்றியும் மார்க்ஸ் அறிந்து கொள்வதாகத் தெரியவில்லை. மனிதனின் சுய நலங்களைப்பற்றி அறியாதவராய் இருக்கிறார். வகுப்பற்ற சமூகம் கடைசியில் அமைக்கப்பட்டாலும் மனிதர்களின் சுய நலங்களினால் அச் சமூகம் பாதிக்கப்படுமா என்று அவர் கவலைப்படவில்லை. மனித இயல்பை அவர் கணக்கில் எடுத்துக் கொள்ளாதது ஒரு

பெரும் குறைதான். இக் குறைபாடுகளையெல்லாம் பார்க்கும் பொழுது அவருடைய கோட்பாடு விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டது என்று அவர் கூறியதை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இத்தனை குறைபாடுகள் இருந்தும் தற்கால வரலாற்றில் மார்க்ஸிஸம் ஒரு பெரும் சக்தி என்பதை யாராலும் மறுக்க முடியாது. அரசியல் தத்துவ சிந்தனையாளர்களில் மார்க்ஸ் ஒரு மிக முக்கிய இடத்தை வகிக்கிறார்.

8. லெனின் (1870—1924)

மார்க்ஸிற்குப் பிறகு அவரது கோட்பாட்டிற்குப் பல விளக்க வுரைகள் தோன்றின. அவ்வாறு மார்க்ஸிஸத்திற்கு விளக்க வுரைகளைத் தந்தவர்களில் மிக முக்கியமானவர் மார்க்ஸின் சீடரான லெனின் ஆவார். ஆனால், இவரது விளக்கவுரை மார்க் ஸிஸத்தின் உட்பொருளை அடியோடு மாற்றிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இருந்தும் மார்க்ஸின் கோட்பாட்டில் கூறியபடி ரஷ்ய நாட்டில், நடைமுறையில் தொழிலாளர் புரட்சியை ஏற்படுத்திக் காட்டிய பெருமை லெனினைச் சாரும். லெனின் மார்க்ஸின் கோட்பாட்டை அப்படியே ஏற்றுச் செயலாற்றாமல் சில பெரும் மாற்றங்களைப் புகுத்தினார். அம் மாறுதல்கள் தாமாக மார்க்ஸிஸத்தில் புகுத்தியது என்று கூறாமல் மார்க்ஸிஸத்தின் கோட்பாட்டிற்கு இதுவே விளக்கமாகும் என்று கூறிவிட்டார்.

மார்க்ஸ், முதலாளித்துவம் முதிர்ந்த நிலையில், முதலாளி, தொழிலாளி என்ற இரு வகுப்புகளும் ஒன்றையொன்று எதிர்த்து நிற்கும் என்று அறிவித்தார். கீழ்த்தர மத்திய வகுப்பினரும், சிறிது சிறிதாகத் தொழிலாளிகளாக மாறுவர் என்றும் கூறினார். ஆனால், அவர் கூறியது போல் ஒன்றும் நிகழவில்லை. கீழ்த்தர, மத்தியதர வகுப்பினரின் நிலை சீரழியவில்லை. அவர்களின் நிலை முன்பைவிட உயர்ந்த நிலையில் இருந்தது. எனவே, மார்க்ஸ் கூறிய வகுப்புப் போர் நிகழ்வதற்கான அறிகுறிகள் ஏதும் 19ஆம் நூற்றாண்டு முடிந்த பிறகும் காணப்படவில்லை. மேலும் ஐரோப்பா முழுவ திலும் உள்ள சோஷியலிஸப் பற்று மிகுந்தவர்கள் தங்களுக் குள்ளேயே மார்க்ஸிஸ கோட்பாட்டைப் பற்றிக் கருத்து வேறுபாடு கொண்டிருந்தனர். புரட்சி மூலம் வகுப்புப் போரை ஏற்படுத்து வது சிறந்ததா அல்லது படிப்படியாகச் சீர்திருத்தங்கள் மூலமாக வெற்றி காண்பதா என்ற கருத்து வேற்றுமை அவர்களுக்குள் நிலவியது. இவ்வாறாக முதலாவது உலக மகாயுத்தம் ஆரம் பிக்கும் வரை சோஷியலிஸத்தில் பற்றுக் கொண்ட தொழிலா ளர்கள் எவ்விதமான குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளும் எடுக் காமல் வாளாவிருந்தனர். முதலாவது உலக மகாயுத்தம், தேசிய உணர்வைத் தட்டி எழுப்பியது. சோஷியலிச வகுப்பினரிடையே வகுப்புப் போரை ஏற்படுத்தி முதலாளித்துவத்தை ஒழிக்க

வேண்டும் என்னும் உணர்வை அடக்கி, தேசிய உணர்வை மேலோங்கி நிற்கச் செய்தது. இவ்வாருக மார்க்ஸின் முன் அறிவிப்புகள் செயல் முறையில் ஏற்படுவதற்கான அறிகுறிகள் ஏதும் தென்படவில்லை. இவ்வாருக, செயல்படுத்துவதற்கான வேலையை லெனின் மேற்கொண்டார். தம்முடைய 'பேரரசுக் கோட்பாட்டின்' மூலமாக மார்க்ஸிஸத்தைப் புதுப்பித்தார். ஆனால், இவ்வாருன புதுப்பிக்கும் பணியில், மார்க்ஸின் கோட்பாட்டில் பல மாற்றங்களை ஏற்படுத்திஞர். லெனினை ஒரு சிறந்த சிந்தனையாளர் என்று அழைப்பதை விட, திறமை வாய்ந்த நடைமுறைச் செயலாளர் என்றே சிறப்பிக்கலாம்.

லெனினின் பேரரசுக் கோட்பாடு

ஏகாதிபத்தியம் — முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம். (Imperialism–the Highest Stage of capitalism) என்னும் புத்தகத்தில் அவர் கூறுவதாவது: தொழில் துறையில் அதிக அளவு முன்னேற்றமடைந்த நாடுகளில் உள்ள கீழ்த்தர மத்திய வகுப்பினரும், தொழிலாளர் வகுப்பினரும், மார்க்ஸ் கூறியது போன்ற துன்பநிலையை அடையாமல் தப்பிவிட்டனர். இவ்வாறு அவர்கள் தப்பியதால் மார்க்ஸ் அறிவித்தது போன்ற வகுப்புப் போராட்டம் நிகழாமல் போய்விட்டது. தொழிலாளர்களும், கீழ்நிலையில் உள்ள மத்திய வகுப்பினரும் அவ்வாறு முதலாளித்துவம் வளர வளர, அவர்களது ஏழ்மை நிலையும் மிகத் துன்பகரமாகப் போகாதது ஏன் என்ருல், அவர்களது நாடுகள் குடியேற்ற நாடுகள் பலவற்றைக் கைப்பற்றிய காரணத்தால்தான். இவ்வாறு குடியேற்ற நாடுகள் பலவற்றைக் கைப்பற்றியதால் இந்நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் அந் நாடுகளுள் குடியேறி, அங்குள்ள மக்களைச் சுரண்டி இவர்கள் முதலாளிகளாகி விட்டனர். இத்தகைய பேரரசுகளைத் தொழில் வளர்ச்சியடைந்த நாடுகள் ஏற்படுத்தியதால் அங்கேயுள்ள தொழிலாளிகள் குடியேற்ற நாடுகளில் குடியேறி முதலாளிகளாக ஆகிவிட்டார்கள். எனவே, இப்பொழுது உண்மையான தொழிலாளிகள் யார் என்ருல் இவர்களால் சுரண்டப்படுகின்ற குடியேற்ற நாடுகளில் வாழும் மக்களே. அவர்கள் நிலை மிகக் கேவலமான நிலையாக ஆக்கப்பட்டது. சரித்திரத்தின் பல நிலைகளான நில மானிய முறை (Feudalism), முதலாளித்துவ முறை (Capitalism) போன்று, ஏகாதிபத்தியமும் ஒரு படிநிலையே. இது மார்க்ஸ் கோட்பாட்டிற்கு முரண்பட்ட வளர்ச்சியன்று. மார்க்ஸ் இத்தகைய வளர்ச்சியை முன்கூட்டி அறியத் தவறிவிட்டாலும், அவர் விளக்கிய சரித்திர வளர்ச்சியில் இதுவும் அடங்கியுள்ளது.

ஏகாதிபத்தியம் எப்படி வளர்கிறது என்றால், முதலாளித்துவம் வளர்ச்சியடைந்ததும், தொழில் உற்பத்தியும் பெருகி முதலீடு ஒரு சிலரின் கைகளில் மட்டும் அடங்கி முதலாளித்துவ ஆதிக்கத்தை ஏற்படுத்துகிறது. முதலாளித்துவ ஆதிக்கம் என்றால் தொழில் உற்பத்தி பலரிடம் இல்லாமல் ஒரு சிலரின் கைப் பிடியில் அடங்குகிறது.

நிதி நிலையிலும் இத்தகைய நிலையே ஏற்படுகிறது. அதாவது முதலீடு வைத்திருக்கும் முதலாளிகள், வங்கி (Bank) போன்ற அமைப்புகளை ஏற்படுத்தித் தங்களது முதலீட்டை மேன் மேலும் பெருக்குகின்றனர். இப் பெருக்கத்தின் விளைவு என்னவென்றால், ஏற்றுமதிகள் ஏற்பட்டு ஆட்சி தேசிய எல்லையையும் தாண்டி, அயல்நாடுகளில் குடியேற்றங்களை ஏற்படுத்த உதவுகிறது. இவ்வாறாகக் குடியேறியவர்கள் அங்குள்ள மக்களின் சுதந்திரங்களை அழித்து, அவர்களைச் சுரண்டித் துன்புறுத்துகின்றனர். மேலும், ஒரு நாட்டிற்குள் முதலாளிகள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொள்வது ஒரு புறமிருக்க, நாடுகள் வாணிப செயற்களங்களையும் **(Market)**, குடியேற்ற நாடுகளையும் பிடிக்க வேண்டும் என்னும் வெறியில் ஒன்றுக்கொன்று போட்டி போடுவதால் அவற்றுக்குள் போட்டி அதிகமாகிறது. இப் போட்டியின் முடிவு என்னவென்றால் முதலாளித்துவம் முடிந்து, ஒரு புதிய ஒழுங்கு முறை ஏற்படுத்தப்படுகிறது. இவ் வொழுங்கு முறை எப்படி ஏற்படுத்தப்படுகிறது என்றால் தேசியப் போர் என்று ஆரம்பித்து, கடைசியில் முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் ஏற்படும் வகுப்புப் போராட்டமாக முடிவடைகிறது. எனவே, மார்க்ஸ் ஏகாதிபத்திய வளர்ச்சிக்குப் போதிய முக்கியத்துவம் கொடுக்கா விட்டாலும் ஒரு நிலையில் வகுப்புப் போராட்டம் நிகழ்ந்தே தீரும் என்று கணித்துக் கூறியதில் தவறு ஒன்றும் இல்லை என லெனின் கூறுகிறார்.

மார்க்ஸின் முரண்பாட்டுச் சடப் பொருள் வாதத்திற்கு லெனினின் விளக்கவுரை

லெனின், மார்க்ஸின் கோட்பாட்டைப் புதுப்பிப்பதாகத் தம்முடைய 'நாடும் புரட்சியும்' (State and revolution) என்னும் புத்தகத்தில் கூறுகிறார். இப் பணியை இரு முறைகள் மூலமாகச் செய்கிறார். முதலில் மார்க்ஸின் முரண்பாட்டுச் சடப்பொருள் வாதத்தின் அடிப்படை விதிகள் என்ன என்பதை அழுத்தந் திருத்தமாக எடுத்துரைக்கிறார். இரண்டாவது, சோஷியலிசத்தை முன்னேக்கிச் செல்லும் வழி புரட்சிகரமான வழிதானே தவிர,

புரட்சியின்றிப் படிப்படியாக அடையும் முறையன்று என்கிறார். முரண்பாட்டுச் சடப்பொருள் வாதக் கோட்பாட்டின் அடிப்படை விதிகள் என்ன என்று கூறுகையில், அக் கோட்பாட்டின் தன்மை என்ன, மார்க்ஸிஸத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் உள்ள தொடர்பு என்ன என்றும் விளக்குகிறார். ஆனால், இவரது விளக்கவுரை மிகவும் மந்தமானதாகவும், அலுப்புத் தரக் கூடியதாகவும் மேலெழுந்தவாரியான நோட்டமாகவும் உள்ளது. மார்க்ஸிஸத்தைப் படிப்படி வளர்ச்சி முறையில் அடையலாம் என்று கூறிவந்த பர்ன்ஸ்டின் (Bernstern) போன்றோருக்கு லெனின் 'நாடும் புரட்சியும்' என்னும் புத்தகத்தின் மூலமாகப் பதிலடி தருகிறார். கோட்பாடன்று, செயல் முறையே சிறந்த ஆயுதம் என்னும் முடிவைக் கூறுகிறார். எனவே, இவரைத் திறமைவாய்ந்த ஒரு புரட்சியாளர் எனலாம். ஏனெனில், புரட்சி ஒன்றாலேயே சோஷியலிஸத்தை அடைய முடியும் என்று வலியுறுத்துகிறார். புரட்சியை எதிர்ப்பவர்களை வன்மையாகக் கண்டித்து ஏசுகிறார்.

மார்க்ஸ், தமது பிற்கால வாழ்க்கையில், தொழிற்றுறையில் அதிக அளவு முன்னேற்றமடைந்த சமுகங்களில், எடுத்துக்காட்டாக, பிரிட்டன் போன்ற நாடுகளில் சோஷியலிஸத்தைப் புரட்சியின்றிப் படிப்படியாக அடைய முடியும் என்று நினைத்தார். மேலும் 1885ஆம் ஆண்டு வெளியான மார்க்ஸின், 'பிரான்சில் வகுப்புப் போராட்டம்' (Class struggle in France) என்னும் புத்தகத்திற்கு முன்னுரை எழுதிய என்கெல்ஸ்,போராட்டம் என்றால் கண்டிப்பாகப் பல இன்னல்களைத் தருவது நிச்சயம். ஆகையால், போராடித்தான் ஆகவேண்டும் என்ற கட்டாயம் கிடையாது என்று கூறினார். எனவே, இக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு மார்க்ஸிற்குப் பிறகு அவரது கோட்பாட்டைப் புனராய்வு செய்தோரில் சிலர், புரட்சியைப் பற்றிய அவரது கருத்தைத் திருத்தி அமைத்தனர். தொழிலாளருக்கும், முதலாளிகளுக்கும் இடையே நிகழும் வகுப்புப் போராட்டத்தில், தொழிலாளர் வென்று, பிறகு முதலாளித்துவத்தை அடியோடு ஒழிப்பதற்காகத் தொழிலாளர் ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்துவார்கள். முதலாளித்துவம் அடியோடு ஒழிந்ததும் கடைசியில் நாடு என்ற அமைப்பே மடிந்துவிடும் என்று மார்க்ஸ் கூறினார். நாடு மடிந்துவிடும் என்ற அவரது கூற்றை எடுத்துக்கொண்டு, புரட்சியின் மூலமாகத்தான் நாடு முடிவில் மடிவுறும் என்ற பொருளை எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை என்றும், வயதுவந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை, (Adult suffrage) தொழில் துறையில் அனைவருக்கும் பங்கு (Incrasing partner ship in Industry) இவற்றின் மூலம் புரட்சியின்றி சோஷியலிசத்தைஅடையலாம் என்றும்,வலுக்கட்டாயமாக முதலா

ளித்துவத்தை நீக்குவது அவசியமற்ற செயல் என்றும், மேற்கூறிய முறைகள் மூலம் முதலாளித்துவம் மடிந்துவிடும் என்றும் அப் புனராய்வாளர்கள் கூறினர். 'மடிந்துவிடும்' என்று மார்க்ஸ் குறிப்பிட்டது முதலாளித்துவத்தையே என்று அவர்கள் கூறினார்கள்.

இவ் வாதத்தை லெனின் வன்மையாக எதிர்க்கிறார். தவிர்க்க முடியாத இரண்டு எதிர்மறை சக்திகள் மோதியே சுதந்திரம் வளர்ந்து உச்சத்தை அடைகிறது. இந்த மோதல் இல்லாமல் படிப்படியாக வளர்ந்து அந்நிலையை அடைய முடியும் என்ற கருத்து அர்த்தமற்றது. மேலும், நாடு மறைந்து மடிந்துவிடும் என்பதன் பொருள் என்னவென்றால், சோஷியலிசப் புரட்சிக்குப் பிறகு, முதலாளித்துவத்தை வேருடன் ஒழிப்பதற்காக இடைக்காலத்தில் ஏற்படும் தொழிலாளரது நாடும் சிறிது காலத்தில் மடிந்துவிடும் என்றே பொருள். நாடு மடிந்துவிடும் என்று மார்க்ஸ் உணர்த்தியது சோஷியலிஸ சீர்திருத்தங்கள் ஏற்பட ஏற்பட முதலாளித்துவ நாடு மறைந்துவிடும் என்ற பொருள் அன்று. புரட்சிக்குப் பிறகு நாடு என்னும் அமைப்பே மடிந்துவிடும் என்பதுதான் சரியான பொருள் என்கிறார் லெனின். எனவே, மார்க்ஸ் ஆரம்ப காலத்தில் புரட்சிக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை லெனின் புதுப்பித்துப் புரட்சி நிகழ்ந்தால்தான் பின் சோஷியலிசத்தை அடைய முடியும் என்று வலியுறுத்திக் கூறுகிறார். மேலும், ஏகாதிபத்தியத்தில் சமாதான முறையில் சோஷியலிசத்தை அடைய முடியும் என்பது பகற் கனவு என்கிறார். லெனின் புரட்சி ஏற்பட்டே தீரவேண்டும் என்பதை வலியுறுத்திப் பலரின் மனதைக் கவரும்படியாக எழுதியது அவரது சிறப்பாகும்.

லெனின் மார்க்ஸிசத்தை ரஷ்யாவில் புகுத்திய முறை

மார்க்ஸின் கோட்பாட்டிற்கு விளக்கவுரைகள் தந்ததுடன் நிற்காமல் லெனின் அத்தகைய புரட்சியை ரஷ்யாவில் ஏற்படுத்த முடியும் என்றும் அதற்குச் சாதகமான சூழ்நிலை ரஷ்யாவில் அச்சமயம் இருந்ததாகவும் நினைத்தார். முதல் உலக மகாயுத்தத்தில் ரஷ்ய மன்னர் தோல்வியுற்றது ஒரு சாதகமான சூழ்நிலையாக லெனினுக்கு அமைந்தது. இதை ஒரு காரணமாக வைத்துக் கொண்டு குறைந்த எண்ணிக்கையும், கட்டுப்பாடும் கூடிய புரட்சியாளர்களின் உதவியால் ஒரு கட்சியை அமைத்து வன்முறையில் ஒரு புரட்சியை வெற்றிகரமாக நடத்தி முடிக்க வேண்டும் என நினைத்தார். ஆனால், அவர் புரட்சியை வெற்றிகரமாக நடத்த முடியும் என நினைத்தாலும் மார்க்ஸின் கோட்பாடே அவருக்கு ஒரு தடையாக இருந்தது. எங்ஙனம் என்றால்

மார்க்ஸ் கூறியபடி ரஷ்யா, புரட்சி ஏற்படுவதற்கான நிலையை அடைந்து விட்டதா என்று கேட்டால் இல்லையென்றே கூறலாம். முதலாளித்துவம் பூரண வளர்ச்சி அடைந்த பிறகே, சோஷிய லிசத்தைப் புரட்சி மூலம் கொண்டுவர முடியும் என மார்க்ஸ் கூறியிருந்தார். சில ரஷிய மார்க்ஸ் கொள்கையினர் முதலாளித் துவம் வளர்ச்சியடையாத அன்றைய நிலையில் இருந்த ரஷ்யாவில் லெனின் கூறியபடி சுருக்கு வழி மூலம் புரட்சியை நடத்தக் கூடாது என்று நினைத்தனர். முதலாளித்துவம் முழு வளர்ச்சியை அடைந் ததும் அதற்கு எதிர்மறையாகத் தொழிலாளர் வகுப்பினரின் எண்ணிக்கையும் பெருகி அவர்களது துன்பநிலையும் உச்சத்தை அடையும். கடைசியில் ஒரு நிலையில் புரட்சிகர சூழ்நிலை ஏற்படும். இந்நிலையில்தான் முதலாளித்துவம் முழு வளர்ச்சி அடைந்து விட்டது என்று பொருள். இந்நிலையில் புரட்சி புறத் தூண்டுதலின்றித் தானாக எழுந்து சோஷியலிசத்தை ஏற்படுத்தும். இத்தகைய நிலை ரஷ்யாவில் அப்பொழுது ஏற்படவில்லை. முதலா ளித்துவம் தன் வளர்ச்சியில் முற்றுப்பெறவில்லை. அங்குப் புரட்சி நடத்துவதற்கான மனநிலை தொழிலாளிகளிடையோ அல்லது சூழ்நிலையோ எதுவும் காணப்படவில்லை.

மேலும், லெனினின் வாதத்தில் அவர்கள் கண்ட மற்றொரு குறை என்னவென்றால் கட்டுப்பாடு மிகுந்த, சுதந்திரம், ஜனநாயகம் இவையற்ற ஒரு குறுகிய கட்சியை ஏற்படுத்தி அதன் வாயிலாக, புரட்சியை நடத்த வேண்டும் என்னும் லெனினின் வாதம் சரிதானா எனச் சந்தேகித்தனர். இச் சந்தேகத்தைப் போக்க அத்தகைய குறுகிய கட்சியே புரட்சியை நடத்த ஏதுவாகும் என்றும் பல உரிமைகளை அங்கத்தினர்களுக்கு அளித்து, ஜனநாயக முறையில் கட்சியை அமைத்தால் வீணாக எங்கும் விளம்பரமாகி, புரட்சி வெற்றிகரமாக நடத்த முடியாமல் கெட்டுவிடும் என எடுத்துரைத்தார் லெனின். மேலும் ஏகாதி பத்தியம் தலைவிரித்தாடும் சூழ்நிலையில் அத்தகைய கட்டுப் பாடற்ற சுதந்திரமான கட்சி அமைப்பு ஆபத்தையே தரும் எனவும் எடுத்துரைத்தார். அவருடைய வாதங்களை அவர்கள் ஓரளவுக்கு எடுத்துக் கொண்டாலும் அது எவ்வளவு தூரத்திற்குச் சரி, அது நல்லதுதானா என்ற சந்தேகம் ப்ளெக்கனேவ் (Plekhanov) போன்றோரின் மனத்தை விட்டு நீங்கவில்லை. மேலும் லெனின் மார்க்ஸின் கோட்பாட்டை எவ்வளவு தூரத்திற்குச் சரியாக நடைமுறையில் நிறைவேற்றுவது என்ற ஆர்வத்தைவிடப் புரட்சியை எவ்வளவு தூரத்திற்குத் தம் கொள்கைப்படி நடத்தி வைப்பது என்பதிலேயே அதிக ஆர்வத்தைக் காண்பித்தார்.

மார்க்ஸிஸத்தை நடைமுறையில் நடத்திக் காட்டுவது என்பது சுலபமான காரியமன்று. பல சந்தேகங்களுக்கும், சிக்கல்களுக்கும் மார்க்ஸ் எவ்வளவுதான் தர்க்கரீதியான வாதங்களால் விளக்கினாலும் சரியான பதிலைத் தரவில்லை. புரட்சியை எப்படி நடத்த வேண்டும், அதைத் தலைமை தாங்குவோரின் பங்கு என்ன, தொழிலாளர்கள் அனைவரும் ஒருங்கே சேர்ந்து பொங்கி எழ வேண்டுமா ? அல்லது ஒருவர் அல்லது ஒருசிலர் தங்களது திறமையால் அனைவரையும் ஒன்றுகூட்டித் தலைமை தாங்கிப் புரட்சியை நடத்தவேண்டுமா? என, இக் கேள்விகளுக்கெல்லாம் மார்க்ஸ் விவரமாக ஒன்றும் கூறவில்லை. ஒரு சமயம் புரட்சிக்கான நிலை வளர்ந்ததும் புரட்சி தானாக வெடிக்கும் என்கிறார். மற்றொரு சமயம், புரட்சி நடப்பதற்கு முன் குறிப்பிட்ட சூழ்நிலையின் அரசியல் பொருளாதார நிலை என்ன என்று விவரமாக ஆராய வேண்டும் என்கிறார். சுருக்கமாகக் கூறின், புரட்சிகரமான சூழ்நிலை தானாகவும் வளரவேண்டும், அதை அறிந்து செயல்படுவதற்கான தலைமையும் வேண்டும் எனக் கொள்ளலாம். ஆனால், அதேசமயம், தலைமை எவ்வளவு தூரம் தன் பங்கை ஏற்று நடத்த வேண்டும், தொழிலாளர் வகுப்பு எவ்வளவு தூரம் தன் பங்கைச் செய்ய வேண்டும், இவை இரண்டின் சமநிலையை எவ்வாறு காப்பாற்ற வேண்டும், இவை அனைத்தையும் பற்றி மார்க்ஸ் விவரமாகக் கூறுது விட்டுவிட்டார்.

லெனின் ரஷ்யாவில் புரட்சியைச் செயல்படுத்துவதற்கான பணியை மேற்கொள்ள நினைத்தபோது, மார்க்ஸின் படிப்பினையில் புரட்சிக்கானநிலைவளர்ந்துள்ளதா என ஆராய்ந்து செயல்படுவதற்கான தலைமை வேண்டும் என்னும் பகுதியை மட்டும் எடுத்துக் கொண்டார். முதலாளித்துவமுறை முற்றிலும் வளர்ந்ததும் புரட்சிக்குச் சாதகமான சூழ்நிலையும் வளர்ந்து, தொழிலாளர் வர்க்கம் தாமாகவே பொங்கி எழும் என்னும் பகுதியை விட்டுவிட்டார். மேலும்,மார்க்ஸ்,கம்யூனிசக்கட்சி தொழிலாளர்களின் முன்னணிப் படையாகத் திகழ வேண்டுமே தவிர, தொழிலாளிகளின் எஜமானாக இருக்கக் கூடாது என்று வலியுறுத்தினார். ஆனால், லெனின் இதற்கு எதிர்மாறான புதிய கருத்தைத் தருகிறார். தொழிலாளர்களை அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கும் வேலையை அறிவுத் திறன் வாய்ந்த ஒருசிலர் தலைமை ஏற்க, ஏனைய தொழிலாளர்கள் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து பின்பற்றி நடக்க வேண்டும் என்று கூறினார். எனவே, அவர்களில் அறிவுத் திறன் வாய்ந்தோரே வழிகாட்டியாக இருத்தல் வேண்டும் எனக் கூறினார்.

லெனின், கட்சியைப் பற்றி மார்க்சிசத்திலிருந்து மாறுபட்ட கருத்துகளைத் தந்ததால் பல விளைவுகள் ஏற்பட்டன. பொருளா

தார உற்பத்தி நிலை மட்டும் உதவினுல் போதாது. புரட்சி ஏற்படக் கருத்துருவம் வேண்டும் என்பதே. அதன் விளைவு, அதாவது புரட்சி முதலாளித்துவம் நன்கு வளர்ந்ததும், தொழிலாளர் நிலை மிகக் கேவலமான நிலையை அடைந்து, தானுக ஏற்படும் என்ற மார்க்ஸ் கருத்தை மாற்றி, ஒரு சிலரின் எண்ணக் கருத்துகளாலேயே புரட்சி ஏற்படும் என்று லெனின் கூறுகிருர். மார்க்ஸுக்கு, மிக அதிக எண்ணிக்கையுடைய தொழிலாளர்கள், குறைந்த எண்ணிக்கையுடைய முதலாளிகளைத் தங்கள் வலிமையால் மிகச் சுலபமாகத் திணற அடித்து விடுவார்கள். இதனுல் புரட்சி ஏற்பட்டாலும் இதில் வன்முறை குறைந்த அளவிலேயே இருக்கும் என்ருர். ஆனுல், லெனின் புரட்சி வன்முறை மிக்கதாக இருக்கும் என்கிருர். இவ்வளவு மாறுபட்ட கருத்துகளை அவர் கொண்டிருந்தாலும் இவையனைத்தையும் தம் சொந்தக் கருத்தாகக் கூருமல், மார்க்ஸிஸத்தின் சரியான விளக்கவுரை இதுவே என்று கூறுகிருர். எனவே, அவர் கம்யூனிசக் கட்சியை ஏற்படுத்தி, புரட்சியை நடத்தியது, மார்க்ஸ் கூறிய 'சோஷியலிசப் புரட்சி' என்று அழைப்பதைவிட, லெனினின் 'சோஷியலிசப் புரட்சி' என்றே அழைக்கலாம். அவர் மார்க்ஸின் கோட்பாட்டை நிரூபிப்பதைவிட, கிடைக்கும் சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்துவதற்காகப் புரட்சியை ஏற்படுத்தி வெற்றிகரமாக நடத்திஞர் என்று கூறுவதே சரியாகும்.

தொழிலாளர் வர்க்கத்தின் எதேச்சதிகாரம்
(Dictator ship of the Proletariat)

இவ்வாருக, லெனின் சாதாரணத் தொழிலாளிகளின் உள்ளங்களில், புரட்சிப் புயல் தானுக உருவாகாது; மாருக அவை செயல் திறன்படைத்த சிலரால் தொழிலாளர்களுக்கு உணர்த்தப்பட வேண்டும் என்று சொல்லியதால் மற்ருெரு விளைவும் இருக்கிறது. அதாவது தொழிலாளிகளின் ஏகாதிபத்தியத்திற்கு மார்க்ஸ் கூறிய விளக்கத்திற்கு மேல் இவர் ஒரு புதிய விளக்கத்தைத் தருகிருர். அதாவது மார்க்ஸிற்கு அரசு என்பதே, அது எத்தகைய அரசாக இருந்தாலும் சரி, அது மேலான வகுப்பு, கீழானவகுப்பைக் கொடுமைப்படுத்த உதவும் ஒரு கருவியே ஆகும். எனவே, தொழிலாளர் புரட்சி ஏற்பட்டு, வெற்றியடைந்தவுடன் முதலாளித்துவம் அழிந்து, தொழிலாளர்களின் ஏகாதிபத்தியம் நிறுவப்படுகிறது. மார்க்ஸ் தொழிலாளர்களின் ஏகாதிபத்தியம் என்று கூறியதன் பொருள் ஒரே கட்சியின் ஏகாதிபத்தியம் என்ற பொருளில் அன்று. தொழிலாளர்கள் முதலாளித்துவத்தைக் களைந்தெறிந்து வெற்றி அடைந்தார்களாஞல், பெரும்பாலான

எண்ணிக்கையுள்ள தொழிலாளர்கள் அரசை ஏற்படுத்துகின்றனர். இவ்வரசு முன்பு முதலாளித்துவச் சிறுபான்மை அரசைப் போலல்லாது, ஜனநாயக முள்ளதாக இருக்கும் என்கிறார். ※ ஆனால் லெனின், சாதாரணத் தொழிலாளர் கூட்டத்திற்குப் புரட்சியை நடத்தவோ அல்லது சிக்கலான அரசியல் கொள்கைகளைப் புரிந்து செயல்படுத்தவோ இயலாது. ஆதலால் திறனுள்ள கட்டுப்பாடு உடைய அவர்களில் சிலரே, ஏனையோரைத் தலைமை தாங்கிப் புரட்சியை நடத்தி, நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று கூறுகிறார். இதனால் தொழிலாளர்களின் ஏகாதிபத்தியம் தொழிலாளர்களின்மேல் ஏகாதிபத்தியமாக மாறுகிறது என்று ட்ராட்ஸ்கி (Trotsky) கம்யூனிச கட்சியைப் பற்றிய லெனினின் கருத்தைக் குறிப்பிட்டுக் கூறுகிறார். ※ லெனினும் தொழிலாளர்களின் ஏகாதிபத்தியம் ஒரு கட்சி ஏகாதிபத்திய நாடாகிறது என ஒப்புக்கொள்கிறார்.

இவ் வுண்மையை லெனின் அரைமனத்துடன்தான் ஒப்புக்கொள்கிறாரே தவிர, விரும்பி முழு மனத்துடன் ஒப்புக்கொள்ளவில்லை. இதில் குறிப்பாகக் கவனிக்க வேண்டியது என்னவெனில், மார்க்ஸின் வழியிலிருந்து மாறுபட்டு அவர் போகப் போக, எவ்வளவு தூரம் இம் மாறுபாடுகளை மார்க்ஸின் கொள்கையுடன் ஒத்துப்போக வைக்க முடியும் எனத் தீவிரமாக முயற்சிசெய்கிறார். ஆனால், புரட்சியில் இவரைப் பின்பற்றியோரில் சிலர், ரஷிய அரசு தொழிலாளர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு வகையான அரசு என்று கூறலாமே தவிர, அது ஜனநாயகமாகாது என வெளிப்படையாகக் கூறினார்கள். ஆனால், லெனின் தொழிலாளர் வகுப்பு, ஆளும் வகுப்பாக மாறியவுடன் அது ஜனநாயக அரசிற்குச் சமமாகும் என்று வலியுறுத்துகிறார். புரட்சிக்குப் பிறகு நிறுவப்படும் நாடு முழு ஜனநாயக நாடு என்று கூறுகிறார். மேலும், அவர் சில குழப்பங்களையும் உடன் சேர்க்கிறார். தொழிலாளர் நாடே ஜனநாயக நாடாகும். ஆனால், முழு ஜனநாயகத்தை எப்பொழுது அடைய முடியும் என்றால் நாடே இல்லாமல் மறையும் பொழுது தான் என்கிறார் லெனின். அப்படி நாடே இல்லாத பொழுது

※ 'The first step in the revolution by the working class is the raising of the proletariat to the position ofr uling class and to estalplish democracy' —*MARX*.

'If anything is certain it is that our party and the working class can only come to power under the democratic republic.' —*ENGELS*.

※ 'The replecement of the dictatorship of the proletariat by a dictatorship over the proletariat, of the political rule of the class by organizational rule over tha class' — *TRODSKY*.

ஜனநாயகமும் மறையும் என்கிருர். இந்த முரண்பாடுகளால் லெனின் அதிக குழப்பங்களேயே ஏற்படுத்துகிருர்.

லெனின் தொழிலாளிகளின் ஏகாதிபத்தியத்தை ஜனநாயகம் தான் என்று கூறுவது முரணுக இருந்தாலும், கட்சிக்குள் விவாதிக்கும் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் முதலியவை இருப்பதைத் தடுக்கவில்லே. தற்போது ரஷ்யாவில் கம்யூனிசக் கட்சியில் இருப்பதைவிட, அதிக சுதந்திரத்தையே அவர் அளித்தார். மேலும் அவர் கட்டுப்பாடான, அதிக சுதந்திரமற்ற ஒரு சிறு கட்சிக் குழுவின் ஆட்சியில் ஜனநாயகம் இல்லாவிட்டாலும், போகப் போக, மக்கள், ஜனநாயக முறையில் தலைமையைத் தேர்ந்தெடுப்பார்கள் என்றும், கட்சி, புரட்சியை நடத்தி முடித்தவுடன் சிறிது காலத்தில் நாடும் மடிந்துவிடும் என்றும் நம்பினுர். ஆனுல், அவரது நம்பிக்கை வெறும் வீண் நம்பிக்கையே ஆகும்.

ஏனெனில், லெனினே எதேச்சதிகாரம்தான் செலுத்தி வந்தார். ஜனநாயக அதிகாரக் குவிப்புமுறை (Democratic centralism) என்னும் தம் கொள்கைப்படி கட்சியின் ஒற்றுமைக்காகக் கீழ்ப்படியில் இருப்போர் தமக்கு மேல் படியில் இருப்போருக்குக் கீழ்ப்படிதல் வேண்டும் என வலியுறுத்தினுர்.

இவ்வாருக, ரஷ்யா அவரால் கம்யூனிச நாடாக மாறினுலும், மார்க்ஸியக் கோட்பாட்டில் அவர் ஏற்படுத்திய மாறுதல்கள் மிக்க குறிப்பிடத் தக்கவையாகும். லெனினின் முக்கியத்துவம் இதிலேயே அடங்கியுள்ளது.

9. ஸ்டாலின் (1879—1953)

லெனினுக்குப் பிறகு அவரது கருத்துகளும், கொள்கைகளும் ரஷியாவில் முன்னைவிட அதிகமாக வரவேற்கப்பட்டன. லெனினுக்குப் பிறகு ரஷ்ய அரசை வெற்றிக் கரத்துடன் கைப்பற்றியவர் ஸ்டாலின் ஆவார்.

கம்யூனிசக் கொள்கைகளை மார்க்ஸ் கூறிய வழியிலிருந்து மாற்றித் தாம் மேற்கொண்ட காரியத்திற்கு, அதாவது ரஷ்யாவில் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்னும் காரியத்திற்குச் சாதகமாகப் பொருள் கூறியவர் லெனின். அவருக்குப் பிறகு வந்த ஸ்டாலின், மேலும் மார்க்ஸின் கோட்பாட்டைச் சற்று மாற்றி, தம்முடைய எதேச்சதிகாரத்திற்குச் சாதகமான முறையில் பொருள் கூறினர். இவ்வாருக, கம்யூனிசக் கோட்பாடு எடுப்பார் கைப்பிள்ளையாகி ஒவ்வொருவரும் தங்களுக்கேற்ற முறையில் அதற்கு விளக்கவுரை தர முற்பட்டனர். ஸ்டாலின் லெனினின் விளக்கவுரையில் இரண்டு குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தினர். அவை என்னவென்ருல் புரட்சியைப் பற்றிய கருத்துகளும், மற்ருென்றில் 'ஒரு தேசத்தில் சோஷியலிசம்' என்னும் புதிய கொள்கையுமாகும். (Socialism in one Country)

ஒரு தேசத்தில் சோஷியலிசம்
(Socialism in one Country)

லெனின் ரஷ்யா வெற்றிகரமான புரட்சிக்குப் பிறகு, சக்தி வாய்ந்த தொழிலாளர் கோட்டையாக மாறி, அத்துடனில்லாமல், மேலும் வேறு நாடுகளிலும் சோஷியலிசத்தைப் பரப்பி, அதன் மூலம் இன்னும் சக்திவாய்ந்ததாக ஆகவேண்டும் என விரும்பினர். எனவே, சோஷியலிசத்தை லெனின் சர்வதேச வடிவு கொண்டே நோக்கினர். எனவே, ரஷ்யாவில் மட்டும் சோஷியலிசத்தை ஏற்படுத்தினல் போதாது, உலகம் முழுமையும் புரட்சி ஏற்பட்டு, சோஷியலிசம் அமைக்கப்பட வேண்டும். இல்லையேல் ரஷ்யாவில் சோஷியலிசமே தோல்வியுறும் என எண்ணினர். ஆனல், இதற்கு மாருகத் தம்முடைய, 1924-ஆம் ஆண்டு எழுதிய லெனினிசத்தில் உள்ள பிரச்சினைகள் (problems

of Leninism) என்னும் புத்தகத்தில், உலகிலுள்ள நாடுகள் அனைத்தும் முதலாளித்துவ நாடுகளாக இருந்தாலும் கம்யூனிஸத்தை ரஷ்யாவில் மட்டும் நிலைநிறுத்த முடியும் எனக் கூறுகிறார். இவ்வாறாக ஒரு நாட்டின் சோஷியலிசத்தில் நம்பிக்கை, ஸ்டாலினால் ஒரு கொள்கையாக வளர்ந்தது. இது லெனின் கருத்திலிருந்து மாறுபட்டது. மேலும் இக் கருத்து ஸ்டாலினால் வெகு காலமாகக் கொண்டிருந்த ஒன்றன்று. ஆரம்ப காலங்களில் இவர் அதிகாரத்திற்கு வருவதற்கு முன்பு சோஷியலிசம் முழு வெற்றியடைய ரஷ்யா மட்டும், சோஷியலிச நாடாக மாறினால் போதாது என்று கூறி வந்தார். ஆனால், லெனினின் மறைவிற்குப் பிறகு அதிகாரத்தைக் கைப்பற்ற இவருக்கும், ட்ராட்ஸ்கிக்கும் நடந்த போராட்டத்தில் ட்ராட்ஸ்கிக்கு எதிராக இந்த ஆயுதத்தை உபயோகப்படுத்தித் தம்முடைய சாதுரியத்தால் வெற்றி கண்டு அதிகாரத்தைக் கைப்பற்றினார். எனவே, இக் கருத்து வெகு நாட்களாக இருந்துவந்த ஒன்றன்று. திடீரென வளர்ந்த ஒரு கருத்தாகும். மற்ற எல்லா நாடுகளிலும் முதலாளித்துவம் இருந்தாலும் பரவாயில்லை. அந் நாடுகள் அனைத்தும் சோஷியலிஸம் பரவா விட்டாலும் பரவாயில்லை. மற்ற நாடுகளிலும் புரட்சி ஏற்பட்டு சோஷியலிசம் ஏற்பட்டால்தான் ரஷ்யாவில் சோஷியலிசம் நிலையாக இருக்கும் என்று கொள்ள வேண்டியதில்லை. இரஷ்யா தன் சுய முயற்சியாலும், தொழிலாளர்களால் நிறுவப்பட்ட அரசின் உதவியைக் கொண்டும் தன் செல்வ நிலையைப் பெருக்கி முன்னேற முடியும் எனக் கூறினார். இக் கொள்கை பலரையும் கவர்ந்ததால், இவ்வாயுதம் அதிகாரத்தைக் கைப்பற்ற ஸ்டாலினுக்கு உதவியாக இருந்தது.

ஆனால், இக் கொள்கையை, அதிகாரத்தைக் கைப்பற்றும் அந்த நேரத்திற்காக உபயோகப்படுத்தினாரே தவிர, அதிலுள்ள குறைபாடுகளுக்கு அவர் சரிவரப் பதில் தரவில்லை. இவருடைய கொள்கைப்படி சோஷியலிச நாடாக ரஷ்யா மட்டும் மாறி, மற்ற நாடுகளுடன் வாணிபம் போன்ற, தொடர்பின்றித் தனித்து நின்றால் அதன் பொருளாதார நிலை சீர்குலையும். அவர் காலத்தில் ரஷ்யாவில் பொருளாதார நிலை தாழ்வாகவே இருந்தது. மேலும் இவர் தம் கொள்கையில் எப்பொழுதும் நிலையாக இல்லை. இரஷ்யாவில் மட்டும் சோஷியலிசம் இருந்தால் போதும் என்று கூறினார். சில சமயங்களில் இக் கருத்தை மாற்றி, சோஷியலிசம் ரஷ்யாவில் மட்டும் வெற்றி கண்டால் போதாது, சுற்றியுள்ள முதலாளித்துவ நாடுகள் ரஷ்யாவை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் வரையில் இரஷ்யாவில் சோஷியலிசம் பத்திரமாக இருக்காது என்று கூறினார். எனவே, ஏனைய நாடுகள் அனைத்திலும் புரட்சி ஏற்பட வேண்டும்

என நம்பினார். இவ்வாறாக, ஸ்டாலின் ஒரு நிலையான நம்பிக்கை இன்றி, ஒருமுறை ஒரு விதமாகவும், மற்றொரு சமயம் அதற்கு எதிர் மாறான கருத்தையும் கூறினார். ஒரு முறை உலகம் முழுமையும் சோஷியலிசத்தை ஏற்படுத்துவது சுலபமன்று என்பதை ஒப்புக்கொண்டார். அதே சமயம் ஏற்கெனவே ரஷ்யாவில் ஏற்படுத்தப்பட்ட சோஷியலிசத்தை அண்டை நாடுகளில் உள்ள முதலாளித்துவம் சிதைத்துவிடலாம் எனவும் ஒப்புக்கொண்டார். மேலும் உலகத்தில் தொழிலாளர் புரட்சி ஏற்படலாம் என்றும், அம்மாதிரி புரட்சி ஏற்பட்டால் ஏழ்மையான நிலையில் இருக்கும் ரஷ்யாவிற்கு உதவியாக இருக்கும் என்ற நம்பிக்கையையும் தெரிவித்தார். இதனால் உலகம் முழுவதும் சோஷியலிசப் புரட்சி நடக்குமா? அம்மாதிரிப் புரட்சிகள் நாடுகளில் தானாக ஏற்படாவிட்டால், நடப்பதற்கு இரஷ்யா முழு முயற்சி செய்யுமா? போன்ற கேள்விகளுக்குத் திட்ட வட்டமான பதில் எதுவும் ஸ்டாலினின் கருத்துகளில் புலப்படவில்லை.

இவ்வாறு ஸ்டாலின் தெளிவான பதில்களைத் தராவிட்டாலும் அவரது 'ஒரு தேசத்தில் சோஷியலிசம்' என்னும் கொள்கையில் சில முக்கியத்துவங்கள் அடங்கியுள்ளன. அதாவது, ரஷ்யா மற்ற நாடுகளில் புரட்சி ஏற்படுவதற்கான ஓர் ஏது என்ற கருத்தை மாற்றி, ரஷ்யா சோஷியலிசத்தைச் சக்தியாக வைத்துக்கொண்டு முன்னேறும். ட்ராட்ஸ்கி போன்றவர்கள் கூறியதுபோல், ரஷ்யாவின் சோஷியலிசம் ரஷ்ய நாட்டின் நன்மைக்காக ஏற்பட்டது மட்டும் அன்று. உலகில் உள்ள மற்ற எல்லா நாடுகளிலும் புரட்சி ஏற்படச் செய்து சோஷியலிசத்தை உண்டுபண்ணுவதற்காகவும் தான் என்ற கருத்தை மாற்றி ரஷ்யாவின் சோஷியலிசம் ரஷ்ய முன்னேற்றத்தையே முடிவாகக் கொண்டுள்ளதே தவிர, பிற நாடுகளில் சோஷியலிசத்தை ஏற்படுத்தத் தோன்றியதன்று. அதாவது, அதன் முடிவு ரஷ்யாவின் முன்னேற்றமே என்பதை உணர்த்தியது. மேலும் பழைய பால்ஷீலிக் கருத்து என்னவென்றால் முன்னேற்றம் அடைய ஐரோப்பிய நாடுகளே உலகத்தின் மையப் புள்ளியாகும். பிற்போக்கான ரஷ்யா, ஐரோப்பாவில் புரட்சி ஏற்பட உதவலாமே தவிர, மற்றப்படி தான் முன்னேற, ஐரோப்பாவின் சக்தியை நம்பியிருக்க வேண்டும். எனவே, ஐரோப்பாவில் புரட்சியை ஏற்படுத்த ரஷ்யா முழுமுச்சுடன் இறங்க வேண்டும் எனக் கூறினார். ஆனால், ஸ்டாலினுக்கு ரஷ்யாவே உலகத்தின் மையப் புள்ளி. முதலாளித்துவ ஐரோப்பாவைவிடப் பன்மடங்கு உயர்வான நாகரிகத்தையும், வளர்ச்சியையும் அடைய முயல்வதே யாராலும் மாற்றமுடியாத அதன்முடிவு. இரஷ்யா பிற்போக்காகவும் பிற நாடுகளை விட்டு ஒதுங்கியும் இருந்தாலும், தன்னிடம் உள்ள

சோஷியலிசம் என்னும் உண்மையை வைத்துக்கொண்டு தன்னை மட்டும் அன்று, மற்ற எல்லா நாடுகளிலும் உள்ள அல்லலுறும் மனித வர்க்கத்தைக் காப்பாற்ற முடியும். இவ்வாறாக ரஷ்யா பிற் போக்கான நாடாக எப்பொழுதும் இருக்காது. அது சோஷிய லிசத்தின் உதவியால் வெகுவாக முன்னேறி, உலகத்தில் உள்ள எல்லா நாடுகளையும் விட முக்கியத்துவத்தை அடைய முடியும் என்ற தனது ஆணித்தரமானதும், நம்பிக்கை ஒளி உள்ளதுமான கருத்தின் மூலமாக எல்லோரையும் கவர்ந்தது. எனவே, இக் கருத்தை வெளியிட்டு அதிகாரத்தின் உச்சியை ஸ்டாலின் கைப் பற்றினார்.

சர்வாதிகார நாடு (The Totalitarian State)

ஸ்டாலின் இத்தகைய கருத்தை ஏற்றுக்கொண்டதன் விளைவு என்னவென்றால், ரஷ்யாவில் சர்வாதிகார ஆட்சி மேலும் வளர்ந் தது. சர்வாதிகார ஆட்சி என்றால், இங்கு ஒரு கட்சியின் சர்வாதி காரம் என்பதைவிடத் தனி மனிதர்களின் சர்வதிகாரம் என்பதே பொருத்தமாகும்.

ஸ்டாலினின் சர்வாதிகாரத்தில் கட்சியின் தன்மையும் மாறு பட்டது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. லெனின் உயிருடன் இருக்கும் வரை, கம்யூனிசக் கட்சிக்குள் எந்த விஷயத்தைப் பற்றி யும் போதுமான அளவு விவாதிக்க, செயல்படுத்தச் சுதந்திரம் இருந்தது. கட்சியின் முக்கிய அங்கமான 'பிராவ்டா' பத்திரிகை யில் அரசின் கொள்கைகளை விவாதிக்கவும், அவற்றின் முறைகளை எடுத்துக்காட்டுவதற்காகவுமே சில பக்கங்கள் ஒதுக்கப்பட் டிருந்தன.

ஆனால், ஸ்டாலின் அதிகாரத்தைக் கைப்பற்றியதும் இத் தகைய சுதந்திரங்களைக் கட்சி இழந்தது. ஸ்டாலினை எதிர்த்துச் சொல்லவோ, அரசின் கொள்கைகளைக் குறைகூறவோ ஆகிய உரிமையைக் கட்சி இழந்தது. ஸ்டாலினை எதிர்த்துப் பேசவே எவ ரும் துணியவில்லை. மாறாக, 1925ஆம் ஆண்டு படிநிலை ஒழுங்கு முறைக் கொள்கை (Principle of hierarchical discipline) அமுலுக்கு வந்ததும் கட்சி, அதிகாரக் குவிப்பிற்கு, எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்காத ஒரு கருவியாகியது. கட்சியின் கீழ்த் தளத்தில் உள்ள சாதாரணத் தொழிலாளிகள் எந்தவித அதிகாரமு மின்றி மேல் நிலையிலிருந்து வரும் முடிவுகளைச் செய்து முடித்துத் தரும் அதிகாரத்தை மட்டும் பெற்றனர். எனவே, கட்சியின் ஆலோசனையைக் கேட்பது, எந்த நடவடிக்கையாக இருந்தாலும் கட்சியிடம் தெரிவிப்பது போன்றவை வெறும் சம்பிரதாயமாக

ஸ்டாலின் எடுத்துக்கொண்டாரே தவிர, அதற்குமேல் அவர் எந்த வித முக்கியத்துவத்தையும் கொடுக்கவில்லை. லெனின் காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் பேராண்மைக் கூட்டம் வருடா வருடம் கூடியது. ஸ்டாலின் ஆட்சியின் உச்சிக்கு வந்ததும், ஆரம்பத்தில் இரண்டு வருடத்திற்கு ஒருமுறை என ஆரம்பித்துக் கடைசியில் 1933ஆம் ஆண்டு 13 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு கூடிய கூட்டம் அத்துடன் 1952ஆம் ஆண்டே கூடியது.

ஸ்டாலின் சர்வாதிகாரத்திற்கு மேலும் சில உதாரணங்களைக் காட்டலாம். சிறு ஊர்களிலும், கிராமங்களிலும் உள்ள கட்சி அமைப்புகளுக்கு அபிப்பிராயம் தெரிவிக்கவோ, மறுப்பளிக்கவோ எந்தவித வழியும் இல்லாமல் போனது. அங்கிருந்த தொழிற்சங்கங்கள் எல்லா உரிமைகளையும் இழந்தன. அவை தங்களது தேவைகளைச் சுதந்திரத்துடன் எடுத்துக் கூறுவதற்கோ, வேலை நிறுத்தம் செய்வதற்கோ எந்தவித உரிமையும் கிடையாது. இவ்வாறாக, லெனினால் கம்யூனிஸ நாடாக மாறிய ரஷ்யா ஸ்டாலினின் காலத்தில் சர்வாதிகாரத்தின் உச்சியில் இருந்தது. இவ் விதமாக வலிமையை அடிப்படையாகக் கொண்ட அரசு தெரிந்தோ தெரியாமலோ ரஷ்யாவில் வளர்ந்துவிட்டாலும் இது ஒரு தவிர்க்க முடியாத வளர்ச்சியே ஆகும். ஏனெனில், சோஷியலிசத்தை நிலைநிறுத்த வேண்டும் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டதால் அவ் வேலையைச் செய்வதற்கான வலிமை நாட்டிற்குத் தேவைப்பட்டது. இவ்வாறாக மார்க்ஸின் கொள்கையை லெனின் அடிப்படையாகக் கொண்டு தொழிலாளர் புரட்சியை ஏற்படுத்திய ரஷ்யா, ஸ்டாலின் காலத்தில் சர்வாதிகார நாடாக மாறியது. ஆனால், மார்க்ஸின் கோட்பாட்டிலிருந்து இத்தகைய வளர்ச்சி வெகுவாக மாறுபட்ட ஒன்று. மார்க்ஸின் புரட்சியின் போது வலிமையின் பங்கு கீழோங்கியே இருக்கும். மேலோங்கி இராது என்றார். அவர் கருத்திலிருந்து லெனின் விலகி நின்று வலிமைக்கு முக்கியத்துவம் தந்தார். ஸ்டாலின் அதையும் விட்டுப் பல மடங்கு விலகி, வலிமை ஒன்றையே ஊன்றுகோலாக் கினார்.

மேலும் ஸ்டாலின் மார்க்ஸின் படிப்பினையில் சில மாற்றங்களை ஏற்படுத்தினார். வகுப்புப் பிரிவினை முடிந்து ஒரே வகுப்புடைய சமூகமாக நாடு மாறியதும், நாடு என்னும் சொல்லிற்கே இடமில்லை. நாடு என்பதே, மேல் வகுப்பு, கீழ் இருக்கும் வகுப்புகளைத் துன்புறுத்தும் ஒரு கருவியே ஆகும். ஆதலால், புரட்சிக்குப் பிறகு மேல் வகுப்பு கீழ் வகுப்பு என்னும் பிரிவினைகள் முடிவடைந்துவிடும். எனவே, நாடும் மறைந்துவிடும் என்று கூறினார்.

1921ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட லெனினின் அரசியல் சாஸனத்தில் நாடு, குடிமக்கள் போன்ற வாசகங்கள் இன்றி, நாட்டைச் 'சோவியத்' என்ற சொல்லாலும் குடிமக்கள் என்பதற்குப் பதிலாகத் தொழிலாளர், உழவர் என்ற சொற்களாலும் குறிப்பிடப்பட்டனர். ஆனால், 1936-வது ஆண்டு கொண்டுவரப்பட்ட ஸ்டாலினின் அரசியல் அமைப்பில் நாடு, குடிமக்கள் என்ற சொற்றொடர்களே உபயோகப்படுத்தப்பட்டன. மேலும், நாடு மடிந்துவிடும் என்னும் மார்க்ஸிஸ சொற்றொடருக்கு, ஸ்டாலின் உதட்டளவு மதிப்பே கொடுத்தார். மார்க்ஸின் கோட்பாட்டிற்குத் தமது விளக்கவுரையில், என்கெல்ஸ், உற்பத்தித் துறைகள் பொது உடைமை ஆக்கப்பட்டதும், எல்லா வகுப்புப் பிரிவினைகளும் மறைந்ததும், நாடு மடிந்துவிடும் எனப் பொருளுரைத்தார். 1936-வது அரசியல் சாஸனத்தைப் பற்றிக் குறிப்பிட்டு ஸ்டாலின் ரஷ்யா இத்தகைய நிலையை அடைந்தாகி விட்டது என்றும், எனவே, சோஷியலிஸ ரஷ்யாவில் வகுப்புப்பிரிவினைகளும், மேலான வகுப்பு கீழான வகுப்பைச் சுரண்டலும் இல்லை என்று கூறினார். ஆனால், நாடு மடிந்து விட்டதற்கான அறிகுறி ஏதும் காணவில்லை. மேலும், ஏன் மடியவில்லை என்பதற்கு ஸ்டாலினின் சாதுரியமான விளக்கம் என்னவென்றால், ரஷ்யா சோஷியலிச நாடாகி விட்டாலும் அதைச் சுற்றியுள்ள மற்றநாடுகளில் முதலாளித்துவம் இருப்பதால் ரஷ்யாவின் சோஷியலிசம், முதலாளித்துவத்தால் சூழப்பட்டுள்ளது. எனவே, ரஷ்யாவில் சோஷியலிசம் வகுப்புப் பிரிவினைகள் மறைந்து விட்டாலும் ரஷ்யாவில் அரசு இன்னும் தேவைப்படுகிறது. ஏன் என்றால் ரஷ்யாவிற்காக அன்று, ஏனைய நாடுகளில் இன்னும் முதலாளித்துவம் காணப்படுவதால்தான் என்றார் ஸ்டாலின். மேலும், இதைப்போலவே, தமக்கு வேண்டாதவர்களைக் காபிடலிஸ்டுகளின் உளவாளிகள் என எளிதில் குற்றஞ்சாட்டி அவர்களைப் பதவியிலிருந்து விலக்கினார். எனவே, ஸ்டாலின், மார்க்ஸ், என்கெல்ஸ் இவர்களது கொள்கைகளை மட்டும் அன்றி, லெனினின் கருத்துகளையும் திருத்தினார். இவ்வாறு திருத்திக் கூறும்போது தமக்கு ஏற்படும் தடுமாற்றத்தையும் மிகச் சாதுரியமாகச் சமாளித்தார். தமது நாடும் புரட்சியும் (State and revolution) என்ற புத்தகத்தின் இரண்டாது அங்கத்தில் தாம் கூறிய கருத்துகளை லெனின் கூற நினைத்திருந்தார் என்றும், ஆனால் எதிர்பாராத விதமாக அவர் இறந்துவிட்டதால் அவர் செய்ய நினைத்ததை அவரது சீடர்கள் செய்து முடிக்க வேண்டியது அவசியமாகி விட்டது என்றும் கூறினார். அப்படியென்றால் ரஷ்யா கம்யூனிசமாக மாறியுங்கூட அரசிலமைப்பைக் கொண்ட நாடாக இருந்துகொண்டே இருக்குமா என்ற கேள்விக்கு ஸ்டாலின் ஆம் என்ற பதிலைத் தருகிறார். சுற்றியுள்ள நாடுகளில் இருக்கும் முதலாளித்துவத்தை

ஒடுக்கி அவற்றின் ராணுவ மிரட்டல் மறையும்வரை ரஷ்யா ஓர் அரசியலமைப்புக் கொண்ட நாடாகவே இருக்கும். எனவே, உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் சோஷியலிசம் வந்தால் அவ்வமைப்பே ஒரேயடியாக மடிந்து மறைந்துவிடும் என்கிறார். எனவே, இக் கருத்தைப் புரிந்துகொள்ளாதவர்கள் மார்க்ஸின் முரண்பாட்டு விளக்கவாத தத்துவத்தைச் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்கிறார்.

ஸ்டாலினின் விளக்கவுரையினால், மேலும் மார்க்ஸிஸத்தில் ஏற்பட்ட விளைவுகள் இரண்டு. மார்க்ஸ், சோஷியலிசம் அடைந்ததும் ஒவ்வொருவரும் தம்முடைய உழைப்பிற்கும் தேவைக்கும் தக்க கூலியைப் பெறுவர் என்று கூறினார். மார்க்ஸ் முதலில் கூறியது உழைப்பிற்குத் தகுந்த கூலி என்றாலும், அவரவர் தேவைக்குத் தகுந்த கூலியைக் கொடுக்க வேண்டும் என அடுத்துக் கூறினார். லெனினும், கட்சி அங்கத்தினர்கள் பெறும் ஊதியம் ஒரு தொழிலாளி பெறும் அளவே பெறவேண்டும் என வலியுறுத்தினார். அதை ஸ்டாலின், ஒவ்வொருவரின் தேவைக்குத் தகுந்த கூலியைக் கொடுப்பது என்பது மார்க்ஸின் வழிப்படி அமைக்கப்பட்ட சோஷியலிச சமூகத்தில் நடக்காது என ஒதுக்கிவிடுகிறார். ரஷ்யாவில் சோஷியலிசத்தை வெற்றிகரமானதாக்கவும், இயந்திரத் தொழில் துறையில் திறமையையும், ஈடுபாட்டையும் ஊக்குவிப்பதற்காகவும், கிடைக்கும் ஆதாயத்தை எல்லோருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்க வேண்டியது அவசியமன்று என்று முடிவு செய்து, அவ்வாறு கொடுக்காமல் தவிர்த்தார். எனவே, இயந்திரத் தொழில்துறை முன்னேற்றத்திற்கு எல்லோருக்கும் ஒரே சீரான கூலி முறை ஒவ்வாது என்றும், தொழிலாளிகளின் திறமைகளை ஊக்குவிப்பதற்கும் வித்தியாசமான கூலி முறை இருத்தல் அவசியம் என்று ஸ்டாலின் கருதினார். ஆனால், இக் கருத்து மார்க்ஸிஸத்திற்கு ஒவ்வாத கருத்தாகும் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

ஸ்டாலினால் ரஷ்யாவில் மக்களிடையே நாட்டுப் பற்று வளர்ந்தது. இரஷ்யா மார்க்ஸிஸத்தின் கோட்பாட்டைக் கடைப்பிடித்ததால் அன்று அதன் பெரும் பங்கு ஸ்டாலினையே சேரும் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இரஷ்யா மற்ற ஐரோப்பிய நாடுகளை விடப் பின்தங்கி இருந்தது என்றால் ஒரு வழியில் அன்று எல்லா வழிகளிலும் ரஷ்யா பின்தங்கிக் கிடந்தது. இராணுவத்திலும் நாகரிகத்திலும், அரசியலிலும், இயந்திரத் தொழில் துறையிலும், விவசாயத்திலும் ஆக இவ் வழிகள் அனைத்திலும் ரஷ்யா மிகப் பின்னோக்கி இருந்தது. இதன் விளைவு பலமுறை அந்நியர்களால் தோற்கடிக்கப்பட்டது. முன்னேறுவதற்கு வாய்ப்பும், வழிகளும்

இருந்தும், அதைப் பயன்படுத்திக் கொள்ளாததால் இக்கதி நேர்ந்தது. ஸ்டாலின் ரஷ்ய மக்களுக்கு இழந்ததை ஈடுகட்ட வேண்டும்; மேற்கு ஐரோப்பிய நாடுகளை விட ரஷ்யா பத்து வருடங்களுக்கு மேல் பின்தங்கி இருக்கிறது. உழைத்து உழைத்துப் பத்தே வருடங்களில் இதை ஈடு செய்து அவர்களுக்குச் சமமாக வந்துவிட வேண்டும்; இதைச் செய்து முடிக்க வேண்டும் அன்றிச் செத்து மடிய வேண்டும் எனச் சூளுரைத்தார். இவ்வாறாக, ரஷ்யாவை ஒரு பலிச் சின்னமாக எடுத்துக் காட்டி மக்களை விழிப்படையச் செய்த பெருமை ஸ்டாலினைச் சாரும்.

ஸ்டாலினும் புரட்சியும்

'ஒரு தேசத்தில் சோஷியலிசம்' என்னும் கொள்கை மார்க்ஸிஸத்தை விட்டு எங்ஙனம் விலகி நின்றது எனப் பார்த்தோம். இப்பொழுது புரட்சியைப் பற்றி ஸ்டாலினின் கருத்தென்ன, மார்க்ஸிஸத்திலிருந்து வித்தியாசப்படுகிறதா எனப் பார்ப்போம். சர்வதேச அரசியல் நெருக்கடிகளுக்குத் தக்கவாறு அவ்வப்போது சோஷியலிச நாடுகளும், முதலாளித்துவ நாடுகளும் சமாதானமாக அருகருகே வாழமுடியும் என்று ஸ்டாலின் சொன்னாலும், உலகமெங்கும் முதலாளித்துவத்தை ஒழித்து, சோஷியலிசத்தை அடைய ஒரே வழி புரட்சியின் மூலம்தான் எனத் திடமாக நம்பினார். எனவே, ஏனைய நாடுகளில் புரட்சி ஏற்பட்டால்தான் அவை சோஷியலிச நாடாக மாற முடியும் எனக் கூறினார். மேலும் புரட்சி நடந்தால்தான் நல்லது என்று மட்டும் கூறவில்லை; அந்நாடுகளிலும் புரட்சி ஏற்பட்டுத்தான் தீரவேண்டும் என ஆணித்தரமாக நம்பினார். அப்படி இல்லையென்றால், சில முதாலாளித்துவ நாடுகள், சுற்றியுள்ள சோஷியலிச நாடுகளின் உதவியால் அம்முதலாளித்துவ நாடுகளும் சோஷியலிச நாடுகளாக அமைதி நிலை குலையாமல் கலவரமற்ற முறையில் மாறலாம். அதாவது, அம்முதலாளித்துவ நாடுகள் உள் நாட்டுப் புரட்சியின்றிக் கம்யூனிசப் படைத் துறையின் உதவியால் சோஷியலிச நாடுகளாக மாறலாம் எனும்பொருள்பட ஸ்டாலின் கூறினார். ஆனால், மார்க்ஸ் புரட்சி என்றாலே அது உள்நாட்டுப் புரட்சியைத்தான் குறிக்கும் என்று கூறினாரே தவிர, பிற நாடுகள் தங்கள் வலிமையால் ஏனைய நாடுகளையும் கம்யூனிஸ நாடுகளாக மாற்றவேண்டும் என்று ஒரு பொழுதும் கூறவில்லை. ஆனால், ஸ்டாலின் பிற நாடுகளின் வலிமையின் உதவி மூலம் ஏனைய நாடுகளை சோஷியலிச நாடுகளாக மாற்றுவதில் தம் நம்பிக்கையைத் தெரிவித்தார். எனவே, புரட்சியைப் பற்றி மார்க்ஸ் கருத்திலிருந்து இவர் எங்ஙனம் மாறுபடுகிறார் என்பது தெளிவாகிறது.

இதற்கு முன்பு இவர் ரஷ்யாவில் சோஷியலிசத்தை ஏற்படுத்தினால் போதும் என்று தமது 'ஒரு தேசத்தில் சோஷியலிசம்' என்னும் கொள்கையின் மூலம் தெரிவித்திருந்தார். இப்பொழுது ஏனைய நாடுகளில் புரட்சியை ஏற்படுத்துவதில் ஏன் அக்கறை செலுத்த வேண்டும் என்ற வினாவிற்கு விடை அளித்தல் சுலபமன்று. இரஷ்யாவின் நலனுக்காகவே ஏனைய நாடுகளிலும் புரட்சியை ஏற்படுத்துவதில் அக்கறை காட்டினார். ஏனைய நாடுகள் ரஷ்யாவை ஓர் எடுத்துக்காட்டாகக் கொண்டு புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என அவர் நினைக்கவில்லை. இரஷ்ய உதவியைக் கொண்டு ஏனைய நாடுகள் தங்கள் நாட்டிற்குள் புரட்சியை வெற்றிகரமாக நடத்த முடியும் என்றே நினைத்தார். பிறகு வந்தவர்களும் இதே கருத்தைப் பின்பற்றினர். இரஷ்யா இன்று வலிமை பொருந்திய நாடாக முன்னணியில் இருப்பதற்கு இது காரணமாக உதவியது.

ஸ்டாலினின் சாதனை லெனினால் முழுமனத்துடன் ஏற்கப்பட்டிருக்காத ஒரு வளர்ச்சியாகும். சமத்துவமின்மை, தெய்வம்போல் தலைவரை வணங்கும் முறை, அதிகார வர்க்க முறை (bureamcracy) போன்றவற்றை லெனின் நிச்சயம் ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார். இருந்தும் லெனினால் ஆரம்பிக்கப்பட்ட வழியில் இது ஒரு தவிர்க்க முடியாத முடிவே ஆகும்.

ஸ்டாலினுக்குப் பிறகு ரஷ்யாவில் சர்வாதிகாரம் சற்றுத் தளர்ந்தது என்றாலும், கட்சியின் வலு எந்தவிதத்திலும் பலவீனப்படுத்தப்படவில்லை. கட்சிக்கோ, அதன் அதிகாரத்திற்கோ எந்த வித எதிர்ப்பும் அனுமதிக்கப்படுவதில்லை.

10. அகஸ்டே காம்டே (1798—1857)

பிரெஞ்சு நாட்டுச் சிந்தனையாளரான அகஸ்டே காம்டே 1798ஆம் ஆண்டு மாண்ட்பெல்லியர் என்னும் ஊரில் பிறந்தார். செயிண்ட் சைமன் மற்றொரு கோட்பாளருடன் இவருக்கேற்பட்ட தொடர்பினால் இவரது கருத்துகளில் செயிண்ட் சைமனின் செல்வாக்கு பெருமளவிற்குக் காணப்படுகிறது. தொழிற் புரட்சி உச்சத்தில் இருந்த இவர் காலத்தில் உயிர் நூல், கணிதம், இரசாயனம் போன்ற துறைகளில் பலவித முன்னேற்றங்களும் கண்டுபிடிப்புகளும் ஏற்பட்டன. இக் கண்டுபிடிப்புகளைத் தொழில் துறை நிபுணர்களும், வணிகர்களும் உபயோகப்படுத்திச் சிறந்த பலனை அடைந்தனர். தொழில் புரட்சியின் விளைவினால் ஏற்பட்ட கண்டுபிடிப்புகளும், அறிவியல் முன்னேற்றங்களும் இங்கிலாந்தில் மக்களுக்கு வசதியையும் செல்வத்தையும் பெருக்க உதவுவதைக் காம்டே உணர்ந்தார். தம்முடைய நாடான பிரான்சும் அறிவியல் துறை முன்னேற்றங்களின் பலனை உணர ஆரம்பித்ததைக் கண்டார். ஆனால், அதேசமயம் அரசியல் நிலையில் பழைய குழப்பங்களே மலிந்திருப்பதைக் கண்டார். அறிவியல் துறை வளரும் தன்மையையும் அரசியல் துறையின் நிலையான தன்மையையும் ஒப்பிட்டுப் பார்த்தார். அவர் காலத்தில் பிரான்சு நாட்டு அரசு நிலையற்ற தன்மையுடையதாய்ச் சீர்கெட்ட நிலையில் கிடந்தது. எத்தனையோ அரசுகள் மாறி மாறி வந்தபோதும் அரசியல் பேச்சாளர்கள், அரசியல்வாதிகள், வழக்கறிஞர்கள் போன்ற 'அறிவியல் அறிவற்ற' (Unscientific) அவர்களின் கைகளுக்குள்ளேயே கிடப்பதைக் காம்டே உணர்ந்தார். அரசை அமைப்பதும், கவிழ்ப்பதுமாக இவ் வேலையிலேயே தங்களது சக்தியைச் செலவழிக்கிறார்களே தவிரச் சமூக முன்னேற்றத்திற்காக இவர்கள் ஒன்றும் செய்யவில்லை என்பதை வருத்தத்துடன் உணர்ந்தார். எனவே, அரசை மேற்கூறியவர்களின் பிடியிலிருந்து மீட்டு விஞ்ஞானிகளிடமும், தொழில்துறை நிபுணர்களிடமும் அளித்தல் வேண்டுமென விரும்பினார். சமூகத்தை விஞ்ஞானம், தொழில் துறை இவற்றின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர வேண்டியது தம்முடைய பணி என்னும் முடிவிற்கு வந்தார். அதன் முதல் படியாக அத்தகைய புது சமூகத்திற்கான விஞ்ஞான அடிப்படைகள் என்ன என்று பார்த்து முடிவு செய்யவேண்டுமென்றும், இவ்வடிப்படை

களை மனிதர்கள் புரிந்துகொண்டால் அத்தகைய புதுச் சமூகத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்ற முடிவிற்கும் வந்தார். இம் முடிவே ‘பாஸிடிவ் தத்துவத்தின் முறைகள்’ (Course of positive philosophy) என்னும் புத்தகத்தை அவர் எழுத நேர்ந்தது. ஆறு பகுதிகளைக் கொண்ட இப் புத்தகத்தில், மனித சமுதாயத்தின் பொது விதிகள் என்ன என்பதே அவரது ஆராய்ச்சியில் அடங்கியுள்ளது. எல்லா விஞ்ஞானங்களையும் ஒழுங்குபடுத்துதல், மனித வரலாற்றை மறுபரிசீலனை செய்தல் போன்றவை அவ் வாராய்ச்சியில் அடங்கியுள்ளது. பிறகு அவருடைய ‘பாஸிடிவ் அரசியல் அமைப்புமுறை (The system of positive polity) என்னும் மற்ருரு புத்தகத்தில் அவருடைய புதுச் சமூக முறை என்ன என்று விளக்குகிருர்.

அவரது அரசியல் தத்துவம்—பாசிடிவிச தத்துவம் (Philosophy of positivism)

காம்டே முதன்மையில் ஒரு சமூக சீர்திருத்தவாதியே ஆவார். வெறும் உண்மையைக் கண்டுபிடிப்பதில் அவர் ஆர்வமுள்ளவராக இல்லை. நடைமுறை வாழ்விற்கு உபயோகமில்லாத உண்மைகளையோ, அறிவுரைகளையோ கண்டுபிடிப்பதனுல் ஒரு பயனும் இல்லை என்று கருதினுர். எனவே, அவர் காலத்தில் பல்கலைக் கழகங்களில் கற்றுத்தந்த பல பாடங்கள் உபயோகமற்றவை எனக் குறைகூறினுர். எந்த அறிவும் மனித சமுதாயத்திற்கு நலனை அளிக்கும்வரைதான் அவற்றுக்கு மதிப்புக் கொடுத்தல் வேண்டும். அப்படியல்லாமல், உண்மை—ஆனுல் உபயோகமற்றது—என்ற விஷயங்களை ஆராய்வதனுல் அறிவாளிகள் தங்கள் திறனை வீணடிக்கிருர்கள் என்கிருர். தம்மைப் பொறுத்தவரை மனித சமுதாயத்தின் விதிகளைத் தாம் கண்டுபிடித்து விட்டதாகவும், இவ் விதிகளைப் பயன்படுத்துவதன் மூலம் மனித விவகாரங்களை விஞ்ஞான ரீதியாக நிர்வகிக்கலாம் என்றும் கூறுகிருர். மேலும், இவர் கூறுவதாவது: ‘அரசியல் சமூக விவகாரங்களில் சில பொதுவான எண்ணங்களைச் சமூகக் கோட்பாடுகள் என எல்லோரும் ஏற்றுக் கொள்ளவேண்டும்; இக் கோட்பாடுகளின் அடிப்படையில்தான் சமூக ஒழுங்கை நிலைநிறுத்த வேண்டும். அச் சமூகக் கோட்பாடுகளுக்குத் தக்கபடி சமூகத்திலுள்ள நிறுவனங்கள் இயங்கவேண்டும். பாஸிடிவ் தத்துவம்தான் இச் சமூகக் கோட்பாடுகளாகும், என்கிருர். இருந்துவரும் சமூக அரசியல் முறைகளில் இவ்வாருக எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்படும் கோட்பாடுகளோ, சமூக ஒழுங்கு முறைகளோ இல்லாததால்தான் கற்றவர்களும், கோட்பாட்டாளர்களும் தங்கள் விருப்பத்திற்கு

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான கோட்பாடுகளையும் கருத்துகளையும் தருகின்றனர். எடுத்துக்காட்டாகச் சிலர் மக்களுக்கெனச் சில உரிமைகள் அவசியம், அரசு அதில் தலையிடக் கூடாது என்கின்றனர். சிலர் 'அரசாகப் பார்த்து அளித்தால்தான் எந்த உரிமையையும் மக்கள் அனுபவிக்க முடியும். அரசு தராத உரிமைகளை மக்கள் உரிமைகள் எனக் கொண்டாட முடியாது' என்கின்றனர். இவ்வாருக, எல்லாரும் ஒப்புக் கொள்ளக் கூடிய சமூகக் கோட்பாடுகள் இதுவரை இல்லை. இதனால் அறிவுக் குழப்பமே (Intellectual anarchy) நாடுகளில் மிஞ்சுகின்றன. ஆனல், இந்நிலை வெகு நாளைக்கு நீடிக்காது. பாஸிடிவ் தத்துவத்தின் கீழ் சமூகம் வரும் நாள் வெகுதூரம் இல்லையென்றும், அப்பொழுது சமூகம் நிலையான ஒழுங்கு முறையை மக்களினத்திற்கு அளிக்கும் என்றும் காம்டே கூறுகிருர். தாம் கண்டுபிடித்துள்ள பாஸிடிவ் கோட்பாடுகள் அடங்கிய சமூக அறிவியல் (Seience of Sociology) ஏனைய அறிவியல்களுக்கெல்லாம் தலைமையாகத் திகழ்ந்து மனித விவகாரங்களில் ஒரு சீர் முறையை வழங்கப் போவதாகக் கூறினர்.

காம்டே, தம்முடைய தத்துவத்தை ஏன் பாஸிடிவிஸ தத்துவம் என அழைக்கிருர் என்பதற்கு விளக்க உரை தருகிருர். பாஸிடிவிஸம் என்ருல் விஞ்ஞானத் தன்மையுடையது என்று பொருள். உண்மை அறிவு என்பது காணும் அனுபவத்தின் அடிப்படையில் நிரூபிக்கப்படுபவையேயாகும். அத்தகைய உண்மை அறிவையே விஞ்ஞானம் என்று கூறலாம். பாஸிடிவிஸ தத்துவம் அப்படிப்பட்ட ஒன்றே. ஆனல், இதுவரை கோட்பாளர்களால் கூறப்பட்ட தத்துவங்களும், கொள்கைகளும் நிரூபிக்கப்பட்ட உண்மையறிவின் அடிப்படையில் இல்லாமல் புலனுகாத ஊகங்களாகவே உள்ளன. எனவே, அவை உபயோகமற்றவையேயாகும். எங்ஙனம் உயிர் நூல், இயல்பியல் போன்ற பாடநூல்களில் சிலவற்றைப் பரிசோதனைகள் மூலம் கண்டறிந்து விதிகளாகத் தருகின்றனவோ, அங்ஙனமே மனித அனுபவங்களின் வளர்ச்சியுடன் சமூக நிகழ்ச்சிகளையும், நிறுவனங்களையும் உடன் சேர்த்து ஆராய்ச்சி செய்ததில் சில விஞ்ஞானத் தன்மை பொருந்திய சமூக விதிகளைத் தாம் கண்டறிந்ததாகக் கூறுகிருர். இத்தகைய விதிகள் சமூக வாழ்விற்குச் சிறந்த தொண்டினை அளிக்கும் எனக் கூறுகிருர். அவர் கூறுவதாவது: 'எல்லா அறிவுகளும் (Knowledge) மூன்று படிமுறை வளர்ச்சிகளாக வளர்கின்றன. அறிவின் முதல் வளர்ச்சி மதக் கொள்கைகள் (Theological) அடிப்படையாகக் கொண்ட கற்பனையான கோட்பாடுகளாகும். இக் கோட்பாடுகள் பிறகு இரண்டாவது படியான

புலனாகாத் தத்துவங்களாக (Metaphysical) வளர்கின்றன. மூன்றாவது கடைசிப் படியில்தான் விஞ்ஞான வளர்ச்சியை (Scientific) அடைகின்றனர். இவ்வாறாக எல்லா அறிவுகளும் அதாவது உயிரியல், இயல்பியல், வரலாறு, அரசியல் போன்றவை எல்லாமே இந்த மூன்று படிமுறைகளில்தான் வளருகின்றன. இவற்றைப் பற்றி மனிதர்கள் தெரிந்துகொள்ள முனையும் பொழுது முதலில் எல்லாமே இயற்கைக்கும் மேம்பட்ட சக்திகளால் (Supernatural being) உண்டாக்கப்பட்டவை என முடிவு செய்கிறார்கள். அப்பொழுது அறிவு முதல்படியிலிருக்கிறது. பிறகு மனிதர்கள் அவற்றைப் பற்றிய புலனாகாத தத்துவங்கள் வாயிலாக விளக்குகின்றனர். அதாவது அவை எப்படித் தோன்றியிருக்கலாம் அவற்றின் நோக்கம் என்ன என்பன போன்ற நிரூபிக்க முடியாத விஷயங்களைத் தத்துவங்களின் வாயிலாக விளக்குகிறார்கள். இதுவே அதன் இரண்டாவது படியாகும். பிறகு அறிவு மூன்றாவது கட்டத்தை அடைகிறது. இக் கட்டத்தில் மனிதர்கள் காணும் அனுபவம், காரண அறிவு இவற்றைக் கொண்டு சில பொதுவான உண்மைகளை நிர்ணயிக்கிறார்கள். இவ்வாறாக அறிவுகள் படிப்படியாக மூன்று கட்டங்களின் மூலம் முன்னேற்றத்தை அடைகின்றது. ஒவ்வோர் அறிவும், மூன்றாவது கட்டத்தில் விஞ்ஞானத் தன்மையைப் பெறுகிறது. இதற்குப் பிறகு காம்டே அரசியலில் இம் மூன்று படிமுறை வளர்ச்சியினை விளக்குகிறார். அரசியல் அறிவில் எந்தப் படிமுறை வளர்ச்சி காணப்படுகிறதோ அதற்குத் தகுந்த வகுப்பினரே சமூகத்தைக் கட்டுப்படுத்துவர். எடுத்துக்காட்டாக, அரசியல் அறிவு முதல் படிமுறை வளர்ச்சியில் இருக்கும்பொழுது மதக் குருக்களே சமூகத்தில் உள்ளோரைக் கட்டுப்படுத்துகின்றனர். அரசியலில் இம்முறை திருச்சபை (Church) அதன் உச்ச அதிகாரத்திலிருந்த இடைக்காலத்துடன் (Middle ages) முடிவடைந்தது. அரசியல் அறிவு இரண்டாவது கட்டத்தில் புலனாகாத தத்துவக் கோட்பாடுகளாக இருக்கிறது. (Metaphysical stage). இயற்கை உரிமைகள், சுதந்திரம் மக்களிடமே இறைமை போன்ற தத்துவங்களாக இப் படிமுறையில் கோட்பாட்டாளர்களால் விளக்கப்படுகிறது. சமூகம் இப்பொழுது அரசியல்வாதிகள், வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர் இவர்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது. இப் படிமுறையிலிருந்துதான் மூன்றாவது படிமுறையான பாஸிடிவ் முறையை அரசியல் அறிவு அடைய வேண்டும். இம் மூன்றாவது படிமுறையில் நிலையான ஒழுங்குமுறை நிலைநிறுத்தப்படும். மேலும் அவர், 'கூடிய சீக்கிரம் தத்துவப் படிமுறை முடிவிற்கு வந்துவிடும்' என்கிறார். சமூக இயலுக்குக் கீழ்ப்பட்ட இயல்களான கணிதம், வானியல் (Astronomy) அவை அனைத்தும் முதல் இரண்டு

படிமுறைகளைத் தாண்டிவிட்டதாகவும், அவற்றுக்கெல்லாம் மேம்பட்ட அறிவியலாக இருந்தும் சமூக இயல் இப் படிமுறை களைத் தாண்டித்தான் தீரவேண்டுமென்றும், அது இன்னும் மூன்ருவது படிமுறையை அடையவில்லை என்றும் கூறுகிருர். அங்ஙனம், மூன்ரும் படிமுறையை அடைந்ததும், அதாவது, சமூக இயல் விஞ்ஞானத் தன்மையைப் பெற்றதும் சமூகம் விஞ்ஞானி களின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடும் என்கிருர்.

பாஸிடிவிஸ தத்துவ முறையில் சமூக இயல் வளர்ந்ததும், அரசு எங்ஙனம் விஞ்ஞான முறைப்படி அமைக்கப்படும் என்பதை அடுத்து விளக்குகிருர். தற்கால நாடுகள் சமாளிக்க முடியாத அளவிற்கு அதிக ஜனத்தொகையைக் கொண்டிருப்பதால் அவற் றைப் பிரிக்க வேண்டுமென்கிருர். பத்து முதல் முப்பது லட்ச ஜனத் தொகைக்குள் அடங்கிய நாடுகளாக உலக நாடுகளைப் பிரிக்க வேண்டுமென்கிருர். ஒவ்வொரு நாட்டிலும் உள்ள ஜனத் தொகையை மேல் வகுப்பு (Patrician class), தொழிலாளர் வகுப்பு (Proletaries) எனப் பிரிக்க வேண்டும் என்கிருர். மேல் வகுப்பினர் என்பவர்கள் தொழில்துறை நிபுணர்களாவர். தொழில் துறை நிபுணர்களில் மிகச் சிறந்த மூன்று பேரைத் தேர்ந் தெடுத்து விவசாயம், வாணிபம், உற்பத்தி இவற்றை அவர்கள் தலைமையில் கொடுக்கப்பட வேண்டுமென்கிருர்.

இவர் தொழில்துறை நிபுணர்களிடம் நாட்டின் அதிகாரத் தைக் கொடுக்கப்பட வேண்டுமெனக் கூறுவது நமக்கு வியப்பாக இருந்தாலும் அவரைப் பொறுத்தவரை தொழில்துறை நிபுணர் களிடமும், விஞ்ஞானிகளிடமும் அரசின் பொறுப்பு இருந் தால்தான் நாடு முன்னேற்றமடையுமெனத் திடமாக நம்பினுர். மேலும் பாஸிடிவ் கொள்கைப்படி இவர்களே நாட்டை நிர்வகிக்க வேண்டுமென்கிருர். மேலும் பாராளுமன்ற முறைகள்படி விவா தங்கள் போன்றவற்றில் அவருக்குச் சற்றும் நம்பிக்கையில்லை. பாஸிடிவ் கொள்கைகள் வளர்ந்ததும் அவற்றைப் பற்றிய விவா தத்திற்கு இடமில்லை என்றும், நிபுணர்கள் அக் கொள்கையின்படி நிர்வகிக்க வேண்டுமென்றும் கூறுகிருர். இவ்வாருக, ஜனநாயக அரசில் தம்முடைய நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கிருர். மேலும், தொழிலாளிகளுக்கு நாட்டை நிர்வகிக்கும் அதிகாரம் கொடுக்கக் கூடாது என்றும், அவர்களுக்கு நியாயமான கூலிகள் கொடுக்கப்பட வேண்டுமென்றும், ஆனுல், அவர்களில் திறன் படைத்தோர் தங்களது திறமையினுல் மேலுக்கு வரலாமென்றும் கூறுகிருர்.

கல்வியைப் பற்றிக் கூறும்பொழுது பதினான்கு வயது வரை பிள்ளைகள் தாயின் மேற்பார்வையில் இருக்க வேண்டுமென்றும், பதினான்கு வயதிற்குப் பிறகு இருபத்தொன்றாவது வயது வரை அவர்களுக்குக் கணிதம், வானியல், இயல்பியல், சமூக இயல் போன்ற பாடநூல்கள் போதிக்கப்பட வேண்டுமென்றும் கூறுகிறார்.

காம்டே, குழப்பமற்ற அரசியல்நிலை ஏற்பட வேண்டுமென்றால் விஞ்ஞான விதிகளை அடிப்படையாகக் கொண்டு சமூகம் அமைக்கப் பட வேண்டுமென அரும்பாடு பட்டார். அவருடைய கருத்துகளில் சிலவற்றை நம்மால் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், சமூக இயலின் முக்கியத்துவத்தை உணர்த்தியவர் காம்டேதான் என்பதை நம்மால் மறுக்க முடியாது.

11. பீடர் க்ரோபாட்கின் (1842—1921)

அரசியல் தத்துவத்தில் ஆட்சி குலைந்த நிலைக்கோட்பாட்டைச் (Anarchism) சிறப்பாக எடுத்துக் கூறியவர் பீடர் க்ரொபாட்கின் என்னும் ரஷ்ய தத்துவ சிந்தனையாளர் ஆவர். இந்தக் கோட்பாட்டிற்கு க்ரொபாட்கினின் விளக்கம் என்ன என்று பார்ப்பதற்கு முன்பு இக் கோட்பாட்டிற்கும் கம்யூனிஸக் கோட்பாட்டிற்குமுள்ள ஒற்றுமையைச் சற்று நோக்குவோம். மார்க்ஸின் கம்யூனிசக் கோட்பாட்டின்படி தொழிலாளர் புரட்சிக்குப் பிறகு முதலாளித்துவத்தை அடியோடு ஒழிப்பதற்காகத் தொழிலாளர்களின் சர்வாதிகாரம் ஏற்படுத்தப்படுகிறது. இப் புதிய அரசு வன்முறையைக் கொண்டதாகத்தான் இருக்கும். ஆனால், இவ்வரசு முதலாளித்துவத்தை அழிக்கும் வரை தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட அமைப்பே தவிர, நிரந்தரமானதன்று. இவ்வரசில் சுதந்திரத்தைப் பற்றிப் பேசுவது அர்த்தமற்றதாகும். தொழிலாளர்கள் அரசு முதலாளித்துவத்தை அடியோடு ஒழித்தவுடன் அரசு என்னும் அமைப்பு மங்கி மறைந்து விடுகிறது. பிறகு சுதந்திரமான சமூகம் ஏற்படுகிறது. இச் சுதந்திரமான சமூகத்தைத்தான் அதாவது ஆட்சி குலைந்த நிலையைத்தான் க்ரொபாட்கின், பாகுனின் (Bakunin) போன்றோர் கோட்பாடாக விளக்குகிறார்கள். எனவே, கம்யூனிஸக் கோட்பாட்டிற்கும், இவரது கோட்பாட்டிற்கும் உள்ள ஒற்றுமை இப்பொழுது நமக்கு நன்கு புலப்படுகிறது. கம்யூனிஸக் கோட்பாடு, சமூகம் முதலாளித்துவ முறையிலிருந்து சோஷியலிச முறையாக மாறும் முறை என்னவென்று விளக்குகிறது. ஆட்சி குலைந்த நிலைக் கோட்பாடு மாறுதல் அடைந்த சமூகத்தின் நிலை எப்படி இருக்கும் என விளக்குகிறது. கம்யூனிஸக் கொள்கையினர் அத்தகைய சமூகத்தைக் கொண்டுவரும் வழிமுறைகள் என்னவென்று ஆராய்கின்றனர். ஆட்சி குலைந்த நிலைக்கோட்பாளர்கள் அத்தகைய சமூகத்தை எந்த முறையில் அமைக்க வேண்டும், மக்கள் எப்படிப்பட்ட வாழ்க்கையை நடத்த வேண்டுமென விளக்குகிறார்கள். கம்யூனிஸக் கோட்பாளர்கள் ஆட்சி குலைந்த நிலை என்னும் சமூகத்தை அடையும் வழி பற்றி ஆராய்கிறார்கள். ஆட்சி குலைந்த நிலைக்கோட்பாளர்கள் முடிந்த நிலை பற்றி ஆராய்கிறார்கள்.

க்ரொபாட்கின் 1842ஆம் ஆண்டு ரஷ்ய நாட்டைச் சேர்ந்த உயர்குடி வகுப்பில் பிறந்தார். இவர் வசதி நிறைந்த குடும்பத்தில் பிறந்தவராயினும் குடியானவர் போன்ற சாதாரண குடும்பத்தின ருடன் இவர் கொண்டிருந்த நட்பானது இவருக்குப் பெருந் தன்மை போன்ற நற்பண்புகள் வளர உதவியாக இருந்தது. இவர் எப்பொழுதும் முன்னேற்றத்தில் மிகுந்த நம்பிக்கை கொண் டிருந்ததால் சமூகத்தில் அரசு, அதிகாரம் போன்ற நிலைகள் மறைந்து அனைவரும் ஒற்றுமை ஒன்றினையே அடிப்படையாகக் கொண்டு வாழும் உன்னத நிலை வரும் என்று ஆணித்தரமாக நம்பினார். இவர் தமது பதினைந்தாவது வயதில் செயின்ட் பீடர்ஸ் பர்கிலுள்ள இராணுவப் பள்ளியில் இராணுவப் படிப்புக்காகச் சேர்ந்தார். இவர் ஆறு வருடம் இராணுவத்திலிருந்து பிறகு அதனை விட்டு வெறுப்புடன் வெளியேறினார். பிறகு இரண்டாம் அலெக் ஸாண்டர் மன்னரின் அரசவைப்பணியில் சேர்ந்தார். அங்கு அரசாங்க உயர்பணியாளர்களுடனும், சில சமயங்களில் மன்ன ருடனும் ஏற்பட்ட தொடர்பும் அதனால் ஏற்பட்ட அனுபவங்களும் இவருக்கு மனத்திற்கு மகிழ்ச்சியைவிட அதிகாரத்தின்மேல் அதிருப்தியையே வளர்த்தது. பிறகு, அரசாங்கத்தில் பெரிய பதவி கிடைத்த போதும் அதை ஏற்க மறுத்துச் சைபீரியாவிற்குப் பணிபுரிய அனுப்பும்படி கேட்டுக் கொண்டார். சைபீரியாவிற்குச் சென்ற உடன் அங்கு உயிர் நூல், பூகோளம் போன்ற பாடவியல் களைப் படிக்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. இந்த அனுபவம் இவருக்கு ஆட்சி குலைந்த கோட்பாட்டின் அடிப்படை விதிகளை விளக்க உதவியது. இவர் மறுபடி ரஷ்யாவிற்குத் திரும்பி வந்த உடன் லிபரலிஸ இயக்கங்களில் பங்கெடுத்துக் கொண்டதால் 1874ஆம் ஆண்டு சிறைக்குச் செல்ல வேண்டியிருந்தது. 1876ஆம் ஆண்டு சிறைச்சாலையை விட்டுத் தப்பி ஓடி நாற்பது ஆண்டுகளுக்கு மேல் ஸ்விட்ஸர்லாந்திலும், பிரான்சிலும் வாழ்ந்து வந்தார். பிரான்சில் புரட்சிகரமான காரியங்களில் ஈடுபட்ட தற்காக அங்கும் சிறை சென்றார். பிறகு அங்கிருந்து இங்கி லாந்து சென்றார். அங்கு அவரது ஆட்சி குலைந்த நிலைக் கோட்பாடு பலரால் வரவேற்கப்பட்டது. அவர் ரஷ்யப் புரட்சி ஏற்படும் வரை—அதாவது 1917ஆம் ஆண்டு வரை—இங்கி லாந்து நாட்டை விட்டுத் தம் சொந்த நாட்டிற்கு வரவேயில்லை. இரஷ்யப் புரட்சி ஏற்பட்டு ரஷ்யா கம்யூனிஸ்ட் நாடாக மாறியதும் மார்க்ஸ் கூறியபடி ரஷ்யாவில் அரசு மங்கி மறைந்து 'ஆட்சி குலைந்த நிலை' ஏற்படும் என்று அவர் வைத்திருந்த நம்பிக்கை சிறிது சிறிதாக மறைந்தது. எனவே, அவர் தம் கடைசிக் காலத்தில் ரஷ்யக் கம்யூனிச ஆட்சி அவருக்கு ஏமாற்றத்தையே அளித்தது. அவர் 1921ஆம் ஆண்டு இறந்ததும் அவரது

இறுதிச் சடங்குகளில் போல்ஷிவிக் தலைவர்கள் யாரும் பங்கெடுத்துக் கொள்ளவில்லை.

க்ரொபாட்கின் அரசியல் சிந்தனைகள்

க்ரொபாட்கினின் முக்கியமான படைப்புகள், (1) தற்கால அறிவியலும் ஆட்சி குலைந்தநிலைத் தத்துவமும் (Modern Science and Anarchism), (2) நாடும் வரலாற்றில் அதன் பங்கும் (The State, its part In History), (3) ஒருவருக்கொருவர் உதவி, அதன் படிமுறை வளர்ச்சி (Mutual aid, a factor of evolution) போன்றவையாகும்.

க்ரொபாட்கினின் தனிச் சிறப்பு என்னவென்றால் ஏனைய 'ஆட்சி குலைந்த நிலைத் தத்துவ எழுத்தாளர்'களைப் போல் அல்லாமல் அவர் தமது கருத்திற்கு 19ஆம் நூற்றாண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளின் ஆதாரத்தை நாடினார். 19ஆம் நூற்றாண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் கண்டு அவர் வருங் காலச் சமூகம் அவர் விவரிக்கும் முறையில்தான் இருக்கும் என நம்பினார். அவருடைய நம்பிக்கை என்ன என்று ஆராய்ந்து பிறகு அதற்காக அவர் தரும் ஆதாரங்கள் என்ன என்று பார்ப்போம்.

அவர் கூறுவதாவது: ஆட்சி குலைந்த நிலைக் கோட்பாளர் களின்படி சமூகம் எப்படி இருக்கும் என்றால், சமூகத்தில் மக்கள் ஒருவருக்கொருவர் உள்ள உறவு முறை, சட்டங்களினாலோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட—அல்லது தானாக உண்டாக்கிய அதிகாரத்தின் உதவியினாலோ சீர்படுத்தப்படாது. மாறாக, சமூகத்தின் அங்கத்தினர்களான மக்கள் தாங்களாக ஒருவருக் கொருவர் ஏற்படுத்திக்கொண்ட சம்மதத்தினாலும், சமூகப் பழக்க வழக்கங்களினாலும், சீர்படுத்தப்படுகிறது. இப் பழக்க வழக்கங்கள் வளர்ந்து வரும் சுதந்திர வாழ்விற்குத் தக்கவாறும் அறிவியல் உயர்ந்த இலட்சியங்கள், பல கண்டுபிடிப்புகள் இவற் றுக்குத் தகுந்தாற்போலும் தொடர்ந்து ஒத்துப் போய்க் கொண் டிருக்கிறது. இத்தகைய சமூகத்தில் ஆளும் அதிகாரம் யாரிடமும் இல்லை. மனிதனை மனிதன் ஆளும் அரசும் இல்லை. வளர்ச்சி யற்ற மந்தநிலை என்பது கிடையாது. எப்படி இயற்கை பரிணாம முறைப்படி வளருகிறதோ, அப்படியே இந்தச் சமூகமும் தொடர்ச் சியாக, நிதானமாக வளருகிறது. இத்தகைய சமூகத்தில் தனி மனிதனின் இயற்கைத் தன்மைகள், சிறப்புகள் சுதந்திரமாக வளர முடியும். அவனது தனித் தன்மையும் வளர முடிகிறது. தண்டனை என்ற பயத்தின் மூலமாக எந்தக் காரியத்தையும் அவன் மீது திணிக்க வேண்டிய அவசியமில்லை, அவனாக விரும்பிச் சுதந்

திரமாக ஏற்கும் காரியங்களைத் தவிரச் சமூகம் அவனிடம் வேறு எதையும் எதிர்பார்ப்பதில்லை. எல்லாரும் சமமாக வாழும் இச் சமூகத்தில், சமூகத் தன்மையற்ற நடவடிக்கைகளைத் தடுக்க இவ்வழியே போதுமானது. இவ் வழியின் மூலம் சமூகமும் நிதானமாக வளருகிறது. அவர் கூறுவதிலிருந்து நாம் அறிவதாவது: மனிதனின் செய்கைகளில் வெளித் தடைகள் இல்லாமல் இருந்தால்தான் அவனது தனித் தன்மை வளரும்; அவன் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்க முடியும். வெளித் தடைகள் என அரசின் அதிகாரத்தையே க்ரொபாட்கின் குறிப்பிடுகிறார். ஆட்சி குலைந்த நிலைச் சமூகத்தில் மனிதன் மூன்றுவித அதிகாரங்களிலிருந்து விடுதலை பெறுகிறான் என்று கூறுகிறார்.

(1) இச் சமூகம் உற்பத்தியாளன் என்னும் முறையிலுள்ள மனிதனை முதலாளித்துவத் தளையிலிருந்து விடுவிக்கிறது.

(2) நாட்டினுள் குடிமகனாக வாழும் மனிதனை அத் தளையிலிருந்து விடுவிக்கிறது.

(3) நிரூபிக்கப்படாத தத்துவங்களிலிருந்து, உதாரணமாக, இறைவனே சக்தி வாய்ந்தவன் என்னும் மத அறநெறிக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கிறது.

இம் மூன்று கருத்துகளில் மூன்றாவது கருத்து இவர் மதப் பற்று அற்றவரா என்ற கேள்வியை எழுப்பினாலும் அரசியலுக்கும் அதற்கும் சம்பந்தமில்லாததால் அதைப் பற்றி நாம் விளக்க வேண்டியதோ அல்லது ஆராய வேண்டியதோ அவசியமற்றதாகும். முதலாவது கருத்தின் மூலமாக முதலாளித்துவத்தை அவர் கண்டனம் செய்கிறார் என்று தெரிந்தாலும் அது ஒரு புதிய கருத்தன்று. சோஷியலிச சிந்தனையாளர்களால் ஏற்கனவே விளக்கிக் கூறப்பட்ட கருத்தேயாகும். இரண்டாவது கருத்தான அரசின் தளையிலிருந்து மனிதனை விடுவிக்க வேண்டும் என்ற கருத்து ஆட்சி குலைந்த நிலைக்கோட்பாட்டுத் தத்துவ எழுத்தாளர்களுக்கே உரிய தனிச் சிறப்பாகும்.

க்ரொபாட்கினின் ஆட்சி குலைந்த நிலைத் தத்துவம் பொருளாதாரத் துறையைப் பொறுத்தவரை அகில உலகப் பொது உடைமைக் கொள்கையை ஏற்கிறது. அவர் கூறுவதாவது: எல்லாமே ஒவ்வொருவருக்கும் சொந்தமானது. ஒவ்வோர் ஆணும், பெண்ணும் அவசியமான பொருள்களின் உபற்பத்தியில் தங்களுடைய பங்கை வழங்கும் வரை அவர்களுக்கு அனைவரின் உற்பத்தியிலும் பங்கு பெறும் உரிமை உண்டு என்கிறார்.

இதிலிருந்து அவர் அகில உலகப் பொது உடைமைக் கொள்கையில் நம்பிக்கை உடையவராக இருக்கிருர் என்பது புரிகிறது.

இவர் இவ்வாருக அனைவருக்கும் அனைவரின் உற்பத்தியிலும் பங்குண்டு என்று கூறுகிருர். அனைவருக்கும் கிடைக்கும் பங்கு நியாயமானதுதாஞ என்று நிச்சயப்படுத்திக்கொள்ள ஏதாவது ஒருவகை அரசு வேண்டாமா? அனைவருக்கும் நியாயமான பங்கு கிடைக்கிறது என்று என்ன நிச்சயம்? ஏதாவது ஒருவகை அரசு இருந்து அவரவர்கள் நியாயமான பங்கை அடைகிருர்களா என்ற விஞவிற்கு மார்க்ஸிய கம்யூனிசக் கொள்கையினரைப் போல் தற்காலிகமாக அரசு தேவைப்படுகிறது என்று கூருமல் க்ரொகாட்கின் சிறிதும் தயக்கமின்றி அரசே கூடாது என்கிருர். அரசுகளின் முக்கிய வேலை இதுவரை என்னவாக இருக்கிறது என்ருல் ஒவ்வொருவரும் அநியாயமான பங்கை அடையவே உதவியாக இருக்கிறது என்கிருர்.

ஒரு சர்வாதிகாரியின் ஆட்சியில் அல்லது ஒரு சிலரின் ஆட்சியில் (Oligurchis) இவ்விதமாக நடக்க வழி இருக்கிறது. ஒருவர் அல்லது ஒரு சிலரது ஆட்சியில் எல்லாருக்கும் சம அதிகாரம் கிடையாது. எனவே, அதிகாரம் அவர்கள் கையில் இருந்தால் அவர்கள் எதிலும் அதிகப் பங்கை எடுத்துக் கொள்வார்கள். எனவே, அனைவருக்கும் உற்பத்தியில் நியாயமான பங்கைப்பெறும் வழியில்லை. ஆஞல், பெரும்பான்மையோரின் பிரதிநிதிகளால் ஆளப்படும் ஆட்சியான ஜனநாயக அரசுகூட. கூடாதா, அவரவர் நியாயமான பங்கை அங்கும் மக்கள் அடைய முடியாதா என்ருல் க்ரொபாட்கின் அங்கும் அடைய முடியாது என்கிருர். மேலும் அவர் கூறுவதாவது: இப்பொழுதுள்ள ஜனநாயக அரசு உட்பட எல்லா அரசுகள் மட்டுமல்ல, பிற்காலத்தில் வரும் அரசுகள்கூட அவசியமில்லாதவை, தீமைகளைத் தருபவை என்கிருர். அதற்கு அவர் தரும் காரணங்கள் பின்வருவன: எல்லாருக்கும் சொந்தமான பொருள்களை ஒரு சிலர் நியாயமற்ற முறையில் தங்களது முழுக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள உதவும் ஒரு கருவியே அரசாகும். (அது எந்த வகை அரசாக இருந்தாலும் சரி) இந்த ஒரு சிலரின் முழுக் கட்டுப்பாட்டை உதவும் அரசை அக் கட்டுப்பாட்டை அழிக்க உபயோகிக்க முடியாது. எனவே, அரசை எடுத்துவிட்டு அதனிடத்தில் வேறு ஏதாவது அமைப்புகளை ஏற்படுத்திஞலொழிய முதலாளித்துவமும் தனிச் சொத்துரிமையும் மறையவே மறையாது. எனவே, சோஷியலிசக் கோட்பாளர்கள் கூறுவது போல் முதலாளித்துவத்தை அழித்துப் புதுச் சமூகத்தை ஆரம்பிக்க அரசு ஒரு பொழுதும் தேவைப்படாது. இவருக்கும் ஏனைய

ஆட்சி குலைந்த நிலைக் கோட்பாளருக்கும் மக்களின் நன்மைக்காகக் கூட அரசிற்கு அதிகப்படியான செயல்களைத் தரக்கூடாது என்பதில் கருத்தொற்றுமை உண்டு. மேலும், தொழிலாளர்கள் பாராளுமன்றத் தேர்தலில் நிற்பதையோ அரசியல் கட்சிகளில் சேருவதையோ இக் கோட்பாளர்கள் ஊக்குவிப்பதில்லை. ஏனெனில், இதனாலெல்லாம் அவர்களுக்கு ஒரு பயனும் கிடைக்கப் போவதில்லை எனக் கருதுகிறார்கள்.

பிரதிநிதித்துவ அரசின்மீதுகூட க்ரோபாட்கின் தமக்கு ஏன் நம்பிக்கையில்லை என்பதைத் தெரிவிக்கிறார். அரசு அவசியமற்றது எனும் வாதத்தில் பிரதிநிதித்துவ அரசும் உட்பட்டதே ஆகும். மேலும், இருக்கும் எல்லா வகை அரசுகளும் பிரதிநிதித்துவ அரசு உட்படக் குற்றமுள்ளவைதாம். இருந்தும் இவ்வரசுகளைச் சிறந்த முறையில் எதிர்காலத்தில் அமைத்துக் கொள்ளலாமா என்றால் அதற்கும் க்ரோபாட்கின் ஒத்துக்கொள்ளவில்லை. ஏனெனில், பிரதிநிதித்துவ அமைப்பாக இருந்தாலும் அதன் தன்மை அதிகாரம் செலுத்துவதேயாகும் என்கிறார். நாட்டில் எழும் ஒவ்வொரு பிரச்சினைக்கும் மக்களின் முடிவு என்ன என்று நிர்ணயிப்பது மிகக் கடினம். எனவேதான், மக்கள் சில பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க, அப் பிரதிநிதிகளால், அம் முடிவுகளைச் சுலபமாக எடுக்க முடிகிறது. இதனால்தான் பல நாடுகளில் மக்கள் அனைவரும், ஒரு சில பிரதிநிதிகளைத் தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுத்து, ஒரு குறிப்பிட்ட வருட காலத்திற்கு, தங்களது விருப்பங்களை நிறைவேற்றி வைப்பதற்காகத் தேர்ந்தெடுக்கின்றனர். ஆனால், இதிலுள்ள பெருங்குறை என்னவெனில், எந்த மனிதனும், இன்னொரு மனிதனின் முழுப் பிரதிநிதியாகச் செயல்பட முடியாது. இப்படி இருக்க, ஒரு சில மனிதர்கள், எல்லா மக்களின் பிரதிநிதிகளாக எவ்வாறு செயல்பட முடியும்? என்கிறார் க்ரோபாட்கின். மேலும் அவர் கூறுவதாவது: நாட்டினுள் எழும் பல வகையான பிரச்சினைகளுக்கும், முடிவுகளை எடுப்பதற்கான போதிய அறிவுத்திறன் அவர்களிடம் இருப்பதில்லை. யாருக்குமே, எந்த விஷயத்தையும், செயல்முறையாகச் செய்து பார்த்தாலொழிய, அதைப் பற்றிய போதிய அளவு அறிந்துகொள்ள முடியாது. எனவே, அரசு பணிகளை எடுத்து வேலை செய்து அனுபவப்பட்ட பிறகுதான் சிறப்பாக, மேற்பார்வை ஆணை முதலியவற்றைச் செலுத்த முடியும். எனவே, பிரதிநிதித்துவ அரசு எவ் வகையான அரசு என்றால், ஓரளவு, எல்லாவற்றையும் அறிந்துகொண்டு அந்த எல்லாவற்றையும் மோசமாகச் செயல்படுத்துபவர்களின் அரசேயாகும். எனவே, அவர்களால் எதையும் பற்றிச் சிறப்பாக அறிந்து, சிறப்பாகச்

செயல்பட முடியாது. மேலும் உண்மையிலேயே பொதுமக்களின் விருப்பத்தின் பேரில்தான் அரசு செயல்பட வேண்டும் என்ருல், அவர்களின் பொதுச்சம்மதம் என்னவென்று தெரிய வேண்டும். அதைப் பிரதிநிதிகள் அறிந்துகொள்ள வேண்டும். பொதுச் சம்மதம் பல்வேருன பிரச்சினைகளுக்குத்தக்க, பல்வேருன முறையில் மாறுபடும். ஒரே பிரச்சினைக்கு, பலவிதங்களில் மக்கள் தங்கள் கருத்தைப் பொதுச்சம்மதமாகத் தரலாம். மக்களின் உண்மையான பொதுச்சம்மதம் என்ன என்பதையே பிரதிநிதிகள் அறியவேண்டும். இதற்கு ஒரே வழி ஒவ்வொரு பிரச்சினை எழும் போதும், அவர்களைக் கூட்டி, விவாதங்கள் மூலம் அவர்களது உண்மையான பொதுச் சம்மதத்தைப் பெறலாம். இவ்வாறு அவர்கள், தங்களது பொதுச் சம்மதத்தைத் தெரிவித்தால், பிரதி நிதியின் வேலை அதை முடித்துத்தர வேண்டியதைத் தவிர, வேறு எந்தவித முக்கியத்துவமும் அவர்களுக்கு இல்லை. இந்த வேலையைச் செய்ய, அவர்கள் பிரதிநிதிகள் என்ற பட்டத்தை ஏற்க வில்லை.

அங்ஙனம் இல்லை எனில், மக்கள் தங்களுக்குப் பதிலாக, பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தாகி விட்டது. எனவே, பிரதி நிதிகள் சுயேச்சையாக நடக்கலாம், என நடந்தார்களானுல், மக்களின் பொதுச்சம்மதத்திற்கு மாறுபட்ட முறையில் நடக் கலாம். அதை மக்களறியா வண்ணம் இருக்க வேண்டும் எனில், ஒளிவுமறைவாகச் செயல்பட வேண்டும். அது மக்களின் நன்மைக்குச் சிறந்ததன்று.

இந்த விவாதங்களைப் பார்க்கும்பொழுது, ஒன்று பிரதிநிதி முறை, தேவையற்ற ஒன்று, அல்லது அது உண்மையில் மக்களின் விருப்பங்களைப் பிரதிபலிக்கும் அமைப்பன்று என்ற முடிவிற்கே வரவழைக்கிறது.

சிறந்த முறை எதுவெனில், ஒரு பிரச்சினைக்கு மக்களின் பொதுச்சம்மதத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமெனில், அப் பிரச்சினையால் பாதிக்கப்படும் மக்களை, தற்சமயத்திற்குக் கூட்டி, அவர்கள் விவாதம் மூலம் செய்யும் முடிவை, அச் சமயத் திற்கென ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து, அவர்களெடுத்த முடிவை, அப் பிரதிநிதியின் வாயிலாகத் தெரிவிக்க வேண்டும். இப் பணியை, அப் பிரதிநிதி முடித்து விட்டாரேயானுல், அவர் பிரதிநிதி என்னும் இடத்தை விட்டு இறங்கிவிட வேண்டும். அவர் எந்தப் பிரச்சினையின் முடிவை, எடுத்துச் சொல்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டாரோ, அதைத் தவிர, வேறு பிரச்சினை களுக்காகச் சட்டம் இயற்றுவதோ, அல்லது அவற்றைப் பற்றிய

வேறு முடிவுகள் எடுப்பதோ கூடாது என்கிறார் க்ரொபாட்கின். இவ்வாறு ஜனநாயக முறை அரசில் தமக்குச் சற்றும் நம்பிக்கை யில்லை என்பதை மேற்கூறிய வாதமுறைகளால் எடுத்துக் கூறுகிறார்.

க்ரொபாட்கின், அடுத்து, அதிகாரத்தின் தீமைகளைப் பற்றி எடுத்து விளக்குகிறார். மனிதன் இயற்கையில் எவ்வளவு சிறந்த தன்மையைக் கொண்டிருந்தாலும், அதிகாரமானது அவனைக் கெடுத்துவிடும். அதிகாரம் அவன் கையில் போனால், அவனுடைய சிறந்த தன்மை மாறி, சுயநலமும், கர்வமும், கொடுமைத் தன்மையும் உடையவனாக்கிவிடும். தன்னுடைய நலனையே அவன் முதலில் கவனிக்கும்படியும், பிறரது நலன்களைப் பற்றி ஓர் அலட்சியப் போக்கையும், அவனுள் வளர்க்கும். அரசியல்வாதி கொடுமையாளன். ஏனெனில், அவனுடைய சுபாவத்திலன்று, அவனுடைய பதவியே (Position) அவனைக் கொடியவனாக மாற்றிவிடுகிறது. எனவே, தனி மனிதனுக்கோ, சில மனிதர்களடங்கிய ஓர் அவைக்கோ, மற்றவர்களை ஆளும் படியான அரச அதிகாரங்களைக் கொடுக்கவே கூடாது என்கிறார் க்ரொபாட்கின். இவருடைய வாதங்களைப் பார்க்கும்பொழுது, நமக்கு லார்டு ஆக்டனின் (Lord Acton) வாக்கியங்களே நினைவுக்கு வருகிறது. எல்லா அதிகாரமும் கெடுக்கும், முழு அதிகாரம், முழுமையாகக் கெடுக்கும். (All Power, Corrupts; absolute power Corrupts absolutely) என்று கூறியது போலவே, க்ரொபாட்கினும் கூறுகிறார்.

அரசு அதிகாரம் படைத்ததாக இருப்பதால்தான், அரசை நடத்தும் அரசியல் வாதிகளும் அதிகாரத்தைப் பெறுகின்றனர். அவ்வாறு அதிகாரத்தைப் பெற்றதும், அதை மக்கள்மீது செலுத்தத் தொடங்குகிறார்கள். எனவே, இங்கு எது அடிப்படை என்றால், அதிகாரமுடைமையே ஆகும். இதற்கு அதிகாரம் இல்லாவிட்டால், மக்களனைவரும் நேசத்துடன் சகோதரர்கள் போல் வாழ்வார்கள். இத்தகைய தன்மையுடைய மக்களை, அரசு தன் அதிகாரத்தால் மாற்றுகிறது. அரசு அதிகாரத்தைப் பெற்றிருப்பதால்தான், அவ்வதிகாரத்தைச் சிலர், மற்றவர்மீது செலுத்த இவ்வாறாக ஆளுவோர், ஆளப்படுவோர், அதிகாரம் படைத்தோர், அதிகாரமற்றோர் போன்ற பிரிவினைகளெல்லாம் ஏற்படுகிறது. அரசுகள் அதிகாரத்தைப் பெற்றிருப்பதால் நாடுகளுக்குள்ளும், விரோத மனப்பான்மை, வெறுப்பு போன்றவை ஏற்படுகின்றன. ஒரு நாட்டு மக்களையும், இன்னொரு நாட்டு மக்களையும் பிரிக்கிறது. இந் நாடுகளுக்குள் போர்

ஆக்கிரமிப்பு போன்றவை எழுவதன் காரணங்கள் அந்நாட்டில் அதிகாரம் படைத்த அரசுகள் இருப்பதால்தான் என்கிறார். அரசு என்றாலே வலிமை, வற்புறுத்தல், பிரித்துவிடல் போன்றவற்றையே குறிக்கும். இதற்கு மாறாக ஆட்சி குலைந்த நிலையில், அன்பு, சுதந்திரம், ஒற்றுமை இவையே காணப்படும். அரசு ஆணவத்தின் அடிப்படையில் தோன்றிய ஒன்று. ஆட்சி குலைந்த நிலை சகோதரத்துவத்தின் அடிப்படையில் தோன்றிய ஒன்று. தனித்தனி நாடுகளாக மக்களினம் பிரியப்போய்த்தான் ஒன்றுக்கொன்று விரோதங்கள் தோன்றி, அதனால் நாடுகள் ஆயுதங்கள் தோன்றி, அவற்றையும் நாம் சகித்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. மக்கள் தனித்தனியே பிரியப்போய்த்தான் சட்டத்தின் பாதுகாப்பு வேண்டியிருக்கிறது.

மேலும் அரசு தேவையற்றது என்பதைச் சுட்டிக்காட்ட மேலும் சில எடுத்துக்காட்டுகளைக் காட்டுகிறார். எடுத்துக்காட்டாக, மக்கள் கல்வி கற்றுக்கொள்ள அரசு அவசியமா என்று கேட்டால் இல்லை என்றே சொல்லலாம். மக்களுக்குத் தகுந்த ஓய்வு நேரம் கொடுக்கப்பட்டால் அவர்களே கல்வியைக் கற்றுணரலாம். அல்லது அவர்களில் போதிக்கும் ஆர்வமிக்கவர்கள், பிறருக்குக் கற்றுத்தரலாம். இம் முறைப்படி விட்டால் அநேக தன்னியக்கக் கல்வி அமைப்புகள் (Voluntary Educational institutions) தோன்றி ஒன்றுக்கொன்று ஆர்வத்துடன் போட்டியிட்டுக் கல்வியைப் போதிப்பதில் சிறப்புத் தன்மையை அடையும். அவர் சுட்டிக் காண்பிக்கும் மற்றொரு எடுத்துக்காட்டாவது: அரசு தனி மனிதர்களுக்குப் பாதுகாப்பைத் தேடித் தருகிறது என்ற கருத்து பொருளற்றது. அது கொடியவர்களிடமிருந்து குடிமக்களுக்குப் பாதுகாப்பைத் தராதது மட்டுமன்று, அக் கொடியவர்களை உண்டாக்குவதே அரசுதான். அது சமூகத்தின் பொருளாதார முறைகளைச் சிறந்த முறையில் அமைப்பது இல்லை. இதனால் மக்கள் அதிக அல்லலுக்குள்ளாகி மனிதர்களைக் குற்றங்கள் புரியும்படி செய்துவிடுகிறது. தம்முடைய தவறைத் திருத்திக் கொள்ளாமல் அம் மக்களைத் தண்டனை என்னும் பெயரில் சிறைக்குள் அடைக்கிறது. நியாய வழியில் பொருளீட்டி அவர்கள் ஜீவனம் செய்யும் சந்தர்ப்பத்தையும் இவ்வாறாக அவர்களுக்கு அளிக்க விடாதபடி செய்கிறது. இதனால் குற்றங்கள் மலிகின்றனவே தவிரக் குற்றங்கள் மறைவதில்லை. இதைப் பார்க்கும்பொழுது அரசு பாதுகாப்பைத் தருகிறது என்பது உண்மையற்றதாகவே இருக்கிறது.

மேலும் அறிவியல், கலை, வாணிபம் போன்ற ஏனைய செயல்களில் அரசின் தலையீடு இல்லாததால்தான் அவை இவ்வளவு

தூரம் வளர்ந்திருக்கின்றன என்று சொல்லாம். அரசு தன் வன்மைத் தன்மையை இவற்றில் புகுத்தியிருந்தால் அவையும் தம்முடைய சிறப்புத் தன்மையை என்றோ இழந்திருக்கும். மேற் கூறியவற்றுக் கெல்லாம் தேவையானது ஒத்துழைப்புத் தானே தவிரக் கட்டாயப் படுத்தும் முறையன்று.

இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது மக்களது ஒத்துழைப் பினால் அவர்களாக மனமுவந்து செய்யும் செயல்களை அரசு அவர்களைக் கட்டாயப்படுத்தி வாங்கும் செயல்களைவிடச் சிறப்பாக அமைகிறது என்று புரிகிறது. அரசு தன் வலிமையினாலோ அதிகாரத்தின் உதவியினாலோ மக்களைக் கட்டாயப்படுத்திச் செய்யச் சொல்லும் பணிகளைவிட அவர்களாக ஒத்துழைத்துச் செய்யும் பணிகளே சிறப்பாக அமைகிறது.

எனவே, அரசு என்பது சிறந்ததன்று என்பது இதிலிருந்து தெளிவாகிறது. அரசைத் தவிர வேறு முறையில் எங்ஙனம் சமூகத்தை அமைக்கலாம் என்ற வழி வகையைத்தான் நாம் தேட வேண்டுமென்கிறார் க்ரொபாட்கின்.

சிறந்த முறையில் பொதுநிர்வாகத்தில் எப்படி நடத்துவது என்றால் குறிப்பிட்ட பணிகளை முடிப்பதற்காகத் தற்காலிகமான சங்கங்களை அமைத்துக்கொள்ள வேண்டுமென்கிறார். தொழில், வாணிபம் போன்றவை சமூகத்திற்குள் இருக்கவேண்டும் என்றால் அவற்றில் விருப்பமுள்ளவர்கள் அனைவரும் ஒன்றாகக் கூட வேண் டும். தாங்களாகவே தங்களுக்கு வேண்டிய அலுவலர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அத் தொழில் முறை சம்பந்தமான முடிவுகளை அவர்களே விவாதங்கள் மூலமாக எடுக்கவேண்டும். இதைப் போன்ற பல அமைப்புகள் சுதந்திரமான முறையில் ஏற்பட்டு அவை தங்களது ஒத்துழைப்பினால் சிறப்பான முறையில் செயல்பட வேண்டும். இது போன்ற அமைப்புகளில் ஒழுங் கின்மை இருக்காது. வலுக்கட்டாயமும் இருக்காது.

இது போன்ற சங்கங்களையும், கூட்டமைப்புகளையும், பல விதமான அளவுகளில், அதாவது, சிறிய, பெரிய அளவுகளில் ஏற்படுத்தலாம். இவ் வமைப்புகள் அனைத்தும், ஒத்திசைத்து, சமநிலையுடன் வேலை செய்தால், சமூகத்தில் ஒற்றுமை நிலவும் என்கிறார். எல்லா அமைப்புகளும் சமநிலையாக இயங்கும் என்றால், ஓர் அமைப்பு மற்றொரு அமைப்பை விட விரைவாக முன்னேற்ற மடையக் கூடாதா, இத்தகைய சமூகத்தில் முன்னேற்றம் எங்ங னம் இருக்கும் என்ற கேள்விக்கு, க்ரொபாட்கின் தரும் பதிலா வது: அச் சங்கங்களின் செல்வாக்கு மாறிக் கொண்டுதான் வரும்.

அதற்குத் தக்கபடி சமூகம் மாறி ஒத்துச் (Adjust) செல்லும் என்கிறார். மேலும், சமூகத்தில் இத்தகைய சமநிலையை ஏற்படுத்துவது கடினமன்று என்றும், விசேஷச் சலுகைகள் பெற்ற சங்கங்கள் இருந்தால்தான் அத்தகைய சமநிலையை அடைவது கடினம்; ஆனால், ஆட்சி குலைந்த சமூக அமைப்பில் அத்தகைய விசேஷச் சலுகைகள் பெற்ற சங்கங்கள் எதுவும் கிடையாது என்றும், அரசு இருந்தால்தான், இது போன்று சில அமைப்புகளுக்குப் பாதுகாப்பையும் விசேஷச் சலுகைகளையும், மற்ற அமைப்புகளைப் பாதிப்பது போல் வழங்கும். எனவே, ஆட்சி குலைந்த நிலைச் சமூகத்தில், இத்தகைய சமநிலையை ஏற்படுத்துவது கடினமான காரியமன்று என்கிறார். மேலும், ஆட்சி குலைந்த நிலைச் சமூகம், மற்றொரு தீமையையும் தடுக்கிறது. அதாவது முன்பு அரசு இருந்த பொழுது, அதனிடமே எல்லா அதிகாரங்களும் குவிக்கப்பட்டிருந்தன. ஆனால், இப்பொழுது, தனித்தனிச் சங்கங்கள் பொறுப்பேற்றுக் கொள்வதால் எல்லாப் பொறுப்பும் ஓரிடத்தில் குவிவதைத் தடுக்க முடிகிறது. ஒரு சிறு அமைப்பாக இருந்தாலும், அது தன்னுடைய முக்கியதத்துவத்தை இழக்காமல், காத்துக் கொள்கிறது.

சமூகத்திலுள்ள பல அமைப்புகளும், சங்கங்களும் ஒத்து இயங்குகின்றனவா என்றும், அவற்றுள் தகராறு ஏற்படுகிறதா என்றும் கண்காணிக்கவும், அவற்றுள் கூட்டுறவை வளர்ப்பது யார் என்று கேட்டால், அவர் கூறும் பதிலாவது: மக்களுக்குச் சரியானமுறையில் கல்வி அளிக்கப்பட வேண்டும்; ஏழை பணக்காரர்கள் என்று சமூகத்தில் அதிப்ருதி எழுதவற்கான வேறுபாடு இருக்கக் கூடாது; அரசுகள் இருக்கக் கூடாது; சமூகம் இத்தகைய நிலையில் இருந்தால் தகராறு என்பதே ஏற்படாது. தகராறு ஏற்பட வேண்டிய சந்தர்ப்பமும் எழாது. எனவே, தகராறே எழாத போது, யார் சமரசம் செய்வது என்ற பிரச்சினைக்கு இடம் இருக்காது என்கிறார் க்ரொபாட்கின்.

அனுவசியமான தலையீடுகளினால் எதையும் முன்வந்து செய்ய முனையும் மக்களின் ஆர்வங்களை முளையிலேயே கிள்ளிவிடும் அரசு இல்லாததால் மக்களிடையே, சமூகத் தன்மை, சுதந்திரமாக எந்தவிதத் தலையீடுமின்றி, இதற்கு முன் கனவிலும் கண்டிராத முறையில் வளரும் போட்டா போட்டியே, மக்களிடையே விரோதத்தை வளர்க்கிறது. இப் போட்டியை மக்களிடமிருந்து நீக்கிவிட்டால், அவர்களிடையே நட்புறவு வளர்ந்து, ஒருவருக்கொருவர் ஏற்படும் விரோத மனப்பான்மை நீங்கிவிடும்.

மேலும், இதுபோன்ற அமைப்புகளே, இயற்கையானவை என்றும், அரசு மக்கள்மீது திணிக்கப்படும் ஒரு செயற்கை அமைப்பே ஆகும் என்கிருர் க்ரோபாட்கின்.

இதுதான் கரோபாட்கின் விவரிக்கும், ஆட்சி குலைந்தநிலை. ஆனுல், இவரால் விவரிக்கப்படும் ஆட்சி குலைந்தநிலை, நடைமுறையில் சிறிதும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒன்ருக இருக்கிறது. இக் கொள்கையை மேலெழுந்த வாரியாகப் படிக்கும் பொழுது இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கத் தோன்ற வில்லை. மக்கள் தெய்வப் பிறவிகளாய் இருந்தால்தான் இத் தகைய சமூகத்தில் வாழ முடியும். அவர்கள் மிகப் பகுத்தறிவு உள்ளவர்களாகவும், உணர்ச்சி வசமே படாதவர்களாகவும், நியாய சிந்தனை மிக்கவர்களாகவும் இருத்தல் வேண்டும். ஆனுல், உண்மையில் அவ்வளவு உயர்ந்த நிலையில் மக்கள் இருப்பதில்லை. மேலும், ஆட்சி குலைந்த நிலைக் கோட்பாளர்கள் அரசு ஒன்றே மக்களின் தன்மையைக் கெடுத்து அவர்களைச் சுயநலவாதிகளாக்கு கிறது என்று அதன்மீதே எல்லாப் பழிகளையும் போடுவது ஏற்றுக் கொள்ளுகிருற் போல் இல்லை. மனித இயல்புகளிலும் குறைகள் இருப்பதை ஏற்காமல் எல்லாம் அரசினுல் வந்த வினைகள்தாம் என்று கூறுவது நியாயமில்லை. எனவே, இவர்களது கோட்பாடு நடைமுறையில் சற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத இலட்சிய நிலையிலேயே இருக்கிறது. ஆனுல், அதற்காக இக் கோட்பாட்டிலிருந்து நாம் அறிந்துகொள்வது ஒன்றுமேயில்லை என்று சொல்ல முடியாது. உண்மையில் அரசின் வளர்ந்து வரும் அதிகாரக் குவிப்பின் மறுப்பொலியே இதில் காணப்படுகிறது. அரசின் அதிகாரங்கள் வளர வளரச் சிறு சிறு குழுக்களுக்கு முக்கியத்துவம் இல்லாமல் போகிறது. மக்களின் சுதந்திரங்களும் அரசின் அதி காரத்திஞல் பாதிக்கப்பட்டு வாழ்க்கையே ஓர் இயந்திரம் போல் ஆகிவிடுகிறது. எனவே, அரசின் அதிகாரங்களைக் குறைக்க வேண்டியது அவசியமாகிறது. ஆட்சி குலைந்த நிலைக் கோட்பாளர்கள் இச்சிக்கலைத் தீர்க்கக் கூறும் வழிமுறை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும் அவர்கள் கருத்துகளிலுள்ள உண்மைகளை நம்மால் மறுக்கமுடியாது.

12. நாஜிஸம் (Nazism)

முதலாவது உலகப் போரில் ஜெர்மனி தோற்கடிக்கப் பட்டதால் அது மிகக் கேவல நிலையை அடைந்தது. போரில் வெற்றி பெற்ற பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளால் ஒரு துரும்பு போல் நடத்தப்பட்டது. பொருளாதாரத் துறையில் மீள முடியாத அளவு நொடித்து இருந்தது. அதன் அரசியல் நிலையும் மிகப் பலவீனமாக இருந்தது. அந் நாட்டிற்குள், பல கட்சிகள் தங்களுக்குள் ஒற்றுமையின்றிச் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. ஜெர்மனியின் இராணுவ பலம் மறுபடி போரில் ஏழாதவாறு வெற்றி பெற்ற நாடுகளால் அழிக்கப்பட்டது. மேலும் போர் ஏற்பட ஜெர்மனியே காரணமாக இருந்தது. ஆதலால், 51 மிலியன் டாலர் வெற்றி கொண்ட நாடுகளுக்கு வழங்க வேண்டும் என வற்புறுத்தப்பட்டது. இவ்வாருக ஜெர்மனி பல வகையிலும் மதிப்பு இழந்து தாழ்வடைந்தது. இவ்வளவு கேவல நிலையில் இருந்த ஜெர்மனிக்கு எல்லா நோய்களை அகற்றும் சஞ்சீவி போல் நாஜிஸம் அமைந்தது. நாஜிஸத்தின் குறிக்கோள் என்ன என்பதை ஹிட்லர் பின்வருமாறு கூறினர்: ஜெர்மனியர்கள் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டிய தேசிய உணர்வை மீட்பதும், ஜெர்மனி பேரரசை அமைப்ப தற்கான வலுச்சண்டையை மீண்டும் தொடங்குவதுமே ஆகும் என்றும், இவற்றை அடைவதற்குரிய வழி என்னவெனில், மக்களை நாட்டின் உடைமையாக்குதலே ஆகும் என்றும் கூறினர். மேலும் நாட்டினுள் சிறுசிறு குழுக்களிடையே காணப்படும் சண்டைகளை அழிப்பதும் நாட்டின் வாய்ப்பு வளங்களை அரசிற்குப் பின்னல் ஒன்றுசேர்ப்பதும் ஆகிய இவையே இக் கட்சியின் குறிக்கோள்கள் என்று ஹிட்லர் கூறினர். தம் இயக்கத்தைத் தேசிய சோஷியலிசம் (National Socialism) என அழைத்தார். தேசிய என்னும் சொல்லை ஏன் உபயோகித்தார் என்ருல், பல வகையான வேறுபாடுகள் காரணமாகப் பிரிந்து சிதறிக் கிடக்கும் மக்களை ஒரு சக்தி வாய்ந்த உணர்ச்சியினுல் வசப்படுத்தி இணைக்கவே ஆகும் எனலாம். சோஷியலிசம் என ஏன் அழைத்தார் என்ருல், தொழிற்சாலைகளையும், வேறு எல்லா வியாபாரங்களையும் அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும் என அவர் திடமாக நம்பியதால்தான் எனலாம்.

நாஜிஸம் ஒரு தத்துவமாகுமா என்று கேட்டால், அக் கட்சியினர் இதை ஒரு தத்துவம்தான் எனக் கூறினாலும், அது தத்துவமாகாது என்றே சொல்லலாம். வலுச் சண்டைமூலம் பேரரசை அமைக்க வேண்டும் என்ற தங்களுடைய குறிக்கோள்களுக்கு ஏற்ப ஓர் அரசியல் தத்துவத்தையே ஹிட்லர் தேடினார். ஏற்கனவே சேம்பர்லின், 'ஜெர்மனியர்களே மிக உயர்ந்த இனத்தினர்' என்று கூறியிருந்த கொள்கையையும், தலைவனைத் தெய்வமாகக் கொண்டாட வேண்டும் என கார்லைல், சர். மாக்கின்டர் (Sir Machinder) போன்றோர் கூறியிருந்த சில எண்ணங்களையும் நம்பிக்கைகளையும், தொகுத்து, அதுவே நாஜிஸ தத்துவம் என்று ஹிட்லர் கூறினார். இக் கருத்தைக் குறிப்பிடுகையில் சபைன், காரண அறிவு ஏற்றுக் கொள்ள முடியாத பகுத்தறிவற்ற கட்டுக் கதையே தேசிய சோஷியலிசம் என்னும் தத்துவம் என்றும், போரின்மூலம் நாட்டைப் பெருக்குவது என்னும் கொள்கையின் அடிப்படையில் இருக்கும் அத் தத்துவத்தை ஒரு சாகசக்காரனின் தத்துவம் (an adventurers philosophy) என்றே அழைக்கலாம் என்கிறார்.

நாஜிஸ தத்துவத்தின் தன்மை

நாஜிஸத்திற்கும், பாசிசத்திற்கும் நிறைய ஒற்றுமைகள் இருந்தாலும், தத்துவ ரீதியில் இரண்டும் வேறுபடுகின்றன. பாசிசம் புறத்தோற்றத்தில் ஹெகலின் அரசைப் பற்றிய கோட்பாட்டை ஒத்துள்ளது. பாசிசக் கோட்பாட்டின்படி நாடு, குடிமக்களுக்கு இன்றியமையாததும், நன்னெறித் தன்மை வாய்ந்ததுமாகும். ஆனால், நாஜிஸத்திற்கு நாடு அத் தன்மை வாய்ந்த ஒன்றன்று. சிறந்த இனமான ஜெர்மனியர்கள் மிக் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்ற முடிவிற்காகவும், அதை அடைவதற்காக ஒரு கருவியாகவும்தான் நாட்டை நினைத்தார்கள். இவ்வினத்தினரே, ஏனைய மக்களினத்தின் நாகரிகம், அழகு, மனித இனத்தின் சிறப்பு இவற்றைப் படைத்தவர்கள், பண்பாடு என்ன என்று நாட்டிற்கும், மக்களுக்கும், இவர்களே நிர்ணயிக்கிறார்கள் என நாஜிஸக் கோட்பாளர்கள் கூறினர்.

நாஜிஸக் கொள்கையை மூன்று தலைப்பின்கீழ்ப் படித்தறியலாம்.

1. 'வோக்' கோட்பாடு (The theory of Volk).
2. இனம், இடம் இவற்றைப் பற்றிய அடிப்படைக் கொள்கைகள் (The theories of Blood and soil, of race and lebensraum)
3. இக் கொள்கைகளைப் பயன்படுத்தி நாஜிஸம் சர்வாதிகார ஆட்சியை எங்ஙனம் ஏற்படுத்துவது என்பவையே. (The practical application of these theories in totalitariam govt).

வோக் கோட்பாடு (The Theory of Volk)

நாஜிஸக் கட்சியினர் வோக் என்னும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, மனிதர்கள் அனைவரும் சட்டபூர்வமாகவும், அரசியலில் ஒருவருக்கொருவர் சமமானவர்கள் என்னும் லிபரலிசக் கொள்கையை ஏற்க மறுத்தனர். பழைய கிரேக்கர் கோட்பாடான, இயற்கையிலேயே சில மனிதர்கள் ஆளப் பிறந்தவர்கள் என்றும், மற்றவர்கள் ஆளப்படுவோரே ஆவர், அவர்களால் ஆள முடியாது என்னும் கொள்கையைப் பரப்பினார்கள். வோக் என்றால் என்ன பொருள் என்று பார்ப்போம். வோக் என்பதன் பொருள் அவ்வளவு தெளிவாகத் தெரியாவிட்டாலும் அதை நாட்டினம் (Nation) என்ற பொருளையே குறிக்கும் என்று மாக்ஸ் கூறுகிறார். நாஜிஸக் கோட்பாளர்களின் கருத்துப்படி, வோக் ஒரு ஜீவராசியைப் போல் இயற்கையாகப் பிறந்து வளர்ந்து நாஜி சமூகமாக வளர்கிறது. ஒவ்வொரு மனிதனும் வோக்கிலிருந்தே உலகத்திற்கு வெளிக் கிளம்பி வருகிறான். மனிதனுடைய பண்பாடு, நாகரிகம், விஞ்ஞான அறிவு அனைத்தும் வோக்கிலிருந்தே கிடைக்கிறது. அவன் தன்னுடன் ஒத்த மனிதர்களுடன் இரத்த பந்தத்தாலேயே இணைக்கப்படுகிறான். எனவே, அவனுடைய பெருஞ்சிறப்பு எதில் அடங்கியுள்ளது என்றால், தன்னுடைய இனத்தைப் போற்றுவதாலும், வளர்ப்பதாலுமே ஆகும். ஆனால், எல்லா மனிதர்களும் ஒரே இனத்தைச் சார்ந்தவர்கள் அல்லர். எல்லா மனிதர்களும் வோக்கின் மெய் வடிவமான சிறந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். மனித இனத்தில் இயற்கையிலேயே, மேலான இனத்தோர், கீழான இனத்தோர், என்ற பாகுபாடு உள்ளது. மனிதத் திரளில் பெருமளவு விருப்பு, வெறுப்பு போன்ற உணர்ச்சிகளின் கட்டளைப்படி நடப்பதை அறிவார்களே தவிர, அறிவுடன் நடப்பதை அறியமாட்டார்கள். இவர்களுக்கு உதவி புரிவதற்காக வழி காட்டுபவர்களே, வோக் எனப்படுவர். இவ்வாறு வழி காட்டும் பணியில் முதலில் ஆளும் வகுப்பினர் என்ற குழு எந்த வழியில் நடப்பது என்றும் அதற்குத் தேவையான அறிவாற்றலை மக்களுக்குக் கற்றுத் தருகிறது. இரண்டாவதாக இக் குழுவின் தலைவன் ப்யூஹரர் (Feuherer) என அழைக்கப்படுகிறான். இத் தலைவனே மெய்மையின் வடிவமாவன். எனவே, இத் தலைவனின் பெயரிலேயே எல்லாம் நடைபெற வேண்டும். அனைவருக்கும் இத் தலைவனே பொறுப்பாளி என்றாலும், அவனது செயல்களுக்கு யாரும் எந்தக் கேள்வியும் கேட்கக் கூடாது. தலைவன், ஆளும் குழாம், சாதாரண மக்கள் கூட்டம் என்ற மூன்று வகுப்புகளைக் கொண்டதே நாஜி சமூகமாகும். இது ஒரு ஜீவராசியைப் போன்றதாகும். தகுதி வாய்ந்ததே பிழைத்து எஞ்சி நிற்கும் (Survival of the fittest)

என்னும் உயிர்நூல் விதிப்படி ஆள உதவும் குழுவும், தலைவரும் உயர்நிலைக்கு வருகிறார்கள். உயிர்நூல் விதிப்படி எங்ஙனம் பலவகைப்பட்ட ஜீவராசிகள் பிழைத்து உயிர் வாழப் போராடி, அதிக சக்தி உள்ளவையே மிஞ்சுகின்றனவோ அங்ஙனமே, சமூக முன்னேற்றத்திலும் அதிகாரத்திற்காகப் போராட்டமே ஏற்படு கிறது. இப் போராட்டத்தில் சக்திமிக்கவர்களே வெற்றி பெறுகிறார்கள். எனவே, இதில் வெற்றி கண்டவர்களே ஏனைய பலவீனமானவர்களுக்கு வழி காட்டத் தகுதியான இனத்தவரும் ஏற்றவர்களும் ஆவர். இவர்களில் தலைவன் எனப்படுபவன், எல்லாரையும்விடச் சிறந்த தூய இனத்தைச் சேர்ந்தவனாவான். இத் தலைவனைப் பற்றிய நாஜிஸக் கருத்து என்னவென்று விளக்கு கையில் சபைன், வோக் இனத்தின் ஒரு கிளையே இந்தத் தலைவன் ஆவான் என்றும், இவன் தன் இன மக்களுடன் இரத்த பந்தத்தால் இணைக்கப்படுகிறான் என்றும், தன் அதிகாரங்களை இன அடிப்படை யிலிருந்து பெறுகிறான் என்றும், இவன் தன் அறிவுத் திறனால் மக்களை வழிகாட்டுவதில்லை என்றும் மிருகங்கள் எவ்வாறு தங்களது உணர்வுகளையே வழிகாட்டியாக உபயோகப்படுத்து கின்றனவோ, அப்படியே, இத் தலைவனும் அத்தகைய உணர்வையே (instinct) உபயோகப்படுத்துகிறான் என்றும் கூறுகிறார்.

இவ்வாறாக இதற்கு முன்பு பல தத்துவ எழுத்தாளர்களால் நம்பப்பட்டு வந்த சமத்துவம், மக்களிடம் இறைமை போன்ற கொள்கைகளை நாஜிஸம் மறுத்து ஒதுக்கிவிடுகிறது. மேலும், உயிர்நூல் விதியை அடிப்படையாகக் கூறி, ஏறக்குறையச் சாதாரண மக்கள் ஒன்றும் அறியாத ஜடங்கள் என்ற கருத்தைப் பல வழிகளிலும் ஹிட்லர் மக்களிடையே பிரசாரம் செய்து மக்களை ஏமாற்றினார். அவரைப் பற்றிக் குறிப்பிடுகையில் சபைன், ஹிட்லர் கல்வியில் மேம்பட்டவரும் அல்லர்; ஒரு சிறந்த கோட் பாளரும் அல்லர். மாறாக, நடைமுறை மனோதத்துவம் தெரிந்த வரும், செய்கையாளரும் ஆவார் என்கிறார்.

உண்மையில் நாஜிஸம் அறிவியல் தன்மை வாய்ந்தது என்றும், உயிர்நூல் ஓர் அறிவியல் என்றால் அதன் அடிப்படையில் வந்த நாஜிஸக் கோட்பாடும், அறிவியல் தன்மை வாய்ந்ததே என்றும் ஆணித்தரமாக நாஜிசக் கோட்பாளர்கள் கூறினார்கள். ஆனால், உண்மையில் நாஜிஸம் ஒரு போலியே ஆகும். மேலும் அவர்கள் வோக் என்று குறிப்பிடும் அந்தச் சொற்கூறு எதனைக் குறிக்கும்? மக்களா, இனமா, நாட்டினமா என்று தெளிவாக இல்லை.

பிறப்பு, பிறந்த மண் இவற்றைப் பற்றிய கோட்பாடு (The theories of Blood and Soil or Race or Lebensraum)

வோக், தலைவன் இவற்றைப் பற்றிய கோட்பாட்டை, ஹிட்லர் ஆரிய இனத்தின் சிறப்பும், மேற்கு நாகரிகத்தில் அதன் இடமும், ஆகிய வேறு கோட்பாடுகளினுல் ஆதரித்தார். பின்கூறிய கோட்பாடுகள் என்ன என்று பார்க்கலாம்.

இனத்தைப் பற்றிய நான்கு அடிப்படை நிலைகளை வைத்துக் கொண்டு அவற்றை மையமாக வைத்து முன்பு உயிர் நூல் விதிகளின் மூலம் வோக், ஆளும் குழு, தலைவன் இவற்றை விளக்கியது போல் இக் கோட்பாட்டிற்கும் நாஜிக் கொள்கையில் ஹிட்லர் விளக்கம் தருகிருர்:

(1) உயிர் நூலில் ஜீவராசிகளுக்கிடையே உயிர் பிழைத்து வாழ்வதற்கான தகுதி வாய்ந்த ஜீவராசியே போட்டியில் எஞ்சி நிற்கும் என்னும் விதியைப் போல், சமூக முன்னேற்றம் எங்ஙனம் ஏற்படுகிறது என்ருல் மனிதர்களிடையே ஆற்றலுக்காக ஏற்படும் போராட்டத்திலுலேயே ஆகும். இப் போராட்டத்தில் சக்தி வாய்ந்தவரே வெற்றி பெறுகின்றனர். இதைத் தவிர ஒரே இனத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் போராடி, கடைசியில், ஆளும் குழுவினர், தலைவர், ஆகிய இவர்கள் வெற்றியடைந்து உச்ச உயர்வு நிலையை அடைகின்றனர். இதைப் போலவே இனங்களிடையேயும் போராட்டம் ஏற்பட்டு அவற்றில் சக்தி வாய்ந்த இனம் வெற்றி பெற்று மற்ற இனங்களை ஆள்கிறது. (2) எங்ஙனம் ஓர் இனத்தில் தலைவனும் ஆளும் குழுவினரும் மட்டும், அவ்வினத்திலேயே சக்தியும், அவ்வினத்திலேயே சிறப்பும் வாய்ந்தவர்களாக இருக்கிருர்களோ அங்ஙனமே சக்தி வாய்ந்த இனமே உலகத்திலுள்ள மற்ற எல்லா இனங்களையும்விடச் சிறந்ததாகும். இவ்வினம் மற்ற இனங்களுடன் கலந்துவிடாமல் தூயதன்மையாக இருக்கும். எங்ஙனம் ஆளும் குழுவினரும் தலைவரும் மட்டுமே ஓர் இனத்திற்குக் கலை, அழகு, நாகரிகம் இவற்றைப் படைத்தளிக்கின்றனரோ அதே போல் மற்ற இனங்களைவிடச் சக்தி வாய்ந்த இனமே சிறந்த நாகரிகம், கலை இவற்றை ஏனைய இனத்து மக்களுக்கு அளிக்கிறது. எனவே, அவைதாம் எல்லா இனங்களையும்விடச் சிறந்த இனம் ஆகும். இந்தச் சிறந்த இனம் ஜெர்மனி தேசத்தில் வாழும் ஆரிய இனமே ஆகும். (3) உலகத்தில் மூன்று விதமான இனங்கள் உள்ளன. முதலாவதாகக் கலை, நாகரிகம் இவற்றைத் தோற்றுவிக்கும் இனம், அதாவது ஆரிய இனம். இரண்டாவதாகக் கலை, நாகரிகம் இவற்றைத் தாஞகத் தோற்றுவிக்காமல் இரவல்

வாங்கும் இனம். மூன்றாவதாக, அவற்றை அழிக்கும் இனமான யூதர் இனமாகும். ஆரிய இனத்தின் முக்கியமான பண்பு என்னவென்றால் சமூகத்தைப் பாதுகாக்க உழைப்பதே ஆகும்.

ஆல்ஃப்ரெட் ரோஸன்பர்க் (Alfred Rosenburg) மேலும் நாஜிசத்திற்கு விளக்கம் அளிக்கையில் ஆரிய இனத்தைப் பற்றியும் சரித்திரத்தைப் பற்றியும் ஒரு தத்துவமாக விளக்குகிறார். ஆரிய இனத்திற்கும் அதனை விடத் தாழ்மையான ஏனைய இனங்களுக்கும் உள்ள போராட்டமே சரித்திரம். ஜெர்மனியில் உள்ள ஆரிய இனமே முன்பு இந்தியா, எகிப்து, பாரசீகம் போன்ற கிழக்கு நாடுகளில் நாகரிகத்தை நிறுவியது; ஆனால், போகப் போக அந் நாகரிகம் ஏனைய கீழ்த்தரமான நாகரிகங்களின் தொடர்பினால் தன் சிறப்புத் தன்மையை இழந்தது; ஆனால், ஜெர்மனியில் மட்டும் ஆரிய இனம் பிற நாகரிகங்களால் பாதிக்கப்படாமல் பழம் பெருமையுடன் விளங்குகிறது; கிறித்துவ சமயக் கோட்பாட்டின் சிறந்த கருத்துகள் அனைத்தும் ஆரியத் தன்மை வாய்ந்தவையே. ஏசு கிறித்து ஓர் ஆரியர் ஆவார். தற்காலத்தில் இனங்களின் பெருமைகளையும் முக்கியத்துவத்தையும் அழிக்கும்படியான விஷயத்தைத் தோற்றுவித்தது யூதர்களே. இவ்வாறாக ரோஸன்பர்க், ஆரியர்களின் உள்ள, ஒழுக்கப் பண்பாடுகள் அவ்வினத்துடன் பிணைந்துள்ளது என்றும், ஆரியன் எம்மாதிரியான வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதை முடிவு செய்வது அவனது பிறப்பே என்றும், இனம் என்பது உயிரை மட்டும் அன்று, ஒழுக்கம், அறிவியல், கலை ஆகிய இவற்றையும் உண்டுபண்ணுவதால், அதை ஆன்மத் தன்மை வாய்ந்தது என்றும் கூறலாம் என்கிறார். எனவே, பிறப்பு, இனம் ஆகிய இவற்றின் மறுபொருள் ஆன்மா, மூல சக்தி இவையே ஆகும். ஹெகலுக்கு மெய்க்கருத்தும் (Spirit), மார்க்ஸுக்குக் கருப்பொருளும் (Matter), ஏனையோருக்கு மதம், நாடு ஆகியவையே எதையும் தீர்மானிக்கும் மூல தத்துவங்களாக இருந்தன. ஆனால், நாஜிஸத் தத்துவத்தில் பிறப்பே ஒழுக்கம், நாகரிகம், கலை, ஒருவனது தகுதி ஆகியவற்றின் பிறப்பிடமாகும் என்று விளக்குகிறது. ஒரு தனி மனிதனின் தகுதி என்ன என்பதை அளக்கும் அளவுகோல் இனமே ஆகும். ஹாம்ஸ் மார்கான்தன் (Hams Morganthan) கூறியது போல், உன்னுடைய பெற்றோர், மூதாதையர்களின் குணநலன்களைப் பற்றிக் கூறு; நீ எப்படிப்பட்ட தன்மை உடையவன் என்று நான் கூறுகிறேன் என்பதே இனத்தைப் பற்றிய நாஜிஸத்தின் சுருக்கமான விளக்கவுரையாகும்.

இனங்களைப்பற்றிய நாஜிக் கோட்பாட்டினரின் கருத்துகளைப் பற்றி சபைன் தம் விளக்கவுரையில், உயிர்நூல் கோட்பாடுகள், நாஜிஸத்தில் கூறப்பட்ட இனத்தைப்பற்றிய கோட்பாட்டிற்கு எந்தவித விஞ்ஞான ரீதியான பக்க பலத்தையும் தரவில்லை என்றும், எனவே, உயிர்நூல் அறிவியலின் துணைகொண்டது நாஜிக் கோட்பாடு என்பது உண்மை அன்று என்றும், இக் கோட்பாடு அறிவியல் என்ற போலியான போர்வையே போர்த் துள்ளது என்றும் கூறுகிறார்.

நாஜிக் கொள்கையின், இனக் கோட்பாட்டினால் பல விளைவுகள் ஏற்பட்டன. அவை, பின்வருவன: ஜெர்மனியில் மக்கள் தொகையைப் பெருக்குவதற்கான வழி வகைகள் செய்யப்பட்டன. உடலாலும் உள்ளத்தாலும் நோய் உடையவர்கள் திருமணம் செய்து கொள்வதற்கும் அவர்களுக்குக் குழந்தைகள் பிறப்ப தற்கும் தடைகள் விதிக்கப்பட்டன. தீராத நோய் உடைய வர்கள் கொல்லப்பட்டனர்; மாறாக, திடகாத்திரமான ஜெர்மனி யர்கள் திருமணம் செய்து கொள்ளவும், நிறையக் குழந்தைகளை நாட்டிற்குப் பெற்றுத்தரவும் அவர்களுக்குப் பண உதவிகளும் வேறு உதவிகளும் வழங்கப்பட்டன. ஜெர்மானியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையே திருமணம் நடக்கக்கூடாதபடி தடை உத்தரவுகளும் சட்டங்களும் விதிக்கப்பட்டன. இச் சட்டங்கள் அனைத்தும் வெளி உலகத்தினரைத் திடுக்கிட வைத்தன. யூதர் களின் சொத்துகள் அனைத்தும் பிடுங்கப்பட்டு அடிமைகளாக் கப்பட்டனர். மேலும் போலந்து, யுக்ரைன் நாடுகள் ஆக்ர மிக்கப்பட்டன. அத்துடன் அந்நாட்டிலுள்ள எல்லா இனத் தைச் சார்ந்த மக்களும், ஆரிய மக்களுக்கு 'உதவியாளர் களாக' மாற்றப்பட்டனர்.

லெபன்ஸ்ரம் (Lebensraum) அல்லது வாழும் இடத்தைப்பற்றிய கோட்பாடு

லெபன்ஸ்ரம் என்றால் வாழுவதற்கு இடப்பரப்பு என்று பொருள். நாஜிஸக்காரர்கள், தங்கள் நாட்டினர் வாழ்வதற் கான நிலப்பரப்பு போதவில்லை யென்றும், எனவே தங்களது நாட்டின் பரப்பை அதிகரித்தல் அவசியம் என்றும் கூறினர். இவ்வாறு அவர்கள் வெளியில் கூறினாலும் அவர்களது கோட்பாட்டின் விளக்கத்தை ஹிட்லரின் 'மெயின் காம்ப்' (Main Kampf) புத்தகத்தில் விரிவாகக் காணலாம். அதில் ஹிட்லர் பேரரசுக் கோட்பாடு என்னும் கோட்பாட்டை விளக்குகிறார். அதன்படி மேற்கு நாடுகளை அசைக்க முடியாதபடி செய்து விட்டு, கிழக்குப் பக்கமாக விரிவடையவேண்டும்; இரஷ்யர்களை யும் ஏனைய எல்லா இனத்தினரையும் தங்களுக்கு உதவி

யாளர்களாக மாற்றிக்கொண்டு, மத்திய ஐரோப்பாவிற்கே தலைமையாக, ஜெர்மானியப் பேரரசை நிறுவவேண்டும்; பிறகு மேற்கு நாடுகளையும் கைப்பற்றி உலகத்திற்கே தலைமையாக ஜெர்மானிய நாடு ஆக வேண்டும் என்பதே இக் கோட்பாட்டின் சுருக்கமாகும். இதற்கான வழி வகைகள் என்னவென்பதை லெபன்ஸ்ரம் கோட்பாடு உரைக்கிறது.

அதாவது, இராணுவத்தைக்கொண்டு நாடுகளைக் கைப்பற்றி வெற்றி கொள்ளவேண்டும்; அதன் மூலம் அரசுகளைத் தங்கள் அதிகாரத்திற்குக் கொண்டுவரவேண்டும்; பிறகு மேல் இனத்தினரான ஜெர்மானியர்கள் ஏனைய கீழ் இனத்தினரை, அதாவது ரஷ்யர்கள், ஸ்லால், போலிஷ் இனத்தவரைப் பொருளாதாரத் துறையில் சுரண்டவேண்டும்; மிகச் சக்தி வாய்ந்த வல்லரசுகளுக்கிடையே, அதாவது பிரிட்டனில் வாழும் பழம் ஜெர்மானிய இனமான சாக்ஸன் இனத்தினரிடையேயும் ஜெர்மானிய இனத்தினரிடையேயும் உலகம் பிரிக்கப்படல் வேண்டும்; மத்திய ஐரோப்பா, ஜெர்மானியர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும்; ஒவ்வொரு நாட்டிலும் அவ்வரசே அந்நாட்டின் அரசியல் நிலையை முடிவு செய்ய வேண்டும்; மேலும் எல்லா நாடுகளின் எல்லைகளையும், நிர்ணயிப்பது வல்லரசே. ஆதலால், அவ்வெல்லைகளை எப்பொழுது வேண்டுமானாலும் வல்லரசு மாற்றலாம். எனவே, மனிதர்களிடையே சமத்துவம், சர்வ தேசங்களும் ஒன்றுக்கொன்று மதிப்புக்கொடுத்தல் போன்றவற்றுக்கு ஹிட்லர் எந்தவித மதிப்பும் கொடுக்கவில்லை. அவர் சர்வாதிகாரத்திலும் ஏகாதிபத்தியத்திலும் நம்பிக்கை கொண்டார்.

இக் கோட்பாடுகள் சரியானவை என்று நிரூபிப்பவர்போல், ஜெர்மானியர்களே உயர்ந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களே உலகத்தை ஆளப்பிறந்தவர்கள் என்றும், நாடும் ஒரு ஜீவராசியைப் போன்றதுதான் என்றும், எந்த நாடு வளர்ந்து கொண்டே இருக்கின்றதோ அதுதான் சிறந்த நாடு என்றும் கூறினர். இக் கோட்பாடுகளை நடைமுறையில் கொண்டு வருவதற்காக, அதற்கொரு விளக்கவுரை கொடுத்தார்.

ஆரிய இனத்தின் தூய தன்மையையும், அதன் சக்தியையும் பெருக்குவதே நாஜி நாட்டின் முடிவாக இருத்தல் வேண்டும்; இல்லை என்றால், அது வெறும் போலி நாடே ஆகும். இந்த முடிவுகளை அடையச் சர்வாதிகார ஆட்சியே சிறந்ததாகும் என்றார்.

அரசு சக்தி வாய்ந்த ஒன்றாக இருத்தல் வேண்டும்; அரசின் கட்டுப்பாட்டிற்கு மனிதர்கள் தங்களது உயிர், பலவகையான

விருப்பங்கள் ஆகிய அனைத்தையும் அவசியம் ஏற்படும்பொழுது தியாகம் செய்ய வேண்டும். அரசின் உத்தரவின்றி அரசியல் கட்சிகளோ வேறு நிறுவனங்களோ, வியாபாரங்களோ, கல்வி முறையோ பத்திரிகை போன்ற வெளியீடுகளோ, பொழுது போக்குகளோ இருக்கக்கூடாது. அரசிற்குத் தெரியாமல் மனிதர்கள் தங்களது சொந்த விஷயம் என்று சொல்லக்கூடியது எதுவுமே இல்லை. நாட்டின் அங்கத்தினனுன பிறகு அவனது தனி இயல்பு (Personality), திறமை, வேறு சிறப்பியல்புகள் அனைத்தும் நாட்டுடன் ஒன்றி இணைந்துவிடுகிறது.

அரசியல் அமைப்புகள்

ஆளும் குழு, தலைவன் இவர்களைப் பற்றிய கோட்பாடுகள், சுதந்திரமான நீதித்துறை, பாராளுமன்றம், கூட்டாட்சி முறை, உள்ளாட்சித்துறை இவற்றை நீக்கிவிடுகிறது. எல்லா அதிகாரங் களும் தலைவனைச் சேர்ந்தது. அத் தலைவன் என்னென்ன செயல் முறைகள் செய்ய வேண்டுமோ, அவற்றை ஆளும் குழுவிடம் செய்வதற்கான அதிகாரத்தை வழங்குகிருன். கட்சிக்கும் அரசிற்கும் எந்தவித வேறுபாடும் கிடையாது. ஹிட்லரின் அரசியல் பலவகையான துறைகளில் கட்சி அங்கத்தினர்களே அமர்த்தப் பட்டனர். நாட்டின் சட்டமும், தெளிவற்ற முறையில் இயற்றப் பட்டது. இதன் காரணம் என்னவென்ருல், தங்கள் விருப்பத்திற் கேற்ப எப்படி வேண்டுமானுலும் கட்சியாவது அரசாவது அதற்குப் பொருள் விளக்கம் கூறிக்கொள்ளலாம் என்ற வசதிக் காகவே அவ்வாறு இயற்றப்பட்டது.

பொருளாதார அமைப்புகள்

ஹிட்லர், தொழிலாளர்கள், முதலாளிகள் ஆகியோருடைய சங்கங்கள் அனைத்தையும் கலைத்துவிட்டு எல்லாரையும் கட்சிக் கட்டுப்பாட்டிற்குள் அடக்கிவிட்டார். இதனுல் எல்லாக் குழுக் களையும், கட்சியின் செயலாண்மைக் குழுக்களாக மாற்றினுர். இங்ஙனமே சமூக நல சங்கங்கள்கூடத் தேசிய மயமாக்கப் பட்டன. செய்திப் பத்திரிகைகள் அனைத்தும் நாஜிஸத்தின் கட்டுப்பாட்டிற்கு வந்தது. கல்வியில் எல்லாப் பாடங்களிலும் ஆரிய இனத்தின் மேன்மையைப் பற்றியும், தூய தன்மை, சிறப்பு இத் தன்மைகளைப் பற்றியும் போதிக்கப்பட்டன. கல்வி முறையே கேலிக்குரியதாக்கப்பட்டது.

அறிவியலைப்பற்றிப் போதிக்கையில் அறிவியலும் இனத் திற்குத் தகுந்தாற்போல் வளரும். சிறந்த இனம் படைத்தது, சிறந்த தன்மை உடையதாக இருக்கும் எனக் கூறப்பட்டது.

இவ்வாருக, நாஜிஸம் பகுத்தறிவற்ற ஒரு புரட்சிகரமான கோட்பாடாகும். வெறும் மிருக உணர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டதும், காரண அறிவை அடியோடு நீக்கியதுமான இக் கோட்பாடு, உலகத்தின் அமைதியைச் சிறிது காலம் பயமுறுத்திருலும் அது நீடிக்காது போய்விட்டது.

13. பாஸிஸம்

(Fascism)

19ஆம் நூற்றுண்டில் அரசியல் தத்துவம் தனி மனிதர்களின் சுதந்திரங்களுக்கும் உரிமைகளுக்கும் முக்கியத்துவத்தை அளித்து, அரசின் அதிகாரங்களை எங்ஙனமெல்லாம் குறைக்கலாம் என்பதைப்பற்றி விரிவாக ஆராய்ந்தது. ஆனுல், ஹெகல், கிரீன், மார்க்ஸ் போன்றவர்களது அரசியல் தத்துவம் இதற்கு விதிவிலக்காக அமைந்தன. நாடே முழுமையானது என்றும், தனி மனிதர்களுக்கென்று பிறக்கும்பொழுதே எந்த வித உரிமைகளும் கிடையாது என்றும் ஹெகல், கிரீன் போன்ற சிந்தனையாளர் இவ்வாருக நாட்டை வெகு உயர்வான இடத்தில் வைத்துப் போற்றினர்.

20ஆம் நூற்றுண்டில் எல்லோர் நலனையும் பாதுகாக்க வேண்டியது நாட்டின் கடமை என்ற கருத்து மேலோங்கி நின்று, அதனுல் மனிதர்களுக்கு நாடு மிக இன்றியமையாத ஓர் அமைப்பு என்று அதன் முக்கியத்துவத்தைப்பற்றிய கருத்துகள் மறுபடியும் மேலோங்கி நின்றன. இக் கருத்து மேலோங்கி நின்றதற்கு முதல் உலக மகாயுத்தம் பெரும்பாலும் காரணகர்த்தாவாகும். முதல் உலக மகாயுத்தத்திஞல் நாடுகளில் மக்களிடையே இருந்த வேற்றுமைகள், அவர்கள் சாதாரணமாக அனுபவித்துவந்த உரிமைகள், சுதந்திரங்கள் இவை இராணுவ பலத்தின் காரணமாக மறைந்தன. யுத்தம் முடிந்தவுடன்கூட, பழைய நிலைமைக்குப் போகமுடியாமல், சமூக ஒழுங்குமுறை குலையாமல் இருக்க, வலுவான அரசுகள் தேவைப்பட்டன. இவ்வாருன நிலையில் இத்தாலியின் அரசியல் நிலையை நோக்கின், அங்கு யுத்தம் முடிந்து, நான்கு ஆண்டுகள் ஆகியும் ஒரு நிலையான அரசு ஏற்பட முடியாத நிலையில் கட்சிகள் இருந்தன. பெரும்பாலான மக்களது ஆதரவை எந்த ஒரு கட்சியும் அனுபவிக்கவில்லை. இதனுல் நிலையான அரசு தோன்ற வழியில்லாமல் இருந்தது. மேலும் நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் தொழிலாளர்கள் கிளர்ச்சி எழுந்தது. வேலை நிறுத்தங்களால் பொருள் உற்பத்தி தடைப்பட்டது. இவ்வாருன நிலையை எதிர்த்தே பாஸிஸ கட்சி நின்றது. 1919ஆம் ஆண்டு முசோலினியால் தொடங்கப்பட்ட இக் கட்சி 1922ஆம் ஆண்டு இத்தாலிய

அரசைக் கைப்பற்றியது. முசோலினியே இவ்வரசின் பிரதம மந்திரியானார். முசோலினியின் பாஸிஸக் கட்சி ஒரு புரட்சியின் மூலமாக அரசைக் கைப்பற்றவில்லை. அது ஒரு சக்தி வாய்ந்த தீவிரமான குழுவே ஆகும். இத்தாலியில் காணப்பட்ட வேறு எதிர்க்கட்சிகள் பலவீனமாகவும் ஒற்றுமையின்றியும் இருந்ததால், கடினமின்றிப் பாஸிஸக் கட்சி அரசைக் கைப்பற்றியது. அதிகாரத்திற்கு வருவதற்கு முன்பும் வந்த புதிதிலும் இக் கட்சிக்கு நிலையான கொள்கையோ கோட்பாடோ எதுவும் இல்லை. அதிகாரத்தைக் கைப்பற்றியதும் நாட்டில் தன் நிலையை ஸ்திரப் படுத்தி, நிலையாக, அதிகாரத்தில் இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அது வரையில் பாஸிஸத்தில் கூறும்படியான தத்துவங்கள் எதுவுமே இல்லை. தன் நிலை ஸ்திர மானதும்,பாஸிஸக் கட்சியின் கோட்பாடு என்ன, நாட்டைப்பற்றிய கருத்து என்ன என்பனபோன்ற தத்துவப் பிரச்சினைகளுக்குப் பதில் சொல்ல வேண்டியது அவசியமாயிற்று. பாஸிஸக் கோட்பாடு என்ன என்பதற்கும் அதிகாரத்தைக் கைப்பற்றியதன் அவசியம் என்ன என்பதற்கும் இத்தாலிய மக்களுக்கும் வெளி உலகிற்கும் முசோலினியைத் தவிர பாஸிஸ கட்சியைச் சார்ந்தோர் விளக்கம் கூறினர்.

அதிகாரத்திற்கு வருவதற்கு முன்பு பாஸிஸக் கட்சியினர் கோட்பாடுகளும் தத்துவங்களும் தேவையற்றவை என்று வெறுத்தனர். தாங்கள் வாய்ப்பேச்சுக் கோட்பாளர்கள் அல்லர் என்றும், செயல் வீரர்கள் என்றும் கூறிக்கொண்டனர். ஆனால், தங்கள் நிலை ஸ்திரமானதும் தங்கள் எண்ணத்தை மாற்றிக் கொண்டு தங்கள் அரசிற்கு ஒரு கோட்பாட்டின் அஸ்திவாரம் தேவை என உணர்ந்தனர். இவ்வாறாக, கோட்பாட்டை அமைக்க இதற்கு முன்பு எழுதப்பட்ட பல தத்துவ எழுத்தாளர்களது கருத்துகளை, கடன் வாங்குவது, அவர்களுக்குக் கடினமான வேலையாக இல்லை.

பாஸிஸக் கோட்பாடு பல அரசியல் தத்துவக் கருத்துகளை ஆதாரமாகக் கொண்ட கலவை எனலாம். எல்லாக் கருத்து களுக்கும் ஆதாரங்களைத் தேடுதல் கடினம். ஆதலால், முக்கியமாக யாருடைய தத்துவங்களை எடுத்துக்கொண்டனர் என்று ஆராய்ந்தால் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள், மாக்கிய வல்லி, ஹாப்ஸ், ஹெகல், மார்க்ஸ், சோரல், மோஸ்கா, பாரட்டோ போன்றவர்களாவர். பாஸிஸத்தில் நிரந்தரமானதும் நிலையானது மான ஒரு தத்துவத்தை நாம் எதிர்பார்த்தால் ஏமாற்றத்தையே அடைவோம். அவர்களுடைய குறிக்கோள் நிலையான தன்மை

யுடைய தத்துவத்தை அளிப்பது அன்று என்றும் நடைமுறைக்கு ஏற்றதும், முன்னேற்றத்திற்குப் பொருத்தமானதுமான தத்துவமே ஆகும் என்றும் அவர்கள் பதிலளிக்கின்றனர். இப் பதிலை முசோலினியே விளக்குகிறார்: 'நாங்கள் எந்தவிதமான கொள்கைகளிலும் நம்பிக்கை கொண்டவர்கள் இல்லை. ஏனெனில், இத்தகைய கொள்கைகளை, மாறும் தன்மைகள், உண்மை நிலைகள் இவற்றுக்குத் தக்கபடி மாற்றி அமைக்க முடியாது. எனவே, நாங்கள் எங்களை மேன்மக்கள் என்றும் கூறிக்கொள்கிறோம். ஜனநாயகவாதிகள் என்றும் கூறிக் கொள்கிறோம். பழைமை வாதிகள் என்றும் எங்களைச் சொல்லலாம். முன்னேற்றவாதிகள் என்றும் சொல்லாம். பிற்போக்காளர் என்றும் சொல்லலாம். புரட்சியாளர் என்றும் சொல்லலாம். சட்டப்படி நடக்கிறவர்கள் என்றும் சொல்லலாம். சட்டத்தை மீறுபவர்கள் என்றும் சொல்லலாம். ஆனால், இவை எல்லாம், காலம், இடம், சூழ்நிலை இவற்றுக்குத் தக்கவாறு பொருத்தமானபடி கூறிக்கொள்வோம்' என்கிறார்.

பாஸிஸத்தில் நாட்டைப்பற்றிய கோட்பாடு

நாடு மக்களின் பாதுகாப்பு ஒன்றிற்காகவோ அல்லது மக்கள் சமாதானமாக, வசதியாக வாழ உதவுவதற்காகவோ ஏற்பட்ட ஒன்றன்று. மனிதனின் தன்மை வெறும் பொருள்களில் ஆசையும், அவற்றை அடைந்து மகிழ்ச்சியுறுவதும் மட்டும் அன்று. அவன் ஆன்மீகத் தன்மை உடையவன். எனவே, அரசும் அவனது ஆன்மீகத் தன்மையிலிருந்து உருவாகிறது. ஒவ்வொருவனும் பிறருடன் ஒத்து வாழ்ந்து தானும் வாழ்ந்து, அவர்களும் வாழத் தேவையான கடமைகளைச் செய்கிறான். எனவே, அரசு ஆன்மீகத் தன்மையும் அறநெறித் தன்மையும் வாய்ந்தது. மேலும், அரசிற்கு மக்களை உள்நாட்டு, வெளிநாட்டுச் சண்டைகளினின்று காக்கவேண்டிய பொறுப்பும் உள்ளது. ஆனால், அதே சமயம் பரம்பரை பரம்பரையாக மக்களது நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், நாகரிகம் இவற்றையும் காப்பாற்றுவதால், மக்களின் ஆன்மாக்களையும் பாதுகாப்பது அதன் பணியாகிறது. எனவே, இன்றிருக்கும் நாடு இன்றைக்குக் காணப்படும் ஓர் உண்மை மட்டும் அன்று. அது இறந்த காலத்துடன் தொடர்ச்சியாக வந்து வருங்காலத்திற்கும் தொடர்ந்து இருப்பதற்காக ஏற்பட்டது. இவ்வாறாக ஒவ்வொரு நாடும் இயற்கையான, ஆன்மீகத் தன்மையுடையதாக இருக்கிறது. மனிதனின் ஆன்மீக உணர்வே சந்ததியை ஏற்படுத்துவதற்காகக் குடும்பத்தை அமைக்கிறது. மனிதனின் குடும்பம் ஓரளவே அவனது ஆன்மீக உணர்வைத் தீர்ப்பதால், அவனது முழு ஆன்மீக உணர்வும், மதம், மொழி, எண்ணங்கள், கலை போன்றவற்றை வளர்க்கத்

தூண்டுகிறது. இதன் விளைவு சமூகமும், முடிவில் அரசும் தோன்றுகிறது. இவ்வரசில் மனிதன் எல்லாருடைய சம்மதத்துடன் தேவையான சட்டங்களை இயற்றி ஆள்கிறான். அரசே மனிதர்களுடைய பல வகையான தேவைகள், விருப்பங்கள் இவற்றைக் காக்கிறது. மேலும், சட்டம், நீதி இவற்றின் மூலமாக வரும் பிற்காலச் சந்ததிகளுக்கு அறிவியல், கலை இவற்றின் வெற்றிகளை வழிவழியாகத் தந்து மனித சமுதாயத்தில் கட்டுப்பாட்டுணர்வை நிலைநாட்டுகிறது. நாடே மனிதர்களை நாகரிகத்தின் முதல் படியிலிருந்து வளர்த்து, சக்தி வாய்ந்த பேரரசு அமைக்க உதவுகிறது. நாட்டிற்காக உழைத்த தலைவர்களையும், அதன் பரப்பை அதிகப்படுத்திப் பெருக்கிய வீரர்களையும், நாட்டிற்குப் பெரும் புகழ் தேடித்தந்த மேதைகளையும் மக்கள் வழிவழியாக நினைத்துப் போற்றும்படியும், அவர்கள் பாதையைத் தாங்கள் பின்பற்றும்படி நினைக்கவும், மக்களுக்கு அந் நாடே உதவுகிறது. நாட்டினுள் வேற்றுமை பெருகி நாட்டின் முக்கியத்துவத்தில் மக்கள் நம்பிக்கை இழப்பார்களேயானால் அத்தகைய நாடுகள் தன் மேன்மைத் தன்மையிலும் குறைந்து கொண்டே வரும். நாடு சிறப்பை அடைய வேண்டுமானால், நாடு வேறு, மக்கள் வேறு என்ற பிரிவினையின்றி இரண்டிற்கும் பிரிக்க முடியாத கூட்டிணைப்பு இருத்தல் வேண்டும்.

நாட்டைப்பற்றிய மேற்கூறிய பாஸிஸக் கருத்துகளை நோக்குங்கால் சில உண்மைகள் வெளிப்படுகின்றன. பாஸிஸ நாட்டில் தனிமனிதர்கள், தங்களை விட்டுப் பிரிக்க முடியாத உரிமைகள் என்று எதுவும் கொண்டாட முடியாது. மேலும் இவர்கள் கருத்துப்படி தனிமனிதர்களை நாட்டுடன் ஐக்கியப்படுத்தி விடுகிறார்கள் என்றும் புலனாகிறது. ஆனால், பாஸிஸக் கோட்பாளர்கள் அங்ஙனம் இல்லை என்றும், தனிமனிதர்கள் தங்கள் உரிமைகளை இழந்துவிடவில்லை என்றும் விவாதிக்கிறார்கள். நாடே அறநெறித் தன்மை வாய்ந்த ஒரு முழுமை என்றும், தனிமனிதனுக்கென்று நாட்டைத் தவிர வேறு அறநெறி ஒழுக்க முறைகள் கிடையா என்றும், எனவே அதன் அதிகார எல்லையைத் தாண்டி நடக்க எந்த உரிமையும் கிடையாது என்றும் கூறுகின்றனர். தனிமனிதன் தன் தனிச் சிறப்பை நாட்டிற்காக, அதன் நன்மைக்காக வளர்க்க வேண்டும். மக்களின் சுதந்திரம், நாட்டின் நலத்திற்காக உபயோகப்பட வேண்டும். சுதந்திரம் என்பதே மக்களுக்கு நாடு அளிக்கும் சலுகையே ஆகும். உண்மையான சுதந்திரத்தைப் பாஸிஸ நாட்டிலேயே காணலாம். தனி மனிதர்களுக்குத் தேவையான சுதந்திரங்களை ஒதுக்கிக் கொடுத்துத் தேவையற்ற, தீங்கு

விளைவிக்கும் சுதந்திரங்களை அவர்களிடமிருந்து அகற்றி விடுகிறது. எத்தகைய சுதந்திரங்கள் மனிதர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும், எவற்றை அகற்றிவிட வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது நாடே. நாட்டின் அதிகாரத்திற்கும், மக்களின் சுதந்திரத்திற்கும் தொடர்பு என்ன என்னும் புதிரை அது தீர்க்கிறது. இத் தீர்வு என்னவென்றால் நாட்டின் அதிகாரம் வரம்பற்றது, எந்தவித உடன்படிக்கையும் சமரசமும் இவற்றுக்குக் கட்டுப்படாது, அதன் அதிகாரத்தின் எந்தப் பகுதியும் வேறு மத அறநெறிக் கொள்கைகளுக்குச் சரணடையாது என்பவை ஆகும்.

சுருங்கக் கூறின், பாஸிஸ நாடு 17ஆம் நூற்றாண்டில் லெவியதன் என்னும் புத்தகத்தில் ஹாப்ஸ் கூறிய நாட்டைப் போல் அதிகாரத்தின் இறைமைக்குத் தனி மனிதன் அடிமை யாகிறான். ஜனநாயக ஆட்சியைப்பற்றிய முசோலினியின் கருத்துகள் என்ன என்று பார்க்கலாம். உண்மையான ஜனநாயகம் என்பது வெறும் எண்ணிக்கையில் பெரும்பாலோரால் ஆளப்படும் ஆட்சி அன்று. அரசின் தன்மையில்தான் அதன் தரத்தை அறிய வேண்டுமே தவிர, வெறும் எண்ணிக்கையில் அன்று. எனவே, உண்மையான ஜனநாயகத்தை ஒருசிலரின் மனச்சான்றின் வழியாக்கிக் காணலாம் அல்லது ஒரே ஒருவரின் விருப்பத் தேர்வின் மூலம் காணலாம். இக் கருத்தின் நோக்கம், அக்காலத்தில் கிரேக்க நாடுகளில் காணப்பட்டது போன்ற ஒருசிலரின் ஆட்சி (aristocracy) தான் நல்லது என்பதன்று. அரசியலில், திறமை வாய்ந்த சிறு குழு நாட்டை ஆள்வதுதான் பொருத்தமாகும் என்னும் கருத்தையே வலியுறுத்துகின்றது. பாரட்டோ, மைக்கேல்ஸ், மோஸ்கா போன்ற கோட்பாளர்களின் கோட்பாட்டை இங்கு விளக்க வேண்டியது அவசியம். அவர்கள் கருத்துப்படி, ஒவ்வொரு சமூகத்திலும் ஒருசிலரே நாட்டை ஆள்வதற்கான தனித்திறனும் பண்பாடுகளும் கொண்டிருக்கின்றனர். அவர்களே நாட்டை ஆள்வதற்குத் தகுதியானவர்கள். எங்ஙனம் சிலர் சித்திரம் வரைவதிலும், சிலர் இசையிலும், சிலர் வேறு தொழில்களிலும் திறமையுடையவர்களாக இருக்கிறார்களோ, அங்ஙனமே நாட்டை ஆளுதலிலும், அதை ஆள்வதற்கு ஒரு சிலரே, ஆர்வமும் தகுதியும் பெற்று இருக்கின்றனர். எனவே, அவர்கள் ஆளுதலே இயற்கை. எனவே, அவர்களைத் தவிர வேறு வகுப்பினர் ஆளுதல் பொருந்தாது. இவ்வாறு ஆளத் தகுதி பெற்ற அக் குழுவினர் ஆளுதல் அவர்களது உரிமை மட்டும் அன்று. அதுவே அவர்களது கடமையும் ஆகும் என்று விளக்குகின்றனர். நாட்டின் விவகாரங்கள் அக் குழுவினர் கையில்

இருந்தால் மக்களுக்கு அவர்கள் சிறந்த அரசைத் தருகின்றனர். அவ்வரசின் கீழ் வாழும் ஒவ்வொரு மனிதனும் தனக்குப் பொருத்தமான தொழிலைச் செய்கிறான். இதுவே உண்மையான சிறந்த தரமுள்ள ஜனநாயகமாகும். இக் கருத்தையே பாரட்டோ, மைக்கேல்ஸ், மோஸ்கா போன்ற கோட்பாளர்கள் விவரிக்கின்றனர். இக் கருத்தை பாஸிஸத் தத்துவம், தாராளமாகக் கடன் வாங்கிக் கொண்டது. எனவே, பாஸிஸச் சிந்தனையாளர்கள் நாட்டைத் தகுதியுள்ள சிலரே ஆள வேண்டும் என்றனர். ஆனால், இவ்வாறு தகுதியுள்ள சிலரைத் தேர்ந்தெடுப்பது எப்படி என்ற இந்தப் புதிருக்கு விடை காண பிளாட்டோவைப் போல் பாஸிஸக் கட்சியினருக்கு எந்தவித சிரமத்தையும் எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

பாஸிஸ நாட்டில் ஆள்வதற்கான தகுதி பெற்றவர் யார் என்று கேட்டால், நேரடியான அல்லது மறைமுகத் தேர்தல் மூலமாகவோ அல்லது வேறு வழிகள் மூலமாகவோ கண்டு பிடித்து ஆட்சியில் அமர்த்த வேண்டியதில்லை; பாஸிஸக் கட்சியில் புனிதமான தொண்டை ஆற்றுவதன் மூலமாக இவர்கள் அமர்த்தப்படுவர்; ஏனெனில், நாட்டின் மனச்சாட்சியே பாஸிஸக் கட்சிதான். நடைமுறையில் இதன் பொருள் என்னவென்றால் கட்சியே நாடு. கட்சி, ஆளும் குழு இவைகளுக்குள் வித்தியாசம் கிடையாது. பாஸிஸக் கட்சியில் ஆளத் தகுதியுள்ளோரே அதன் அங்கத்தினர்கள். மற்ற ஜனநாயகக் கட்சிகளைப்போல் யார் வேண்டுமானாலும் இக் கட்சியின் அங்கத்தினராக முடியாது. உறுப்பினர்கள் மிகக் கவனமான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களுக்குக் கட்சியில் ஒழுக்க முறைகளைக் கற்றுத் தருகின்றனர். தகுதியில்லாதோர் கட்சியை விட்டு நீக்கப்படுவர். இவ்வாறாக முழு அங்கத்தினரானவுடன் அவர்கள் ஆளத் தகுதி பெற்றவர்கள் என்று ஒப்புக்கொள்ளப்படுகின்றனர்.

இவ்வாறாகக் கட்சியே பரம்பரை பரம்பரையாக ஆளத் தகுதி உள்ளோர் யார் எனத் தேர்ந்தெடுக்கிறது. கட்சியே ஆளுகிறது. மேலும் பாஸிஸக் கட்சிக்கும் அரசுக்கும் நெருங்கிய தொடர்பிருந்தது. பாஸிஸக் கட்சியே அரசு எனலாம். கட்சியின் தலைவரே அரசின் தலைவராவார். கட்சியின் உள் குழுவே, நாட்டின் சட்ட சபையாகும். அரசாங்கத் துறையின் கீழ் நிலையிலிருந்து மேல் நிலைவரை இருக்கும் எல்லா அதிகாரங்களும் கட்சி அங்கத்தினர்களுக்கே கொடுக்கப்பட்டது. எதிர்க் கட்சிகள் சட்டப்படி செல்லாதவையாக்கப்பட்டன.

நாட்டைப் பாதுகாக்கும் காவலாளியைப் போன்றது ஆளும் கட்சி. எனவே, நாட்டிற்கு எவ்வளவு மதிப்பு அளிக்கப்படுமோ அவ்வளவு மதிப்பு அதற்கு அளிக்கப்படவேண்டும். எனவே, அக் கட்சி ஏனைய கட்சிகளுடன் தேர்தல் போட்டியில் ஈடுபடுவது அதன் மேன்மைத் தன்மைக்கு இழுக்காகும். அதன் நோக்கம் நாட்டைக் கவனத்துடன் காக்க வேண்டியதுதானே தவிர, பொது மக்கள் மற்ற கட்சிகளுக்கு அதிக ஆதரவைத் தருகிறார்களா அல்லது இக் கட்சிக்குத் தருகிறார்களா என்று போட்டியிடுவதில் அன்று; அவ்வாறு மற்றக் கட்சிகளுடன் சரிசமமாகத் தேர்தல் போட்டியில் கலந்து கொண்டால் அதன் தனித் தன்மையும் சிறப்பும் மறைந்துவிடும்; ஆளும் தகுதி பெற்ற சிறந்த கட்சி ஒன்றே இருக்க முடியும். இக் கட்சியை ஏனைய கட்சிகளுடன் சமமாக நடத்துவது பொருந்தாது. எனவே, தேர்தலில் மற்றக் கட்சிகளுடன் போட்டியிடுவது அக் கட்சிக்கு அவசியமும் இல்லை. அவ்வாறு போட்டியிட அனுமதிக்கப்படக் கூடாது. தேர்தல் என்பது அதிகாரத்திற்கான போராட்டமாக இருத்தல் கூடாது. மாறாக, ஆளும் குழுவினர் தரும் பலவகை திட்டங்களில் எது நல்லது என்று மக்கள் வாக்கெடுப்பின் மூலம் நேரடியாக முடிவுகளைக் கூறலாம் அல்லது ஆளும் கட்சியின் வேட்பாளர் பலரில் தங்களுக்குப் பிடித்த தலைவரை மக்கள் வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கலாம் என்றனர் பாஸிஸக் கட்சியினர்.

மேற்கூறிய பாஸிஸக் கட்சியினரின் கருத்துரைகளை ஊன்றிக் கவனிக்கும்போது, சில உண்மைகள் வெளிப்படுகின்றன. அதாவது, பாஸிஸத்தின் மறு பெயர் தனி மனிதனின் எதேச்சதிகாரம் எனலாம். பாராளுமன்றம் போன்ற நிறுவனங்கள் வளர்ச்சியைத் தடுக்கக் கூடியவை என்றும், அரசிற்கு வலிமை தெளிவான நோக்கு, மதிப்பு, பெருமை, வேறு பல பண்புகள் இருத்தல் வேண்டும் என்றும் அதிகாரங்களைப் பாராளுமன்றம் நீதித் துறை, ஆட்சிமுறை இவைகளுக்குப் பிரித்துக் கொடுத்தல் கூடாது என்றும் இவ்வாறாக விரிவாக விளக்கிவிட்டு, கடைசியில் எல்லா அதிகாரங்களும் ஒரே நபரிடம் குவிக்கப்பட்டு இருத்தல் வேண்டும் என ஏதோ புதிதாகக் கண்டுபிடித்துவிட்டாற்போல் முடிக்கின்றனர். இவ்வாறாக, அதிகாரங்கள் ஒப்படைக்கப்படும் தலைவனுக்குச் சர்வாதிகாரி என்ற பட்டத்தை அளிக்காமல் தெய்வத்திற்குச் சமமாக ஏற்றி வைக்கப்படுகிறார்.

இவ்வாறாக நாட்டின் தலைவருக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்திற்குச் சில காரணங்களை இக் கோட்பாட்டாளர்கள் கூறுகின்றனர். சாதாரண மக்கள் ஒரு திறமை வாய்ந்த தலைவர் மூலமாகத்தான் ஆட்சி சம்பந்தமான செயல்களையும், கொள்கை

களையும் நினைத்து முடிவு செய்ய முடியுமே தவிர, தாங்களாகவே நினைக்கவும் முடிவு செய்யவும் முடியாது என்றனர். இக் கருத்து எல்லோராலும் ஒப்புக்கொள்ளக்கூடியதாக உள்ளது. அடுத்ததாக அவர்கள் கூறுவது என்னவென்றால், அத்தகைய சிறந்த தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் திறமையும் அவர்களுக்கு இல்லை என்கிறார்கள். இது விவாதத்திற்கு உரிய ஒரு குறிப்புரையாகும். மேலும் ஆளும் குழுவினரே, நாட்டின் ஒழுக்க, ஆன்மீகப் பண்புகளைப் பிரதிபலிக்கிறார்கள் என்று அடுத்து அவர்கள் கூறுவதற்கு எந்தவித நிரூபணமும் இல்லை. மேலும் இத் தலைவர்களுக்கு எந்தவித எதிர்ப்பையும் தெரிவிக்காது உண்மையுடன் நடந்து கொள்வது குடிமக்களின் கடமையாகும். நாட்டின் தலைவன் என்ற முறையில் அவன் குடிமக்களின் முழு நம்பிக்கையும் மதிப்பும் பெறத் தகுதியுடையவன் என்கிறார்கள்.

மேலும் பாஸிஸ இலக்கியங்கள் இத்தாலிய அரசினால் சட்டப்படி உண்டாக்கப்பட்ட கூட்டுரிமைக் கழகங்களைப்பற்றி விரிவாக விளக்குகின்றன. 1934ஆம் ஆண்டு இயற்றப்பட்ட கார்ப்பரேஷன் சட்டப்படி நாட்டின் அரசியலைப் பொருளாதாரத்தின் அடிப்படையின்கீழ் ஒழுங்கமைக்கப்பட்டது. உள்ளூர்த் தொழிலாளர்கள் அனைவரும் ஒரு குழுவிலும், முதலாளிகள் அனைவரும் ஒரு குழுவிலும் சேர்க்கப்பட்டனர். உள்ளூர்த் தொழிலாளர் குழுக்கள் மாகாணத் தொழிலாளர் கூட்டிணைக் கழகங்களுடனும், உள்ளூர் முதலாளி (employer) குழுக்கள் மாகாண முதலாளி (employer) கூட்டிணைக் கழகங்களுடனும் தொடர்பு உடையனவாய் இருந்தன. கடைசியில் மாகாணக் கூட்டிணைக் கழகங்கள், தேசிய கூட்டிணைக் கழகங்களுடன் இணைக்கப்பட்டன. இவ்வாறாக மொத்தம் இருபத்திரண்டு தொழிலாளர், முதலாளி (employer) தேசிய கூட்டிணைக் குழுக்கள் இருந்தன. ஒவ்வொரு குழுவிற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கிய ஒரு சபை உண்டு. இந்த இருபத்திரண்டு குழுக்களின் சபைகளும் சேர்ந்த அமைப்பிற்குத் தேசிய கூட்டிணைப்புச் சபை (National Council of Corporation) என்று பெயர். இச் சபைக்கு இயந்திரம், தொழிற்றுறை, வியாபாரம் ஆகியவைகளைக் கட்டுப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும் அதிகாரங்கள் நிறைய இருந்தன. இச் சபையின் உள் குழுவில் (Central Committee) மாகாணப் பிரதிநிதிகள் மட்டும் அல்லர், பாஸிஸக் கட்சியின் செயலாளர்களும், பாஸிஸ மந்திரிகளும் உறுப்பினர்களாக இருந்தனர். மேலும் இக் கூட்டிணைப்புத் தலைமையின் உச்சியில் இருந்தவர் அரசின் தலைவரே. அதாவது, முசோலினியே அரசின் தலைவராகவும், தேசியக் கூட்டிணைப்பின் தலைவராகவும் இருந்தார். இவ்வாறாக,

முசோலினி நாட்டில் அரசியல் நிறுவனத்தின் தலைவராகவும் பொருளாதார வாழ்வமைப்பின் தலைவராகவும் இருந்தார்.

இவ்வாருகக் கூட்டிணைப்புச் சங்கங்களால் என்ன பலன் என்னும் கேள்விகளுக்கு, பாஸிஸக் கோட்பாடு கூறும் பதில்கள் என்ன என்று பார்ப்போம். இத்தகைய அமைப்பு முதலாளி களுக்கும் தொழிலாளிகளுக்கும் நல்லுறவை வளர்க்க உதவு கிறது என்றும், மேலும் அரசு தனிமனிதனின் பொருளாதார நலன், தகுநிலை (Status) இவைகளுடன் தொடர்பு கொள்ளும்படி செய் கிறது; அவனை ஓர் உண்மையான குடி மகனுக்குகிறது; வெறும் அரசியல் உரிமைகள் சிலவற்றைக் கொடுத்துவிட்டு அவனது பொருளாதாரநிலையுடன் அரசு எவ்விதத் தொடர்பும் கொள்ளா மல் இருந்தால், அவனுக்கு உரிமைகளைக் கொடுத்தும், அதை உண்மையில் அவன் அனுபவிக்க முடியாதவனுகிருன் என்று பாஸிஸக் கோட்பாளர்கள் கூறினர். மேலும் பாஸிஸக் கோட்பாடு வன்முறையில் நம்பிக்கையைத் தெரிவித்தது. இத்தாலியின் ஆட்சி அதிகாரத்தைப் பாஸிஸக் கோட்பாளர், வன்முறையை உபயோகித்தே கைப்பற்றினர். ஒரு புனிதமான காரணத்திற்காக வன்முறையை உபயோகிப்பதில் தவறில்லை என்றும், அது அறவழி முறைதான் என்றும் வலியுறுத்திஞர்கள். அதிகாரத்தைக் கைப்பற் றியதும் அரசு, நாட்டைப் பாதுகாக்கவும், கெடுதல்கள் நிகழா வண்ணம் தடுப்பதற்காகவும், கட்டுப்பாட்டை நிலை நிறுத்தவும் எல்லாவற்றிற்கும் மேலாக, உயர்ந்த நோக்கங்களை அடையவும், வன்முறையை மேற்கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை என்றும் கருதிஞர்கள். உள்நாட்டு விவகாரங்களில் மட்டும் அல்ல, வெளிநாட்டு உறவுகளிலும்கூட, போர் புரிதல் சிறப்புத் தன்மை வாய்ந்ததே ஆகும். போர் புரியும் திறனுடைய மனிதனின் சக்தி அனைத்தும் ஒன்றுதிரட்டப்பட்டு, அவர்களது பெருந் தகைமை வெளிப்படுகிறது. வாழ்வா சாவா என்ற சோதனை மற்ற எல்லாவற்றையும்விடப் போரிலேயே எழுகிறது. இவ்வா ருகப் போர் புரிவதை வெகு மேன்மையான காரியமாகக் கருதினர்.

பாஸிஸம் ஆரம்பத்திலிருந்தே, சோஷியலிசம், கம்யூனிசம் இவை இரண்டினையும் எதிரியாகக் கருதியது. கம்யூனிசக் கட்சி யாளர்களுக்குப் பயந்துகொண்டுதான் மக்கள் முசோலினிக்கு ஆதரவு அளித்தனர். பாஸிஸக் கோட்பாளர்கள் முதலாளித்து வத்தை வெறுத்தாலும், கம்யூனிசத்தின்மேல் கொண்ட வெறுப்பே அதிகமானது. கம்யூனிசத்தின் மெடீரியலிசத் தத்துவம் அவர் களை வெறுக்கச் செய்தது. சமூகம், பொருளாதாரச் சக்தி களில் இயங்கவில்லை. ஆன்மீகச் சக்திகளினுலேயே இயங்கு

கிறது எனக் கூறினர். கூட்டிணைப்புக் குழுக்களின் அமைப்புகள் கொண்ட நாட்டில் சொந்த முயற்சிகளுக்கும் சுதந்திரம் அளிக்கப் படுகிறது. அதேசமயம் எல்லோருடைய நலனும் பாதுகாக்கப் படுகிறது என்றும், நாட்டின் பொருளாதாரம் முழுமையும் அரசின் அதிகாரத்தின் கையில் அடங்கி விடுகிறது என்றும் பெருமை யுடன் கூறிக்கொண்டனர்.

பொருளாதாரத் துறையில் நாடு தன்னிறைவின்றி அரசியல் துறையில் வலிமை பொருந்தியதாயும் சுதந்திரமாயும் இருக்க முடியாது. எனவே, இங்கிலேக்கு ஆளாகாமல் நாடு ஏற்றுமதி, இறக்குமதி, உற்பத்தி நிலை, இவைகளைத் தன் கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும் என்று முசோலினி கூறினார். அவசியம் ஏற்பட்டால் தன்னிறைவை அடைய அரசைப் பரப்பலாம் என்றார். அதாவது, பிற நாடுகளைப் பிடிக்கலாம் என்றார்.

பாஸிஸக் கோட்பாடு உலகம் முழுவதும் பல்வேறு பெயர் களால் அநேகரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பாஸிஸக் கோட் பாட்டை உற்றுநோக்கினால் ஆதிக்க ஆட்சியே புலப்படுகிறது. வன்முறையே அதில் பகுத்தறிவு வாதம் என்னும் போலியான போர்வையைப் போர்த்துள்ளது. மக்களின் தேசப்பற்றை எப்படி யெல்லாம் சுயநலத்திற்காக உபயோகப்படுத்திக்கொள்ளலாமோ அந்த அளவிற்குப் பாஸிஸம் உபயோகப்படுத்தியது. சிறுபான்மை யோர் அரசை மிக நாசூக்கான முறையில் சரியானதே என்று காரண அறிவு வாதத்துடன் பிணைத்தது. கம்யூனிசம் பரவக் கூடாது என்னும் சாக்கைத் தனக்குச் சாதகமாக உபயோகப் படுத்திக்கொண்டு பரவியது. மேலும் மக்களுக்குத தனித்தன் மைக் கோட்பாடு, ஜனநாயகம் இவைகளின் மேல் அதிருப்தி அடைந்ததையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது. ஆனால், இரண்டாவது உலக மகாயுத்தத்தில் முசோலினி தோற்றதும், பாஸிஸம் ஓர் உலக இயக்க ஸ்தானத்தை இழந்தது. அங்கங்குச் சில நாடுகளில் சிறு சிறு குழுக்களாக எஞ்சி நின்றது.

14. லாஸ்கி (1893—1950)
(Laski)

இருபதாவது நூற்றாண்டின் தலைசிறந்த சிந்தனையாளர்களில் ஹெரால்டு லாஸ்கி (Harold Laski) முக்கியமானவர். இவர் ஓர் அரசியல் சிந்தனையாளர் மட்டும் அல்லர். ஒரு சிறந்த பேச்சாளரும் கற்றறிவாளரும், பத்திரிகை எழுத்தாளரும், அரசியல் வாதியும் ஆவர். எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு சிறந்த பேராசிரியர் ஆவார். அவர் கருத்துப்படி சமூகத்தில், கீழான நிலையில் இருக்கும் மக்களைக் கைதூக்கி விட உதவுபவர்களே உண்மையான அறிவாளி ஆவர்; உண்மையான செயல் சிந்தனையாளர் யார் என்றால், நடைமுறை அரசியலில் பங்கெடுத்துக் கொள்பவரே ஆவர். ஆக, இத்தகைய கருத்துகளை வைத்துக்கொண்டு மக்களை ஏழ்மையிலிருந்து விடுவிக்க லாஸ்கி போராடினார். அரசியல் தத்துவத்தில் தமக்கெனக் குறிப்பிடத்தக்க பங்கை வழங்கினார்.

லாஸ்கி, அரசியல் கோட்பாட்டைப்பற்றியும், அரசியல் நிறுவனங்களைப் பற்றியும் இருபத்து ஐந்து புத்தகங்கள் வாயிலாக விளக்கினார். இதைத் தவிர ஆங்கில அமெரிக்க பத்திரிகைகளில், எண்ணிலடங்காக் கட்டுரைகளும் வேறு பல சிற்றேடுகளும் (Phamplets) எழுதிய பெருமை இவரைச் சாரும். எந்த அரசியல் சிந்தனையாளரும் இந்த அளவுக்கு எழுதிய சாதனையை அடைந்ததில்லை எனலாம்.

இவருடைய அரசியல் தத்துவத்தின் தன்மை

1931 வரை இவர் நாட்டிற்குத் தேவைக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுக்கக்கூடாது என்று தனி மனிதர்களின் உரிமைகளுக்காகவும் குழுக்களின் உரிமைகளுக்காகவும் வாதாடும் பன்மை வாதியாக (Pluralist) இருந்தார். 1931ஆம் ஆண்டுக்குப் பிறகு, இவர் மார்க்ஸிஸத்தை ஏற்றுக் கொண்டார். கம்யூனிச நாட்டிலேயே தனி மனிதர்கள், குழுக்கள். இவைகள் பாதுகாப்போடு இருக்க முடியும் என்ற நம்பிக்கைக் கொண்டார்.

இவர் பன்மை வாதியாக இருந்தபொழுது, சோஷியலிசக் கொள்கையில் சிறிது பற்றுக் கொண்டவராகவும் ஆனால் அதே சமயம் மார்க்ஸிஸத்தின் எதிரியாகவும் இருந்தார்.

இவரது பன்மை வாதம்

நாட்டின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதே, அரசியல் தத்துவத்தின் அடிப்படை விதியாக இருக்க வேண்டும் என்பது லாஸ்கியின் வாதம். இதற்கான காரணங்களை விளக்கமாகக் கூறுகிறார்.

மனிதனின் உரிமைகள் எனப்படுபவை சட்டபூர்வமாக அரசால் அளிக்கப்படுவதால் மட்டும் உண்டாவதில்லை. பொதுவாக மனிதனின் சமூக வாழ்விற்கும், நல்வாழ்விற்கும் அவை அத்தியாவசியம். மனிதன் அரசின் அங்கத்தினராக இருப்பதால் மட்டும் அவ்வுரிமைகளைக் கோருவதில்லை. ஏனைய கூட்டமைப்புகளின் அங்கத்தினராகவும் இருப்பதால் அவற்றைக் கோருகிறான் என்றார்.

அரசின் அங்கத்தினன் என்ற முறையில், அவன் கீழ்க்கண்ட உரிமைகளைக் கோருகிறான்: வேலை செய்வதற்கான உரிமை, பொதுவான கூலி பெறவும், தரமான வாழ்வு வாழவும் தேவையான உரிமை, நாட்டின் நலனுக்காக உபயோகப்படும்படியான பேச்சுரிமை, வாக்குரிமை, அரசியல் அதிகாரங்களைத் தகுதியிருந்தால் அடையும் உரிமை போன்றவற்றைக் கோருகிறான்.

இவற்றிற்கெல்லாம் மேலாக, மனிதனின், குணநலன்களும் தனித் தன்மையும் எப்பொழுது முழுவதுமாக வெளிப்படுகிறது என்றால், அரசின் அங்கத்தினனாக இருப்பதால் மட்டும் அன்று, வேறு பல கூட்டமைப்புகளும் இவற்றை வெளிப்படுத்த உதவுகிறது. எனவே, அரசு எவ்வளவு அத்தியாவசியமானதோ அங்ஙனமே இக் கூட்டமைப்புகளும் மனிதனின் நல்வாழ்விற்கு இன்றியமையாதவை ஆகும். நாட்டிற்கு எங்ஙனம் சில அதிகாரங்களும், உரிமைகளும் தேவைப்படுகின்றனவோ அங்ஙனமே, இக் கூட்டமைப்புகளுக்குச் சில அதிகாரங்களும், உரிமைகளும், மிகத் தேவையாக இருக்கின்றன. இவ் வுரிமைகளுக்கும் அரசு மதிப்புக் கொடுத்தல் வேண்டும். இவற்றை அரசு ஏற்படுத்தி வழங்குவதில்லை. அவை தோன்றியதற்கும் நீடித்து இருப்பதற்கும் என்ன காரணம் என்றால் அவை மனித வாழ்விற்கு மிக அவசியமாக இருப்பதால் அவற்றை அரசு அங்கீகாரம் செய்கிறது. எனவே, அரசிற்கு அவற்றை அங்கீகரிக்கும்

உரிமையும், கடமையும்தான் உள்ளதே தவிர, அவற்றின் அதிகாரங்களைத் தோற்றுவிக்கும் உரிமை கிடையாது என்கிறார் லாஸ்கி.

மேலும் லாஸ்கி கூறுவதாவது, மக்கள் அரசிற்குக் கீழ்ப்படிந்து கடமை உணர்ச்சியுடன், நடப்பதைத் தம்முடைய பிரிக்கமுடியாத உரிமை என்று கொண்டாடக்கூடாது. மாறாக, மக்களின் உரிமைகளை அங்கீகரித்துப் பேணி காப்பாற்றினால்தான் அரசு மேற்கூறிய உரிமைகளைக் கொண்டாட முடியும். தங்களது நலனை அரசு மேம்படுத்துகின்றது என முழு மனத்துடன் மக்கள் உணர்ந்தால்தான் அவர்கள் அவ்வரசிற்குக் கடமை உணர்ச்சியுடன் நடந்துகொள்ள முடியும் என்கிறார்.

அரசும் ஏனைய கூட்டமைப்புகளும் ஒன்றன் கீழ் ஒன்றாக ஏற்படுத்தப்பட்ட அதிகார வரிசையன்று. இதனால் எல்லாவற்றிற்கும் மேலான அதிகார நிலையில் அரசு இருந்துகொண்டு ஏனைய அமைப்புகளுக்கு அதிகாரங்களைத் தருவதில்லை. ஏனைய அமைப்புகள், அவற்றுக்கென குறிப்பிட்ட உரிமைகளும் அலுவல்களும் இருக்கின்றன. அரசு தனக்கெனச் சில அதிகாரங்களும் உரிமைகளும் வைத்துள்ளது. தங்களது அதிகார எல்லைக்குள் ஒவ்வோர் அமைப்பிற்கும் இறைமை உள்ளது. எனவே அரசும், அதனுள் இருக்கும் பல வகையான கூட்டமைப்புகளும், சம அதிகாரங்களைக் கொண்டவையாகுமே தவிர, அரசின் கீழ் வருபவை அல்ல.

அரசின் முடிவு குடிமக்களின் நலனுக்குத் தேவையான காரியங்களைச் செய்வதே. எனவே, ஏனைய கூட்டமைப்புகளின் உள் விவகாரங்களில் எப்போது தலையிடலாம் என்றால், மக்களின் குடிமை உரிமையைப் பாதிக்கும்பொழுது மட்டும்தான் என்கிறார். இவ்வாறாக லாஸ்கி, நாட்டின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தைக் கூறுகிறார்.

இப்பொழுது சட்டத்தைப்பற்றி லாஸ்கியின் கருத்தென்ன என்று பார்ப்போம்.

சட்டம் என்பது இறைமையின் கட்டளை அன்று. மாறாக, வழிகாட்டும் ஆணையே. எடுத்துக்காட்டாக, நாட்டில் எத்தனையோ சட்டங்கள் அதிகாரத்தைப் புலப்படுத்தும் கட்டளையாக இருக்கவில்லை. எடுத்துக்காட்டாக, பெண்களுக்கு வாக்குரிமை கொடுப்பதற்காகச் சட்டம் இயற்றப்பட்டால், அவர்கள் கட்டாயம் அவ்வுரிமையைப் பயன்படுத்தித்தான் தீரவேண்டும் என்ற வலுக்

கட்டாயம் இல்லை. எனவே, இச் சட்டத்தைக் கட்டளை என்று கூற முடியாது. சட்டத்தின் முக்கியத்துவம் என்னவென்றால், அது இறைமையின் கட்டளை என்பதால் அன்று. மாறாக, அச் சட்டத்தின் நோக்கம் என்ன என்பதிலும், அம் முடிவை அடைய அது கடைப்பிடிக்கும் வழி என்ன என்பதிலுமே அதனுடைய முக்கியத்துவம் அடங்கியுள்ளது. மேலும் அரசின் நோக்கம் குடி மக்களின் நல்வாழ்வைப் பெருக்குவதிலேயே இருக்கவேண்டும். எனவே, வேறு கூட்டமைப்புகளுடன் குறுக்கிடக்கூடாது. சட்டத்திற்கு எப்பொழுது கீழ்ப்படிந்து மக்கள் நடக்க வேண்டும் என்றால், அது அவர்களது நல்வாழ்விற்கு ஊக்கத்தை அளிக்கிறது என அவர்கள் உணரும்போதுதான் என்கிறார் லாஸ்கி.

லாஸ்கியின் தனி உரிமைக் கொள்கை

லாஸ்கி தனி மனிதர்களின் உரிமைகளுக்காக வாதாடுகிறார். சுதந்திரங்கள், உரிமைகள், சமத்துவம் போன்றவை தனி மனிதனின் தனிச் சிறப்பியல்புகளை வளர்க்கவே ஏற்பட்டவை. உண்மையான சுதந்திரம் என்பது, மனிதர்கள் தங்களுடைய உரிமைகளைச் சிறந்த சந்தர்ப்பங்களில் உபயோகிக்க வேண்டிய சூழ்நிலையை உண்டாக்கிக்கொள்வதுதான் என்கிறார். இவர் சுதந்திரம் மூன்று வகையாவது என்கிறார். அவை தனி மனிதருக்குரிய சுதந்திரம், அரசியல் சுதந்திரம், பொருளாதார சுதந்திரம் ஆகியவை. தனி மனிதருக்குரிய சுதந்திரம் என்றால் மனிதர்களின் சொந்த வாழ்வில், அதாவது மதம் போன்ற விஷயங்களில் அவர்கள் சிறப்புத் தன்மையை அடைய முழு சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட வேண்டும். அரசியல் சுதந்திரம் என்றால், நாட்டின் விவகாரங்களில் ஆர்வத்துடன் பங்கெடுத்துக் கொள்ள மக்களுக்குள் எவ்வகையான வேறுபாடுமின்றி அனைவருக்கும் ஒரேமாதிரியான அதிகாரமும், சந்தர்ப்பமும் அளிக்கப்படல் வேண்டும். இந்த வகையான சுதந்திரம் கல்வி மூலமாகவும் பத்திரிகை சுதந்திரமும் இருந்தால்தான் வளரும் என்கிறார் லாஸ்கி.

பொருளாதார சுதந்திரம்

வேலை செய்யவும், தன்னிறைவான வாழ்வு வாழ வேண்டிய வாய்ப்பும், தொழில் துறையின் நிர்வாகத்தில், தொழிலாளிகளுக்குப் பங்கும் அளிக்கப்படவேண்டும் என்கிறார்.

சமத்துவத்தைப் பற்றி லாஸ்கி கூறும்பொழுது, மக்கள் அனைவரும் சமநிலையில் வைக்கும்படியான ஓர் அடிப்படை வழிமுறையை அரசு கடைப்பிடித்தல் வேண்டும் என்கிறார். ஆனால்,

அதே சமயம் முழு சமத்துவம் என்பது முடியாத காரியம் என்று ஒப்புக்கொள்கிருர். சிறந்த சமத்துவம் என்பது சட்டத்திற்குமுன் அனைவரும் சமம் என்பதும், மேற்கூறிய மூன்று வகை சுதந்திரங்களைப் பயன்படுத்தச் சமவாய்ப்பு அளித்தலும் ஆகும் என்கிருர்.

எனவே, தனிச் சலுகைகள் கொண்ட வகுப்பினை நீக்கிவிட வேண்டும். முதலாளிகள், தொழிலாளர்களைத் தங்கள் விருப்பப்படி வேலையை விட்டு நீக்கும் உரிமையைச் சட்டத்தின் உதவியினுல் நீக்கிவிடவேண்டும்.

மேலும், இத்தகைய சுதந்திரம், சமத்துவம் இவற்றைப் போற்றிக் காப்பாற்றுவது எப்படி என்ருல்,குடிமக்கள் எப்பொழுதும் தைரியமாகவும், விழிப்பாகவும் இருந்து, இவற்றில் அரசு தலையிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்கிருர்.

இவருடைய மிதமான பேபியன் சோஷியலிச வாதம்

இவர் பேபியன் கோட்பாளர்களைப் போல், சோஷியலிசத்தை அரசுதான் அறிமுகப்படுத்த வேண்டுமே தவிர, தொழிலாளர்கள் புரட்சிகரமாகவும், நேரடிச் செயல்களாலும், மேற்கொள்ளக் கூடாது என்கிருர். ஆனுல், பேபியன் கோட்பாளர்களின் கருத்துக்கு எதிராக, அரசின் அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல் வேண்டும் என்றும், உற்பத்தியாளர்களும், பொருட்களைப் பயன் படுத்துவோரும் (Consumers) தனித்தனி சங்கங்களை ஏற்படுத்தி, இச் சங்கங்கள் அரசின் நிர்வாகத்திலும், அமைப்பு முறையிலும் ஒத்துழைக்க வேண்டும். தற்கால புதிய பொதுநல அரசுகளுக்கு (Welfare state) இம்முறை மிக உதவியாக இருக்கும் என்கிருர்.

இவர் மார்க்ஸிஸ கோட்பாட்டை வன்மையாக எதிர்க்கிருர். தம்முடைய 'கார்ல்மார்க்ஸ்' (Karl Marx) சோஷியலிசமும், சுதந்திரம், (Socialism and Freedom), கம்யூனிசம் (Communism) போன்ற புத்தகங்களில் மார்க்ஸின் வகுப்புச் சண்டையையும் அவரது வன்முறையான புரட்சியையும், அரசு மேல் வகுப்பு, கீழ் வகுப்பைத் துன்புறுத்த உதவும் கருவி ஆகிய கருத்துகளையும் ஏளனம் செய்கிருர். உண்மையான சோஷியலிசம் சுதந்திரங்களைத்தான் ஆதரிக்குமே தவிர, அதிகாரத்தை அன்று என்கிருர்.

1931ஆம் ஆண்டிற்குப் பிறகு லாஸ்கி, மார்க்ஸிஸ கோட்பாட்டில் ஈடுபாடு கொண்டு, தனிமனிதன், குழுக்கள் இவற்றின் உரிமைகளை மார்க்ஸிஸ அரசிலேயே, காப்பாற்ற முடியும் என்ற முடிவிற்கு வருகிருர்.

அவரது அரசியலின் இலக்கணம் (The Grammer of Politivs) என்ற புத்தகத்தின் 1938ஆம் வருடப் பதிப்பில், அச்சமயத்தின் அரசியல் நிகழ்ச்சிகள், மற்ற சில நிகழ்ச்சிகள், அவரைப் பன்மை வாதம், பேபியிசக் கோட்பாட்டில் நம்பிக்கை, இவற்றை வலுக்கட்டாயமாக இழக்கச் செய்தது என்றும், தற்கால நாட்டிற்குச் சிறந்தது மார்க்ஸிஸ கோட்பாடே என்ற முடிவிற்கு வரச் செய்துவிட்டது என்றும், ஒளிவுமறைவின்றி ஒப்புக்கொள்கிருர். மார்க்ஸின் சடவாத வரலாற்றுக் கோட்பாடு (Historical Materialism) உண்மைதான் என்றும், அக் கோட்பாட்டின் உதவியைக் கொண்டு, பிரிட்டன், அமெரிக்கா இந்நாடுகளின் சரித்திரத்தை விளக்குகிருர்.

1930—40 ஆண்டுகளில் பிரிட்டனில் உண்மையான ஜனநாயகம் இல்லை. உண்மையான ஜனநாயக சமூகத்தில் பொருளாதார சமத்துவம் இருக்கவேண்டும். ஆனுல், பிரிட்டனில் சமூகம், வகுப்பு அமைப்பு முறையில் கட்டப்பட்டிருந்தது. பழமைவாதக் கொள்கையினர் (Conservatives) அரசை நடத்தினர். அவ்வரசு பாராளுமன்ற அரசு என்ற பெயரைக் கொண்டிருந்தாலும் அது அவர்களது நன்மைக்காகவும், தொழிலாளர்களை வருத்தவும் ஏற்பட்ட ஒன்று. ஏதோ வயது வந்தோர் வாக்குரிமை போன்ற சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்திஞலும், அவை அனைத்தும் தொழிலாளர் வகுப்பைச் சாந்தப்படுத்தத்தானே தவிர, அரசு அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுப்பதற்காக அன்று. எனவே, பாராளுமன்ற ஜனநாயகம் உண்மையான ஜனநாயகமாக இருக்க முடியாது. எனவே, தொழிலாளர்கள் சோஷியலிசத்தை ஏற்படுத்த நினைத்தால், அவர்களே அரசைக் கைப்பற்றிச் செயல்படுத்த வேண்டும். எவ்வாறு செயல்படுத்துவது என்ருல், உள்நாட்டுப் போராலும், வன்முறையாலுமே, என இவ்வாருகக் கூறுகிருர். சில சமயங்களில் தொழிலாளர்களும், முதலாளிகளும் ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்துச் சமாதானமாகப் போகவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தாலும், அந்த வாதத்திற்கு அவ்வளவு முக்கியத்துவம் அளிக்கவில்லை.

அமெரிக்காவைப் பொறுத்தவரை, ரூஸ்வெல்ட்டின் 'நியூ டீல்' (New Deal) கொள்கைகள் வெற்றிகரமாகச் செயல்பட்டதைப் பார்த்து, கூடிய சீக்கிரத்தில் அமெரிக்க முதலாளித்துவம் சோஷியலிசத்தை ஏற்படுத்தும் என நம்பினுர். ஆனுல் 1940-50 ஆண்டுகளில் தொழிலாளர் சங்கங்கள், அரசைக் கைப்பற்றினுல்தான் சோஷியலிசம், அமெரிக்காவில் உதயமாகும் என்ற முடிவிற்கு வந்தார்.

லாஸ்கி, முதலாளித்துவம் வளர வளர, முதலாளிகளின் ஏகாதிபத்தியமும் வளரும் என்று எச்சரித்தார். பணம் படைத்த முதலாளிகள், முன்னுக்கு வராத நாடுகளைக் கைப்பிடித்து அந் நாடுகளைச் சுரண்டி, கடைசியில் ஒன்றுக்கொன்று கழுத்தை நெறித்துக் கொள்கிறாற் போல் போரிட்டுக் கொள்ளும் என, லெனின் கூறிய கருத்தை லாஸ்கி வலியுறுத்தினார். முதலாளித்துவ நாடுகளை அழித்தால்தான் உலகில் அமைதி நிலவும் என்றார்.

ஆனால், இக் கருத்தை 1939ஆம் ஆண்டு இரண்டாம் உலக மகா யுத்தம் தொடங்கும் வரைதான் லாஸ்கி கொண்டிருந்தார். யுத்தம் தொடங்கியதும் லாஸ்கி, பிரிட்டன் தனது ஏகாதிபத்தியத்தில் இருந்து சிறிது சிறிதாகப் பின்வாங்கிக்கொண்டு வருகிறது என்றும், கூடிய சீக்கிரம் இந்தியாவிற்கும் சுதந்திரம் அளித்துவிடும் என்றும் கூறினார். உலக மகா யுத்தம், தொழிலாளிகள் பாஸிஸத்திற்கு எதிராகப் புரியும் போர் என்றும், இதில் அவர்கள் வெற்றிகொண்டால் பழைய முதலாளித்துவ முறையை அமைக்காமல் அகில உலக சோஷியலிசத்தையும், சமூக நீதியையும் நிலைநாட்டவேண்டும் எனவும் வற்புறுத்தினார். எனவே, அவர் ஆங்கிலத் தொழிற்கட்சியை, கன்சர்வேடிவ் அரசுடன் ஒத்துழைக்கும்படியும், தொழிலாளிகளுக்குப் போரின் நோக்கம் என்ன என்று விளக்கும்படியும், போர் முடிந்ததும் நாடு முழுவதும் சோஷியலிசத்தை அறிமுகப்படுத்த மக்களைத் தயாராக இருக்கும்படியும் அறிவுறுத்தினார். இவ்வாறாக, முன்பு கன்ஸர்வேடிவ் அரசை முதலாளிகளின் அரசு என்று கண்டனம் தெரிவித்த லாஸ்கி, வன்முறையில் தொழிலாளர்கள் அந்த அரசை அழித்துவிட்டு சோஷியலிசத்தை அமைக்கும்படி தொழிலாளர்களுக்கு அறிவுறுத்திய லாஸ்கி, எல்லோருடைய சம்மதத்தின் பேரிலும் சோஷியலிசம் அமைக்க வேண்டும் என்று கூறி, முன்பு கூறிய வன்முறைக் கொள்கையை நீக்கி விடுகிறார்.

இங்கிலாந்து நாட்டிலும், உலகத்திலும் சோஷியலிசத்தைக் கொண்டு வர ஆங்கிலத் தொழிற்கட்சி அரசு மேற்கொள்ளவேண்டிய காரியங்கள்

இங்கிலாந்து நாட்டில் அங்குள்ள தொழிற்கட்சி எல்லாவற்றையும் தேசிய மயமாக்கி விடவேண்டும். ஆனால், கன்ஸர்வேடிவ் கட்சியினர் இதனைக் கடுமையாக எதிர்ப்பார்கள். எனவே, லேபர் கட்சியின் எதிர்கட்சியான கன்சர்வேடிவ் கட்சி, பிரபுக்கள் சபை முதலியவற்றை எடுத்துவிட வேண்டும் என்றும், மக்கள் சபையைக் கலைக்கும் அதிகாரம் அரசிடமிருந்து எடுத்துவிடவேண்டும் என்றும் கூறினார். எனவே, கூடிய சீக்கிரம் தொழிலாளர்களின் ஏதேச்சதிகாரத்தை நிலைநிறுத்த வேண்டும் என்று கூறினார்.

இதுவரை அவர் கூறிய கருத்துகளை வைத்துக் கொண்டு அவரை ஓர் உண்மையான மார்க்ஸியவாதி எனக் கூறலாம். அவர் மேலும் கூறுவதாவது: தொழிற்கட்சியின் மந்திரி சபையின் அதிகாரத்திற்குள் மக்கள் சபை வரவேண்டும் என்ற பாராளுமன்ற விதிகள் அனைத்தையும் நீக்கி விட வேண்டும். அரசு மேலாணை மூலமாகச் சட்டங்கள் அடிக்கடி இயற்றப்படலாம்; மக்களிடம் பொதுவான முறையில் சம்மதம் வாங்கிக்கொண்டு புரட்சிகரமான மாற்றங்கள், சீர்திருத்தங்கள் இவற்றைப் பாராளுமன்றத்தின் ஆலோசனையைக் கேட்காமலேயே அரசே மேற்கொள்ளலாம். சுருங்கக் கூறின், கட்சியின் ஒரு சில தலைவர்களின் ஏகாதிபத்தியத்தை ஆதரிக்கிறார் என்று கூறலாம். இவ்வகையில் லாஸ்கி மார்க்ஸையும் மிஞ்சி விடுகிறார். ஏறக்குறைய பாஸிஸ கோட்பாளர்களைப்போல் லாஸ்கியும் ஒரு சிறு குழுவினரே நாட்டை ஆள வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்.

மேற்கு நாடுகளில் சோஷியலிசத்தைப் பரப்பும் புனிதமான காரியத்தைப் பிரிட்டனே மேற்கொள்ளவேண்டும் என்றும், பிரிட்டன் சோவியத் யூனியனுடன் நட்புறவு கொள்ளவேண்டும் என்றும் அறிவுறுத்துகிறார் லாஸ்கி. தொழிலாளர் அரசு இந்தியாவுக்குச் சுதந்திரத்தை அளிக்க வேண்டும் என்றும் கூறுகிறார். எனவே, இந்தியா சுதந்திரம் அடைந்ததற்கு லாஸ்கி ஒரு முக்கிய காரணராவார் என்று கே. மார்டின் கருதுகிறார். மேலும் லாஸ்கி கூறுவதாவது: உலகம் முழுவதிலும் உள்ள நாடுகள், பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் ஒன்றையொன்று சார்ந்தே உள்ளன. ஆதலால், இனிமேல் தனித்தனி அரசியல் அமைப்புகளைக் கொண்ட தேசிய நாடுகள் என்னும் முறை மறைந்து மக்களின் நாகரிகத்தின் அடிப்படையிலேயே தேசிய நாடுகள் அமைக்கப்படும் என்று கூறுகிறார்.

சோஷியலிசமும் மக்களின் சுதந்திரமும்

லாஸ்கி, சோஷியலிசத்தின்மேல் மிகப் பற்றுக் கொண்டு இருந்த போதிலும், ரஷ்யாவின் ஒரு கட்சி ஏகாதிபத்தியத்தையும், ஜெர்மனியில் ஹிட்லரின் சர்வாதிகாரத்தையும் கடுமையாகத் தாக்கினார். 1941ஆம் ஆண்டு ஹிட்லர் ரஷ்யாவின் மீது படையெடுத்ததும், ரஷ்யா மதம், சமூகம் இவற்றில் சகிப்புத் தன்மையைக் கடைபிடிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும் ஹிட்லர் யூதர்களைக் கொடுமைப்படுத்தியதைக் குறித்து, யூதர்களின் எதிரி, சுதந்திரத்தின் எதிரியாவார் எனத் தமது கண்டனத்தைத் தெரிவித்தார். இரஷ்ய நாட்டு ஏகாதிபத்தியத்தை கண்டித்து, குடிமக்களின் சுதந்திரத்தை இம்முறை வெகுவாகப்

பாதிக்கிறது எனக் கண்டித்தார். அவரது சுதந்திரத்தைப் பற்றிய கொள்கையைப் பற்றிக் கூறும்பொழுது கே. மார்டின், லாஸ்கி, எப்பொழுதும் சமூக உரிமைகளுக்காக வாதாடும் தலைவரே (Champion of civil rights) ஆவார்; எனவே, அவர் அடிப்படையில் மேற்கு நாடுகளின், தனி உரிமைக் கொள்கைகளைத்தான் நம்பினரே தவிர, சோவியத் யூனியனில் உபயோகப்படுத்தப்படும் உரிமைக் கொள்கைகளை அல்ல என்று கூறுகிறார்.

லாஸ்கியின் செல்வாக்கு

அரசியல் தத்துவங்களில், லாஸ்கியின் தத்துவமும் செல்வாக்குடன் காணப்படுகிறது. அவரது 'அரசியலின் இலக்கணம்' என்னும் புத்தகம், அது எழுதப்பட்ட ஆண்டான 1925-லிருந்து கலாசாலை பாடநூலாக இருந்து வந்தது. அவரது புத்தகங்கள் 1930-40 ஆண்டுகளில் எல்லோராலும், குறிப்பாகப் பிரிட்டனில் ஆர்வத்துடன் படிக்கப்பட்டன. இவரது மாணவர்களில் அநேகர் இங்கிலாந்தில் அமைச்சர் பதவியை ஏற்றனர். நேரு போன்ற தலைவர்கள், லாஸ்கியுடன் தொடர்பு வைத்திருந்தனர். இந்தியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது, அவரது படைப்புகள் அந் நாட்டினரால் ஆவலுடன் படிக்கப்பட்டன.

15. ஜார்ஜ் சோரல் (1847—1922)

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்தவரான ஜார்ஜ் சோரல் 1847ஆம் ஆண்டு மத்திய தரக் குடும்பத்தில் பிறந்தார். மார்க்சின் தத்துவத்தால் இவர் முதலில் கவரப்பட்டாலும் 1899ஆம் ஆண்டு அதை விட்டுவிட்டு சிண்டிகலிசத் தத்துவத்தை மேற்கொண்டார். நாம் இவ்வாறு கூறினாலும் சிண்டிகலிசம் புரட்சிகர சோஷயலிசத் தத்துவம்தான் என்பதை அறியவேண்டும். மேலும் சிண்டிகலிசம் புரட்சிகர சோஷியலிசத் தத்துவமாக இருந்தாலும், அதில் மார்க்ஸின் செல்வாக்கைவிட பிரௌதனின் செல்வாக்கையே அதிகமாகக் காண்கிறோம்.

சிண்டிகலிசம் என்னும் வார்த்தை 'சிண்டிகேட்' என்னும் பிரெஞ்சு வார்த்தையிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. சிண்டிகேட் என்றால் பிரெஞ்சு மொழியில் தொழிற்சங்கம் என்று பொருளாகும். சிண்டிகலிசத் தத்துவ எழுத்தாளர்கள் தொழிற்சாலையில் பணி செய்யும் தொழிலாளர்கள் மற்றும் சிறு தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்கள் இவர்களுக்கே அதிக முக்கியத்துவத்தை அளிக்கிறார்கள். எனவே, அவர்களது தத்துவத்திற்குச் சிண்டிகலிசம் என்னும் பெயர் பொருத்தமாக அமைந்துள்ளது. சோரல் எந்த அரசியல் கட்சியையும் ஏற்படுத்துவதில் ஆர்வமற்றவராக இருந்தபொழுதும் அவரது அரசியல் தத்துவம் புரட்சிகரக் கருத்துகளைக் கொண்டுள்ளது. சோரல் அரசியலில் எந்தவித ஈடுபாட்டையும் காட்டவில்லை. மாறாகத் தொழிலாளர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றி அரசியலையும் சமூகத்தையும் சுத்தப்படுத்த வேண்டுமென்று நினைத்தார். அவர் காலத்திய பிரெஞ்சு அரசியல்வாதிகளின் கீழ்த்தர நடவடிக்கைகளைக்கண்டு மனம் வருந்தினார். சந்தர்ப்பவாதிகளான அரசியல்வாதிகளைப்போல் அல்லாமல் தங்கள் வேலைகளிலேயே கண்ணும் கருத்துமாயுள்ள சிறு கைத்தொழிலாளர்கள் அவர் கவனத்தைக் கவர்ந்தனர். இத் தொழிலாளர்களையே சிண்டிகலிசத்தின் முதுகெலும்பாக்க எண்ணினார். அரசைப் பற்றியோ அதன் நிறுவனங்களைப் பற்றியோ அவர் அதிகமாகக் கவனம் செலுத்தவில்லை. அதன் காரணம் அரசு தேவையற்ற ஒன்று என்றும், எனவே அதை உடைத்தெறிய வேண்டுமென்றும் கருதினார். மேலும் சோரல் பகுத்தறிவாளர்கள்

அறிவுடையவர்கள் போன்ருேரை அடியோடு வெறுத்தார். இவ்வறிவுடையோர் என்று சொல்லப்படுவோரே அரசியலைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் திறமை வாய்ந்த அரசியல்வாதிகளாவர். இவர்கள் சமூகம் முன்னேறு கிறது என்றும், வாழ்க்கை மகிழ்ச்சிகரமாவதற்கு அதிக நாட்கள் இல்லை என்றும் கூறிப் பொய்யான நம்பிக்கைகளை மக்களுக்கு ஊட்டுகின்றனர். ஜனநாயக அரசு உண்மையில் மக்கள் மனத்தைக் குழப்பத்திலேயே ஈடுபடுத்துகிறது. ஏனெனில், இவ்வரசு சாதுர்யமாகப் பேசும் வல்லுநர்களும் மக்களை ஏமாற்று வதில் கைதேர்ந்தவர்களும் ஆகிய இவர்களின் வசமேயுள்ளது. எனவே, மக்களிடத்தில்தான் இறைமையுள்ளது என ஜனநாயக வாதிகள் கூறிக்கொள்வதெல்லாம் கட்டுக்கதைகளேயாகும். மக்களிடத்தில் இறைமை என்னும் கருத்தில் சிறிதும் உண்மை இல்லை. மேலும் ஜனநாயக வாதிகள் வகுப்புவாதப் போர் என்னும் கருத்தில் நம்பிக்கையற்றவர்களாக இருக்கிருர்கள். ஆனுல், தொழிலாளர்கள் சமூகத்தில் உண்மையான நன்மைகளை அடைய வேண்டுமென்ருல் மேற்கூறிய அரசியல்வாதிகளுடன் சேருவதால் பலன் ஒன்றுமில்லை. உண்மையான சோஷயலிசத்தை அடைய வேண்டுமெனில் இவ்வரசியல் வாதிகளை எதிர்த்து ஒரு போராட் டத்தை எழுப்பியே தீரவேண்டும். சமூகம் உண்மையில் செப்பனிடப்படவேண்டுமெனில் ஒரு புதிய அறநெறி ஒன்றி ஞல்தான் செய்துமுடிக்க முடியும். அப் புதிய அறநெறியைத் தொழிலாளர்களின் உதவியால்தான் அடையலாம். தொழிலாளர் வகுப்பே அரசியலுக்கெல்லாம் அப்பாற்பட்டவர்களாக இருந்து சுயநலமின்றிச் சமூகத்தைச் சுத்தப்படுத்த வேண்டும். பல வகுப் பினரைக் கொண்ட சமூகம் இவர்களால் முடிவான ஒற்றுமையை அடையும்.

சோரல் கூறிய மேற்கூறிய கருத்துகளில் பிரௌதனின் செல்வாக்கை நாம் காண்கிருேம். நுணுக்கமான முறையில் வேலை செய்யும் கைத் தொழிலாளர்களைப் பிரௌதன் போற்றினுர். சோரலும் இத்தகைய கைத் தொழிலாளர்களுக்கு முக்கியத்து வத்தை அளிக்கிருர். சோரலின் தத்துவத்தில் நாம் சில முக்கிய குறிப்புகளைக் காணலாம். தொழிற்சங்கமே அவரது புதிய சமூகத்தின் அடித்தளமாகும். அத் தொழிற்சங்கமே அவரது புதிய சமூகத்தை உண்டாக்க உதவுகிறது. சிண்டிகலிசம் புரட்சிகர சோஷியலிசத் தத்துவம்தான் என்று முன் கூறினேும். சிண்டிகலிசம் முதலாளித்துவ முறையை அடியோடு வெறுக் கிறது. முதலாளித்துவ சமூகத்தில் வகுப்புப் போர் அடிப் படையான ஒன்ருகும் எனக் கருதுகிறது. உற்பத்தித் துறையில்

தனியார் உடைமையை நீக்கிச் சமூகப் பொதுவுடைமை முறையை ஏற்கிறது. இவ்வாறாக சிண்டிகலிசத் தத்துவத்திற்கும், சோஷியலிசத் தத்துவத்திற்கும் சில ஒற்றுமைகள் இருந்தாலும் நுட்பமான வேறுபாடுகளும் இருக்கின்றன. அது என்னவெனில், சிண்டிகலிசத் தத்துவம் உற்பத்தியாளர்களின் (Producers) கட்டுப்பாட்டிற்கே அதிக முக்கியத்துவத்தைக் கொடுக்கிறது. உற்பத்தியாளரான தொழிலாளிகளே தொழில், பொருளாதாரத் துறைகளை மட்டுமின்றி அரசியல் துறைகளையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்டவராக இருத்தல் வேண்டும். அரசியல் துறை என்றால் அரசின் பணிகள் அனைத்தையும் உற்பத்தியாளரின் அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படவேண்டுமென்று கருதுகிறது. சோஷியலிச வாதம் சமூகத்தை, பொருட்களை வாங்குவோரைக் (Consumers) கொண்ட அமைப்பாகவே முதன்மையாகக் கருதுகிறது.

சிண்டிகலிசக் கோட்பாளர்கள் அரசைத் தேவையற்ற ஒன்றாகக் கருதுவதால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இதன் காரணம் என்னவெனில், அரசு சமூகத்தைச் சுரண்ட முதலாளிகளால் உபயோகப்படுத்தும் ஒரு கருவி மட்டுமன்று, வருங்காலத்திலும் அதன் தன்மை மாறாது. அரசாங்கமும் அதிகார வர்க்க முறைகளும் (Buraucratic) தொழிலாளர்களின் தேவைகளை அனுதாபத்துடன் அணுகும் தன்மையற்றவையாகும். அரசாங்க அதிகாரக் குவிப்பு முறைகளும் (Centralisation) முன்னேற்றத்திற்குத் தடைவிதிகளேயாகும். தொழில் துறையின் தேவைகளையும் தொழிலாளர்களின் நன்மைகளையும் பற்றித்தொழிலாளிகளே அறிவார்கள். அன்றி, அரசாங்க அதிகாரிகள் அறியமாட்டார்கள். உண்மையான உற்பத்தியாளர்களான இத் தொழிலாளிகள் வசமே தொழில்துறை இருத்தல் வேண்டும். அதுவே அவர்கள் சுதந்திரத்தைப் பெருக்கித் தொழில் வளம் வளர உதவும். தொழில் துறை தொழில் சங்கங்களின் கட்டுப்பாட்டில் இருந்தால் தொழிலாளர்கள் அதன் நிர்வாகத்தில் பங்கு பெறமுடியும். இம் முறையே உண்மை ஜனநாயகமாகும். இதை விட்டுத் தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்படாத அவர்கள் பிரதிநிதிகளாவதற்குச் சற்றும் தகுதியற்ற வேட்பாளர்கள் தேர்தலில் நிற்க அவர்களுக்கு வாக்கு அளிக்கும்படியான நிலைக்குத் தொழிலாளர்கள் கொண்டு வரப்படுகின்றனர். இவ் வேட்பாளர்கள் தேர்தலில் வெற்றி பெற்றபின் பாராளுமன்ற அங்கத்தினர்களாகின்றனர். இம்முறை உண்மையான ஜனநாயகமாகாது. ஏனெனில், அவர்கள் தொழிலாளிகளின் உண்மைப் பிரதிநிதிகளல்லர்,

சிண்டிகலிசக் கோட்பாளர்கள் கையாளும் யுக்திகள்

தொழிலாளிகள் பாராளுமன்றப் பிரதிநிதிகள் மூலம் தங்களது நோக்கங்களை அடைய எண்ணுமல் தங்களைத் தாங்களே நம்ப வேண்டும். எனவே, தங்களது சங்கங்களின் பலத்தைக்கொண்டே அரசின் அதிகாரத்தைக் கைப்பற்றவேண்டும். இதற்கு முதல் வழி என்னவென்ருல் பொருளாதாரத்தைக் கட்டுபடுத்தும் அதிகாரத்தை முதலில் கைப்பற்றவேண்டும். இதற்கான வழி என்னவெனில் நாட்டின் பொருளாதாரத்தையே நிலைகுலையச் செய்யும்படியான வேலை நிறுத்தத்தைத் தொழிலாளர்கள் மேற் கொள்ளவேண்டும். இந்த ஆயுதத்தைக்கொண்டு தங்கள் நிலை முன்னேறும் வழியைக் காணவேண்டும். வேலை நிறுத்தமே தொழி லாளர்களை ஒன்றுசேர்த்து ஓர் ஒற்றுமை உணர்வை வளர்க்கிறது. குறிப்பாக, சில முக்கியமான தொழில் துறைகளில் வேலை நிறுத் தம் செய்வதால் பொருளாதாரத் துறை நிலைகுலைந்து முதலா ளித்துவத்தை ஒரு முடக்கு நிலைக்குக் கொண்டு வருகிறது. பிறகு தொழிலாளர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் ஒன்றுசேர்ந்து பொதுவான வேலை நிறுத்தத்தை மேற்கொண்டு உற்பத்தி வழி முறைகளைக் கைப்பற்றி முதலாளித்துவத்திற்கே முடிவுகட்ட வேண்டும். வேலை நிறுத்தத்திற்குச் சோரல் அதிக முக்கியத்துவத் தைக் கொடுத்தாலும் தொழிற்சாலைகளை உடைத்தல் (Saborage) விதிப்படி வேலை செய்தல் (Work to Rule) மெதுவாக வேலை செய் தல் (Go Slow Method) போன்ற யுக்திகளையும் தொழிலாளர்கள் மேற்கொள்ளலாம் என்கிருர். சோரல் தனி மனிதர்களின் உரிமை, நீதி, அரசியலமைப்பு போன்றவற்றை ஏற்க மறுக்கிருர். அதே சமயம் நாச காரியங்களுக்குப் பிறகு அதாவது முதலாளித் துவத்தை அழித்துவிட்டுச் சமூகத்தை எந்த முறையில் அமைப் பது என்பதைப்பற்றி அவர் எந்தவித விளக்கமும் தரவில்லை. இதன் காரணம் வருங்கால சமூகத்தைப்பற்றி இப்பொழுது விளக்குவதில் அர்த்தமில்லை. வெறும் கற்பனை வடிவாகத்தா னிருக்கும். மேலும் இம்மாதிரி விளக்கங்கள் தொழிலாளர் களின் உற்சாகத்திற்கு ஊறு விளைவிப்பதாக இருக்கும். எனவே, அவர்கள் தங்களது தன்னுணர்வினுல் (Intuition) தங்களது நோக்கங்களை அடைவர். அதை இப்பொழுது விவரிப்பதில் பொருளில்லை என்று கூறுகிருர். எனவே, பிற்காலத்தில் சமூகம் எப்படி அமைக்கப்படவேண்டுமென்பது முக்கியமன்று; தொழி லாளர்கள் முதலில் தங்களது நோக்கத்தில் வெற்றி பெறவேண் டும், அதுவே மிக முக்கியம் என்கிருர். இவ்வாருக அவரது தத்துவத்தில் சிந்தனைகள், கற்பனைகள் இவற்றைவிடச் செய்கை களுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மேலும் இவரது தத்துவத்தில் மற்ருெரு முக்கியக் குறிப்பு என்னவெனில்,

பகுத்தறிவை (Rationalism) சோரல் ஏற்க மறுக்கிறார். அவரது வாதத்தில் பகுத்தறிவின்மைக்கே (Irrationalism) இடம் கொடுக்கப்படுகிறது. மேலும் சோரல் வன்முறைக்கே முக்கியத்துவத்தை அளிக்கிறார். இவ் வன்முறை நியாயமற்றதன்று என்றும் சிலர் பலரைத் துன்புறுத்த வன்முறையைப் பிரயோகித்தால் அதுவே முறையற்றது என்றும், பலர் சிலரைத் தூக்கி எறிய வன்முறையைப் பிரயோகித்தால் அது முறையானதே என்றும் கூறுகிறார். இவர் பகுத்தறிவின்மைக்கே இடமளிக்கிறார் என்று கூறினோம். அதற்கு எடுத்துக்காட்டாக, இவர் ஜனநாயகத்தைக் கையாளும் முறையிலிருந்து அறியலாம். பேச்சுகள் விவாதங்கள் இவை மூலமாக எந்த முடிவையும் அடையமுடியாது என்றும் இடைவிடாத போராட்டமே மேன்மைத் தன்மை வாய்ந்தது என்றும் உணர்த்துகிறார். ஹிட்லர், உபயோகித்த இனம் ரத்தபந்தம் போன்ற மந்திர வார்த்தைகள் பகுத்தறிவற்றவை என்றாலும் அவ் வார்த்தைகள் மூலமாக ஜர்மானிய மக்களைத் தம்மைப் பின் பற்றும்படி செய்ய அவரால் முடிந்தது. இதைப்போலவே பாசிச கட்சியினரும் நம்பிக்கை (Faith) உணர்ச்சி (Passion) இவையே செயல்திறனுக்கு வேண்டியவை, உண்மையானவை என்று போதித்தனர். இதுபோன்ற மந்திர வார்த்தைகளினால் சிறிது காலத்திற்காவது அவர்களால் மக்களைக் கட்டுப்படுத்த முடிந்தது. இதுபோன்ற சோரலின் தத்துவமும் தொழிலாளர்களை உணர்ச்சி, போராட்டம் போன்ற மந்திர வார்த்தைகளால் தட்டி எழுப்புகிறது. இத்தகைய உணர்வைப் பிற்காலச் சமூகம் எப்படி அமைக்கப்படவேண்டும் என விளக்க உரைகளால் சோரல் குறைக்க எண்ணவில்லை. ஆதலால், தொழிலாளர்கள் ஏற்படுத்தப் போகும் சமூகத்தைப்பற்றி அதிகம் விளக்காமல் விட்டுவிட்டார். எப்படிச் சமூகத்தை அமைப்பது என்பதைத் தொழிலாளர்களே தங்களது தன்னுணர்வால் அறிவர் என்கிறார்.

இவரது தத்துவத்தின் சிறப்பு என்னவெனில், தொழிலாளர்களை எளிதில் தட்டி எழுப்பக்கூடிய ஓர் ஆழமான உணர்ச்சி இதில் அடங்கியுள்ளது எனலாம். பிற்கால சமூகம் இந்த முறையில்தான் இருக்கும் போன்ற விளக்கங்களால், தொழிலாளிகளின் கவனத்தைத் திசை திருப்பாமல் முதலில் செய்து முடிக்க வேண்டும் என்று செயல் திறனுக்கு மட்டும் முக்கியத்துவத்தை அளிப்பது இதிலுள்ள தனிச் சிறப்பாகும். இருந்தும் சிண்டிகலிச தத்துவம் இருபதாவது நூற்றாண்டில் ஆரம்ப காலத்தில் குறிப்பாகப் பிரான்சில் சிறிது செல்வாக்கைப் பெற்றாலும், பிறகு கூடிய சீக்கிரம் அந்த செல்வாக்கை இழந்துவிட்டது. இதன் தீவிரத் தன்மையே இதற்குக் காரணமாகும். அதனுடைய இடத்தை வாணிகக் கழக சமதர்மவாதம் (Guild Socialism) பெற்றது.

16. பேபியன்ஸ்

(Fabians)

சிட்னி வெப்	பீட்ரைஸ் வெப்
(Sidney webb)	(Beatrice webb)
(1859—1947)	(1858—1943)

பேபியன் சோஷியலிசக் கோட்பாளர்களில் முக்கியமானவர்கள் சிட்னி வெப்பும் அவர் மனைவியார் பீட்ரைஸ் வெப்புமா வார்கள். 1859ஆம் ஆண்டு பிறந்த சிட்னி வெப் மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவராயினும், அவருடைய பெற்ருேர் அவரைப் படிப்பிற்காக ஸ்விட்சர்லாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு அனுப்பினர். தம் படிப்பை லண்டன் பல்கலைக்கழகத்தில் முடித்தார். 1891ஆம் ஆண்டிற்குள் பேபியன் சமூகத்தில் ஒரு முக்கிய அங்கத்தினராகத் திகழ்ந்து பல சமூக சேவைகளை மேற்கொண்டார். இவர் 1892ஆம் ஆண்டு பீட்ரைஸ் பாட்டர் அம்மையாரை மணந்தார். இவ்வம்மையார் செல்வந்தரான ரிச்சர்ட் பாட்டர் (Richar Potter) என்பவரின் மகளாவார். இவரும் சமூக சேவைகளிலும் சமூக ஆய்வுகளிலும் ஆர்வமுள்ள வராக இருந்தார். இருவரும் நடைமுறை அரசியலிலும், நிர்வா கத்திலும மிகுந்த தொடர்பினை வைத்திருந்தனர். சிட்னிவெப் லண்டன் பொருளாதார அரசியல் பள்ளி (London School of Economics and Political Science) ஏற்படுவதற்குப் பெருமுயற்சி செய்தவர்களில் மிக முக்கியமானவர். அங்குப் பொது நிர்வாகத் துறைப் பேராசிரியராக 1902 முதல் 1919 வரை பணியாற் றினுர். 1922ஆம் ஆண்டு மக்கள் சபை அங்கத்தினரானுர். 1931ஆம் ஆண்டு பொது வாழ்விலிருந்து ஓய்வு பெற்றுத் தம் வாழ்நாளை எழுத்துப் பணியில் செலவிட்டார். 1947ஆம் ஆண்டு, அதாவது அவர் மனைவியார் இறந்த நான்காம் ஆண்டு இவரது உயிரும் பிரிந்தது. தம்பதியர் இருவரும் தங்களது அறிவின் சிறப்பினுல் பலருடன் தொடர்பு கொள்ள முடிந்தது. இவர்களது செல்வாக்கைப் பென்தம் பத்தொன்பதாம் நூற்ருண்டில் ஏற்படுத்திய செல்வாக்கிற்கு ஒப்புதலாகச் சொல்லலாம்.

இவர்களது அரசியல் தத்துவம்

இவர்களது முக்கியத்துவம் என்னவெனில், சோஷியலிசக் கோட்பாட்டை ஆங்கில, அமெரிக்க மக்களின் மனநிலைக்குத் தக்கவாறு அமைத்துத்தந்த பெருமையிலேயே அடங்கியுள்ளது எனலாம். ஐரோப்பாக் கண்டத்தில் மார்க்சின் கோட்பாட்டைப் பின்பற்றியவர்களில் தங்களுக்குள் அபிப்ராயபேதம் கொண்டிருந்தனர். மார்க்சின் கோட்பாட்டை நடைமுறையில் செயல்படுத்துவதிலுள்ள சிரமங்களே இப் பேதங்களுக்குக் காரணமாக இருந்தது என்று சொல்லலாம். எடுத்துக்காட்டாக, சிலர் புரட்சியின் மூலம், அதாவது வன்முறை மூலமே சோஷியலிசத்தைக் கொண்டுவர முடியும் என நினைத்தனர். சிலர், வன்முறை அவசியமில்லை என நினைத்தனர். மேலும் சோஷியலிசக் கட்சிகள் என்று கூறிக்கொண்டு சில கட்சிகள் ஜெர்மனியிலும், பிரான்சிலும், இத்தாலியிலும் மார்க்ஸ்—என்கெல்ஸ் கோட்பாடுகளை உதறிவிட்டு, பாராளுமன்ற அரசு முறைப்படி, சோஷியலிச சீர்திருத்தங்களைச் சட்டங்கள் மூலம் கொண்டுவர முயற்சி செய்தனர். இவ்வாருக சோஷியலிசக் கோட்பாளர்கள் தங்களுக்குள் வேறுபட்டனர். சாதாரணமாக சோஷியலிசக் கோட்பாளர்கள் இரு வகையாகப் பிரிக்கப்படுகின்றனர். ஒரு வகையினர் சோஷியலிசம் புரட்சி மூலம் ஏற்படத் தேவையில்லை என்றும், பல சீர்திருத்தங்கள் மூலம் அமைதியான முறையில் ஏற்படுத்த முடியும் என்றும் நம்பினர். இவ் வகையினர் படிமுறை வளர்ச்சி சோஷியலிசத்தினர் (evolntionary Socialists) என்று அழைக்கப்படுகின்றனர். இவ்வாறின்றி வன்முறைப் புரட்சியின் மூலமே சோஷியலிசத்தை அடைய முடியும் என நம்பியவர்கள் புரட்சிகர சோஷியலிசத்தினர் (Revolutionary Socialists) என அழைக்கப்படுகின்றனர். படிமுறை வளர்ச்சி சோஷியலிச வகையைச் சார்ந்த ஆங்கிலத் தோற்றுவாய் கொண்ட தத்துவமே பேபியனிசமாகும். இக் கோட்பாளர்கள் சோஷியலிசத்தை நடைமுறைக்குத் தக்க முறையிலும் ஆங்கில மக்களுக்குப் பிடித்த முறையிலும் எடுத்துக் கூறினர்.

பேபியனிச சங்கம் 1884ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் தேதி இங்கிலாந்தில் தோன்றியது. இதற்கு இப்பெயர் வரக்காரணம் என்ன என்று விளக்க, இவர்கள் கூறுவதாவது: ரோம் நாட்டு வீரரான பேபியஸ் கனக்டேடர், (Fabius Cunctator), கார்தேஜை ஆண்ட ஹனிபலைச் (Hannibal) சரியான சமயம் வரும் வரை காத்திருந்து, தக்க சமயத்தில் ஹனிபலைத் தாக்கி வெற்றி கண்டார். அதைப் போலவே தக்க சமயம் வரும் வரை மிக ஜாக்கிரதையான முறையில் சோஷியலிசத்தை நோக்கி முன்னேற வேண்டும் என்பதே ஆகும்.

சோஷியலிசக் கொள்கைகளை ஆதரித்த பேபியனிச சங்கத்தினர் சமூகத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்வது மிக அவசியம் என எண்ணினர். சமூகத்தில் நிலங்களையும் தொழில் மூலதனங்களையும் தனி மனிதர்களிடமோ ஒரு வகுப்பினரிடமோ விட்டு வைக்காமல் எல்லோருடைய நன்மையையும் கருதிச் சமூகத்தினரிடமே ஒப்படைத்தல் வேண்டும் என்றும், இதனால் வரும்பயனை அனைவரும் அனுபவிக்க முடியும் என்றும் கூறுகின்றனர். மேலும் தொழிலுற்பத்தி ஒரு சிலரிடமே இருந்ததினால் சில இன்னல்கள் இருக்கின்றன. அதாவது புதுப்புது கண்டுபிடிப்புகளின் நன்மைகளையும் வரும் லாபங்களை மறுபடி மூலதனமாகப் பயன்படுத்தி மேலுமேலும் லாபங்களைச் சம்பாதிக்கும் சந்தர்ப்பங்களையும் அச்சிலரே அனுபவிக்கின்றனர். தொழிலாளிகள் இதனால் இச்சிலரையே நம்பி இருக்கின்றனர். எனவே, நிலங்களை மட்டுமன்றித் தொழிற்சாலைகளும் சமூகத்தைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். இதனால் பிறரின் உழைப்பில் சிலர் வாழும் முறைகள் ஒழிந்து அனைவருக்கும் சமமான சந்தர்ப்பங்களைச் சமூகம் வழங்க முடியும் என்கின்றனர். இம்மாதிரி நோக்கங்களை நாம் அடைய வேண்டும் எனில், முதலில் சோஷியலிசக் கொள்கைகளையும் அபிப்பிராயங்களையும் மக்களிடையே பரப்புதல் வேண்டும் என்றும், பிறகு சமூக, அரசியல் சீர்திருத்தங்களையும், மாற்றங்களையும் கொண்டுவரவேண்டும் என்கின்றனர். தனி மனிதர்களுக்கும் சமூகத்திற்கும் உள்ள பொருளாதார, அறநெறி அரசியல் உறவு முறைகளைப்பற்றி அனைவரையும் நன்கு அறியச் செய்து, பிறகு சோஷியலிச முன்னேற்றங்களை ஏற்படுத்தல் வேண்டும் என்கின்றனர். நிலம், தொழில் உற்பத்தி ஆகியவைகளைத் தேசியமாக்குதலில், பேபியனிசக் கோட்பாளர்கள் மார்க்ஸியக் கோட்பாளர்களை ஒத்தே உள்ளனர். இருவரின் நோக்கமும் ஒரே மாதிரியாகவேதான் உள்ளது. ஆனால், இவர்கள் மார்க்ஸியக் கோட்பாளர்களிடமிருந்து எவ்வாறு வேறுபடுகிறார்கள் என்றால், முதலாளித்துவ நிலையிலிருந்து சமூகம் சோஷியலிச சமூகமாக மாறும் மாற்ற முறையில்தான் என்று கூறலாம். முதலாளித்துவ சமூகம் நிச்சயமாகச் சோஷியலிச சமூகமாக மாறித்தான் தீரவேண்டும் என்றும், இம்மாற்ற முறை மிக மிக மெதுவாக இருப்பது வருத்தமளிக்கும் ஒன்றாக இருந்தாலும், இம்முறையே சிறப்பு வாய்ந்தது என்று சொல்லலாம். ஏனெனில், இதில் வன்முறை என்பது ஒரு சிறிதும் இல்லை. மாறாகச் சோஷியலிசமே சிறந்தது, நியாயத் தன்மை வாய்ந்தது என்று அனைவரும் நம்பும் திடமான நம்பிக்கையின் அடிப்படையில் எழுகிறது என்று இவ்வாறாக இவர்கள் வாதாடுகின்றனர்.

மேலும் இவர்கள் கூறுவதாவது, சோஷியலிச முறைகள் இனி மேல்தான் எழவேண்டும் என்பதில்லை. ஏற்கெனவே எல்லோ ரும் இதை உணர ஆரம்பித்து விட்டார்கள். அதற்கு அத் தாட்சியாக சிட்னிவெப் இங்கிலாந்தில் அரசின் கட்டுப்பாட்டிற் குள் என்னென்ன வந்துள்ளன என்பதை எடுத்துக்காண்பிக்கிறார்.

மேலும் சோஷியலிச முறைகளைக் கொண்டுவர வேண்டும் என்றால், ஜனநாயக முறைப்படி கொண்டு வருவதுதான் சிறந்தது. புரட்சிகர முறைப்படியின்றி, படிமுறை வளர்ச்சியால்தான் கொண்டு வரவேண்டும். ஏனெனில், திடீரென எழும் பெரும் மாற்றங்கள் பல இன்னல்களை விளைவிக்கும். படிமுறை வளர்ச் சியில் முன்னேற்றங்கள் சிறிது சிறிதாக இருந்தாலும் மக்க ளுக்குத் திடீர் மாற்றங்களால் ஏற்படும் இன்னல்களை இதில் தடுக்க முடியும். மேலும் இம்முறையே, அரசியல் சட்ட அமைப்பு முறைப்படி அமைதியான முறை உடையதாக இருக் கிறது. மேலும் ஜனநாயக முறை என்றால், அரசியல் நிறுவனங் களை மட்டும் மக்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது என்ற பொருள் மட்டுமல்ல, இந் நிறுவனங்களின் உதவியைக் கொண்டு உற்பத்தியைப் பெருக்கும் வழி வகைகளும் கட்டுப் படுத்துவது என்ற கருத்து மக்களிடையே பரவி வருகிறது. எனவே, மக்களின் ஒத்துழைப்பை ஒழுங்கான முறையில் சீரமைத்து, முதலாளித்துவ முறையில் காணப்படும் போட்டா போட்டிக் குழப்பதை நீக்கவேண்டும். பொருளாதாரத் துறையி லும் ஜனநாயகத்தை ஏற்படுத்தினால் அதுவே சோஷியலிசமாகும்.

இவ்வாறாக, பேபியனிச தத்துவ சிந்தனையாளர்கள் வன்முறை யையும், புரட்சியையும் அறவே ஒதுக்கிச் சட்டமுறைப்படியே கூட்டுடைமையைக் கொண்டுவரவேண்டும் என வாதாடினர். இவர்களுடைய வாதத்தினாலும் கருத்துகளினாலும் அதுவரை இங்கிலாந்தில் சோஷியலிச சிந்தனையாளர்களை விநோதமான, குயுக்தியான எண்ணங்களைக்கொண்ட வெறியர்கள் என்றே எண்ணியிருந்தவர்கள் அக் கருத்தை மாற்றிக்கொண்டனர். இங்கிலாந்தின் தொழிலாளர் வகுப்பினரும், அவர்களது தலைவர் களும், இருக்கும் அரசியல், சமூக சூழ்நிலையில் சோஷிய லிசத்தைக் கொண்டுவரமுடியும், அது கற்பனைக்கெட்டாத கனவன்று, நடைமுறையில் செயல்படுத்தக்கூடிய ஒன்றே என எண்ணத் தலைப்பட்டனர்.

பேபியனிச சிந்தனையாளர்கள் சோஷியலிசத்தைக் கொண்டு வருவதால் மத்தியதர வகுப்பினருக்குப் பாதுகாப்புக் கிடைக்

கூடாது என எண்ணினர். மேலும் சோஷியலிசம் என்னும் பெயரில் சில சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதோ அல்லது சில கட்சிகளைப் பதவியில் அமர்த்துவதோ தங்களது நோக்கமன்று என்றும், ஆங்கில மக்கள் அனைவரையும் தங்கள் எண்ணக் கருத்துகளை ஏற்றுக் கொள்ளச் செய்வதே என்றும், ஏனெனில், இங்கிலாந்து போன்ற ஜனநாயக நாடுகளில் மக்களின் அபிப்பிரா யங்களை மாற்றித்தான் எந்தவித மாற்றத்தையும் கொண்டுவர முடியுமே தவிர, வேறு முறைகளில் கொண்டுவர முடியாது. அப்படியே கொண்டு வந்தாலும் விரும்பத்தக்கதாக அமையாது என்றும் கூறுகின்றனர்.

இவர்கள் தங்கள் கொள்கைகளைப் பரப்பக் கையாண்ட முறை யானது சட்டமுறைக்குட்பட்ட கிளர்ச்சிகள் மூலமும், முக்கி யமான அரசியல் நிறுவனங்களில் தங்கள் கொள்கையினர் இடம் பெறும் முயற்சிகளிலும் ஈடுபட்டனர். அநேகக் கட்டுரைகளாலும் புத்தகங்களைப் பிரசுரித்தும் மேன்மேலும் பரப்பினர். எடுத்துக் காட்டாக, 1889ஆம் ஆண்டு 'பேபியன் கட்டுரைகள்' (Fabian Essays) என்ற புத்தகமும், கிறிஸ்தவ சோஷியலிசம், (Christian Socialism), சோஷியலிசத்தின் அறநெறிகள் (The Moral Aspects of Socialism) போன்ற புத்தகங்களும் வெளியாயின. சிட்னி வெப்பும் அவரது மனைவியாருமாகச் சேர்ந்து வெளியிட்ட புத்தகங்களில் முக்கியமானவை, உள்ளாட்சித்துறையின் வரலாறு, வியாபாரச் சங்கம் போன்றவையாகும். பேபியனிசக் கோட்பாளர்கள் கற்றறிந்த அறிஞர்களாதலால் சோஷியலிசத் தத்துவத்தைப் பரப்புவதில் பல நுணுக்கங்களையும் அறிவுத் திறமான வாதங் களையும் கையாண்டனர். மேலும் அவர்களில் பலர் அனுபவம் வாய்ந்த அரசாங்க அலுவலர்களாதலால் பொது நிர்வாகத்தில் தேர்ச்சி பெற்றிருந்தனர்.

வெப்ஸ் தம்பதியர் நடைமுறை அரசியல் கொள்கைகளுக்குப் பயன்படத்தக்க கருத்துகளை வழங்கினர். அரசின் நோக்கம், தன்மை, கீழ்ப்படிதலில் உள்ள சிக்கல்கள், உரிமைகளைப் பற்றிய கேள்விகள் போன்ற அரசியல் சிந்தனையாளர் ஆராயும் பிரச்சினைகளைப் பற்றி அவர்கள் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. அப்பிரச்சனைகளுக்கும், சோஷியலிச சீர்திருத்தங்களுக்கும் சம்பந்தமில்லை என ஒதுக்கிவிட்டனர். இவர்கள் இவ்வாறாக நடைமுறைச் சீர்திருத்தவாதிகளாக இருந்தும், அரசியலைப் பற்றிச் சில தத்துவக் கருத்துகளைக் கொண்டிருந்தனர். அவர்களது இத் தத்துவக் கருத்துகள் என்ன என்பதைப் பற்றி ஆராய்வோம்,

சோஷியலிச அரசு அமைக்கப்பட்டால் அத்தகைய அரசில் தொழிலாளிகளுக்கு அளிக்கப்படும், வழக்கில் இருந்துவரும் கூலிமுறை (Wage System) ஒடுக்கப்பட வேண்டும். ஏனெனில், இக் கூலிகள் தொழிலாளிகள் தங்களையும் தங்கள் குடும்பங்களையும் பேணி, சிறந்த குடிமக்களாக வாழவேண்டும் என்னும் கொள்கையின் அடிப்படையிலும் அமையவில்லை; அல்லது தேசிய உற்பத்தியில் அவர்களது பங்கிற்குத் தகுந்தாற்போலும் அமையவில்லை. மாறாக, போட்டி முறைக்குத் தகுந்தாற்போல், கூலி நிர்ணயிக்கப்படுகிறது. அதாவது, தொழிலாளிகள் போட்டிப் போட, அவர்களில் குறைந்த கூலிக்கு வேலை செய்யத் தயாராக இருப்பவர்களுக்கு வேலையளிக்கப்படுகிறது. எனவே, இக் கூலி முறையில் நியாயம் என்பது சிறிதும் இல்லாததால் இது எடுக்கப்படவேண்டும். இதற்குப் பதிலாக உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசின் கீழ் வரவேண்டும். அரசின் வருவாய்க்கும், தொழில்களின் தேவைகளுக்கும் தக்கவாறு, தொழிலாளிகளுக்கு ஊதியம் அளிக்கப்படல் வேண்டும். ஏற்கெனவே அரசாங்க அலுவலர்களின் ஊதியம் விலைவாசிகளுக்குத் (Cost of living) தக்கவாறு நிர்ணயிக்கப்படுகிறது. இம்முறையைத் தொழிலாளிகளுக்கும் வழங்க வேண்டும். இவ்வாறாகத் தனிப்பட்ட மனிதர்களை உற்பத்தியாளராக ஆக்க விடாமல் நாட்டின் உற்பத்திக்குச் சேவை செய்வதற்காக, தகுதி வாய்ந்த அனைவரையும் அவரவர் தகுதிக்குத் தகுந்தாற்போல் வேலை வாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டும். இயந்திரத் தொழில் உற்பத்தி விவகாரங்களை அரசின் கட்டுப்பாடு, ஆணை, ஒழுங்குமுறை இவைகளின்றி நடத்த முடியும் என எண்ணினால் அது குழப்பநிலைக்குத்தான் அடிகோலியாகும்.

எனவே, இத் தம்பதியருக்குப் புதிய சோஷியலிச சமூக முறையில் சமூகத்தின் திறமை அதிகரிக்கும். சமூகத்தில் வாழும் அனைவரும் தாங்கள் சுதந்திரமுள்ள தனிமனிதர்கள் என்னும் எண்ணத்தினால் தங்களது நலனையே பெருக்கும் சுயநலத் தன்மையை வளர்த்துள்ளார்கள். அந்நிலை மறைந்து, சமூகம் என்னும் உயிரினத்தில் நாம் அனைவரும் அதன் பகுதிகள் என்னும் எண்ணத்தால் உந்தப்பட்டு, அச் சமூகத்தின் மேம்பாட்டிற்காக உழைப்பார்கள். இச் சமூகத்தில் வாழும் மனிதர்கள் உயிர் வாழ்வதற்கான தேவைகளைப்பற்றி எப்பொழுதும் பயப்பட வேண்டியதில்லை. ஆதலால் செல்வத்தைப் பெருக்க வேண்டும் என்னும் பேராசை மறைந்துவிடும். வாழ்க்கை வாழ்வதற்காகப் பயன்படுமே தவிர, உயிர் வாழ்வது எப்படி என்னும் பிரச்சினையால் வீணாகாது. இதனால் வாழ்க்கை முறையைத் திருத்தி அமைக்கவும்,

சீரும் சிறப்பும் பெறுவதற்குமான வழிவளங்கள் நிறைய ஏற்படுகின்றன. இவ்வாறான கருத்துகளை வெப்ஸ் தம்பதியர் வெளியிடுகின்றனர்.

மேலும் வருங்கால சோஷியலிச சமூகத்தை நிர்வகிக்கும் முறை எப்படி என்பதைப் பற்றிக் கூறும்பொழுது, உற்பத்தி வழிவகைகளும், பண்டங்களை விற்கும் வழிகளும், அரசின் கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டும் எனில், அரசாங்கப் பொது நிர்வாகத்தினிடம் (Civil Service) ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதே ஆகும் என்கின்றனர். தனியார் நிர்வாகத்தினரைவிட அரசாங்க நிர்வாகத்தினரே, பொது மக்களின் தேவைகளுக்கிணங்கி, திறமையான முறையில் செயல்பட முடியும் என நம்புகின்றனர். இந் நிர்வாகத்தினரே, சிறந்த பயிற்சியும், திறமையும் பெற்று நல்ல முறையில் சேவை செய்ய முடியும் என்கின்றனர். ஆனால், இக் கருத்து ஏற்றுக்கொள்கிறாற்போல் இல்லை என்றே கூற வேண்டும். முதலாவதாக, பொது நிர்வாகத்தினர் திறமைசாலிகளாகவும், சேவை செய்யும் மனப்பாங்கு உடையவர்களாகவும் இருக்க வேண்டும். அப்படியே இருந்தாலும் சமூக நன்மைகளைப் பற்றி எல்லோரும் ஒரேமாதிரியான மதிப்பீடு உடையவர்களாக இருக்க முடியாது.

இவர்கள் இருவரும் சமூகத்தைச் சீர்திருத்துவதற்கு முன், அரசியல் பொருளாதார நிறுவனங்களின் அமைப்புகளைப்பற்றி நன்கு அறிந்து கொள்ளுதல் வேண்டும் என்றும், பிறகே புதிய சமூகத்தை எவ்வாறெல்லாம் அமைப்பது, அல்லது பழைய சமூகத்தை எப்படிச் சீர்திருத்துவது போன்ற பிரச்சினைகளுக்கு விடை காண முடியும் என எண்ணினர். இதற்காக வரலாறு நிறுவனங்களின் அமைப்புகள், பணிகள், இவைகளைப்பற்றி மிக வரிவான முறையில் சுமார் இருபதிற்கும் மேலான பாகங்களைக் கொண்ட புத்தகங்களை எழுதினார்கள். இவர்களுடைய இக் கடும் முயற்சி, நடைமுறை அரசியல் சிந்தனைக்குப் பேருதவியாக இருந்தது. எப்படி இருந்தாலும் அதிலுள்ள பெருங்குறை என்னவென்றால், நிறுவனங்கள், அமைப்புகள் இவைகள் எப்படி அமைக்கப்படவேண்டும். எப்படிச் செயல்பட வேண்டும் என்பதைப்பற்றித்தான் அதிக கவனம் செலுத்தினார்களே தவிர, அவைகளை நடத்தும் பல தரப்பட்ட மனிதர்களையும் அவைகளால் பாதிக்கப்படுவோரைப் பற்றியும் சிறிதும் கவலைப்படவில்லை. சமூகம் சரியான முறையில் அமைக்கப்பட்டுத் திறமையான முறையில் செலுத்தப்பட்டால், மக்களின் வாழ்வு சீராகிவிடும் என நினைக்கிறார்களே தவிர, மக்களின் தனித்தன்மை,

சுதந்திரம் இவைகளை அவர்கள் பிரச்சினைகளாகவே எடுத்துக் கொள்ளவில்லை. இதனால் அவர்கள் மனிதத் தன்மைகளைப்பற்றிக் கவலைப்படவில்லை என்பது பொருளல்ல. எதுவும் ஒரு திட்டம் முறை இவற்றின்படி அமைக்கப்பட்டால் சிறப்பான முறையில் அமையும் என்ற ஆவலே அவர்களிடம் அதிகமாக இருக்கிறது. மேலும் சுதந்திரம், தனித்தன்மை போன்றவைகளுக்கும் கேடு விளைவிக்கக் கூடாது. சமூகத்தில் அனைவரும் சீரான வாழ்வு வாழவேண்டும் என்பது அசாத்தியமே. எனவே, அவர்கள் மீது முழுக் குறையையும் சுமத்த முடியாது.

பேபியனிசத் தத்துவத்தை எடுத்துக்கொண்டால் மார்க்ஸியச் சிந்தனையாளர்கள் முதலாளித்துவத்தில் கண்ட நியாயமற்ற தன்மைகள், சிறந்த சமூக அமைப்புகளின் முன் மறையும் என்றே விளங்குகிறது. பேபியனிசச் சிந்தனையாளர்கள், ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். அவர்கள் தங்களது சீர்திருத்தங்களைச் சட்டமுறைப்படி கொண்டு வரவேண்டும் என்றே கூறுகிறார்கள். உண்மை ஜனநாயகம் என்பது பெரும்பாலான மக்களின் சம்மதத்தில்தான் அடங்கியுள்ளதே தவிர, மக்களின் பங்கீடு களினால் மட்டுமல்ல. மேலும் நல்ல பயிற்சி பெற்ற பொதுநலச் சேவை செய்யும் மனப்பாங்கு பெற்ற அரசாங்கப் பணியாளரைக் கொண்டதே இவர்களது அரசாகும். ஆனால், எப்பொழுதும் அத்தகைய பணியாளர்கள் அமைவார்கள் என்பது ஐயத்திற் குரியதே ஆகும்.

17. ஜான் ட்யூயி (1859—1952)

அமெரிக்க அரசியல் சிந்தனையாளரான ஜான் ட்யூயி 1859ஆம் ஆண்டு வெர்மான்ட் (Vermont) என்னும் ஊரில் பிறந்தார். இவர் ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில் பயின்று, பிறகு அப் பல்கலைக்கழகத்தில் 1888ஆம் ஆண்டு தத்துவத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். 1885ஆம் ஆண்டு முதல் 1894ஆம் ஆண்டுவரை, மினேசோடா, மிச்சிகன் பல்கலைக்கழகங்களில் ஆசிரியராகப் பணியாற்றினார். அவர் தம் தலைமையில் முன்னேற்றக் கொள்கைகளுக்கான ஆராய்ச்சியை நடத்தினார். சிகாகோ பல்கலைக் கழகத்தில் பணியாற்றியபோதுதான் தத்துவத்துறை வளர்ச்சிக்கும், கல்வித்துறை வளர்ச்சிக்கும் பாடுபட்டார். 1904ஆம் ஆண்டு கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் ஓய்வு பெறும் வரை, பேராசிரியராகப் பணியாற்றினார். ஓய்வு பெற்ற பிறகு கூட, கல்வித்துறை, பொதுத்துறை இவைகளில் தம்முடைய நம்பிக்கை, கருத்துகள் இவைகளைப் பரப்ப பல இயக்கங்களை நடத்தினார். அமெரிக்கப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சங்கம் என்னும் அமைப்பை நியூயார்க் நகரத்தில் முதன் முதலில் ஏற்படுத்திய பெருமை இவரைச் சாரும்.

ட்யூயின் புத்தகங்களில் முக்கியமானவை தத்துவத்தில் திருத்த அமைப்புகள் (Reconstitution in Philosophy), மனிதத் தன்மையும், நடத்தையும் (Human Nature and Conduct) பள்ளியும், சமூகமும் (The School and Society) ஆகியவை ஆகும். இவர் ஒரு தத்துவ எழுத்தாளராக மட்டுமன்றி, குறிப்பாக கல்விச் சீர்திருத்தத்தில் அளவற்ற ஆர்வம் கொண்டிருந்தார்.

ட்யூயின் அரசியல் சிந்தனைகளின் தன்மை

மனித சமுதாயத்திற்குத் தொல்லைகள் தரும் சிக்கல்களைத் தீர்ப்பதையே தன் முதல் பணியாகக் கொண்டார், இந்தச் சமூக அரசியல் சிந்தனையாளர். தொழிலாளிகளின் இன்னல், சுகாதாரமற்ற சூழ்நிலைகள், தொழில் நுணுக்கப் புரட்சியின் விளைவால் எழுந்த பொருளாதார வசதிகள், நாகரிகங்கள் இவைகளை அனுபவிக்க முடியாத மக்கள் கூட்டம் ஆகிய இவைபோன்ற சாதாரணமாகக் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதி

லேயே அவர் ஆர்வமிக்கவராக இருந்தார். இவர் தம்முடைய தத்துவத்தைக் கருவி வாதம் (Philosophy of Instrumentalism)என அழைக்கிறார். இவ்வாறாக அழைப்பதின் காரணம் என்னவென்றால், உலகத்தில் உண்மையாகக் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு கருவியாகத் தம்முடைய வாதம் பயன்படும் என்கிறார். மேலும் தம்முடைய தத்துவம் பழமைத் தத்துவங்களிலிருந்து வெகுவாக மாறுபடுகிறது என்றும் கூறுகிறார். பழமைத் தத்துவங்கள் மெய்மை (Reality), இயல்பு (Being), சாரம் (Essence), உண்மை (Truth) போன்ற புலனாகா விஷயங்களைப்பற்றி அறிவதிலேயே ஆர்வம் கொண்டிருந்தன என்றும், இதுபோன்ற சிந்தனைகள் மனிதநல வாழ்விற்கு எந்தவிதப் பலனையும் தராது என்கிறார். மேலும் சிந்திப்பதன் நோக்கம் என்னவாக இருக்கவேண்டும் என்றால், உலகிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கண்டுபிடிக்கவும், சூழ்நிலைகளிலுள்ள குழப்பங்களை அகற்றிக் கட்டுப்படுத்தக் கூடியதாகவும், மனிதர்கள் அகப்பட்டுக்கொண்டு தவிக்கும் சந்தர்ப்பங்களிலிருந்து மீட்கும்படியாகவும், ஆக, இந் நன்மைகளைப் பயக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்; இதை விட்டு உலகத்தில் அழிக்கமுடியாத, நிலையான, மெய்மை என்று ஒன்று உள்ளது என்றும், அதனைப் பற்றிய ஆராய்ச்சிகளில் நாம் மூழ்குவதால் அவை நம்மை எங்கும் கொண்டுபோய் விடுவதில்லை; ஏனெனில், இதுபோன்ற விவாதங்களில் முடிவான விடையைக் கண்டுபிடிக்கவே முடியாது. எனவே, எப்பொழுது தத்துவம் உண்மைப் பிரச்சினைகளுக்கும் மனித இன்னல்களுக்குமான காரணங்களைக் கண்டுபிடித்து இவைகளுக்குத் தீர்வு காண ஆரம்பிக்கிறதோ, அப்பொழுதுதான் உலகிலுள்ள தீமைகள் ஒழியுமே தவிர, மெய்மையைப்பற்றிய ஆராய்ச்சியினால் அன்று என்கிறார் டியூயி. மேலும், பழம் சிந்தனையாளர்கள் அறிவியல் முறைகளைப் பின் பற்றாமல் ஒருதலைப்பட்சமான கருத்துகள், நம்பிக்கைகள், இவைகளுக்கு அடிமையாக இருந்தார்கள். மேலும் உலகத்தில் காணப்படும் தீமைகள், கொடுமைகள் இவைகளை எதிர்த்துச் சமாளிக்கும் தைரியமில்லாததால், மெய்மை, இலட்சியம் என்னும் போர்வையில் ஒரு கற்பனை உலகிற்குத் தப்பிக்க எண்ணினர். சிலர் இருக்கும் சமூக, அரசியல் ஒழுங்கே வசதியாக இருந்ததால் அவை மாறிவிடக் கூடாது என்னும் ஆவலில், இருக்கும் முறையே இலட்சிய நிலை என்று கூறினர். எடுத்துக்காட்டாக, ஹெகல் போன்றோரை இந்த வகையில் சேர்க்கலாம். இத் தத்துவ எழுத்தாளர்கள் அனைவரிலும் டியூயி காணும் குறைபாடு என்னவென்றால், வாழ்க்கையில் காணப்படும் பலவித நிகழ்ச்சிகளையும், ஒரு சில கொள்கைகளுக்குள் புகுத்த எண்ணினர். அது ஒரு செயற்கையான முறையே

ஆகும். பலப் பல நிகழ்ச்சிகளுக்குத் தக்கபடி விளக்கங்கள் கூருது, சில கொள்கைகளுக்குள் அனைத்தையும் புகுத்துவதால் அவர்களது கொள்கைகள் ஒரு நிலையான தன்மையை அடைகின்றன. மேலும் அவர்கள் கூறிய கொள்கைகளின் உதவியைக் கொண்டுதான் உலகில் நடப்பவைகள் சரிதானு, சரியில்லையா என முடிவெடுக்கவேண்டும் என்றும், அவர்கள் விளக்கிய கொள்கைகளை அடைவதிலேயே தங்களது முயற்சியைச் செலுத்த வேண்டும் என்றும் கூறினர். இவர்களது இத்தகைய வாதம் சற்றும் சரியில்லை என்கிருர் ட்யூயி. சிறந்த தத்துவம் சிந்தனைகளின் தன்மைக்குத் தக்கக் கருவியாகப் பயன்படவேண்டும். இதற்குப் பழமைத் தத்துவங்கள் உதவாது, ஆதலால், ஒரு புதிய தர்க்க முறையை உபயோகப்படுத்தவேண்டும் என்கிருர் ட்யூயி. பழைய தத்துவங்களில், பொதுவான சில கருத்துகளே காணப்படுகின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியையும், தனித்தனியாக எடுத்து ஆராயும், புலனுய்வு (Inquiry) அதில் இதில்லை. எனவே, சமூகத் தொல்லைகளைத் தீர்க்கும் கருவியாக அவைகள் காணப்படவில்லை. எடுத்துக்காட்டாக, அரசு என்ருல் இப்படித்தான் இருக்கவேண்டும்; அதனுடைய நோக்கம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற பொதுவான ஆராய்ச்சிதான் அதில் காணப்படுகிறதே தவிர, அரசுகள் எப்படி இருக்கின்றன என்ற கேள்விகளுக்கு அவை பதிலளிப்பதில்லை. இச் சிந்தனையாளர்கள், தங்களது தத்துவத்தில் காணப்படும் உண்மைகளே லட்சியமானவை என்று அவர்கள் கருதுவதால், அவர்களது தத்துவங்கள் ஒரு முடிவான நிரந்தரத் தன்மையைப் பெற்றுவிடுகின்றன. எனவே, அவற்ருல் பயன்கள் எதுவும் இல்லை என்கிருர். சிந்தனை என்பது வளரும் தன்மையை உடையதாகவும், ஆராய்ச்சி மூலமாகப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய கருவியாகவும் இருப்பதே சிறந்தது என்கிருர். தம்முடைய கருவி வாதம் இத்தகையதொரு வாதமே என்கிருர். ஒரு பிரச்சினை என்ருல், அப் பிரச்சினையை ஆராய ஆரம்பிக்க வேண்டுமே தவிர, அதற்குச் சற்றும் சம்பந்தமற்ற மெய்மை இலட்சியம் என்று புலனுகாத விஷயங்களை ஆராய்வது அர்த்தமற்றதாகும் என்பது அவரது கருத்து. தத்துவத்தின் முக்கியத்துவம் புலனுய்விலேயே அடங்கியுள்ளது என்கிருர். புலனுய்வு என்பதன் பொருள் என்னவெனில், முடிவு பெருத ஒரு நிலையைக் கட்டுப்பாடான அல்லது வழியான மாற்றத்தால், அதன் வேறுபட்ட பகுதிகள், உறவுகள், அனைத்தையும் ஒன்றிணைத்து, பழைய நிலையிலிருந்து அதனை மாற்றி ஒரு முழுமையான முடிவு நிலைக்குக் கொண்டுவரும் முறையே ஆகும் என்கிருர். சங்கடமான அல்லது துன்பம் தரக்கூடிய சூழ்நிலைகளைக் கையாளுவதற்கு மனிதனுக்கு உதவும் மிகச்

சிறந்த கருவியே புலனுய்வு முறையாகும் என்கிருர் ட்யூயி. மனிதன் சமூகப் புறச் சூழ்நிலைகளை ஒட்டி, அவற்றின் ஒரு பகுதி யாக வாழ்கிருனே தவிர, அவற்றிலிருந்து தனித்து வாழ்வ தில்லை. எனவே, உலகத்தின் சூழ் நிலைகளையும் சந்தர்ப்பங்களையும் சமாளிக்க அவனுக்கு உதவும் கருவிகளில் கீழான தன்மை யுடையது எதுவெனில், அவனது தூண்டுதலுணர்வுகளாகும். (Impulses) இத் தூண்டுதலுணர்வுகளே அவனது செய்கைகளை நிர்ணயிக்கின்றன. இத் தூண்டுதலுணர்வுகளுக்கும் சற்று மேலான கருவி. எது எனில், பழக்கங்கள் (Habit) என்று கூற லாம், தூண்டுதலுணர்வுகளுக்கு ஒரு நிலையான வழிமுறை என்று எதுவும் கிடையாது. சமூக, புறச் சூழ்நிலைகளைச் சரியான முறை யில் சமாளிக்க, அவைகளை உபயோகப்படுத்த வேண்டும் என் ருல், அவைகளை ஒழுங்கான முறையில் ஒரு கட்டுப்பாட்டிற் குள் கொண்டுவர வேண்டும். இந்த ஒழுங்குமுறையான கட் டுப்பாட்டிற்குள் கொண்டு அடங்கிய தூண்டுதலுணர்வே பழக் கங்கள் என்று அழைக்கப்படுகிறது. எனவே, சமூகச் சுற்றுப் புறச் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு ஒத்துப்போவதற்கான தூண் டுதலுணர்வை ஏறக்குறைய, ஒரு நிலையான வழிமுறையின் படி அமைத்துக் கொண்டால் அதுவே பழக்கம் என அழைக்கப் படுகிறது. மனிதன் இச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப எந்தெந்த முறையில் ஒத்து நடக்கவேண்டும் என்பதைத் தன்னுடைய முயற் சியால் தூண்டுதலுணர்வுகளைப் பயன்படுத்தி நடந்து கொள் கிருன். தனக்கு உதவியாக இருக்கும் தூண்டுதலுணர்வுகளை மேற்கொள்கிருன். உதவியற்றவைகளைக் களைந்து விடுகிருன். இவ்வாருகச் சில தூண்டுதலுணர்வுகள் மீண்டும் மீண்டும் உப யோகிப்பதன் காரணமாகப் பழக்கங்களாகி விடுகின்றன. இம் மாதிரியான பழக்கங்கள் நிலையான மாறுதல்களற்ற சூழ்நிலை களைச் சமாளிக்க உதவி செய்கின்றன. ஆனுல், புதிய சிக்கல்கள் நிறைந்த சூழ்நிலைகளுக்கு இவை போதமாட்டா. இம்மாதிரி யான சமூக, பொருளாதார அரசியல் சிக்கல்கள் எழும் சூழ் நிலைகளுக்கு இப் பழக்கங்கள் உதவி செய்ய இயல மாட்டாமை யால், வேறு கருவியின் உதவியை நாடவேண்டும், என்கிருர் ட்யூபி. 'புலனுய்வு' என்னும் கருவியானது அறிவுத் தன்மை வாய்ந்த முன் யோசனைகளைத் (Refletive thought) தருகிறது. இவைகளின் உதவியை முறை வழியாகப் புதுச் சூழ் நிலைகளைச் சமாளிக்கப் பயன்படுத்தவேண்டும் என்கிருர். அறிவுத் திறனின் உதவியைக் கொண்டு பலதரப்பட்ட கேள்வி களுக்கும் விஞ்ஞானங்களில் பதில் கண்டு பிடிக்கப்படுகிறது. சமூகப் பிரச்னைகளுக்கு மட்டும் இன்னும் பழக்கங்களின் உதவி யைத்தான் மனிதர்கள் நம்பி இருக்கின்றனர் என ட்யூயி எண்ணு

கிறார். பழக்கமுறைகள் இருக்கும் அதிகாரங்களுக்குத் துணையாகவே இருக்கிறது. அதிகாரத்தில் இருப்போரும் அறிவுத் திறனின் அடிப்படையில் புதிய சோதனைகள் தோன்றுவதை விரும்புவதில்லை. ஏனெனில், அவற்றின் விளைவுகள் தங்கள் அதிகாரத்திற்கு ஆட்டம் கொடுத்துவிடுமோ என அஞ்சு கின்றனர். தனி உரிமைக் கோட்பாளர்கள் (Individualists) அதிகாரத்தையும், சுதந்திரத்தையும் எதிர்மறைகளாகவே எடுத்துக்காட்டுகின்றனர். ஏனெனில், அதிகாரத்தில் இருப்போர் மக்களின் புது முயற்சிகள், பரிசோதனைகள், கண்டுபிடிப்புகள், இவைகளை மேற்கொள்ள அவர்களுக்குப் பூரண சுதந்திரம் அளிக்க விரும்புவதில்லை. பழைய கொள்கைகள், பழக்கங்கள், மரபுகள் இவை தங்களுக்குச் சாதகமாக இருப்பதால் இவற்றி லேயே ஊறிப்போன அவர்கள் புது முயற்சிகளால் தங்கள்நிலை பாதிக்கப்படுமோ என அச் சுதந்திரங்களுக்குத் தடை விதிக்கின் றனர். ஆனால், புது முயற்சிகளில் ஈடுபட்டு அதன் மூலம் அதிகாரத்தில் பங்கேற்கும் உரிமையை விரும்புவோர் சுதந்திரம் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், அதிகாரம் படைத் தோர் தனியார் சுதந்திரங்களில் தலையிடக் கூடாது என்றும் கூறுகின்றனர். இவ்வாறாகச் சுதந்திரத்தையும் அதிகாரத்தையும் எதிர்மறைகளாக அவர்கள் எடுத்துக் காட்டுவது ஒரு வகையில் சரியே என்கிறார் ட்யூயி. ஆனால், அவர்களிடமுள்ள குறைபாடு என்னவெனில், அதிகாரம் எல்லைக்குட்பட்டதாக இருக்கவேண்டும் என்று அதன் எல்லையை நிர்ணயித்துக் கூறும் அவர்கள் சுதந் திரத்தின் போக்கு எல்லை இவை என்ன என்று விளக்காமல் விட்டு விடுகிறார்கள் என்கிறார் ட்யூயி.

கல்விச் சீர்திருத்தத்தில் ட்யூயி அளவிலா ஆர்வம் கொண்டிருக்கிறார். அவருடைய கருத்துகளால் அமெரிக்காவில் கல்வித் துறையில் ஒரு புரட்சியையே ஏற்படுத்திவிட்டார் என்று சொல்லாம். மக்களது அறிவுத் திறனை மனித வாழ்க்கையில் காணப்படும் சிக்கல்களைத் தீர்க்கவே பயன்படுத்த வேண்டும் என்றும், தூண்டுதல் உணர்வு பழக்க முறைகள் இவைகளை முன் யோசனையான சிந்தனைகளாகப் பள்ளிகள் வளர்க்க உதவ வேண்டும் என்கிறார்.

இக் கருத்தின் அடிப்படையில் பார்க்கும் பொழுது, பள்ளி களில் கற்றுத்தரப்படும் பாடங்கள் பழமைத் தன்மை வாய்ந்த தாகவும், அதிகாரத்தில் இருப்போருக்குச் சாதகமான பழக்க முறைகளைக் கற்றுத் தரக்கூடியதாகவுந்தான் இருக்கிறதே தவிர, மாறும் சூழ்நிலைக்குத் தக்கபடி அமையவில்லை. விஞ்ஞானத்

தொழில் நுணுக்க வளர்ச்சிகளுக்குத் தக்க வகையில் அப் பாட நூல்கள் அமையவில்லை. அதைப் போதிக்கும் ஆசிரியர்களும் பரம்பரை பரம்பரையாக வரும் விருப்பு, வெறுப்புகளின் (Prejudices) அடிப்படையில் அமைந்துள்ள பழைய பாடங்களையே கற்பிக்கின்றனர். தங்களது முறைகளைக் குழந்தைகள் ஏற்க மறுத்துவிடுவார்களோ என்ற பயத்தில் அதை ஈடுகட்ட ஒழுக்க நெறிப் பழக்கங்கள் எனும் பெயரில் பல போதனைகளை அவர்களுக்கு ஊட்டுகிறார்கள். இதன் விளைவானது எதையும் அதாவது, ஒழுக்க நெறி, மதம், அரசியல் இவைகளை விருப்பு, வெறுப்பற்ற முறையில் திறமையுடன் அதன் குறை நிறைகளை ஆராயும் அறிவுத் திறனை அவர்கள் பெற முடிவதில்லை. இதன் விளைவு பகுத்தறிவுடன் பிறக்கும் மக்களிடம் பகுத்தறிவின்மையே பரவிக் கிடக்கிறது. இதனால் வரலாற்றில் மனித அறிவுத் திறனால் சாதிக்கப்பட்ட சாதனைகள் எவ்வளவு குறைவாக உள்ளது என்று நம்மால் காணமுடிகிறது.

நடைமுறைக்குப் பயன்தரக்கூடிய தத்துவங்களிலேயே நம்பிக்கைக் கொண்டவராக இருக்கும் 'ட்யூயி' அரசியலிலும் பழைய சிந்தனையாளர்களிடமிருந்து வேறுபடுகிறார். அரசு என்றால் என்ன, என்பன போன்ற கேள்விகள் சம்பந்தம் இல்லாதவை என்றும் குழப்பத்தைத் தரக்கூடியவை ஆகும் என்றும் அவற்றை ஒதுக்கிவிடுகிறார். இருக்கும் அரசுகளில் என்னென்ன குழப்பங்கள், சிக்கல்கள் இருக்கின்றன, அவற்றை எப்படித் தீர்ப்பது போன்றவற்றில்தான் ஆர்வமிக்கவராக இருக்கிறார். இதனால் இவர் பயனளவுக் கோட்பாளர் (Pragmatist) என அழைக்கப்படுகிறார். எந்தக் கோட்பாடும் அது தரும் பயனைக் கொண்டுதான் அதன் மதிப்பைக் கணக்கிட வேண்டும் என்ற கொள்கையில் நம்பிக்கை கொண்டவர் 'ட்யூயி'. பொதுக் கருத்துகளை (General notions) இவர் அடியோடு வெறுக்கிறார். அக் கருத்துகளால் அரசியல் வாழ்விற்கும் பயனில்லை, மக்களின் சொந்த வாழ்விற்கும் பயனில்லை எனக் கருதினார். எனவே, அரசியல் தத்துவத்தின் வேலை, அரசு எப்படியிருக்க வேண்டும் எனக் கண்டு பிடிப்பது அன்று, அறிவுத் திறனுடன் கூடிய பரிசோதனை முறைகளைக் கண்டுபிடிக்க வேண்டும். இதன் மூலம் மனிதர்கள் உபயோகமானவற்றை எடுத்துக் கொண்டு உபயோக மற்றவற்றை விட்டுவிட வேண்டும். நம் முன்னோர்கள் தங்களது முயற்சியை நிரந்தர அரசியல் கருத்துகளைக் கண்டுபிடிப்பதிலும், லட்சிய அரசுகளைக் கண்டுபிடிப்பதிலும் செலவழித்தனர். இம் முறைகள் மாறும் சூழ்நிலைகளுக்கும் முன்னேற்றங்களுக்கும் தடை விதித்தன. பிற்காலத்தில் புரட்சிகள், எழுச்சிகள் தோன்ற இவை ஏதுவாயிருந்தன.

இம் முறைகளிலிருந்து நாம் வேறுபட்டு விஞ்ஞான ரீதியான கருத்துகளைக் கண்டுபிடிப்பது மிக அவசியமாகிறது என்கிறார் ட்யூயி. ஏனெனில், மனிதனின் செய்கைகள் அவனைமட்டும் பாதிப்பதில்லை; பிறரையும் பாதிக்கின்றன. எனவே, அவனது செய்கைகளை நாம் நன்கு புரிந்துகொண்டால் பிறருக்கு நன்மை விளைவிக்கும் செயல்களை அனுமதித்துத் தீமை விளைவிக்கும் செயல்களைத் தடுக்கும்படியான கட்டுப்பாடுகளைக் கொண்டுவர முயற்சி செய்யலாம். பிறரைப் பாதிக்கும் செயல்களை இருவகைகளாகப் பிரிக்கலாம். சில செயல்கள் பிறரை நேரடியாகப் பாதிக்கின்றன.எடுத்துக்காட்டாக,ஒரு வியாபாரத்தில் இருவர் கூட்டாளிகளாகச் சேர்ந்தார்களேயானால், இவர்களது வியாபார சம்பந்தப்பட்ட செயல்கள் அவர்கள் இருவரை மட்டும்தான் பாதிக்கும். இங்ஙனமின்றி, சில செயல்கள் பிறரை இவ்வாறாக நேரடியாக இல்லாமல் மறைமுகமாகப் பாதிக்கின்றன. இவ்வாறாகப் பிறரைப் பாதிக்கும்படியான செயல்களைச் சொந்தமான (Private) தன்மையுடையவை என்றும், பொதுத் (Public) தன்மையுடையவை என்றும் பிரிக்கலாம். சொந்தத் தன்மையுடையவை என்பவை மனிதர்களின் சொந்த விஷயங்களாகும். இதனால் செயல்படும் செயல்கள் சம்பந்தப்பட்டவர்களை நேரடியாகப் பாதிக்கின்றன. பொதுத் தன்மையுடையவை என்பவை ஒரு சிலரது செயல்கள் சம்பந்தமற்றவரை மறைமுகமாகப் பாதிக்கின்றன. எடுத்துக்காட்டாக, ஒருவர் தெரு நடுவில் நடந்தாரேயானால் ஊர்திகளில் வருவோரை இவரது செய்கை பாதிக்கிறது. மக்களின் பொதுச் செயல்களைக் கட்டுப்பாடு செய்வது அவசியமாகிறது. இவ்வாறு கட்டுப்பாடு செய்பவர்களை அதிகாரிகள் என்று அழைக்கிறோம். இவ்வாறு, பொதுச் செயல்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரிகள் காணப்படும் அமைப்பையே அரசு என்கிறோம். இவர்கள் மக்களின் பொதுச் செயல்களைச் சீரமைத்து அவர்களின் பொது நன்மையை ஒட்டி நடந்துகொள்கிறார்கள்.

சுருங்கக் கூறின் அரசு என்னும் அமைப்பில் புதிர் ஒன்றும் இல்லை. ஒரு சிலரின் நடவடிக்கைகள் மறைமுகமாக வேறு சிலரையோ அல்லது பலரையோ பாதிக்குமேயானால், பாதிக்கப்படுவோரின் நன்மைகளைக் காப்பாற்றும் பொறுப்பை அதிகாரிகள் ஏற்கின்றனர். இவ்வாறான அதிகாரிகள் கொண்ட அமைப்பே அரசாகும். இச் சிறு உண்மையைத் தத்துவ அறிஞர்கள் புரிந்துகொண்டிருந்தார்களேயானால், அரசின் தன்மை என்ன? அதன் நோக்கம் என்ன? என்பன போன்ற கேள்விகளிலும் அரசு தெய்வீகத் தன்மை வாய்ந்தது, சமூக ஒப்பந்தத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டதே அரசு, பகுத்தறிவைத் தன்னகத்தில் கொண்டது போன்ற

விடைகளிலும் தங்களது நேரத்தை வீணடித்திருக்கமாட்டார்கள். ஏனெனில், அவர்களது விளக்கங்கள் அனைத்தும் அரசு எப்படி ஏற்பட்டதென்பது போன்ற காரணக் கேள்விக்கு விடையைத் தேடுகின்றனவே தவிர, அரசின் விளைவுகள் என்ன என்பது போன்ற முக்கியமான காரணங்களுக்கு விடை தேடவில்லை. அவர்களது காலநிலை, சூழ்நிலை, மனநிலை இவைகளே அவருடைய தத்துவங்களை உருவாக்க உதவின. அங்ஙனம் உருவாக்கப்பட்ட தத்துவங்களுக்கான காரணங்களைக் கண்டுபிடிக்கவே அவர்களது அறிவுத்திறன் பயன்பட்டது. இவர்கள் மனிதர்களது நடத்தைகள், செயல்கள் இவைகளின் விளைவுகளை ஆராய்ந்து அதற்குத் தகுந்தாற்போல் அரசியலை நிர்ணயிக்கத் தவறிவிட்டனர். என்ன நடக்கிறது, எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்று ஆராய்வதே உண்மையான அறிவுத் திறனாகும். அரசியல் சிந்தனைகளில் இந்த உண்மை நன்கு பதிய வேண்டுமென்கிறார் ட்யூயீ. எனவே, எவ்வகை அரசு சிறந்தது என்பது போன்ற பழைய கேள்விகளுக்கு விடை கண்டுபிடிக்கும் சிரமம் எதுவும் அவரைப் பொறுத்தவரை இல்லை என்று சொல்லலாம். அவரைப் பொறுத்தவரை அரசின் சிறப்பு திறமையான அதிகாரிகளைப் பொறுத்தே அடங்கியுள்ளது. எல்லா அரசுகளையும்விட மிகச் சிறந்த வகை அரசு எது என்ற கேள்விக்கு அவர் அளிக்கும் பதில் வரலாறு முடியும் பொழுதுதான் எல்லா வகை அரசுகளையும் ஆராய்ந்து சிறந்த வகை எது என்று கூறமுடியுமென்கிறார். ஏனெனில், எதற்குமே சோதனைகளுக்குப் பிறகே முடிவு காணமுடியும். இதைப் போலவே சிறந்த வகை அரசு எது என்பது போன்ற கேள்விகளுக்கும் சோதனைகள் (experimentation) மூலமே முடிவுசெய்ய முடியும் என்கிறார் ட்யூயி. இம் முறையிலேயே அரசின் பணிகள் என்ன, எத்தகைய பணிகளை மட்டும் அரசு மேற்கொள்ள வேண்டும், எவற்றில் தலையிடக்கூடாது என்பன போன்ற கேள்விகளுக்கு ட்யூயி விடையளிக்கிறார். சமூகம் பன்மைத் தன்மை (Pluralistic) வாய்ந்தது என்பது அவரது கருத்து. சமூகத்திலுள்ள பல அமைப்புகளில் அரசும் ஓர் அமைப்பே தவிர, அதற்கென்று வேறு எந்த முதன்மைத் தன்மையும் கிடையாது. குறிப்பிட்ட சமூகத்தின் தேவைகளுக்குத் தக்கவாறு அதன் பணிகளும் மாறுபடுகின்றன. மேலும் அவர் கூறுவதாவது, சமூகத்தில் பல விருப்பங்களை அடிப்படையாகக் கொண்ட பலவிதக் குழுக்கள் காணப்படு கின்றன. அரசு ஒரு குறிப்பிட்ட கொள்கையைக் கொண்டு வந்தால் அக் கொள்கையில் சம்பந்தப்பட்ட குழுக்கள் இதனால் பாதிக்கப்படலாம். எடுத்துக்காட்டாக விமானப் போக்குவரத்துச் சம்பந்தமாக ஏதாவது ஒரு கொள்கையைக் கொண்டுவந்தால் விமானங்களின் சொந்தக்காரர்கள், அதன் தொழிலாளர்கள்

அதில் பயணம் செல்வோர் இவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இங்ஙனமாக அரசின் ஒவ்வொரு புதுக் கொள்கையும் அல்லது இருக்கும் கொள்கையில் மாற்றங்கள், சமூகத்திலுள்ள சில பல குழுக்களைப் பாதிக்கும். அரசு இதில் கவனமாக இருக்கவேண்டும் என்றால், பாதிக்கப்படும் குழுக்கள் அனைத்தும் ஒத்துப் போகும்படியான நியாயமுறையில் கொள்கைகளை முடிவு செய்வதிலேயே ஆகும் என்கிறார் ட்யூயி. சமூகத்தில் இம்மாதிரி பல தரப்பட்ட குழுக்களே காணப்படுகின்றனவே தவிர, பொது மக்கள் என்ற பெயரில் ஒரே கூட்டமாக எதுவும் இல்லை என்கிறார். இக் குழுக்களனைத்தின் தேவைகளையும் விருப்பங் களையும் ஒத்திசைத்து நடத்திச் செல்வதே முறைவழி அரசிய லாகும் என்கிறார்.

இவ்வாறாக ட்யூயி அபிப்பிராயப்பட்டாலும், இதில் புதுமையாக ஒன்றும் இல்லை என நாம் கருதலாம். தன்னலக் குழுக்கள் (Pressure groups) என அழைக்கப்படும் குழுக்களையே ட்யூயியும் குறிப்பிடுகிறார் என நாம் எண்ணலாம். தன்னலக் குழுக்களைப் பற்றி ஜேம்ஸ் மாடிசன் போன்றோர் ட்யூயிக்கு முன்பே கூறியிருக் கின்றனர். ஆனால், அவர்கள் கூறியதற்கும் ட்யூயி போன்ற தற்காலச் சிந்தனையாளர்கள் கூறியதற்கும் உள்ள வேறுபாடு என்னவெனில், ஜேம்ஸ் மாடிசன் போன்றோர் தங்கள் நலனைப் பற்றியே எப்பொழுதும் கவலைப்படும் இக் குழுக்களுக்கும் மேலான பொதுநலன் என்று ஒன்று இருப்பதை நம்பினர். ஆனால், ட்யூயி போன்றோர் பொதுநலன், பொதுமக்கள் அபிப்பிராயம் என்பவை எல்லாம் வெறும் கட்டுக்கதைகளே என்று கூறினர். எனவே, எந்தக் கொள்கை இந்தக் குழுவினரைப் பாதிக்கிறதோ, அவர்கள்தாம் தங்கள் நலனைக் காத்துக் கொள்ளவும், தங்களது அபிப்பிராயங்களையும் கூறுகிறார்களே தவிர, மக்களது பொது அபிப்பிராயம் என்ற ஒன்று இருப்பது கிடையாது; அப்படியே இருந்தாலும் அது சாதிப்பது ஒன்றும் இல்லை என ட்யூயி கூறுகிறார்.

ட்யூயின் கருத்துப்படி ஜனநாயக அரசு என்பதே சமூகத்தி லுள்ள பல்வேறான குழுக்களின் விருப்பங்களை ஒத்திசைத்து நடத்திச் செல்லும் ஒரு பரிசோதனை முறைதான் என்கிறார். எனவே, இங்கு ஒரு குறிப்பிட்ட நிலையான குறிக்கோள் என்பது எதுவும் இல்லை; ஆனால், இங்குக் கவனிக்க வேண்டிய ஒன்று என்னவெனில், இப் பரிசோதனை முறை வெற்றிபெற வேண்டும் என்றால், சமாதான முறையில் யார் வேண்டுமானாலும் எதையும் ஒப்புக்கொள்ள மறுக்கும் உரிமை இருக்க வேண்டும்; இவ்வுரிமை

இருந்தால்தான் குழுக்களின் சேர்க்கை மாறி மாறி எழும் வாய்ப்பு அங்கு இருக்கும். அதன் மூலம் எல்லாக் குழுக்களின் விருப்பங்களையும் ஓரளவு பூர்த்தி செய்ய முடியும் என்கிறார் ட்யூயி.

தனி உரிமைக் கோட்பாட்டைப் பற்றி ட்யூயின் கருத்து

ட்யூயின் கருத்துப்படி அரசுகளின் தலையாய பணி என்னவெனில், பொருளாதாரத் துறையில் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும், இதன்மூலமாக மனிதர்களின் தனித்தன்மையை வளரச் செய்ய வேண்டும் என்றும் கூறுகிறார். தனி உரிமை என்றால், ஸ்பென்சர் போன்றோர் கூறிய தலையிடாத் தத்துவக் கோட்பாடு (Laissez-Faire) அன்று. தலையிடாத் தத்துவத்தின் ஒரே சாதனை பணப்பெருக்கம் ஒன்றே; மனிதர்கள் பணத்தை மட்டும் பெருக்கப் பாடுபட்டால் போதாது. மற்ற வளர்ச்சிகளும் மனித வாழ்க்கைக்கு மிக அவசியமானவை; இவ் வளர்ச்சிகளுக்குச் சமூகத்தில் போதிய வாய்ப்பு இல்லை எனில், மனிதர்களின் லட்சியங்கள் பூர்த்தி ஆவதில்லை. இந்த இலட்சியங்களை அடைவதற்கு அவர்களுக்குத் தேவையானது தனி உரிமைதான் என்றாலும், தனி உரிமை என்றால் அவரவர் தங்களது முயற்சியினால் சுயமான முறையில் பொருளாதார லாபத்தை அடைவது என்ற பொருளில் அன்று. உண்மையான தனி உரிமை என்பது, கற்பனைகளிலிருந்து மனிதர்களை மீட்டு, எல்லோரும் ஒன்று கூடி வாழும் சமூகத்தில், சுதந்திரமான முறையில் அவர்கள் அறிவு வளர்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். எனவே, இச் சமூகத்தில் இருக்க வேண்டியது என்னவெனில், ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு பணத்தைப் பெருக்குவதன்று; இதற்கு மாறாக, என்னென்ன முறைகளில் பொருளாதாரத் துறையில் சீர்திருத்தங்களை ஏற்படுத்தினால், அறிவு வளர்ச்சியில் அனைவருக்கும் சம வாய்ப்புக் கிடைக்கும் என்பதே ஆகும். பொருளாதார லாபங்கள் அனைத்தும் சிறப்பான வாழ்வை அடைவதற்கான வழிவகையே தவிர, இப் பொருளாதார லாபங்கள் அடைவதிலேயே ஒருவரது திறமை அடங்கியிருக்கிறது என எண்ணுவது தவறான கருத்தாகும். எனவே, அரசு பொருளாதாரத் துறைகளில் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதை முக்கியப் பணியாக ஏற்க வேண்டும் என்கிறார் ட்யூயி.

இவ்வாறான சீர்திருத்தங்களை ஏற்படுத்த வேண்டும் என்றால், அரசும், அறிவியலில் விஞ்ஞானிகள் மேற்கொள்வதுபோல் பல சோதனைகளை மேற்கொள்ள வேண்டும்; இச் சோதனை முறைகள்

மூலம் சமூகத்தின் பொருளாதாரப் பெருக்கத்தினுல் அனைவரும் பலனடையும்படி சமூகத்தை அமைக்க வேண்டும்; மேலான சிறப்பியல்புகளை மக்கள் தேடுவதற்கு உதவியாக அனைவருக்கும் பொருளாதாரப் பாதுகாப்புக் கிடைக்கும்படி செய்யவேண்டும். இதுபோன்ற சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு உதவியாகப் புலனுய்வு (inquiry) அடிப்படையில் சமூகச் சோதனை முறைகளை மேற்கூறியபடி சமூக அரசியல் சிக்கல்களைப் புரிந்துகொள்வ தற்காக உபயோகப்படுத்த வேண்டும். புலனுய்வு முறைப்படி இருக்கும் சூழ்நிலைகளை அறிவின் உதவியினுல் வருங்காலத்திற்கு உபயோகப்படும்படி சீரமைப்பதற்கான விஞ்ஞானத் தன்மை யுடைய சோதனைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாருகக் கூறும் ட்யூயி, சமூகப் பிரச்சினைகளை அறிவியல் முறையில் ஆராய்வது கடினமே; ஆனுலும், முடியாத ஒன்றன்று என்கிருர்.

மேலும் அவர் கூறுவதாவது, சமூக அரசியல் பிரச்சினை களுக்கு விடை கண்டுபிடிப்பதற்கான பரிசோதனைகளில் ஈடுபடு வதற்கான பூரண சுதந்திரம் இருக்க வேண்டும் என்ருல், அதற்கு ஜனநாயக அரசே சிறந்தது. ஆனுல், ஜனநாயக அரசுகளில், அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும் முறைகளையும், அவர்களுக்கு என்னென்ன பொறுப்புகள் அளிக்கப்பட வேண்டும் என்பவற்றை யும் மட்டும் விளக்கினுல் போதாது; சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பரிசோதனை முறைகளையும் அவ்வரசுகள் அறிமுகப்படுத்த வேண்டும் என்கிருர்.

மேலும் அவர் கூறுவதாவது, ஜனநாயக அரசு என்பது, மக்கள் தங்களது சிறப்பியல்புகளை வளர்த்துக் கொள்ளவும், பலவித நல்ல லட்சியங்களை அடைவதற்குமான சிறந்த வழி வகையாகும். அவர்களது தனித்தன்மை வளருவதற்கும், பொதுவான சமூக நலன் வளருவதற்கும் மிகத் தேவையானது ஜனநாயகமாகும். வயதுவந்தோர் வாக்குரிமை, தேர்தல், அரசியல் அதிகாரம் படைத்திருப்போர், மக்களுக்குப் பொறுப்பாளி களாக இருத்தல் போன்ற ஜனநாயக முறைகள் அனைத்தும் பல சிறப்புகளை வழங்குவதற்கான வழிவகைகளே தவிர, அம் முறைகளே ஒரு முடிவாகா என்கிருர் ட்யூயி. ஜனநாய கத்தை அடைவதை மட்டும் நோக்கமாகக் கொள்ளக்கூடாது. அம் முறையைக் கொண்டு, பல சிறப்புகளைக் கண்டுபிடித்துச் சமூகத்திற்கு வழங்கவேண்டும் என்பது அவரது வாதம்.

மனிதர்கள் அனைவரும் அறிவு படைத்தவர்கள்; அவர்கள் அனை வரது கூட்டறிவினுல் நன்மைகளே உண்டாகும் என்பன போன்ற

நம்பிக்கைகளே ஜனநாயக அரசிற்கு அடித்தளமாக உள்ளன. ஆனால், எதேச்சாதிகாரிகள், அறிவுத்திறன் சிலரிடமே உள்ளது என்றும், எனவே அவர்களே ஏனையோரைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும் நினைக்கின்றனர்.அறிவுத்திறன் எல்லோரிடமும் சமமாக இருப்பதில்லை என்பது உண்மையே. ஆனால், எல்லோரும் தங்களுக்குள்ள அறிவுத்திறனைக்கொண்டு ஏதாவது சிறப்பை வழங்க முடியும். இதற்கு முதன்மையான தேவை செயற்கைச் சுதந்திரமன்று (Freedom of action); அறிவுச் சுதந்திரமே (Freed intelligence) ஆகும். மனிதர்களின் எந்தச் செயலும் அறிவின் அடிப்படையில் எழாவிட்டால், கடைசியில் மிஞ்சுவது குழப்பமே ஆகும் என்கிறார் ட்யூயி. எனவே, ஜனநாயக அரசில் சுதந்திரம் என்பது முதலில் எதைக் காட்டுகிறது என்றால், பிறரைப் பாதிக்காதவரை எதை வேண்டுமானாலும் செய்யும் சுதந்திரமன்று; சுதந்திரமான அறிவை வளர்ப்பதற்குத் தேவையான சுதந்திரமான மனமும், சுதந்திரச் செய்கைகளுமே ஆகும் என்கிறார். எனவே, நம்பிக்கைகளில் சுதந்திரம், எண்ணச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், விவாதிக்கும் சுதந்திரம், ஒன்று கூடும் சுதந்திரம், பிரசுரிக்கும் சுதந்திரம் இவையனைத்தும் ஜனநாயக அரசில் ஏன் அளிக்கப்படுகின்றன என்றால், இவை யின்றி, தனி மனிதர்கள் மன வளர்ச்சியை அடைய முடியாது. அதனால் சமூகத்திற்கு ஒன்றையும் வழங்க முடியாது, என வாதிக்கிறார் ட்யூயி.

ஜனநாயகமும், கல்வியும், சீர்திருத்தங்களும்

மனிதர்களது தனித்தன்மை வளர, கல்வி மிக உதவியாக இருக்கும் என ட்யூயி நினைத்ததால் கல்விச் சீர்திருத்தத்தை மிக அவசியமாகக் கருதுகிறார். நடைமுறையில் இருந்துவரும் பழைய கல்வி முறைகள் பயனற்றவை என்று அவர் கருதுகிறார். இம் முறைகள் வருங்காலம், கடந்த காலத்தைப்போல்தான் இருக்கும் என்னும் கருத்தின் அடிப்படையில் இருக்கின்றன என்றும், ஆனால் உண்மையில் மாறுதல்களே சமூகத்தின் அடிப்படைவிதிகள் எனக் கூறுகிறார். மேலும், கல்வியின் பயனே, உலகத்திலுள்ள இருக்கும் முறைகளை மாற்றி மிகச் சிறந்த முறை களாக்கும் வழிகளைத் தேடுவதே தவிர, கடந்தகால உலகத்தைப் புரிந்துகொள்ளுவதில் அன்று. எனவே, இதற்கான முறைகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்கிறார் ட்யூயி. மேலும் அவர் கூறுவ தாவது, வருங்கால வாழ்க்கை ஒருவரைத் தயார்ப்படுத்து வதையே, பழைய கல்வி முறைகள் நோக்கமாகக் கொண்டுள்ளன. இம் முறைகளினால், வருங்காலத்தில்தான் பயன் எதிர்பார்க்கப் படுகிறதே தவிர, நிகழ்காலத்தில் அன்று; மேலும், கல்வி,

அவசியம் என ஏன் உணரப்படுகிறது என்ருல், அதன் உதவியைக் கொண்டு யாரையும் சார்ந்திராமல் சுயேச்சையாக வாழ உதவி புரிகிறது என்பதாலே ஆகும். போதனைகள், பயிற்சிகள், கட்டுப் பாடுகள் இவற்றைக்கொண்டு சமூகச் சார்பிலிருந்து விடுபட்டு வயது வந்தவுடன் சுயமான முறையில் இருப்பதற்குக் கல்வி தயார் செய்யும் எனக் கருதப்படுகிறது. எனவே, இந்த விடுதலையை அடைந்தவுடன் கல்வியும் நிறுத்தப்படுகிறது. ஆனுல், இவ்விரு கருத்துகளும் அதாவது, கல்வியின் பயனை வருங்காலத்திலேயே அடைய முடியும் என்பதும், சுயமான முறையை அடையும் வரைதான் கல்வியின் பயிற்சி அவசியம் என்ற கருத்தும் ட்யூயினுல் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மனிதர்கள் எல்லா நிலையிலும் வளர்ந்து கொண்டுதான் இருக்கிருர்கள். எனவே, வயது வரும் வரையில், சுயேச்சைத் தன்மையை அடையும் வரைதான் கல்வி தேவை என்பதும், குழந்தைக்குக் கல்வி பிற்கால வாழ்விற்கே பயனளிக்கிறது என்பதும் மிக ஆபத்தான பொய்மைகளாகும் என்கிருர். குழந்தைகளாகட்டும், பெரியவர் களாகட்டும், எல்லோருமே வளர்ச்சியிலிருந்து விடுபடுவதில்லை. எனவே, கல்வி குழந்தைப் பருவத்திலிருந்து, பெரியவர்களாகத் தயார் செய்வதற்கு என்பதும், பெரியவர்களானதும் தேவையில்லை என்பதும் பொய்யான கருத்தாகும் என்கிருர் ட்யூயி.

அரசியல் நிறுவனங்கள், கலைகள், மதங்கள் போன்றவை எல்லாம் மக்களிடையே, வகுப்பு, இனம், பொருளாதாரத் தகுநிலை (Status) போன்ற வேற்றுமைகளின்றி மக்களின் சாதனைகளைப் பெருக்க உதவ வேண்டும்; அவ்வாருகப் பெருக்க உதவும் கல்வியை மக்கள் எப்பொழுதும் அறிந்துணர வேண்டியது அவசிய மாகிறது. எனவே, பிறரைச் சார்ந்திருக்கும் வரைதான் கல்வி கற்கவேண்டும்; வயதுவந்த பிறகு பிறர் சார்பினை விட்டு அகன்ற வுடன் கல்வி தேவையில்லை என்று கூறுவது பொருளற்றதாகும் என்கிருர் ட்யூயி. மக்களினத்தின் நல்வாழ்வு வளரும் வழி வகைகளை அறிய உதவும் கல்வியை யாவரும் எந்த வயதிலும் தெரிந்துணர வேண்டும் என்பது ட்யூயின் கருத்தாகும்.

சுருங்கக்கூறின், அவரது கருவி வாதக் கொள்கைப்படி நிறுவனங்கள், கல்வி முறைகள் ஆகியவற்றைச் சோதனை முறைகள் மூலம் இவற்றின் சிறப்புத் தன்மைகளை எவ்வா றெல்லாம் அதிகப்படுத்தலாம் என எல்லோரும் முயற்சி செய்ய வேண்டும். எந்தச் சிக்கல்களுக்கும் ட்யூயின் கருத்துப்படி முடிவான பதில்கள் என்பவை கிடையா. கருவிவாதம், நிலையற்ற தன்மை யும் பாதுகாப்பின்மையையுப் பெற்று அவற்றிற்கு முடிவான

பதில்களைக் கண்டுபிடிப்பதைத் தங்களது வேலையாகக் கருதாமல், தினசரி ஏற்படும் சிக்கல்களை எந்த வகையில் தீர்க்கலாம் என்பதற்கே முக்கியத்துவமளிக்கிறது. எனவே, கோட்பாடுகள், சிந்தனைகள், பொருள்கூறுகள் (Concepts) போன்ற கருவிகளைக் கொண்டு சோதனை முறைகள் மூலம் மனித வாழ்வின் சிக்கல்கள், சூழப்பங்கள் இவற்றைத் தீர்க்க வேண்டும் என்பதே இவ் வாதத்தின் பொருளாகும். இக் கருவிகள் சிக்கல்களைத் தீர்க்க உதவினால் அவை பயனுள்ளவை. இதற்கு மாறாகக் குழப்பத்தைத் தீர்க்க முடியவில்லை எனில் அவை பொய்யானவை. எனவே, எது சிறந்த வழியைக் காட்டுகிறதோ அதுவே உண்மையானது என்கிறார் ட்யூயி.

முடிவாகப் பார்க்கும்பொழுது கருவி வாதப்படி, உபயோகமானவையே உண்மையானவை. இவ்வாறாகச் சுருக்கமாக ஏற்றுக்கொள்வதுபோல் எளிமையாகத் தோன்றினாலும், ட்யூயின் வாதம் உண்மையில் அப்படி இல்லை. எங்ஙனம் எனின் உபயோகமானவை என்ற விருப்பத் தேர்வை யார் முடிவு செய்வது? ஏனெனில், எல்லோரும் ஒரேமாதிரியான முடிவை எடுப்பதில்லை. சிலர் சில முறைகள் உபயோகமானவை என்று நினைக்கலாம். மற்றவர் வேறு முறைகளைத் தேர்ந்தெடுக்க விரும்பலாம். எடுத்துக்காட்டாக, ஹெகல் தம்முடைய இலட்சிய வாதத்தின் மூலம் இருக்கும் ப்ரஷிய மன்னராட்சியை மேன்மைப்படுத்த நினைத்தார் என்று ட்யூயி குறை கூறுகிறார். ஆனால், மன்னராட்சியே மிகச் சிறப்பானது என ஹெகல் நினைத்ததால் அதுவே உபயோகமானதாக அவர் முடிவு செய்திருக்கலாம். சில முறைகள் தான் உபயோகமானவை என எல்லோராலும் ஒருமுகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டால் பிரச்சினை எதுவும் இராது. உண்மையில் அப்படிப் பார்க்க முடியாது. எனவே, ட்யூயின் வாதத்தில் இது ஒரு குறையாகும். மேலும், தத்துவம் என்பது வெறும் மனிதர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஒரு வழிமுறை மட்டும் ஆகாது. அறிவு செறிந்த ஒழுங்குமுறையை உண்டாக்க நினைக்கும் சிந்தனைச் செறிவுகளே அவை. எனவே, உலகில் நிரந்தரமான நியாயமிகுந்த உண்மைகள் எவை என்பனவற்றைக் கண்டுபிடிப்பது அதன் நோக்கமாகும். எனவே, அவ்வப்பொழுது எழும் பிரச்சினைகளைக் கவனிப்பது என்று சிந்தனைகளின் அளவைக் குறைப்பது சிறப்பன்று.

இக் குறைகள் ட்யூயின் கருவிவாதக் கோட்பாட்டில் காணப்பட்டாலும், அவரது கோட்பாடு உபயோகமற்றது என ஒரேயடியாக ஒதுக்கிவிட முடியாது. இவருடைய வாதங்கள் நடைமுறையில் சமூக அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்க உதவின

என்பது உண்மை. குறிப்பாக, அமெரிக்காவில் சட்டம், அரசியல் இவ்விரண்டு துறைகளிலும் இவருடைய வாதம் எவ்வாறு பயன் பட்டன என்று பார்க்கலாம். அமெரிக்கச் சட்டமுறை அமைப் புப்படி, அரசியல் அமைப்பே நாட்டின் உயர்ந்த சட்டமாகக் கருதப்பட்டது. எனவே, சட்டமன்றங்கள் இயற்றும் சட்டங்கள் நீதிபதிகளால் அரசியல் அமைப்பிற்கு எதிராக அமைந்துள்ளன எனத் தோன்றினால், அச் சட்டங்கள் எவ்வளவு சிறந்த சட்டங் களாக இருந்தாலும், உடனே நீதி மன்றத்தால் செல்லா எனத் தீர்ப்பளிக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, பெண்களுக்குக் குறைந்தபட்சக் கூலிச் சட்டம், வருமான வரிச் சட்டம் போன்ற சட்டங்கள், அரசியலமைப்புச் சட்டமான ஒப்பந்த உரிமைக்கு (Freedom of contract) எதிராக உள்ளன என்றும், எனவே, செல்லா என்றும் தீர்ப்பளிக்கப்பட்டன. சிறிது சிறிதாக, வழக் கறிஞர்களும் நீதிபதிகளும், அரசியல் அமைப்பிற்கு அப்படியே பொருள்களும், எடுத்துக்கொள்வதைவிட, அப்போதைய தேவை களைப் பூர்த்திசெய்யும் முறையில் பிரச்சினைகளுக்கு முடிவு காண்பதே மிக முக்கியமென உணர்ந்தனர். ட்யூயி, நீண்டகாலம் உயிர் வாழ்ந்து தம் கொள்கைகள் நடைமுறையில் பின்பற்றப்படு வதைக் கண்டார். இது அவரது கருவிவாதக் கொள்கையின் வெற்றி என்றே கூறலாம்.

அரசியலை எடுத்துக்கொள்ளும் பொழுது, அமெரிக்காவில் அரசியல் விஞ்ஞானிகளும், அரசியல் மாணவர்களும், நிலையான கொள்கைகள், கோட்பாடுகள் போன்றவற்றை ஆராய்ந்ததை விட, விஞ்ஞானச் சோதனை முறைகளின் உதவியைக் கொண்டு, வெளிப்படையாகத் தோன்றும் பிரச்சினைகளை அணுகுவதிலேயே ஆர்வத்தைக் காட்டுகின்றனர் என்று கூறலாம். அறநெறிக் கொள்கைகள், கோட்பாடுகள் இவற்றை, அவர்கள் தேவை யற்றவை எனத் தள்ளிவிடுகின்றனர். எனவே, அவர்கள் அரசியல் கட்சி, நிறுவனங்கள் போன்ற அமைப்புகளில் மக்களின் பங்கு போன்றவற்றைப் பற்றியும், செல்வாக்குக் குழுக்களின் பங்கு, அரசியல்வாதிகள், வியாபாரத் துறையினர் இவர்களின் உறவு, வாக்காளர்களின் பழக்கங்கள் போன்றவற்றைப் பற்றியும் ஆராய் வதில் அதிக ஈடுபாடு உடையவர்களாக இருக்கிறார்கள். மேலும் அதிகாரப் பிரிவினை, சட்டத்தின் ஆட்சி, கூட்டாட்சி, மக்களிடம் இறைமை போன்ற அனைத்தும், கோட்பாட்டளவில் பேசப்படு கின்றன. உண்மையான அரசாங்கச் செயல்களாவன குடியரசு தலைவரின் செய்திக்குறிப்புகள் (Presidential messages), தலைமை நீதி மன்றத்தின் முடிவுகள், பாராளுமன்ற அங்கத்தினரின் பேச்சுகள், ஆகிய இவற்றில்தான் காணப்படுகின்றன என நம்புகின்றனர்.

இதுபோன்றே, உண்மைநிலை எது என்று விரிவாக எடுத்துக் கூறியவர்களில் அமெரிக்கச் சிந்தனையாளரான பென்ட்லி (Bentley) குறிப்பிடத்தக்கவர். அரசியலில் கோட்பாடுகள், சமமதம், கருத்துகள் போன்றவை ஒப்புக்காக ஏற்பட்டவையே தவிர, உண்மையில் முக்கியத்துவம் வாய்ந்தவை தன்னலக் குழுக்கள், நீதித்துறை நடவடிக்கைகள் போன்றவையே ஆகும் எனக் கூறினர்.

இவ்வாருக, ட்யூயின் தத்துவமான உண்மையான பிரச்சினைகளே முக்கியம் வாய்ந்தவை. அவற்றைத் தீர்க்கும் வழிகளையே முதலில் காணவேண்டும். உலகில் அழிக்க முடியாத உண்மை, மெய்க்கருத்து ஆகியவை எவை என ஆராய்வது முக்கியமன்று என்று கூறிய நடைமுறைக் கருத்து தற்காலத்தில் குறிப்பாக அமெரிக்காவில் பின்பற்றப்படுகிறது என்று கூறலாம்.

மேற்கோள் நூற்பட்டியல்

(Bibliography)

1. A History of Political Theory, George H. Saline, London.

2. Political Thought, C. L. Wayper, English University Press Ltd., London.

3. Modern Political Theory, C. E. M. Joad, Oxford at the Clarendon Press.

4. Great Political Thinkers, William Ebenstein., Rinchart and Company, Incorporated,

5. History of Political Thought, Raymond, G. Gettell, George Allen and Unwin Ltd., London.

6. Masters of Political Thought, Volume II. (Machiavelli to Bentham), W. T. Jones, George G. Harrap & Co., London.

7. Masters of Political Thought, Volume III. (Hegel to Dewey), Lane W. Lancaster, George G. Harrap & Co. Ltd.

8. History of Western Philosophy, Bertrand Russell, George Allen and Unwin Ltd., London.

கலைச்சொற்கள்

A

Antithesis — எதிர்மறை இயல்பு
Astronomy — வானியல்
Anarchism — ஆட்சி குலைந்தநிலைக் கோட்பாடு
Absolutism — வரம்பின்மை

B

Biology — உயிர்நூல்
Bureaucracy — அதிகார வர்க்க முறை

C

Cabinet — உள் அமைச்சவை
Colony — குடியேற்ற நாடு
Conservative philosophy — பழமை வாதம்
Culture — கலாசாரம்
Claims — கோரிக்கைகள்
Capitalism — முதலாளித்துவம்
Class struggle — வகுப்புப் போராட்டம்
Communism — கம்யூனிஸம்
Classless society — வகுப்புப் பிரிவினையற்ற சமூகம்
Constitution — அரசியலமைப்பு
Collectivism — பொதுவுடைமை வாதம், கலெக்டிவிஸம்

D

Democracy — ஜனநாயகம், மக்களாட்சி
Dictatorship — சர்வாதிகாரம்

Divine — தெய்வாம்சம்
Divine spirit — தெய்வீக உணர்வு
Dialectical idealism — முரண்பாட்டு விளக்கமுறை இலட்சிய வாதம்
Dialectic method — முரண்பாட்டு விளக்கமுறை
Dialectical materialism — முரண்பாட்டுச் சடவாதம்
Deduction — அனுமானம்
De facto Sovereignty — நிகழ்முறை இறைமை
De jure Sovereignty — சட்டமுறை இறைமை
Doctrine of Surplus value — மிகை மதிப்பீட்டுக் கொள்கை
Democratic Centralism — ஜனநாயக அதிகாரக் குவிப்பு முறை
Despotism — கொடுங்கோன்மை

E

Equality — சமத்துவம்
Extreme Rationalism — உச்சநிலைப் பகுத்தறிவு வாதம்
Extremist — தீவிரவாதி
Evolution — படிமுறை, பரிணாமம்
Economic analysis — பொருளாதாரப் பகுப்பாய்வு
Exploitation — சுரண்டல்

F

Fraternity — சகோதரத்துவம்
Force Theory — வலிமைக் கோட்பாடு
Feudalism — நிலப்பண்ணை உடைமைமுறை
Facism — பாஸிஸம்
Fabianism — பேபியனிஸம்

G

Glorious Revolution — மாண்புறு புரட்சி
General will — பொதுச் சம்மதம்

H

Historical meterialism — சடவாத வரலாறு
Hierarchy — படிமுறை

I

Individualism	— தனியாள் உரிமைக் கோட்பாடு, தனித் தன்மைக் கோட்பாடு
Individualists	— தனித் தன்மையாளர்கள்
Idealist philosophy	— இலட்சியக் கோட்பாடு
Ideal State	— இலட்சிய நாடு
Idea	— உட்கருத்து
Industrial Revolution	— தொழிற்புரட்சி
Imperialism	— ஏகாதிபத்தியம், பேரரசு
Instrumentalism	— கருவிவாதம்

J

Judiciary	— நீதித்துறை

K

Kingship	— அரசப் பதவி

L

Liberty	— சுதந்திரம்
Lords	— மேன்மக்கள், பிரபுக்கள்
Liberalism	— லிபரலிஸம்
Legal Rights	— சட்டபூர்வ உரிமைகள்

M

Metaphysics	— புலனாகாத் தத்துவம்
Matter	— சடப்பொருள், கருப் பொருள்
Marxism	— மார்க்ஸிஸம்

N

Natural Laws	— இயற்கை விதிகள்
Natural Rights	— இயற்கை உரிமைகள்
National war	— தேசியப் போர்
Nazism	— நாஜிஸம், நாஸிஸம்

O

Origin	—	தோற்றுவாய்
Organism	—	ஜீவராசி
Oligarchy	—	சிறு குழு ஆட்சி

P

Priveleges	—	சலுகைகள்
Philosopher	—	தத்துவ ஞானி, தத்துவ எழுத்தாளர்
Parliament	—	பாராளுமன்றம்
Part	—	அங்கம், கூறு
Proportional representation	—	விகிதப் பிரதிநிதித்துவம்
Psychology	—	உளநூல்
Proletariat	—	தொழிலாளர் வகுப்பு
Philosoply of Positivism	—	பாஸிடிவிஸத் தத்துவம்
Pluralism	—	பன்மை வாதம்
Popular Sovereignty	—	மக்களிடம் இறைமை

R

Redicalists	—	முற்போக்காளர்
Republic	—	குடியரசு
Rational	—	பகுத்தறிவு
Reason	—	காரண அறிவு
Reality	—	மெய்யுணர்வு
Revolutionary Socialism	—	புரட்சிகரச் சோஷலிசம்

S

State	—	அரசு, நாடு
Social Contract Theory	—	சமூக ஒப்பந்தக் கோட்பாடு
Sovereignty	—	இறைமை
Sociology	—	சமூக இயல்
Spirit	—	மெய்க் கருத்து, ஆன்மா
synthesis	—	கூட்டிணைப்பு
Synthetic Logic	—	கூட்டுவாத முறை
State of Nature	—	இயற்கை நிலை

Socialism — சோஷியலிஸம்
Syndicalism — சிண்டிகலிசம்

T

Thesis — இயல்பு
Totalitarian State — சர்வாதிகார நாடு
Theory of Volk — வோக் கோட்பாடு

U

Utilitarian philosophy — பயன்கருது தத்துவம்
Universe — பிரபஞ்சம்
Universal substance — அனைத்துப் பொருண்மம்

———

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை-600031

★

தமிழில் பயில்பவர்க்குக் கல்லூரிப் பாடநூல்கள்

(Tamil Medium Books for Colleges)

1976 ஜனவரிவரை 700 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன

★

மேலும் விரைவில் வெளிவருபவை

பொறியியல்	—	39	நூல்கள்
சட்டம்	—	12	,,
மருத்துவம்	—	18	,,
இயற்பியல்	—	23	,,
வேதியியல்	—	20	,,
தாவரவியல்	—	13	,,
விலங்கியல்	—	14	,,
கணிதம்	—	17	,,
வணிகவியல்	—	37	,,
பொருளாதாரம்	—	21	,,
புவியியல்	—	11	,,
வரலாறு	—	29	,,
மனையியல்	—	1	,,
தத்துவம்	—	4	,,
உளவியல்	—	8	,,
புள்ளியியல்	—	8	,,
கல்வி	—	15	,,
நிலப்பொதியியல்	—	6	,,
அரசியல்	—	19	,,

கிடைக்குமிடம் :

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கிடங்கு
(கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகச் சுற்றுக்குள்)
கல்லூரிச் சாலை, நுங்கம்பாக்கம்
சென்னை-600 006

கல்லூரிப் பாடநூல்களுக்கு 20 % கழிவு வழங்கப்படும்